வெளியீடு 20-4-2002 Issued 20-4-2002

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

வெள்ளிக்கிழமை, ஆகஸ்ட் 24, 2001 தொகுதி 6– எண் 1

**Friday the 24th August, 2001 – Volume 6– No. 1**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009*

**Legislative Assembly Secretariat, Fort St. George,**
**Chennai - 600 009**

விலை ரூ. *3.00*] [Price Rs. 3.00

## 24–8–2001

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| ஆளுநரும் அமைச்சரவையும் | iii - vii |
| Governor and Council of Ministers | ix - xii |
| பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள் | xiii - xvi |
| பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி) | xvii - xxvii |
| **1. வினாக்கள்–விடைகள்–** | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 1 - 31 |
| **2. தகவல் கோரல்–** | |
| (அ) சென்னை மாநகர மேயர் மாண்புமிகு தமிழக முதல்வரை மரியாதை நிமித்தம் சந்திக்காதது மற்றும் முதலமைச்சர் பதவி ஏற்பு விழாவிற்கு அழைப்பு அனுப்புதல் | 32 - 36, 37 - 39 |
| (ஆ) உறுப்பினர்களின் முன்னறிவிப்புகள் | 37, 40 |
| (இ) சட்டமன்ற நடவடிக்கைகளைத் தொலைக்காட்சியில் ஒளிபரப்புதல் | 40 - 41 |
| **3. திருத்திய வரவு–செலவுத் திட்டம், 2001–2002, பொது விவாதம்**–தொடர்ச்சி | 41 - 113, 114 - 172 |
| * திரு. துரைமுருகன் | 41 - 44, 47, 48 - 62 |
| * டாக்டர் சி. விஜயபாஸ்கர் | 62 - 69 |
| திரு. ஜி. பழனிசாமி | 69 - 89 |

பக்கங்கள்

3. திருத்திய வரவு–செலவுத் திட்டம், 2001–2002, பொது விவாதம்–தொடர்ச்சி

| | |
|---|---|
| திரு. ம. அப்துல் லத்தீப் | 84, 140 - 159 |
| திரு. ஆ.கு. முருகேசன் | 90 - 96 |
| * திரு. கே. என். இலட்சுமணன் | 96 - 101 |
| * திருமதி டி. யசோதா | 101, 160 - 172 |
| திரு. ஜே. ஹேமச்சந்திரன் | 102 - 113 |
| * திரு. ஆஸ்டின் | 114 - 128, 131 |
| * திரு. லா. சந்தானம் | 128 - 140 |

4. அறிவிப்பு–

சட்டமன்ற உறுப்பினர்களுக்கு சிற்றுண்டி வழங்கல் 113

5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்– 172

223438



## ஆளுநரும் அமைச்சரவையும்

### ஆளுநர் – டாக்டர் சி. ரங்கராஜன்

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. முதலமைச்சர் .. மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:

பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, இந்திய காவல் பணி, ஏனைய அனைத்திந்தியப் பணிகள், மாவட்ட வருவாய் அலுவலர்கள், உள் துறை, காவல் துறை, இலஞ்ச ஒழிப்பு, சிறுபான்மையினர் நலன் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல்.

2. நிதி மற்றும் சட்ட அமைச்சர் .. மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:

நிதி, திட்டமிடல், தேர்தல், சட்டமன்றம், சட்டம், நீதிமன்றங்கள், சிறைகள், சட்டமியற்றல், எடைகள் மற்றும் அளவைகள், கடன் கொடுத்தல் குறித்த சட்டம் உள்பட கடன் நிவாரணம், சீட்டு நிதிகள் மற்றும் நிறுவனங்களைப் பதிவு செய்தல்.

3. கல்வி அமைச்சர் .. மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:

கல்வி, தொழில்நுட்பக் கல்வி, அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல், விளையாட்டுகள், மற்றும் இளைஞர் நலன், தொல்பொருளியல், தமிழ் வளர்ச்சி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை, வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டோர்.

4. மின் துறை அமைச்சர் - மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:

மின்சாரம் மற்றும் மரபுசாரா மேம்பாடு.

5. இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:

இந்து சமய மற்றும் அறநிலையங்கள்.

6. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. செ. செம்மலை:

மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலன்.

7. உள்ளாட்சித் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:

நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள், நகர்ப்பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்.

8. தொழிலாளர் நலத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா:

தொழிலாளர்கள், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, நகர மற்றும் ஊரக வேலைவாய்ப்புத் திட்டங்கள், மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் வக்ஃபு.

9. ஊரகத் தொழில் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:

குடிசைத் தொழில்கள் உள்பட ஊரகத் தொழில்கள், சிறு தொழில்கள் மற்றும் கதர்-கிராமத் தொழில் வாரியம்.

10. கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. ப. தனபால்:

கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு, விலைக் கட்டுப்பாடு மற்றும் புள்ளியியல்.



11. வருவாய்த் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:

வருவாய், மாவட்ட வருவாய்த் துறைப் பணியாளரமைப்பு, துணை ஆட்சியர்கள், பத்திரப் பதிவு, முத்திரைத் தாள் சட்டம், எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை, அரசு அச்சகம், பூமிதானம், கிராமதானம், கடவுச் சீட்டு, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை மற்றும் கருப்பஞ்சாற்றுக் கசண்டு.

12. பொதுப் பணித் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:

பொதுப் பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு பாசனம் உள்பட பாசனம்.

13. செய்தி—விளம்பரம், வனம் மற்றும் சுற்றுச் சூழல் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. எஸ்.எஸ். திருநாவுக்கரசு:

செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பவியல், திரைப்படச் சட்டம், செய்தித்தாள் கட்டுப்பாடு, வனம், சுற்றுச் சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு.

14. வேளாண்மைத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:

வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக் கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்பு மேம்பாடு.

15. சுற்றுலாத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திருமதி இரா. சரோஜா:

சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.

**16. சமூக நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:**

*மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உள்பட சமூக நலன், மதிய சத்துணவு, ஊனமுற்றோர் நலன், இரவலர் மறுவாழ்வு, அனாதை இல்லங்கள் மற்றும் குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம்.*

**17. ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. வீ. சுப்பிரமணியன்:**

*ஆதிதிராவிடர் நலன், பழங்குடியினர், கொத்தடிமைத் தொழிலாளர்கள் மற்றும் முன்னாள் படைவீரர் நலன்.*

**18. கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எஸ்.பி. சண்முகநாதன்:**

*கைத்தறி மற்றும் துணித் தொழில்.*

**19. மீன் வளத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத்:**

*மீன் வளம் மற்றும் கால்நடை பராமரிப்பு.*

**20. தொழில் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:**

*தொழிற்சாலைகள், இரும்பு உருக்குக் கட்டுப்பாடு, சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள்.*

**21. பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சி. சண்முகவேலு:**

*பால் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி.*

**22. வணிக வரித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:**

*வணிக வரிகள்.*



**23. வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ஏ.கே. செல்வராஜ்:**

*வீட்டு வசதி, வீட்டு வசதி மேம்பாடு, நகரமைப்பு திட்டமிடல், குடிசை மாற்று வாரியம், இடவசதிக் கட்டுப்பாடு, நகர்ப்பகுதி வளர்ச்சி மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.*

**24. போக்குவரத்துத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:**

*போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, மோட்டார் வண்டிகள் சட்டம் மற்றும் துறைமுகங்கள்.*

**25. பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திருமதி வளர்மதி ஜெபராஜ்:**

*பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர்.*

## GOVERNOR AND COUNCIL OF MINISTERS

## GOVERNOR – Dr. C. RANGARAJAN

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

| | | |
|---|---|---|
| **1. Chief Minister** | .. | **The Hon. Selvi J Jayalalithaa:**<br>Public, General Administration, Indian Administrative Service, Indian Police Service, Other All India Services, District Revenue Officers, Home, Police, Prevention of Corruption, Minorities Welfare and Information Technology. |
| **2. Minister for Finance and Law** | .. | **The Hon. Thiru C. Ponnaiyyan:**<br>Finance, Planning, Elections and Legislature, Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Debt Relief including Legislation on money lending, Chits and Registration of Companies. |
| **3. Minister for Education** | .. | **The Hon. Dr. M. Thambidurai:**<br>Education, Technical Education, Science and Technology, Sports and Youth Welfare, Archaeology, Tamil Development and Tamil Culture, Indians overseas, Refugees and Evacuees. |
| **4. Minister for Electricity** | .. | **The Hon. Thiru D. Jayakumar:**<br>Electricity, Non-conventional Energy Development. |
| **5. Minister for Hindu Religious and Charitable Endowments** | .. | **The Hon. Thiru P.C. Ramasamy:**<br>Hindu Religious and Charitable Endowments. |

| | | |
|---|---|---|
| **6. Minister for Health** | .. | **The Hon. Thiru S. Semmalai:**<br>Health, Medical Education and Family Welfare. |
| **7. Minister for Local Administration** | .. | **The Hon. Thiru C. Durairaj:**<br>Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural Indebtedness, Urban and Rural Water Supply. |
| **8. Minister for Labour** | .. | **The Hon. Thiru A. Anwer Rhazza:**<br>Labour, Employment and Training, Urban and Rural Employment Programmes, Census and Wakfs. |
| **9. Minister for Rural Industries** | .. | **The Hon. Thiru K. Pandurangan:**<br>Rural Industries including Cottage Industries, Small Scale Industries, Khadi and Village Industries Board. |
| **10. Minister for Co-operation, Food Civil Supplies and Consumer Protection** | .. | **The Hon. Thiru P. Dhanabal:**<br>Co-operation, Food, Civil Supplies, Consumer Protection, Price Control and Statistics. |
| **11. Minister for Revenue** | .. | **The Hon. Thiru O. Panneerselvam:**<br>Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Registration, Stamp Act, Stationery and Printing, Government Press, Bhoodhan and Gramdhan, Passport, Prohibition and Excise, Molasses. |
| **12. Minister for Public Works** | .. | **The Hon. Thiru N. Thalavai Sundaram:**<br>Public Works, Highways, Irrigation including Minor Irrigation. |
| **13. Minister for Information and Publicity and Forests and Environment** | .. | **The Hon. Thiru S.S. Thirunavukkarasu:**<br>Information and Publicity, Film Technology, Cinematograph Act, Newsprint Control, Forests, Environment and Pollution Control |
| **14. Minister for Agriculture** | .. | **The Hon. Thiru R. Jeevanandham:**<br>Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess, Sugarcane Development. |
| **15. Minister for Tourism** | .. | **The Hon. Tmt. R. Saroja:**<br>Tourism and Tourism Development Corporation. |
| **16. Minister for Social Welfare** | .. | **The Hon. Tmt. B. Valarmathi:**<br>Social Welfare including Women's and Children's Welfare, Nutritious Noon Meal, Welfare of the Disabled, Beggar Homes, Orphanages and Correctional Administration. |
| **17. Minister for Adi-Dravidar Welfare** | .. | **The Hon. Thiru V. Subramanian:**<br>Adi-Dravidar Welfare, Hill Tribes, Bonded Labour and Welfare of Ex-Servicemen. |
| **18. Minister for Handlooms and Textiles** | .. | **The Hon. Thiru S.P. Shanmuganathan:**<br>Handlooms and Textiles. |

| | | |
|---|---|---|
| **19. Minister for Fisheries** | .. | **The Hon. Thiru K.P. Rajendra Prasad:**<br>Fisheries and Animal Husbandry. |
| **20. Minister for Industries** | .. | **The Hon. Thiru R. Vaithilingam:**<br>Industries, Iron and Steel Control, Mines and Minerals. |
| **21. Minister for Milk and Dairy Development** | .. | **The Hon. Thiru C. Shanmugavelu:**<br>Milk and Dairy Development. |
| **22. Minister for Commercial Taxes** | .. | **The Hon. Thiru C.Ve. Shanmugam:**<br>Commercial Taxes. |
| **23. Minister for Housing and Urban Development** | .. | **The Hon. Thiru A.K. Selvaraj:**<br>Housing, Housing Development, Town Planning, Slum Clearance, Accommodation Control, Urban Development and Chennai Metropolitan Development Authority. |
| **24. Minister for Transport** | .. | **The Hon. Thiru Nainar Nagendran:**<br>Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Ports. |
| **25. Minister for Backward Classes** | .. | **The Hon. Tmt. Valarmathi Jebaraj:**<br>Backward Classes, Most Backward Classes and Denotified Communities. |



# பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்

## பேரவைத் தலைவர்

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து

## பேரவைத் துணைத் தலைவர்

மாண்புமிகு திரு. அ. அருணாசலம்

## மாற்றுத் தலைவர்கள் #

திரு. பி.ஆர். சுந்தரம்

திரு. அ. பாப்பா சுந்தரம்

திரு. ப. இராஜரெத்தினம்

திரு. சோ. பாலகிருஷ்ணன்

திருமதி டி.. யசோதா

திரு. லா. சந்தானம்

## முதன்மைச் செயலாளர்

திரு. செ.சு. ஜானகிராமன்

## செயலாளர்

திரு. வெ. இராசாராமன்

---

*# 20—8—2001 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு.*

| | |
|---|---|
| திருமதி பானுமதி ஆனந்தராஜன், பி.எஸ்சி., பி.ஜி.எல். | .. கூடுதல் செயலாளர் |
| திரு. செ.ஏ. துரைபாண்டியன், பி.ஏ., பி.எல். | .. இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திருமதி பவானி சுப்பையா, பி.ஏ., பி.ஜி.எல். | .. இணைச் செயலாளர் |
| திரு. மு. ஆறுமுகப்பெருமாள், எம்.ஏ., பி.லிட்., | .. இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. சா. கணேசன், பி.ஏ., பி.ஜி.எல். | .. இணைச் செயலாளர் |
| திருமதி வீ.நா. உமா, பி.ஏ. | .. குழு அலுவலர் |
| திரு. தி. திருமாவளவன், பி.எஸ்சி., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. வெ. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.எல். | .. பேரவைத் தலைவரின் சிறப்புத் தனிச் செயலர் |
| திரு. சி. சடகோபி, எம்.ஏ., எம்.பி.ஏ. | .. பேரவைத் தலைவரின் சிறப்பு நேர்முக உதவியாளர் |
| திரு. சு. ராஜகுரு | .. குழு அலுவலர் |
| திரு. க. சம்பத்ராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. செ. சந்திரகுமார், எம்.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. கோ. ஸ்ரீராமன், பி.காம்., | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. எம். ஜோபாய், பி.காம்., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. இரா. முருகானந்தம், பி.எஸ்சி., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. இல. மாரியப்பன், பி.ஏ. | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. கோ. ஞானப்பிரகாசம், எம்.ஏ., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. ஜி. அனீஸ் அகமத், எம்.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. மா. செல்வராஜ், பி.எஸ்சி., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. வெ.சி. சுப்பிரமணியன், எம்.ஏ., பி.எல். | .. குழு அலுவலர் |
| திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். | .. குழு அலுவலர் |
| திருமதி சீ. கனகவல்லி, டி.சி.பி. | .. தலைமை நிருபர் |
| திரு. ஊ.கு. சுப்பிரமணியன், எம்.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| திரு. டி. கோவிந்தராஜு, எம்.ஏ., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. ஏ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்சி., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. வெ. வெங்கடேசன், எம்.ஏ. | .. தலைமை நிருபர் |
| திரு. ச. பாலகிருஷ்ணன், பி.எஸ்சி., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. நா. நடராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | .. தலைமை நிருபர் |

திருமதி என். மீனாட்சி, எம்.ஏ., பி.ஜி.எல்., .. சார்புச் செயலாளர்

திரு. மு. பொன்னுரங்கம், எம்.ஏ., பி.எல்., .. தலைமை நிருபர்

திரு. தி. உமாபதி, பி.ஏ., .. தலைமை நிருபர்

திருமதி ப. சாஸ்வதி, எம்.ஏ., பி.ஜி.எல்., .. சார்புச் செயலாளர்

திரு. கோ. தேவராஜன், பி.ஏ., .. சார்புச் செயலாளர்

திருமதி ச.இரா. சுகுணா, பி.ஏ., .. தலைமை நிருபர்

திருமதி இரா. கஸ்தூரி, பி.ஏ., பி.ஜி.எல்., .. சார்புச் செயலாளர்

திருமதி சை. உ. சலீம் உன்னிசா, பி.ஏ., .. சார்புச் செயலாளர்

திரு. ந. ருத்ரமணி, எம்.ஏ., .. சார்புச் செயலாளர்

திரு. க. கிருஷ்ணன், பி.ஏ., .. சார்புச் செயலாளர்

செல்வி நா. இந்திரா பாய், பி.ஏ., .. சார்புச் செயலாளர்



## பேரவை உறுப்பினர்கள்

### (அகர வரிசைப்படி)

### பெயர்களும் தொகுதிகளும்

1. அசோகன், திரு. அ. .. திருவாரூர் (செ.வ.)
2. அண்ணாதுரை, திரு. செ. .. ஜெயங்கொண்டம்
3. அண்ணாமலை, திரு. கு. .. தென்காசி
4. அண்ணாவி, திரு. ப. .. தொட்டியம்
5. அப்துல் லத்தீப், திரு. ம. .. வாணியம்பாடி
6. அப்பாவு, திரு. மு. .. ராதாபுரம்
7. அய்யாறு வாண்டையார், திரு. கே. .. திருவையாறு
8. அரசன், திரு. ப. .. அறந்தாங்கி
9. அருணாசலம், திரு. அ. .. வரகூர் (செ.வ.)
10. அருள், திரு. பி.எஸ். .. புவனகிரி
11. அழகம்மாள், திருமதி வி. .. தலைவாசல் (செ.வ.)
12. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், திரு. .. திருச்செந்தூர்
13. அன்பழகன், திரு. ஆகு.சீ. .. பெரணமல்லூர்
14. அன்பழகன், திரு. கு. .. நிலக்கோட்டை (செ.வ,
15. அன்பழகன், திரு. கே.பி. .. பாலக்கோடு
16. அன்பழகன், திரு. ஜெ. .. தியாகராய நகர்
17. அன்பழகன், பேராசிரியர் க. .. துறைமுகம்
18. அன்பில் பெரியசாமி, திரு. .. திருச்சிராப்பள்ளி—2
19. அன்வர் ராஜா, திரு. அ. .. இராமநாதபுரம்
20. ஆண்டிவேல், திரு. ப. .. வேடசந்தூர்

| | | |
|---|---|---|
| 21. | ஆறுமுகம், திரு. கே. | .. செங்கல்பட்டு |
| 22. | ஆறுமுகம், திரு. த. | .. திருவொற்றியூர் |
| 23. | ஆற்காடு நா. வீராசாமி, திரு. | .. அண்ணா நகர் |
| 24. | ஆஸ்டின், திரு. | .. நாகர்கோவில் |
| 25. | இரவிராஜ், திரு. கோ. | .. திருத்தணி |
| 26. | இராசேந்திரன், திரு. சி. | .. திருவோணம் |
| 27. | இராசேந்திரன், திரு. சோ. | .. கோவில்பட்டி |
| 28. | இராமசாமி, திரு. கே.ஆர். | .. திருவாடானை |
| 29. | இராமசாமி, திரு பி.சி. | .. மொடக்குறிச்சி |
| 30. | இராமச்சந்திரன், திரு. எஸ். | .. கலசப்பாக்கம் |
| 31. | இராமச்சந்திரன், திரு. ஓ.ஆர். | .. கம்பம் |
| 32. | இராமச்சந்திரன், திரு. கே.கே. எஸ்.எஸ்.ஆர். | .. சாத்தூர் |
| 33. | இராமு, திரு. ந. | .. உளுந்தூர்பேட்டை (செ.வ.) |
| 34. | இராம் பிரபு, திரு. இரா. | .. பரமக்குடி (செ.வ.) |
| 35. | இராஜசேகர், திரு. மா. | .. ராஜபாளையம் (செ.வ.) |
| 36. | இராஜரெத்தினம், திரு. ப. | .. பெரம்பலூர் (செ.வ.) |
| 37. | இராஜா, திரு. டி.கே. | .. திருப்பத்தூர் |
| 38. | இராஜேந்திர பிரசாத், திரு. கே.பி. | .. பத்மநாபபுரம் |
| 39. | இராஜேந்திரன், திரு. பி.ஜி. | .. ஆலங்குளம் |
| 40. | இலட்சுமணன், திரு. கே.என். | .. மயிலாப்பூர் |
| 41. | இளவழகன், திரு. ப. | .. அரியலூர் |
| 42. | இளையகண்ணு, திரு. கா.தி. | .. ஏற்காடு (ஆ.வா.) |
| 43. | இன்பத் தமிழன், திரு. இரா.தா. | .. ஸ்ரீவில்லிபுத்தூர் |



| | | |
|---|---|---|
| 44. | ஈஸ்வரன், திரு. ரா. | .. வாசுதேவநல்லூர் (செ.வ.) |
| 45. | உசேன், திரு. எஸ்.ஏ.எம். | .. திருவல்லிக்கேணி |
| 46. | உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம். | .. தஞ்சாவூர் |
| 47. | உமாதேவன், திரு. கே.கே. | .. திருப்பத்தூர் |
| 48. | உலகரட்சகன், திரு. பி.எஸ். | .. செய்யாறு |
| 49. | ஏழுமலை, திரு. வெ. | .. செஞ்சி |
| 50. | கணபதி, திரு. ந. | .. வானூர் (செ.வ.) |
| 51. | கணேசன், திரு. ஐ. | .. எடப்பாடி |
| 52. | கணேசன், திரு. ஆர்டி. | .. தேனி |
| 53. | கண்ணன், திரு. ஏ.எஸ். | .. பொன்னேரி (செ.வ.) |
| 54. | கந்தசாமி, திரு. க.ரா. | .. சத்தியமங்கலம் |
| 55. | கந்தசாமி, திரு. கா. | .. குன்னூர் (செ.வ.) |
| 56. | கருணாகரன், திரு. கே.சி. | .. சிங்காநல்லூர் |
| 57. | கருணாநிதி, திரு. மு. | .. சேப்பாக்கம் |
| 58. | கருப்பசாமி, திரு. சொ. | .. சங்கரநயினார்கோவில் (செ.வ) |
| 59. | கருப்பணன், திரு. கே.சி. | .. பவானி |
| 60. | கருப்பாயி, டாக்டர் திருமதி ஆ. | .. குளத்தூர் (செ.வ.) |
| 61. | கலாவதி, திருமதி கு. | .. சேந்தமங்கலம் (ஆ.வா.) |
| 62. | கனகதாரா, செல்வி. சி. | .. பேரணாம்பட்டு (செ.வ.) |
| 63. | கனிதா சம்பத், திருமதி எஸ். | .. திருப்போரூர் (செ.வ.) |
| 64. | காசாம்பு பூமாலை, திருமதி | .. சங்கராபுரம் |
| 65. | காமராஜ், திரு. மே.ப. | .. தாரமங்கலம் |
| 66. | கார்த்தி, திரு. மு. | .. சேலம்—2 |

67. காளிமுத்து, டாக்டர் கா. .. திருமங்கலம்
68. கிருஷ்ணமூர்த்தி, திரு. வே. .. அரூர் (செ.வ.)
69. கிருஷ்ணன், திரு. ஆர். .. அந்தியூர் (செ.வ.)
70. குமாரதாஸ், டாக்டர் தே. .. கிள்ளியூர்
71. குரு என்கிற குருநாதன், திரு. ஜெ... ஆண்டி மடம்
72. கோதண்டராமன், திரு. ஜி. .. முகையூர்
73. கோபிநாத், திரு. கே. .. ஓசூர்
74. கோவிந்தசாமி, டாக்டர் ஆர். .. விருத்தாசலம்
75. கோவிந்தராஜ், திரு. வெ. .. கிருஷ்ணகிரி
76. கோவை தங்கம், திரு. .. வால்பாறை (செ.வ.)
77. சக்திவேல் முருகன், திரு. எம். .. அம்பாசமுத்திரம்
78. சக்ரபாணி, திரு. ஆர். .. ஒட்டன்சத்திரம்
79. சசிகலா, திருமதி ஆர். .. கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
80. சண்முகநாதன், திரு. எஸ்.பி. .. ஸ்ரீவைகுண்டம்
81. சண்முகம், திரு. சி. .. பூந்தமல்லி
82. சண்முகம், திரு. சி.வி. .. திண்டிவனம்
83. சண்முகவேலு, திரு. சி. .. உடுமலைப்பேட்டை
84. சந்தானம், திரு. லா. .. உசிலம்பட்டி
85. சந்திரசேகரன், திரு. எம்.எஸ். .. இராணிப்பேட்டை
86. சந்திரமோகன், திரு. நா. .. சீர்காழி (செ.வ.)
87. சந்திரன், திரு. வீ. .. சிவகங்கை
88. சம்பத், திரு. எம்.சி. .. நெல்லிக்குப்பம்
89. சரவணன், திரு. துரை. கி. .. சிதம்பரம்
90. சரோஜா, திருமதி இரா. .. உப்பிலியாபுரம் (ஆ.வா.)



91. சாமி, திரு. ஆர். .. மேலூர்
92. சாமிநாதன், திரு. மு.பெ. .. வெள்ளக்கோவில்
93. சிதம்பரம், திரு. ப. .. பவானிசாகர்
94. சிவகாமி, திருமதி வி. .. தாராபுரம் (செ.வ.)
95. சிவசாமி, திரு. கே.கே. .. அருப்புக்கோட்டை
96. சிவசாமி, திரு. செ. .. திருப்பூர்
97. சிவசுப்பிரமணியன், திரு. டி.என் .. கரூர்
98. சிவபுண்ணியம், திரு. வை. .. மன்னார்குடி
99. சிவபெருமாள், திரு. அ. .. ஒட்டப்பிடாரம் (செ.வ.)
100. சிவராஜ், திரு. சு. .. ரிஷிவந்தியம்
101. சின்னசாமி, திரு. மா. .. பழனி (செ.வ.)
102. சீனிவேல், திரு. எஸ்.எம். .. திருப்பரங்குன்றம்
103. சுதர்சனம், திரு. கே. .. கும்மிடிப்பூண்டி
104. சுதர்சனம், திரு. டி. .. திருவள்ளூர்
105. சுந்தரம், திரு. பி.ஆர். .. ராசிபுரம்
106. சுந்தராம்பாள், திருமதி செ. .. மேட்டூர்
107. சுப்பிரமணியன், திரு. வீ. .. கண்டமங்கலம் (செ.வ.)
108. சுப்பையா பாண்டியன், திரு. எம். .. கடையநல்லூர்
109. சூரியகலா, திருமதி சி.எம். .. குடியாத்தம்
110. செம்மலை, திரு. செ. .. ஓமலூர்
111. செல்லையா, திரு. வி.ஏ. .. மருங்காபுரி
112. செல்வம், திரு. எஸ்.கே. .. வீரபாண்டி
113. செல்வராஜ், திரு. ஆ. .. அச்சரப்பாக்கம் (செ.வ.)
114. செல்வராஜ், திரு. ஏ.கே. .. மேட்டுப்பாளையம்

115. செல்வி முருகேசன், திருமதி .. காங்கேயம்
116. சேகரன், திரு. கே.என். .. திருவெறும்பூர்
117. சேகர்பாபு, திரு. பி.கே. .. டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்
118. சோமசுந்தரம், திரு. வி. .. உத்திரமேரூர்
119. ஞானசேகரன், திரு. சி. .. வேலூர்
120. ஞானமூர்த்தி, திரு. கே.ஜி.பி. .. திருநாவலூர்
121. தமிழரசன், திரு. செ.கு. .. நன்னிலம் (செ.வ.)
122. தமிழ்ச்செல்வன், திரு. தங்க. .. ஆண்டிப்பட்டி
123. தமிழ்மொழி **ராஜதத்தன்** திருமதி ஆர். .. மேல்மலையனூர்
124. தம்பிதுரை, டாக்டர் மு. .. பர்கூர்
125. தவமணி, திரு. க. .. திருவிடைமருதூர்
126. தளவாய் சுந்தரம், திரு. ந. .. கன்னியாகுமரி
127. தனபால், திரு. ப. .. சங்கரி (செ.வ.)
128. தாமோதரன், திரு. எஸ். .. விருதுநகர்
129. தாமோதரன், திரு. செ. .. கிணத்துக்கடவு
130. தாமோதிரன், திரு. ப.வெ. .. பொங்கலூர்
131. திருஞானசம்பந்தம், திரு. எஸ்.வி. .. பேராவூரணி
132. திருநாவுக்கரசு, திரு. எஸ்.எஸ். .. காஞ்சிபுரம்
133. திருமாவளவன், திரு. இரா. .. மங்களூர் (செ.வ.)
134. துரைமுருகன், திரு. .. காட்பாடி
135. துரைராஜ், திரு. சி. .. சேடப்பட்டி
136. தென்னரசு, திரு. கே.எஸ். .. ஈரோடு
137. நடராஜன், திரு. அ. .. குத்தாலம்
138. நடராஜன், திரு. எஸ். .. நாட்ராம்பள்ளி
139. நடராஜன், திரு. பி.கே.டி. .. ஆத்தூர்
140. நடராஜன், திரு. வ.து. .. இளையான்குடி
141. நயினார் நாகேந்திரன், திரு. .. திருநெல்வேலி
142. நரசிம்மன், திரு. பி.எம். .. பள்ளிப்பட்டு
143. நளினி மனோகரன், திருமதி .. போளூர்
144. நன்மாறன், திரு. என். .. மதுரை கிழக்கு
145. நீலகண்டன், திரு. ப. .. ஆற்காடு
146. நெப்போலியன், திரு. து. .. வில்லிவாக்கம்
147. பச்சைமால், திரு. தா. .. குளச்சல்
148. பதினெட்டாம்படியான், திரு. க. .. முதுகுளத்தூர்
149. பாணிகுமார், திரு. பா. .. திருச்சிராப்பள்ளி—I
150. பரிதி இளம்வழுதி, திரு. .. எழும்பூர் (செ.வ.)
151. பவானி கருணாகரன், திருமதி கே. .. அரக்கோணம் (செ.வ.)
152. பழனிசாமி, திரு. கே.எஸ். .. பெருந்துறை
153. பழனிசாமி, திரு. ஜி. .. திருத்துறைப்பூண்டி (செ.
154. பழனியப்பன், திரு. பெ. .. மொரப்பூர்
155. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. .. குறிஞ்சிப்பாடி
156. பன்னீர்செல்வம், திரு. ஓ. .. பெரியகுளம்
157. பாண்டுரங்கன், திரு. கே. .. அணைக்கட்டு
158. பாப்பா சுந்தரம், திரு. அ. .. குளித்தலை
159. பாரமலை, திரு. க. .. மானாமதுரை (செ.வ.)
160. பாரிமோகன், திரு. கி. .. தர்மபுரி
161. பாலகிருஷ்ணன், திரு. சோ. .. கடலாடி

162. பாலசுப்பிரமணியன், திரு. எஸ்.ஆர் .. தொண்டாமுத்தூர்
163. பாலசுப்பிரமணியன், திரு. கே.கே. .. ஸ்ரீரங்கம்
164. பாலபாரதி, செல்வி க. .. திண்டுக்கல்
165. பாலன், திரு. எஸ்.எம். .. லால்குடி
166. பால் மனோஜ் பாண்டியன், திரு. பி.எச். .. சேரன்மகாதேவி
167. பிச்சாண்டி, திரு. கு. .. திருவண்ணாமலை
168. புகழேந்தி, திரு. இ. .. கடலூர்
169. பூபதி மாரியப்பன், திருமதி .. வலங்கைமான் (செ.வ.)
170. பெருமாள், திரு. என்.கே. .. விளாத்திக்குளம்
171. பொன்முடி, டாக்டர் க. .. விழுப்புரம்
172. பொன்னம்பலம், திரு. ப. .. சமயநல்லூர் (செ.வ.)
173. பொன்னையன், திரு. சி. .. திருச்செங்கோடு
174. போளூர் வரதன், திரு. .. செங்கம் (செ.வ.)
175. மகாலிங்கம், திரு. எஸ். .. அவினாசி (செ.வ.)
176. மகேந்திரன், திரு. கே. .. பெரம்பூர் (செ.வ.)
177. மகேஸ்வரி, திருமதி எஸ். .. கோயம்புத்தூர் மேற்கு
178. மணி, திரு. கோ.சி. .. கும்பகோணம்
179. மணி, திரு. டி . .. விளவங்கோடு
180. மணி, திரு. ஜி.கே. .. பெண்ணாகரம்
181. மணி நாடார், திரு. எஸ்.எஸ். .. சாத்தான்குளம்
182. மலையப்பசாமி, திரு. அ.இரா. .. கபிலர்மலை
183. மல்லிகா, திருமதி சி. .. முசிறி
184. மாணிக்கராஜ், திரு. எஸ். .. நாங்குநேரி



185. மில்லர், திரு. அ. .. கடலூர்
186. முரளிதரன், திரு. கே.வி. .. தளி
187. முருகவேல் ராஜன், திரு. க. .. வந்தவாசி (செ.வ.)
188. முருகேசன், திரு. ஆ.கு. .. ஆத்தூர்
189. முனுசாமி, திரு. கா.பூ. .. காவேரிப்பட்டினம்
190. மைதீன்கான், திரு. டி.பி.எம். .. பாளையங்கோட்டை
191. மோகன், திரு. ப. .. சின்னசேலம்
192. யசோதா, திருமதி டி. .. ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)
193. ரங்கநாதன், திரு. ப. .. புரசைவாக்கம்
194. ரங்கராஜன், திரு. என்.ஆர். .. பட்டுக்கோட்டை
195. ரமணீதரன், திரு. எஸ்.எஸ். .. கோபிச்செட்டிப்பாளைய
196. ராதாகிருஷ்ணன், திரு. எம். .. திருமயம்
197. ராமச்சந்திரன், திரு. கே. .. ஆரணி
198. ராமராஜ், திரு. ச. .. போடிநாயக்கனூர்
199. ராம்குமார், திரு. எம். .. பாபநாசம்
200. ராஜகோபால், திரு. ஆ. .. சிவகாசி
201. ராஜம்மாள், திருமதி எஸ். .. தூத்துக்குடி
202. ராஜா, திரு. எச். .. காரைக்குடி
203. ராஜாங்கம், திரு. வி.ஆர். .. சோழவந்தான்
204. ராஜு, திரு. எச்.எம். .. உதகமண்டலம்
205. ரெங்கநாதன், திரு. என். .. பூம்புகார்
206. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார், திரு. மா.ப. .. பேரூர்
207. லட்சுமணன், திரு. வி.கே. .. கோயம்புத்தூர் கிழக்கு

208. ஸியாவுதீன் சேட், திரு. இ.ஏ. .. அரவக்குறிச்சி

209. வளர்மதி, திருமதி பா. .. ஆலந்தூர்

210. வளர்மதி ஜெபராஜ், திருமதி .. மதுரை மேற்கு

211. வள்ளல் பெருமான், டாக்டர் பி. .. காட்டுமன்னார்கோவில் (செ.வ.)

212. வாசுதேவன், திரு. பெ. .. மதுராந்தகம்

213. விசுவநாதன், திரு. இரா. .. நத்தம்

214. வில்வநாதன், திரு. இரா. .. சோளிங்கர்

215. வினாயகமூர்த்தி, திரு. எஸ்.ஜி. .. பூங்கா நகர்

216. விஜயபாஸ்கர், டாக்டர் சி. .. புதுக்கோட்டை

217. விஜயலட்சுமி பழனிச்சாமி, திருமதி ப. .. பனமரத்துப்பட்டி

218. வீரபாண்டியன், திரு. ஜெக. .. மயிலாடுதுறை

219. வெங்கடாசலம், திரு. அ. .. ஆலங்குடி

220. வெங்கடாஜலம், திரு. செ. .. சேலம்—I

221. வேதரத்தினம், திரு. எஸ்.கே. .. வேதாரண்யம்

222. வேலுசாமி, திரு. செ.மா. .. பல்லடம்

223. வேலு, திரு. எ.வ. .. தண்டராம்பட்டு

224. வேல் முருகன், திரு. தி. .. பண்ருட்டி

225. வைதியலிங்கம், திரு. மீ.அ. .. தாம்பரம்

226. வைத்திலிங்கம், திரு. ஆர். .. ஒரத்தநாடு

227. ஜீவானந்தம், திரு. இரா. .. நாகப்பட்டினம்

228. ஜெயக்குமார், திரு. கு. .. நாமக்கல் (செ.வ.)

229. ஜெயக்குமார், திரு. டி. .. இராயபுரம்

230. ஜெயராமன், திரு. வி. .. பொள்ளாச்சி



231. ஸ்டாலின், திரு. மு.க. .. ஆயிரம் விளக்கு

232. ஹக்கீம், திரு. எம்.ஏ. .. மதுரை மத்தி

233. ஹேமச்சந்திரன், திரு. ஜே. .. திருவட்டாறு

234. சான்ட்ரா டான் க்ரவல், திருமதி .. (நியமனம்)

235. (வெற்றிடம்) .. சைதாப்பேட்டை

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

திரு. என்.ஆர். சந்திரன் .. தலைமை வழக்கறிஞர்

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## ஆவணி 8, விசு – திருவள்ளுவர் ஆண்டு 2032

## 2001 ஆகஸ்ட் 24, வெள்ளிக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் டாக்டர் **கா. காளிமுத்து** அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்
பண்புபா ராட்டும் உலகு."

நீதியையும் நன்மையையும் விரும்பிப் பிறர்க்குப் பயன்பட வாழுகின்றவரின் நல்ல பண்பை உலகத்தார் போற்றிக் கொண்டாடுவர்.

## 1. வினாக்கள்–விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்–விடைகள். வினா எண் 7, திரு. அ. நடராஜன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

7–

### மேல்நிலைப் பள்ளி

***522–திரு. அ. நடராஜன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–

(அ) குத்தாலம் அரசினர் பெண்கள் உயர்நிலைப் பள்ளியினை மேல்நிலைப் பள்ளியாக மாற்றித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

[2001 ஆகஸ்ட் 24

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை, கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், குத்தாலம் அரசினர் பெண்கள் உயர்நிலைப் பள்ளியினை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தக் கோரும் கருத்துருக்கள் 2001–2002 ஆம் கல்வியாண்டில் பெறப்படவில்லை. வரும் கல்வியாண்டில் மேற்கண்ட பள்ளியின் சார்பாகக் கருத்துருக்கள் பெறப்பட்டால் அதனை அடுத்த கல்வியாண்டில் அரசின் நிதிநிலைக்குட்பட்டு உயர்மட்டக் குழுவால் பரிசீலிக்கக் கருதப்படும்.

**திரு. அ. நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சரின் பதிலுக்கு நன்றி. அடுத்து, குத்தாலம் தொகுதியில் விஷ்ணுபுரம் கிராமத்தில் அரசு உதவி பெறும் தனியார் உயர்நிலைப் பள்ளி ஒன்று கடந்த 75 ஆண்டுகளாகச் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. பல கிராமங்களுக்கு நடுவே உள்ள அந்தப் பள்ளியில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் படித்து வருகிறார்கள். எனவே, அந்தப் பள்ளியையும் அரசின் உதவியோடு மேல்நிலைப் பள்ளியாக மாற்றுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று தங்கள் மூலம் அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் எழுப்பியுள்ள அந்த அரசு உதவி பெறும் தனியார் பள்ளியும் முறைப்படி proposal அனுப்பி வைத்தால் அரசு பரிசீலனை செய்யும். ஆனால், அதுவும் நிதிநிலைக்கு உட்பட்டுத்தான் பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம். இது குத்தாலம் பற்றிய கேள்வி. உசிலம்பட்டி பற்றியது அல்ல.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகவும், நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும் உயர்த்துகின்ற செயற்குறிப்பை நிதிநிலை அறிக்கையிலேகூடக் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால், இதற்கு மூலமாக இருக்கிற தொடக்கப் பள்ளிகளை, ஆரம்பப் பள்ளிகளை ஆரம்பிப்பது குறித்தும், ஆரம்பப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாக ஆக்குவது குறித்தும் அரசினுடைய செயற்குறிப்பில் எவ்விதக் குறிப்பும் இல்லையே? புதிதாக தொடக்கப் பள்ளிகளைத் தொடங்கவும், தொடக்கப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாக ஆக்கவும் செயற்குறிப்பு இருக்கிறதா என்பதை உங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.



2001 ஆகஸ்ட் 24]

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சந்தானம் அவர்கள் எழுப்பிய இந்த வினாவைப் பொறுத்தவரையில், வரவிருக்கிற கல்வி மானியத்தில் விளக்கம் தர இருக்கிறோம். இருப்பினும், உறுப்பினர் இப்போது கேட்டதன் காரணமாக ஒரு விளக்கம் தர விரும்புகின்றேன். எவ்வாறு நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும், உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகவும் ஆக்கினோமோ, அதுபோல இந்த ஆண்டும் சுமார் 250 ஆரம்பக் கல்வி நிலையங்களைத் தொடங்கவும், சுமார் 250 ஆரம்பக் கல்வி நிலையங்களை நடுநிலைப் பள்ளிகளாக மாற்றுவதற்கும் இப்போது அரசு ஆராய்ந்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றும் இன்றும் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த வினாவைக் குறித்து சிறப்பாகக் கேள்வி கேட்டார்கள். தமிழ்நாட்டில் உள்ள காது கேளாதோர் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக ஆக்குவதற்கு...

*(சட்டமன்ற உறுப்பினர் திரு. ப. ரங்கநாதன் அவையில் நுழைந்தபோது மேசையைத் தட்டும் ஒலி எழுந்தது.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான்கூட என்னவோ, ஏதோ என்று பயந்துவிட்டேன்.

**திரு. எச்.எம். ராஜு:** நமது தமிழ்நாட்டில் உள்ள காது கேளாதோர் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாக ஆக்கப்படுமானால், அதற்கான அரசின் சிறப்புச் சலுகை என்ன என்பதை நான் அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கான தனிச் சலுகைகள் எதுவும் கிடையாது. இருப்பினும் அவற்றை மேல்நிலைப் பள்ளிகளாக ஆக்குவதற்கு அரசு பரிசீலனை செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. முருகவேல் ராஜன்.

(முற்பகல் 10-05

**திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள்

[2001 ஆகஸ்ட் 24

பதிலளித்துக் கொண்டிருக்கின்ற வினாவைப் போன்று, நேற்றையதினம் ஒரு வினா எழுப்பப்பட்டது. அந்த வினாவிற்குப் பதிலளித்த கல்வி அமைச்சர் அவர்கள் பழங்குடியினருக்கான பள்ளிகள் உயர்நிலைப் பள்ளியாக இருந்தால், மேல்நிலைப் பள்ளியாக மாற்றப்படுவதற்கு சலுகை அளிக்கப்படும் என்று அறிவித்தார்கள். அந்த அறிவிப்பிற்கு முதற்கண் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைச் சொல்வதோடு, நீலகிரி மாவட்டம், குன்னூரிலே 1964.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. முருகவேல் ராஜன், கேள்வி குத்தாலத்தைப் பற்றியது. நீங்கள் கேட்கிற விவரமெல்லாம் அமைச்சரிடம் இருக்காது. தனிக் கேள்வி போடவும்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** இல்லை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கேட்பது உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மாற்றுவது தொடர்பான கேள்விதான். 1964-லிருந்து பழங்குடியினருக்காக ஸ்ரீ சத்குரு மடம் என்கிற அமைப்பு இலவசமாகக் கல்வியைக் கொடுத்துக் கொண்டிருக்கிறது. ஆனால், 1964-லிருந்து, அந்தப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மாற்ற வேண்டுமென்று அவர்கள் தமிழக அரசைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களிடத்திலும், அவர்கள் மனு கொடுத்திருக்கிறார்கள் என்று தெரிய வருகிறது. அந்தப் பழங்குடியினருக்கான உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மாற்றுவதற்கு அரசு சலுகை அளிக்குமா, ஆவன செய்யுமா என்பதை உங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவியினுடைய அரசானது அனைத்து உயர்நிலைப் பள்ளிகளையும் படிப்படியாக மேல்நிலைப் பள்ளிகளாக ஆக்குவதைத்தான் ஒரே கொள்கையாகக் கொண்டிருக்கிறது. ஆகவே. இந்த வருடம் முதற்கட்டமாக 125 உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக மாற்றியிருக்கிறோம். அதேபோல, அடுத்த ஆண்டும், நிதிநிலைக்கு உட்பட்டு, மற்ற உயர்நிலைப் பள்ளிகளும் மேல்நிலைப் பள்ளிகளாக ஆக்கப்படும். ஆகவே, நீங்கள் சொல்வதுபோல அந்தக் கடிதம் வந்திருந்தால், அதனைப் பரிசீலனை செய்து, ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு.



2001 ஆகஸ்ட் 24]

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆசிரியர் பணி மாற்றத்திற்குப் பின்னால், பல மேல்நிலைப் பள்ளிகளில் முதுநிலைப் பட்டதாரி ஆசிரியர்கள் பணியிடம் காலியாக உள்ளது. எனவே, P.G. Course நடத்துகின்ற முதுநிலைப் பட்டதாரி ஆசிரியர்கள் வந்தால்தான் மேல்நிலைப் பள்ளிகளிலே பாடத் திட்டங்களை நடத்த முடியும். எனவே, பல இடங்களிலே பணியிடம் காலியாக இருக்கின்ற காரணத்தால், கல்வியின் தரம் நாளுக்குள் நாள் குறைந்து வருகிறது. எனவே, அந்த இடங்களை உடனே நிரப்புவதற்குத் திட்டம் வைத்திருக்கிறீர்களா? Counselling மூலமாக அவர்களுடைய இஷ்டத்திற்குப் போகலாம் என்ற முடிவை எடுத்த காரணத்தினால், கிராமப் பகுதிகளிலே இருக்கின்ற மேல்நிலைப் பள்ளிகள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கின்றன. எனவே, உடனே அந்தப் பணியிடங்களை நிரப்புவதற்குத் திட்டம் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தண்டராம்பட்டு வேலு அவர்கள், ஆசிரியர் பணி மாற்றத்தினால் ஆங்காங்கே பள்ளிகளில் ஆசிரியர்கள் இல்லாமல் காலியிடங்கள் இருப்பதாகக் குறிப்பிடுகின்றார்கள். ஆனால், இதுவரை நான் பேசிக் கொண்டிருப்பது குத்தாலத்தில் இருக்கும் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக ஆக்குவது குறித்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதற்குப் பதில் சொல்ல வேண்டாம். தனிக் கேள்வி போடச் சொல்லவும்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** இருப்பினும், இப்படி ஒரு தவறான செய்தி பரவிக் கொண்டிருக்கிறது. முன்னர்கூட நம்முடைய முன்னாள் கல்வி அமைச்சர் அவர்கள் தனது அறிக்கையிலே, கடந்த ஐந்தாண்டு காலத்தில் 50,000 ஆசிரியர்களை நியமித்ததாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே. இந்தப் பணி மாற்றத்திற்கும், அங்கு வெற்றிடம் இருப்பதற்கும் சம்பந்தம் கிடையாது. பணி மாற்றம் என்பது ஓரிடத்திலிருந்து வேறு இடத்திற்குச் செல்வது. ஆகவே, பணி மாற்றத்தில் செல்வதானால்கூட, ஏதாவது காலியாக இருக்கும் இடத்திற்குத்தான் செல்கிறார்களேயொழிய ஏதோ ஒரு பள்ளிக்குச் செல்வது கிடையாது. கிராமப்புறங்களில் ஆசிரியர் பணியிடங்கள் வெற்றிடமாக இருக்கிறது என்று நீங்கள் சொல்கிறீர்கள். அதற்காக புரட்சித் தலைவி அவர்கள் முன்பே எங்களுக்கு அனுமதி தந்திருக்கிறார்கள். 4,000 இடைநிலை ஆசிரியர்களுக்கு நேர்முகத் தேர்வு நடந்துவிட்டது. அவர்கள் உடனே

பணியில் சேரவிருக்கிறார்கள். அதுபோலவே, பட்டதாரி ஆசிரியர்களையும் நியமிக்க நேர்முகத் தேர்வு நடத்துவதற்கு ஆணை பிறப்பித்திருக்கிறார்கள். அதிலே நம்முடைய உறுப்பினர்கள் வயது வரம்பைப் பற்றிப் பேசுகின்றபோது, 35 வயது என்று வைக்கப்பட்டு இருப்பதைத் தளர்த்த வேண்டும் என்று கேட்டிருக்கின்றார்கள். ஆனால், இந்த வயது வரம்பை நிர்ணயம் செய்தது இந்த அரசு கிடையாது. அது பொதுவாக இருக்கும் ஒரு சட்டம். அந்தச் சட்டம் ஏதோ இந்த அரசு, புரட்சித் தலைவி அரசு வந்த பிறகு கொண்டு வரப்பட்டது என்று ஒரு தவறான கருத்தைச் சொல்கின்றார்கள். அப்படிக் கிடையாது. ஜனவரி மாதம் 2001–லேயே இதைப்பற்றி விவாதம் நடந்தபோது, விளக்கமாக அரசுத் தரப்பிலே பதில் தரப்பட்டிருக்கிறது. ஆகவே, 35 வயதுதான் பட்டதாரி ஆசிரியர்களுக்கும், முதுநிலைப் பட்டதாரி ஆசிரியர்களுக்கும் வயது வரம்பு இருக்கிறதா என்ற கேள்வி கேட்ட நேரத்தில், 1989–லேயிருந்து இந்த வயது வரம்பு இருந்தாலும், 12–டி என்ற அந்தச் சிறப்பு விதியைப் பயன்படுத்தும்போது, தவறுதலான விளக்கத்தின் காரணமாக 35 வயதிற்கும் மேற்பட்ட பட்டதாரி ஆசிரியர்கள் நியமனம் செய்யப்பட்டு இருகிறார்கள். ஆகவே, இதைப்பற்றி நாங்கள் அனைவரும் எங்களுடைய தலைவி, புரட்சித் தலைவி அவர்களுடன் ஆலோசித்தோம். அவர்கள் அதற்கான ஆணையை இப்போது பிறப்பித்திருக்கிறார்கள். அவ்வாறு விதிமுறை இருந்தாலும், பட்டதாரி ஆசிரியர்களுக்கும் முதுநிலைப் பட்டதாரி ஆசிரியர்களுக்கும் வயது வரம்பைத் தளர்வு செய்துவிடலாம்; இப்போதுள்ள ஒரு நிலை வேண்டாம் என்று சொல்லியிருக்கின்றார்கள். ஆகவே, இதுநாள் வரை பல உறுப்பினர்கள் பட்டதாரி ஆசிரியர்களுடைய நியமனத்தைப் பற்றிக் கேள்வி கேட்டார்கள். ஆகவே இந்த மகிழ்ச்சியான செய்தியை புரட்சித் தலைவி அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள். இனிமேல் பட்டதாரி ஆசிரியர்களுக்கு வயது வரம்பு வைக்காமல் தளர்த்தப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, அந்த ஆசிரியர் பணியிடங்கள் அனைத்தையும் நிரப்பி–இப்போது வேலு அவர்கள் கேட்டிருக்கின்றார்கள் – அந்த ஆசிரியர்களை நியமனம் செய்தால்தான் அந்தப் பள்ளிகளிலே கல்வியைச் சரியான முறையில் தரமுடியும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, அதுகுறித்து பல உறுப்பினர்களும், பொதுமக்களும், பட்டதாரி ஆசிரியர்களும் வினாவை எழுப்பியிருந்ததன் காரணமாக, அந்த வினாவிற்குச் சரியான விளக்கம் தரப்பட்டிருக்கிறது. இதை வைத்துக்கொண்டு உடனடியாக, ஆசிரியர்களை நியமனம் செய்யும் அந்த Board –ன் மூலமாக வேலைவாய்ப்பு அலுவலகத்திலிருந்து பட்டியலைப் பெற்று, அந்தப் பட்டதாரி



ஆசிரியர்களுக்கு ஒரு சிறு தேர்வையும் வைத்து–நேர்முகத் தேர்வையும் வைத்து–அனைத்து உயர்நிலைப் பள்ளிகளிலும், மேல்நிலைப் பள்ளிகளிலும் –எங்கெங்கே காலியாக இருக்கிறதோ அத்தனை இடங்களுக்கும்– ஆசிரியர்கள் நியமனம் செய்யப்படுவார்கள் என்ற உறுதியினை உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10–10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் அவர்கள்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிகளின் நிலைகளை உயர்த்தும்போது, அதாவது நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும், உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகவும் உயர்த்தும்போது, அரசு நிர்ணயித்திருக்கும் தேவைகள் என்ன? போடும் நிபந்தனைகள் என்ன? அரசுப் பள்ளிகளுக்கு விதிக்கப்பட்டிருக்கிற நிபந்தனைகள் என்ன? அதேநேரத்தில் தனியார் பள்ளிகளுக்கு என்ன நிபந்தனைகளை அரசு விதித்திருக்கிறது? தனியார் பள்ளிகளை நிலை உயர்த்த வேண்டுமென்று கோரும்போது, அவர்களே செய்ய வேண்டிய, நிறைவேற்ற வேண்டிய தேவைகள் பற்றி அரசு கொடுத்திருக்கிற விதிமுறை என்ன? இந்த ஆண்டு வரையில் எத்தனை பள்ளிகள் நிலை உயர்த்தப்பட வேண்டும் என்ற கோரிக்கைகளை அரசிடம் வைத்திருக்கின்றன? அவற்றில் எவ்வளவு ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றன?

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேட்டுள்ள அந்தக் கேள்விகளுக்குச் சில விவரங்கள் தரவேண்டியிருக்கிறது. இருப்பினும், இந்த ஆண்டு பெறப்பட்ட மனுக்களிலிருந்து, நடுநிலைப் பள்ளிகளாக இருந்த 100 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாக மாற்றப்பட்டிருக்கின்றன. அதுபோல், 125 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாக மாற்றப்பட்டிருக்கின்றன. இதுவரையில் சரித்திரத்தில் இந்த அளவிற்கு யாரும் செய்தது கிடையாது. இந்த அளவிற்கு புரட்சித் தலைவி அவர்கள் அரசுதான் ஒரே ஆண்டிலே இவ்வளவு பள்ளிகளைத் தரமுயர்த்தியிருக்கிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்லாமல், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சொன்னதுபோல, எந்தெந்த மனுக்கள் வருகின்றனவோ அவற்றையெல்லாம் பரிசீலனை செய்து, அடுத்த ஆண்டிலே நிதிநிலைக்கு ஏற்ப, எந்த அளவிற்குச் செய்ய முடியுமோ, படிப்படியாக அதையும் செய்வோம் என்ற உறுதியினைத் தருகின்றோம்.

அதோடு, தனியார் பள்ளிகளைப் பற்றிக் கேட்டார்கள். தனியார் பள்ளிகள் உதவி பெறுகின்ற பள்ளிகளாக இருந்தால், நிதிநிலைக்கு ஏற்ப, அதுவும் கருத்தில் ஏற்றுக்கொள்ளப்படும். அதோடு, சில பள்ளிகளைப் பொறுத்தவரையில், அவர்களாகவே முன்வந்து, சுயநிதி முறையிலே தாங்கள் வகுப்பை நடத்திக்கொள்வதாக வேண்டுகோள் வைக்கின்றார்கள். அவ்வாறு வந்தால், அதையும் ஏற்றுக்கொள்வோம். (குறுக்கீடு) சிலவற்றில் கேட்கின்றார்கள். இந்த அடிப்படையிலே, நான் சொன்னதுபோல, தேவையானது, முதலில் இடம் இருக்க வேண்டும். கட்டடம் பற்றிப் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது. அடுத்ததாக, நடுநிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக ஆக்க வேண்டுமென்றால், பொதுமக்களால் 1 இலட்சம் ரூபாய் பணம் கட்டப்பட வேண்டும். இரண்டாவது, பெண்கள் பள்ளிகளாக இருந்தால் அதற்கு முக்கியத்துவம் தரப்படும். ஏனென்றால், பெண் கல்விக்கு முக்கியத்துவம் தருவதை இந்த அரசு கொள்கையாக வைத்திருக்கிறது. ஏனென்றால், கிராமப்புறங்களில் பல்வேறு பெண்கள் தொடர்ந்து கல்வியைப் படிக்க முடியாமல், இடையில் நிறுத்தி விடுகிறார்கள். ஆகவே, பெண்கள் கல்வி நிலையங்களாக இருந்தால் அதற்கு முக்கியத்துவம் தரப்படுகின்றது. அடுத்ததாக, மலைப்பகுதிகளில் உள்ள, அதற்காக ஒதுக்கப்பட்டுள்ள பள்ளிகளுக்கும் முக்கியத்துவம் தரப்படுகிறது. பிறகு, ஒரு பள்ளிக்கும் மற்ற பள்ளிக்கும் இடையில் உள்ள இடைவெளி. இதையெல்லாம் அடிப்படையாகக் கொண்டு Guidelines வைத்துக்கொள்ளப்படுகிறது. ஆகவே, எவ்வளவு மனுக்கள் வந்தாலும், இந்தக் குறிப்புகளுக்கு ஏற்றவாறு அரசு பரிசீலித்து, கல்வி நிலையங்களைச் செயல்படுத்துவதற்காக அனுமதி தரப்படும்.

*முற்பகல் 10–15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டதாரி ஆசிரியர்களுக்கும், முதுநிலைப் பட்டதாரி ஆசிரியர்களுக்கும், 35 வயதினை அவர்கள் கடந்துவிட்டால், பணியில் சேர முடியாது என்கின்ற ஒரு சுற்றறிக்கை ஜனவரி மாதம் எல்லா Employment Exchange அலுவலகங்களுக்கும் ஏற்கெனவே அனுப்பப்பட்டுவிட்டது. அது குறித்துத்தான், நாங்கள் ஒத்திவைப்புத் தீர்மானத்தை எடுத்துக்கொள்ள இரண்டு நாட்களாகக் கேட்டோம். அமைச்சரவர்கள் இரண்டு நாளைக்குப் பிறகு எடுத்துக்கொள்வதாகச் சொன்னார்கள். இனி அதைத் தனியாக



எடுக்க வேண்டிய அவசியமில்லை என்கின்ற காரணத்தினாலே, தங்கள் வாயிலாக நான் அறிய விரும்புவதெல்லாம்—ஏற்கெனவே Employment Exchange அலுவலகத்திற்கு அரசினுடைய சுற்றறிக்கையை ஜனவரி மாதம்தான் அனுப்பியிருக்கிறார்கள்–1981 ஆம் ஆண்டிலிருந்தே 35 வயதிற்கு மேலே உள்ள பட்டதாரி ஆசிரியர்களையும், முதுநிலைப் பட்டதாரி ஆசிரியர்களையும் பணிக்கு எடுக்கக்கூடாது என்ற ஒரு G.O. இருந்தாலும்கூட, எப்படியோ 1989 ஆம் ஆண்டு Teachers' Recruitment Board அந்த வயதைப் பற்றித் தெரியாமல், 53 வயதானவர்களுக்குக்கூட சென்ற ஆண்டு appointment கொடுத்திருக்கிறார்கள். அதாவது, B.T. ஆசிரியர்களுக்கோ, அதைப்போல P.G. Assistant-களுக்கோ கொடுத்திருக்கிறார்கள். ஆனால், நான் இப்போது அறிய விரும்புவதெல்லாம், Employment Exchange-லே இருக்கக்கூடிய அந்தச் சுற்றறிக்கையை நீங்கள் withdraw செய்யவில்லை என்று சொன்னால், வாபஸ் பெறவில்லையென்று சொன்னால், Employment Exchange-லிருந்து அவர்களுடைய பட்டியல் நிச்சயமாக Teachers' Recruitment Board -க்கு வராது. அப்படி வராமல் போனால், இந்த 35 வயதைக் கடந்தவர்கள், நாளைக்கு எந்தவிதமான பணிக்கும் செல்ல முடியாமல் அப்படியே தேங்கி நின்றுவிடக்கூடிய அபாயம் இருக்கிற காரணத்தினாலே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், முதலமைச்சர் அவர்களுடைய அனுமதியோடு, ஜனவரி மாதத்திலே எல்லா Employment Exchange-களுக்கும் போய்ச் சேர்ந்திருக்கிற சுற்றறிக்கையை வாபஸ் பெற்றுக்கொண்டு, 35 வயதைக் கடந்தவர்களுக்கு, வயது வரம்பு இல்லாமல், எல்லோருக்கும் அந்த வாய்ப்புக் கிடைப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே இதைப் பற்றி விளக்கமாகச் சொல்லியிருக்கின்றேன். நம்முடைய தமிழக முதலமைச்சர் அவர்கள், இந்தச் சுற்றறிக்கையினை வாபஸ் வாங்கவும்– இப்போது தளர்த்தப்பட்டது என்பதல்ல – 35 வயதிற்கு மேற்பட்டவர்களும் இந்த நேர்முகப் பேட்டி மற்றும் அதோடு நடத்தப்படும் Written Test ஆகியவற்றில் கலந்துகொள்வதற்காகவும் உத்தரவு பிறப்பித்திருக்கின்றார்கள். ஆகவே, அதன்படிதான் நாங்கள் பட்டியலை Employment Exchange-லிருந்து பெறுவோமேயொழிய, முன்பு அனுப்பப்பட்ட சுற்றறிக்கைப்படி அல்ல. ஆகவே, முன்பு அனுப்பப்பட்டிருந்த சுற்றறிக்கையானது காலாவதியாகிவிடும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

[2001 ஆகஸ்ட் 24

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. சிவசாமி.*

**திரு. செ. சிவசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் தொகுதிக்குட்பட்ட பெருமாள்நல்லூரிலுள்ள அரசு மேல்நிலைப் பள்ளியானது இரண்டு இடங்களிலே செயல்படுகிறது. இரண்டு கட்டடங்களுக்கும் உள்ள தூரம் கிட்டத்தட்ட இரண்டு கிலோமீட்டராக இருக்கிறது. மேற்படி பள்ளியில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவிகள் பயில்கிறார்கள். எனவே, அந்த மேல்நிலைப் பள்ளியை ஆண்களுக்குத் தனியாகவும், பெண்களுக்குத் தனியாகவும் பிரித்து நடத்துவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் உயர்திரு சிவசாமி அவர்கள் கேட்டுக்கொண்டதற்கு ஏற்ப அந்த மனுக்கள் முறைப்படி வந்து சேர்ந்தால் நிதிநிலைக்கு ஏற்ப அடுத்த ஆண்டு செயல்படுத்துவதற்கு அவை எடுத்துக் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி. பழனிசாமி.*

**திரு. ஜி. பழனிசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கிறபோது, பெண்களாக இருந்தால் அவர்களின் படிப்பிற்கு முன்னுரிமை கொடுத்து, உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்துவதற்கு பணம் கட்ட வேண்டிய தேவையில்லை என்று சொன்னார்கள். அப்படி ஒரு தனிச்சிறப்பு இருக்கிறதா எனத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** *நான் பழங்குடி மக்கள் வாழும் பகுதிக்குத்தான் அந்தச் சலுகை இருக்கும் என்று சொன்னேனேயொழிய, பெண்கள் படிக்கும் அந்தக் கல்வி நிலையங்களுக்கு அத்தகைய முன்னுரிமை கிடையாது. இருப்பினும், ஆண்கள் உயர்நிலைப் பள்ளி வேண்டுமா, பெண்கள் உயர்நிலைப் பள்ளி வேண்டுமா என்பதைப் பொறுத்தவரையில் பெண்கள் உயர்நிலைப் பள்ளிக்கே முக்கியத்துவம் தரப்படும் என்று சொன்னேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் ஜி. கே. மணி.*



2001 ஆகஸ்ட் 24]

**திரு. ஜி.கே. மணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலையில்லாப் பட்டதாரி ஆசிரியர்களுடைய 35 வயது வரம்பு கடப்பதைப் பற்றிய சுற்றறிக்கையைத் திரும்பப் பெற்று ஒரு நல்ல வாய்ப்பினை உருவாக்குவதாக மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் இங்கே அறிவித்தார்கள். அதற்காகத்தான் எல்லா அரசியல் கட்சிகளும் இங்கே கவன ஈர்ப்பு அறிவிப்புகள் எல்லாம் கொடுத்த நேரத்திலேகூடச் சொல்லியிருந்தார்கள். இருந்தாலும்கூட, இந்த நேரத்திலே நான் ஒன்றைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இடைநிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கு என்று Seniority வைத்திருக்கிறீர்கள். அதன்படி Counselling முறையிலே, முறையாக நியமனம் செய்யப்பட்டு வருகிறது. அதைப்போல, உயர்நிலைப் பள்ளிக்கும், மேல்நிலைப் பள்ளிக்கும் பட்டதாரி ஆசிரியர்கள் Teachers Recruitment Board மூலம் நியமனம் செய்யப்படுகின்ற நேரத்திலேயும், இதைக் கருத்திலேகொண்டு, இந்த seniority -யை வைத்து நீங்கள் நியமனம் செய்ய முன்வந்தால், இந்த வேலையில்லாப் பட்டதாரிகள் 30, 35 வயதைக் கடந்தவர்களுக்கும் பாதிப்பு இல்லாமல் அவர்களும் பணிக்குச் செல்லக்கூடிய ஒரு நல்ல சூழ்நிலை உருவாகும் என்ற காரணத்தினாலே, இதை மனதிலே கொண்டு நம்முடைய தமிழக அரசு 35 வயதிற்கு மேலே சென்றவர்களுக்கு வாய்ப்புக் கிடைக்கும் என்ற நிலையை உருவாக்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.*

*முற்பகல் 10-20*

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்து பல்வேறு துணைக் கேள்விகளுக்கு விளக்கமாகப் பதில் சொல்லியிருக்கிறேன். பட்டதாரி ஆசிரியர்களுக்கும், முதுகலை பட்டதாரி ஆசிரியர்களுக்கும் சிறப்புச் சலுகை என்பது கிடையாது. முறைப்படி Employment Exchange -ல் அவர்களுடைய பெயரைப் பெற்று, பட்டியலைப் பெற்று, அவர்களுக்கு ஒரு தேர்வு நடத்தப்படும். தேர்வு நடத்தப்பட்ட பிறகு, நேர்முகத் தேர்வு நடைபெறும். இரண்டையும் வைத்து, எந்தவிதமான பாகுபாடும் இல்லாமல், அவர்களுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை தரப்படும். இதில், seniority, junior என்பது எல்லாம் பார்ப்பதற்குக் கொஞ்சம் தேவைப்படாதது. அதற்கும் வேண்டுமென்றால், நீங்கள் எல்லாம் ஒத்துக் கொண்டால் – அதற்கு என்ன mark கொடுக்கப்படுமோ – தனியாக ஒரு mark கொடுக்கப்படும். ஆனால், பொதுவாக ஒரு தேர்வும், பிறகு நேர்முகத் தேர்வும், பிறகு written தேர்வும் நடைபெறும்போது, அங்கே merit ஆனவர்களுக்கு வாய்ப்பு இருக்கிறது. நீங்கள் சொன்னதைப்போல, அதில் seniority -யையும்*

consider பண்ண வேண்டும் என்று சொன்னால், அதற்கும் ஏதேனும் ஒரு mark-ஐச் சேர்த்துப் போடுவதற்காக அரசு பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 8, மாண்புமிகு உறுப்பினர் எஸ். தாமோதரன், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**8–**

## தீப்பெட்டித் தொழில்

***581–திரு. எஸ். தாமோதரன்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா–

குடிசைத் தொழிலான தீப்பெட்டித் தொழிலைப் பாதுகாக்கும் வகையில் வியாபாரப் போட்டியிலிருந்து சமாளிக்க 100 பெட்டிகளுக்கு ரூ.5/– வீதம் மானியம் வழங்கவும், தொழிற்சாலைச் சட்டம், பிரிவு 85 (1)-ஐ குடிசைத் தொழிலான இத்தொழிலுக்கும் பொருந்தும் வகையில் மாற்றியமைக்கவும் அரசு உத்தேசித்துள்ளதா?

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

குடிசைத் தொழிலான தீப்பெட்டித் தொழிலைப் பாதுகாக்கும் வகையில் வியாபாரப் போட்டியிலிருந்து சமாளிக்க 100 பெட்டிகளுக்கு ரூ.5/- வீதம் மானியம் வழங்குவது குறித்த பொருள் அரசின் பரிசீலனையில் இல்லை. ஆனால், தொழிற்சாலை சட்டப்பிரிவு 85(1)–ன் கீழ் குடிசைத் தொழிலான தீப்பெட்டித் தொழிலுக்கும் பொருந்தும் வகையில் அரசாணை எண் 1248, நாள் 13–6–1988–ல் ஆணைகள் வெளியிடப் பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் எஸ். தாமோதரன்.

**திரு. எஸ். தாமோதரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, 1923 ஆம் ஆண்டிலிருந்தே, விருதுநகர், திருநெல்வேலி, தூத்துக்குடி, வடஆற்காடு மாவட்டங்கள் மற்றும் குடியாத்தம் போன்ற பகுதிகளில் சுமார் 10



ஆயிரத்திற்கும் மேற்பட்ட தீப்பெட்டித் தொழிற்சாலைகள் உள்ளன. இந்தத் தொழிலை நம்பி 15 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் வசித்து வருகின்றனர். ஆனால், கடந்த 1995–லே, 9,700–ஆக இருந்த registered factories நடப்பு ஆண்டிலே 7,000–ஆகக் குறைந்துவிட்டிருக்கிற ஓர் அவல நிலை உள்ளது. இதற்குக் காரணம், தீப்பெட்டித் தொழிலில் உள்ள போட்டி ஒரு பக்கம் இருந்தாலும்கூட, தீப்பெட்டிகளை உபயோகிப்பதிலே lighter–களின் போட்டி, பொது இடங்களிலே smoking செய்யக்கூடாது என்பது போன்ற சட்டங்கள் இருப்பதனாலும், தீப்பெட்டித் தொழில் வரவர அருகிக்கொண்டே வருகிறது. இதை நம்பியுள்ள தொழில்களும் வருடாவருடம் குறைந்துகொண்டே வருகின்றன. ஆகையினால், இந்தத் தொழிலை நம்பியுள்ள தொழிற்சாலைகளின் நலனைக் கருத்தில் கொண்டு, இந்தத் தொழிலுக்கு மானியம் கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டிருந்தேன். அரசு இதைச் செய்து கொடுக்க முன்வருமா என்பதைக் கேட்டுக்கொள்கிறேன். மேலும், இந்தத் தீப்பெட்டித் தொழிற்சாலைகளில் ஒரு நபர் வேலை செய்தாலும், தொழிற்சாலைச் சட்டத்தின்கீழ் அவை வரவேண்டும் என்று சட்டம் கூறுகிறது. அதை நான் கேள்வியாகக் கேட்டிருந்தேன். ஆனால், இன்றைய கேள்வியைச் சுருக்கும்பொழுது, தவறுதலாக இந்தச் சட்டம் இதற்கும் பொருந்துமா என்று போட்டுவிட்டார்கள். ஆகையினால், அமைச்சர் அவர்கள் தயவு செய்து இதை மாற்றி – தீப்பெட்டித் தொழிற்சாலைகள் ஒன்றும் பாவம் செய்த தொழிற்சாலைகள் அல்ல. இதை நம்பி பல இலட்சம் தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். பல இலட்சம் குடும்பங்கள் வாழ்கின்றன. இது ஒன்றும் பெரிய அபாயகரமான தொழில் அல்ல. ஆகையினால், இந்தத் தீப்பெட்டித் தொழிற்சாலைச் சட்டத்தை மாற்றி – இந்தத் தொழிற்சாலைகள் 85(3)–ன் கீழ் வராமல் இருக்க நடவடிக்கை எடுப்பாரா?

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா:** ஏற்கெனவே இது ஆய்வு செய்யப்பட்டு, 1988 ஆம் ஆண்டு இந்தத் தீப்பெட்டித் தொழிற்சாலை தொழிற்சாலைகள் சட்டப் பிரிவு 85(1)–ன்கீழ் எடுத்துக்கொள்ளப் பட்டிருக்கின்றது. அப்படி எடுத்துக்கொள்ளப்பட்டதற்குப் பிறகுதான் அந்தச் சட்டப்பிரிவின்கீழ் வந்ததற்குப் பிறகு ஏராளமான தொழிற்சாலைகளில் தொழிலாளர் ஆய்வாளர் எங்களுடைய துறையின் ஆய்வாளர்கள் சென்று அதை ஒழுங்குபடுத்தக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது என்பதையும் நான் அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10–25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே இருக்கிற தொழில்களிலே தீப்பெட்டித் தொழிலாளர்களுடைய நிலை பரிதாபமாக மாறி வருகிறது. அதற்குப் பிரதான காரணம், மத்திய அரசாங்கத்தினுடைய தாராளமயமாக்கல் கொள்கை, தனியார் மயமாக்கல் கொள்கை, உலகமயமாக்கல் கொள்கைகளினுடைய விளைவு இப்படிப்பட்ட பாதிப்பை ஏற்படுத்துகிறது. ஆகவே, இயந்திரமயமாக்கப்படுவதன் காரணத்தால், பல இலட்சக்கணக்கான தொழிலாளர்களை பாதிக்கிற, மிக மோசமான சூழ்நிலை ஏற்படுகிற அபாயம் இருக்கிற காரணத்தால், அந்தத் தொழிலாளர்களைப் பாதுகாக்கத்தக்க வகையிலே, இயந்திரமயமாக்குகிற நிகழ்ச்சியைத் தடுத்து, அந்தத் தொழிலைப் பாதுகாக்கச் செய்வதற்கான முயற்சியாக தனித்த முறையிலே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அதற்குரிய முறையிலே தனிக்கவனம் செலுத்தி அந்தத் தொழிலாளர்களையும், குடும்பங்களையும் பாதுகாப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்வதற்கான திட்டத்தை ஏற்படுத்துவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா:** இறக்குமதிக்கான அனுமதியை மத்திய அரசு வழங்கியிருக்கிறது. எனவே, இயந்திரமயமாக்கல் என்பது மத்திய அரசுதான் இதை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும், தளர்த்த வேண்டும். எனவே, உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, தொழிலாளர்களுடைய வாழ்க்கையில் மிகுந்த அக்கறை கொண்டிருக்கிற மாண்புமிகு தமிழக முதல்வர், இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இதுகுறித்து மத்திய அரசுக்கு நிச்சயமாகக் கடிதம் எழுதுவார்கள் என்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சாத்தூர் இராமச்சந்திரன்.

**திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தீப்பெட்டித் தொழிலைப் பற்றி உங்களுக்கு நன்றாகத் தெரியும். ஏனென்றால், நீங்கள் அந்த மண்ணுக்குச் சொந்தக்காரர். ஆகவே, உங்கள் சார்பாகவும் நாங்கள் இதைப் பேசுகிறோம். எங்களுடைய பகுதியிலே இந்தச் சிறு தீப்பெட்டி உற்பத்தியாளர்களை, குடிசைத்





தீப்பெட்டி உற்பத்தியாளர்களை தொழிலாளர் நலத் துறை அதிகாரிகள் அவ்வப்போது, போலீசிலே சந்தேகக் case -ல் பிடிப்பதைப்போல, போவது, அங்கே போய் raid நடத்துவது, அங்கிருக்கிற குழந்தைத் தொழிலாளர்கள் மீது case போடுவது என்று 10, 15 ஆண்டுக் காலமாக தொடர்ந்து இந்த வேலை நடந்து கொண்டிருக்கிறது. இதனால் ஏற்கெனவே சிரமத்தில் இருக்கிற இந்தத் தீப்பெட்டித் தொழில் மேலும் அழிந்து போவதற்கு வாய்ப்புள்ளது. மேலும் வருகிற அதிகாரிகளைச் சரிக்கட்டுகிற வேலைகளைத்தான் இவர்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அப்படிப்பட்ட தொந்தரவுகள் இல்லாமல், இந்த அரசாங்கம் இந்தத் தொழிலைப் பாதுகாக்குமா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப்போல, அப்படிப்பட்ட தொந்தரவுகள் ஏற்கெனவே இருந்திருக்கலாம். எங்களுடைய ஆட்சியில் நிச்சயமாக இல்லாமல் பார்த்துக்கொள்ளப்படும், பாதுகாக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தீப்பெட்டித் தொழிற்சாலை என்பது, குடிசைத் தொழிலாக இயங்கி வரக்கூடிய ஒன்று. விருதுநகர் மாவட்டம் மற்றும் தென் மாவட்டங்களில் பரவலாக நடக்கக்கூடிய தொழில். ஆகவே, விவசாயம் வறட்சியாக இருக்கிற காலத்திலே, இந்தக் குடிசைத் தொழிலை நம்பி வாழக்கூடியவர்களெல்லாம் குடிபெயரக்கூடிய நிலை உருவாகிக் கொண்டிருக்கிறது. நாங்களெல்லாம் தென் மாவட்டங்களுக்குச் சென்ற நேரத்தில் இதை வற்புறுத்திச் சொன்னார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலிலேகூட, மத்திய அரசுக்கு எழுதுவதாகச் சொல்லியிருக்கிறார்கள். இருந்தாலும்கூட, அழிந்து கொண்டிருக்கக்கூடிய அந்தத் தொழிலை ஊக்கப்படுத்துவதற்காக, குடிசைத் தொழிலாகக் கொண்டிருக்கக்கூடிய மக்களுக்கு நிவாரணத் தொகை வழங்குவதன் மூலமாக அவர்கள் வாழ்க்கைத் தரம் பாதுகாக்கப்படுவதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது? இதைப் பாதுகாப்பதற்காக ஏதாவது நிவாரணத் தொகை வழங்க இயலுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[2001 ஆகஸ்ட் 24

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா:** தீப்பெட்டித் தொழிலில் இறக்குமதி licence வழங்குகின்ற காரணத்தால், முழுமையாக அழியப் போகிறது என்ற அபாய நிலை நாடாளுமன்றத்திலேயே விவாதிக்கப்பட்டிருக்கிறது, பேசப்பட்டிருக்கிறது. எனவே, ஒரு தொழில், ஏதாவது ஒரு வகையிலே, ஒரு குறிப்பிட்ட சதவிதிதம் கீழே இறங்குமுகமாக இருக்கிறது என்றால், உறுப்பினர் சொன்னதைப்போல, அதற்கு ஏதாவது உதவி செய்து அந்தத் தொழிலை மேம்படுத்துவதற்கு, நிலைப்படுத்துவதற்கு வேண்டிய முயற்சிகளை அரசு மேற்கொள்ளலாம். ஆனால், உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததைப்போல, தீப்பெட்டியை, Industries ஆக தொழிற்சாலையாக மாற்றுவதற்கு, அதாவது manual labour இல்லாமல், தனியாக தீப்பெட்டித் தொழிற்சாலை மூலம் தயார் செய்வதற்கு என்று, இதற்குரிய இயந்திரங்களை இறக்குமதி செய்வதற்கு மத்திய அரசு அனுமதியை வழங்கியிருக்கிற காரணத்தால், அப்படிப்பட்ட நிலையை மாற்ற வேண்டும்...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இயந்திரங்களை இறக்குமதி செய்வதற்கு licence வழங்கியது மத்திய அரசு. அண்மைக் காலம் வரை மத்திய அரசு அந்த licence-ஐ வழங்கிய நேரத்தில், அந்த மத்திய அரசின் ஓர் அங்கமாக இருந்தது பாட்டாளி மக்கள் கட்சி. அதனாலே, இப்படி licence வழங்குகிறீர்களே என்று அங்கே எதிர்ப்புத் தெரிவிக்காமல், பாதிக்கப்பட்ட பிறகு இங்கே மாநில அரசு அந்தத் தொழிலைப் பாதுகாக்க வேண்டுமென்று கேட்பதில் என்ன நியாயம் உள்ளது என்று தெரியவில்லை. அதைப்போலவே, மாண்புமிகு உறுப்பினர் சாத்தூர் இராமச்சந்திரன் அவர்கள், இந்தத் தொழிலுக்கு மாநில அரசு பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்று கூறுகிறார். அவர் சார்ந்திருக்கிற கட்சி இன்றைக்கும் மத்திய அரசின் அங்கமாக உள்ளது என்று அவருக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*முற்பகல் 10-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. போளூர் வரதன்.

**திரு. போளூர் வரதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தீப்பெட்டித் தொழிற்சாலை நசுங்கி வருகிறது என்ற நிலையில், பரவலாக தமிழகத்திலே ஆண்டுகள்தோறும் போராட்டம், விபத்துக்கள், சிறுவர்கள் வேலை செய்கிறார்கள் என்று பல காரணங்களைக் காட்டி பிரச்சினைகளை உருவாக்கிக் கொண்டிருக்கிறோம். சமீபத்திலே மத்திய



2001 ஆகஸ்ட் 24]

சர்க்கார் World Trade Organisation என்ற உருவிலே மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் சொன்னதைப்போன்று, நமது தமிழ்நாட்டைச் சேர்ந்த மந்திரிதான் அந்தச் சட்டத்தையே கொண்டு வந்தார். அப்படிக் கொண்டு வந்த சட்டம், இந்தத் தீப்பெட்டித் தொழிற்சாலை இந்தியா பூராவும் நசுக்கப்படுவதற்குக் காரணமாக இருந்திருக்கிறது. பல குடும்பங்கள் வேலை இழக்கின்றன. இதிலே இன்றைக்கு subsidy வேறு கேட்டு இருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வரதன், கேள்வியைக் கேளுங்கள்.

**திரு. போளூர் வரதன்:** கேள்விக்குத்தான் வருகிறேன். உலக நாடுகளிலிருந்து வத்திப்பெட்டி இங்கே வாங்கி, அப்படி வாங்குகிற வத்திப்பெட்டிக்கு subsidy கொடுக்கிறதா? இங்கே உற்பத்தி செய்யக்கூடிய வத்திப்பெட்டிக்கு subsidy கொடுக்கிறதா? இரண்டுக்குமே subsidy கொடுத்தால் சர்க்கார் எந்தப் பணத்திலிருந்து அதற்கு முதலீடு செய்வது என்ற நிலையை மாநில அரசு மத்திய அரசுக்கு விளக்கிச் சொல்லி, அந்த World Trade Organisation மூலமாக இறக்குமதி செய்வதால் இப்படிப்பட்ட சிறு தொழில்கள் நசுங்காமல் இருக்க பாதுகாப்பு அளிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா:** தலைவர் அவர்களே, மத்திய அரசுதான் அந்த நிலையை எடுக்க வேண்டும். அதற்கு மாநில அரசு பரிந்துரை செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இயந்திரப் புகுத்தல் சம்பந்தமாக மத்திய அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது. பாட்டாளி மக்கள் கட்சியும், திராவிட முன்னேற்றக் கழகமும் இந்தத் தொழிலைப் பாதுகாக்கின்ற நிலையிலே இந்த இயந்திரப் புகுத்தலை எதிர்த்து இலட்சக் கணக்கான மக்களைப் பாதுகாக்கின்ற வகையிலே அதைத் திரும்பப் பெற வேண்டும் என்று இந்தச் சபையில் ஒரு தீர்மானம் கொண்டு வருவதற்கு ஒருமனதான ஒத்துழைப்பை அவர்கள் தருவார்களா? நம்முடைய மரியாதைக்குரிய மாண்புமிகு முதல்வர் அவர்கள் குறிப்பிட்டபோது இதை ஏற்படுத்துகிறபோது இந்தக் கட்சி அங்கே இருந்தது என்று சொன்னார்கள். கடந்த 10 ஆண்டு காலமாக இந்தக் கொள்கையை இடதுசாரிக் கட்சிகள் உறுதிப்பூர்வமாக

எதிர்த்து வருகின்றன. அந்தவகையில் நாம் அனைவரும் இணைந்து நின்று இதை எதிர்ப்பதற்கு ஒரு தீர்மானம் கொண்டுவர இயலுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அத்தகைய தீர்மானத்தைக் கொண்டுவர நாங்கள் தயார். அந்தத் தீர்மானத்தைப் பாட்டாளி மக்கள் கட்சியும், தி.மு.க.வும் ஆதரிக்குமா என்பதை அந்தக் கட்சியைச் சார்ந்தவர்கள் இங்கே தெளிவுபடுத்த வேண்டும் என்று கேட்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிசைத் தொழில் என்ற முறையிலே தொடங்கி இயந்திரம் இல்லாமல் கைத்தொழிலாக நடைபெற்று வருகிற தீப்பெட்டித் தொழிலுக்கும், பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் இங்கே ஆட்சியிலே இருந்த காலத்தில் தொடங்கப்பட்ட அல்லது அதற்குச் சற்று முன்னாலே தொடங்கப்பட்ட விம்கோ போன்ற இயந்திர அடிப்படையிலே தயாரிக்கப்பட்ட தீப்பெட்டிகளுக்கும் இடையில் விற்பனை விலை காரணமாக அந்தப் போட்டியிலே குடிசைத் தொழில் பாதிக்கப்பட்டது என்ற கருத்து அன்றைக்கே உருவானது. அது தொடர்ந்து ஒரு பக்கம் குடிசைத் தொழிலாக, இன்னொரு பக்கம் இயந்திரத் தொழிலாக இரண்டு வகையிலேயும் வளர்ந்து வந்திருக்கிறது. அண்மைக் காலத்தில் மத்திய அரசு ஏற்றுக்கொண்ட பொருளாதாரப் போட்டிகளுக்கான வெளிப்படையான சூழ்நிலையை உருவாக்குகிற அந்த முறை இன்றைய ஆட்சிக்கு மட்டுமல்ல, அதற்கு முன்னாலேயே தொடங்கப்பட்டு அதுவும் ஒருபக்கம் வந்துகொண்டே இருக்கிறது. ஆகவே, மூன்றுக்கு மூன்று மாறுபட்ட ஒரு நிலையில் பல பிரச்சினைகளை நாம் சந்திக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். ஆகவே, அந்தப் பிரச்சினையை இதற்கு உள்ள அளவுக்கு மத்திய அரசு கவனிக்க வேண்டும் என்று வலியுறுத்துகிற, மத்திய அரசினுடைய கவனத்தைத் திருப்புகிற அப்படிப்பட்ட ஒரு வேண்டுகோளை தி.மு.க. ஆதரிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி:

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே பதிலுரையிலே குறிப்பிட்டுச் சொன்னார்கள். இந்தத் தொழில் என்பது குடிசைத் தொழில். இந்தக் குடிசைத் தொழிலைப் பாதுகாக்க வேண்டும் என்று கோரிக்கை வைக்கின்ற



நேரத்திலே உலகமயமாக்கலைப் பற்றி, இறக்குமதியைப் பற்றி, பன்னாட்டுத் தொழில்கள் இங்கே தலையிடுவதைப் பற்றியெல்லாம் இங்கே சொல்கின்ற நேரத்திலே, பாட்டாளி மக்கள் கட்சியைப் பொறுத்த வரையிலே, தமிழ்நாட்டிலே உற்பத்தி செய்யக்கூடிய பொருட்களுக்கு சரியான விலை உயர்வு வேண்டுமென்று சொல்லக்கூடிய கொள்கை முதலாக, இந்த மண்ணைப் பாதுகாக்கக்கூடிய இந்த மண்ணில் வாழக்கூடிய மக்களின் உரிமைகளை வென்றெடுக்கக்கூடிய வகையிலே தொடர்ந்து குரல் கொடுத்து வருகிறது. மத்திய அரசிலே அங்கம் பெற்றிருந்த காலத்திலேகூட, தொடர்ந்து அதை மாண்புமிகு பிரதம அமைச்சர் அவர்களிடத்திலேயும், இன்னும் குறிப்பாகச் சொல்லவேண்டுமென்று சொன்னால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பாரதிய ஜனதாவோடு கூட்டணியில் இருந்த நேரத்திலே, தமிழ்நாட்டின் உரிமைக்காக என்னென்ன கோரிக்கைகள் வைக்கப்பட்டன என்பதெல்லாம் முதலமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அந்த வகையிலே இந்தக் குடிசைத் தொழிலைப் பாதுகாப்பதற்குப் பல்வேறு நடவடிக்கைகள் மூலம் தமிழ்நாட்டின் உரிமைகளுக்காகக் குரல் கொடுக்கக்கூடிய நேரத்திலே இந்த மாமன்றத்திலே கொண்டுவரக்கூடிய தீர்மானங்களுக்கு பா.ம.க. ஆதரவாக இருக்கும்; அதற்குக் குரல் கொடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளக்கூடிய அதேநேரத்திலே, இன்னொன்றையும் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இங்கேகூட, பண்ணைத் தொழிலைப் பற்றி நிதிநிலை அறிக்கையிலே சொல்லியிருக்கிறார்கள்.....

*முற்பகல் 10-35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மணி, தீப்பெட்டித் தொழிலோடு முடியுங்கள்; கேள்வி நேரம் இது.

**திரு. ஜி.கே. மணி:** இந்த மாமன்றத்தில் கொண்டுவரக்கூடிய தீர்மானங்களுக்கு திராவிட முன்னேற்றக் கழகம் ஆதரவாக இருப்பதைப்போலவே, பாட்டாளி மக்கள் கட்சியும் தொடர்ந்து ஆதரவு கொடுக்கும் என்பதைத் தெரிவித்து அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன்.

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கேட்டார்கள், எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள், நான் அதிலே தலையிட விரும்பவில்லை. ஆனால்,

[2001 ஆகஸ்ட் 24

இந்த மன்றத்தினுடைய மரபுப்படி கேள்வி நேரத்தில் இத்தகைய discussions எழுவதில்லை. இது இத்தோடு முடிந்தால் நல்லது; இல்லாவிட்டால் மரபு மீறப்பட்டதாக வரும்; அதுதான் என்னுடைய கருத்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மிக்க நன்றி, எனக்குத் துணை செய்ததற்காக.

வினா எண் 9, திரு. எம். சுப்பையா பாண்டியன், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

**9–**

## தென்னை நார் தொழிற்சாலை

***809–திரு. எம். சுப்பையா பாண்டியன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா–

கடையநல்லூர் தொகுதியில் தென்னை நார் தொழிற்சாலை ஏற்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**திரு. எம். சுப்பையா பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் நித்தம் வணங்கும் மாண்புமிகு தமிழக முதல்வர், இதய தெய்வம், புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில் 1993–லே கூட்டுறவுச் சங்கம் அமைத்து அதன் மூலம் தென்னை நார் தொழிற்சாலை கடையநல்லூர் தொகுதியில் அமைத்து, நடைபெற்றது. அதற்குப் பின்னர், முந்தைய தி.மு.க. ஆட்சியில் அதிலே தலைவர்கள் நியமனம் செய்து, பல முறைகேடுகள் நடந்து, அந்தச் சங்கம் சீர்குலைந்த நிலையில் இருக்கிறது. மீண்டும் அந்தச் சங்கத்திற்குப் புத்துயிர் அளித்து தொழில் செய்வதற்கு ஏற்றதாக மாற்ற முடியுமா என்பதையும் மத்திய மாநில அரசுகள் இதற்கு மானியம் வழங்குமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.



2001 ஆகஸ்ட் 24]

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடையநல்லூர் பகுதியில் கடையநல்லூர் ஆதிதிராவிடர் கயிறு பொருட்கள் உற்பத்தியாளர்கள் தொழிற் கூட்டுறவுச் சங்கம் என்ற பெயரில் ஒரு தொழிற்கூட்டுறவுச் சங்கம் ஏற்கெனவே 18–0–1993–ல் பதிவு செய்யப்பட்டு 22–11–1993–ல் உற்பத்தியைத் தொடங்கியது. இது சுருள் கயிறு உற்பத்தி செய்ய தொடங்கப்பட்ட சங்கமாகும். இதில் 289 உறுப்பினர்கள் உள்ளனர். அவர்கள் செலுத்திய பங்கு மூலதனம் ரூ.6,59,800 ஆகும். இதில் அரசு பங்கு மூலதனம் ரூ.5,06,000 அடங்கும். இச்சங்கம் கடந்த 2 ஆண்டுகளாகச் செயலிழந்த நிலையில் உள்ளதால், இதனைப் புனரமைக்க அனைத்து நடவடிக்கைகளும், மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணைக்கிணங்க துறையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எனினும், இதே பகுதியில் தென்னை நார் உற்பத்தியினைத் தொழில் கூட்டுறவு அமைப்பின்கீழ் தொடங்க அப்பகுதி மக்கள் முன்வந்தால் அதனைப் பரிசீலித்து அதன் சாத்தியக்கூறுகளின் அடிப்படையில் தொழில் கூட்டுறவுச் சங்கம் அமைத்துத்தர மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களாலே ஆவன செய்யப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குக் கனிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். அந்த அடிப்படையிலே தமிழகத்திலே இருக்கின்ற இத்தகைய சங்கங்களுக்கு – மத்திய மாநில அரசுகள் மானியம் வழங்குகின்ற கால அளவிலே – 1998–99 மற்றும் 1999–2000 ஆண்டு காலத்திலே மத்திய அரசாலே மானியம் வழங்கப்படவில்லை என்பதையும், வழங்கப்படாமல் இருக்கின்ற மானியத்தினுடைய தொகை ஏறக்குறைய 60,13,000/– ரூபாய் என்பதையும் நான் இந்த நேரத்திலே பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் ** அன்றைய ஆட்சியிலே இருந்தவர்கள், மத்திய அரசிடத்திலேயிருந்து வரவேண்டிய அந்த மானியத் தொகையைப் பெறத் தவறிவிட்டார்கள் என்பதை நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10–40*

**திரு. துரைமுருகன்:** Point of order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். அவர் குறிப்பைத்தான் வாசிக்கிறார்.

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு அமைச்சர் விடை சொல்கிறபோதும், குறிப்பிலே

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

இருப்பதாகச் சொல்லி கடந்த கால ஆட்சி ** மத்திய அரசிடமிருந்து நிதி பெற முடியவில்லை என்று சொன்னால், எத்தனையோ நிதிப் பிரச்சினைகள் மத்திய அரசிடம் தொடர்ந்து கடிதப் போக்குவரத்திலே இருக்கும்; அந்த நிதி பின்னர்தான் கிடைக்கும். இந்த அரசுகூட பல நிதியைப் பின்னர்தான் பெற வேண்டிய நிலைமை இருக்கும். கல்வித் துறையிலே அப்படிப் பல நிதிகளைப் பெறுவதிலே தாமதம் ஏற்பட்டது எங்களுக்குத் தெரியும். ஆகவே, அதற்காக ஒரு குற்றச்சாட்டு போன்ற தொடரை அவையிலே பயன்படுத்துவதை ஏற்றுக்கொள்வது மரபல்ல என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பாண்டுரங்கன் அமருங்கள். அவர் குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை. இந்தத் துறையிலிருந்து கொடுக்கப்பட்ட குறிப்பைத்தான் அவர் அவைக்கு அறிவிக்கிறார்.

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சொல்லப்பட்ட வார்த்தையை நீங்கள் பரிசீலனை செய்து பாருங்கள். கடந்த கால ** ஆட்சியினால் அந்த நிதி பெறப்படவில்லை என்ற கருத்து இருக்கிறது. அது ** என்று சொல்வதுகூட ஒருவகையில் குற்றச்சாட்டு. அது தேவையா என்பதைச் சொல்ல வேண்டும். ஏனென்றால், இந்த ஆட்சியிலே பெறவேண்டிய நிதி எப்போது வரும் என்று பின்னர்தான் தெரியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பாண்டுரங்கன் அவர்களே, ** என்று சொல்லாமல் கடந்த ஆட்சியில் பெறப்படவில்லை என்று சொல்லுங்கள். அதுவே போதும்.

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் எதற்காக அதைக் குறிப்பிட்டேன் என்றால், உரிய காலத்திலே அந்தக் கோரிக்கையை மத்திய அரசினுடைய கவனத்திற்கு எடுத்துச் செல்லாத காரணத்தினாலே அந்தத் தொகையைத் தற்போது பெற இயலவில்லை என்பதை நான் மாண்புமிகு பேரவை உறுப்பினர்களுக்குப் பணிவோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். இந்தத் துறை சம்பந்தமாக தமிழகத்தினுடைய முதலமைச்சர் அம்மா அவர்கள் ஆய்வு செய்தபோது, இந்த மானியத்தை மீண்டும் பெறவேண்டும் என்று எங்களுக்கு ஆணை வழங்கினார்கள். ஆணை வழங்கியதனுடைய அடிப்படையிலே மத்தியிலே இருக்கிற

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.





மாண்புமிகு ஊரகத் தொழில் துறையினுடைய இணை அமைச்சர் அவர்களுக்குக் கடிதம் அனுப்பப்பட்டது. அப்படிக் கடிதம் அனுப்பப்பட்டதற்கு உரிய காலத்திலே இந்தக் கோரிக்கை கிடைக்கப்பெறாத காரணத்தினாலே மத்தியிலே இருக்கிற மாண்புமிகு ஊரகத் தொழில் துறை இணை அமைச்சர் அவர்கள் தற்போது அந்தத் திட்டம் மாற்றியமைக்கப்பட்ட சூழ்நிலையிலே அந்த 60 இலட்சத்து 13 ஆயிரம் ரூபாயை வழங்க இயலாத நிலையிலே இருக்கிறோம் என்பதாக பதிலுரையிலே தெரிவித்து இருக்கிறார்கள் என்பதை நான் இந்த மாமன்றத்திற்குப் பணிவோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பையா பாண்டியன்.

**திரு. எம். சுப்பையா பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது கடையநல்லூர் தொகுதியிலே தென்னை நார்த் தொழிற்சாலை அமைக்கப்படும் என அறிவித்த மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் கருப்பசாமி.

**திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் எத்தனை தென்னை நார்த் தொழிற்சாலைகள் உள்ளன? கடந்த ஆட்சியில் ஏதாவது தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்பட்டனவா? அப்படி ஆரம்பிக்கப்பட்டிருந்தால் அவை எத்தனை? எங்கெங்கு ஆரம்பிக்கப்பட்டன? அதுபோல தென் மாவட்டத்தில் பனை ஏறும் தொழிலாளர்கள் கடந்த ஆட்சியிலே மிகவும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். ஆகவே, பனை ஏறும் தொழிலாளர்களுடைய பாதிப்பைக் கருதி பனை நார்த் தொழிற்சாலைகளை ஆரம்பிக்கும் திட்டம் ஏதாவது அரசின் பரிசீலனையில் உள்ளதா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கருப்பசாமி, தென்னையிலிருந்து பனைக்குப் போகக்கூடாது. அவர் தென்னையைப் பற்றிய குறிப்பைத்தான் வைத்திருக்கிறார்.

[2001 ஆகஸ்ட் 24

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது தமிழகத்திலே 66 கயிறு தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்து, மாண்புமிகு உறுப்பினர் கோரிய மற்ற விவரங்களுக்கு தனிக் கேள்வி போட வேண்டுமென்று கனிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. பொள்ளாச்சி ஜெயராமன்.

**திரு. வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்னை நார் உற்பத்தியிலே இந்தியாவிலேயே முதலிடம் வகிப்பது பொள்ளாச்சி பகுதியாகும். நமது இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகத்தினுடைய முதலமைச்சராக இருந்த காலத்திலே 1991 முதல் 1996 வரை 400-க்கும் மேற்பட்ட தானியங்கி தென்னை நார் உற்பத்தித் தொழிற்சாலைகள் தமிழகத்தினுடைய சிறு தொழில் வளர்ச்சிக் கழகத்தின் மூலமாக கடனாகப் பெற்றுத் தொடங்கப்பட்டன. அதன்மூலமாக 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பெண்கள் தினசரி 8 மணி நேர வேலைக்கு 60 ரூபாய் முதல் 100 ரூபாய் வரை சம்பளமாகப் பெற்று வருகிறார்கள். அம்மா அவர்களுடைய சென்ற ஆட்சிக்காலத்திலே மத்திய அரசுக்கு பலமுறை கடிதம் எழுதி தமிழகத்திலே தென்னை நார் ஆராய்ச்சி நிலையம் ஒன்று தொடங்க வேண்டும் என்று கோரிக்கை வைக்கப்பட்டு அதன்மூலமாக பொள்ளாச்சி பகுதியிலே என்னுடைய சொந்த கிராமமாகிய திப்பம்பட்டியிலே நானும் முயற்சி செய்து 5.31 சென்ட் நிலம் கொள்முதல் செய்யப்பட்டு, 1997 ஆம் ஆண்டு கிரயம் முடிக்கப்பட்டு, இன்று வரையிலே மத்திய அரசு அங்கே, தென்னை ஆராய்ச்சி, தென்னை நார் மற்றும் கயிறு தொழிற்சாலை சம்பந்தப்பட்ட ஆராய்ச்சி நிலையத்தைத் தொடங்காமல் வீணாக அந்தத் திட்டம் தூங்கிக் கொண்டிருக்கிறது. இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்தின் அச்சாரமாக அந்தத் திட்டத்தினைத் தொடங்க வேண்டும் என்று கேட்கப்பட்ட காரணத்தாலேயே அந்தத் திட்டம் கடந்த 4 ஆண்டு காலமாக மத்திய அரசாங்கத்தாலே கிடப்பில் போடப்பட்டு இருக்கிறது. மத்தியிலே முக்கியமான இலாக்காக்களை வைத்துக்கொண்டிருக்கிற கட்சிகளைச் சார்ந்தவர்கள் எல்லாம் இந்த மாமன்றத்தின் அங்கத்தினர்களாக இருக்கிறார்கள்.

*முற்பகல் 10-45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெயராமன், அமைச்சரிடம் என்ன கேள்வி கேட்க வேண்டுமோ அதை மட்டும் கேளுங்கள்.



2001 ஆகஸ்ட் 24]

**திரு. வி. ஜெயராமன்:** மத்திய அரசாங்கத்திற்குக் கடிதம் எழுதி, விரைவில் பொள்ளாச்சி பகுதியிலே தென்னை நார் கயிறு ஆராய்ச்சி நிலையம் தொடங்க ஏற்பாடு செய்வார்களா? பொள்ளாச்சி பகுதியிலே உற்பத்தி செய்யப்படுகிற 800 முதல் 1000 டன் தென்னை நார் தினசரி கேரளா மாநிலத்திற்கும் டெல்லிக்கும் ஏற்றுமதியாகிச் சென்று அங்கேயிருக்கிற மக்கள் வேலைவாய்ப்பைப் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். அந்த வேலைவாய்ப்பு பொள்ளாச்சி பகுதியிலே கிடைப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவை உறுப்பினருடைய கோரிக்கையை ஏற்று தென்னை நார் உற்பத்திக்கென தொழிற்சாலை தொழில் கூட்டுறவு அமைப்பின்கீழ் தொடங்க அப்பகுதி மக்கள் முன்வந்தால் அதனைப் பரிசீலித்து, அதன் சாத்தியக்கூறுகளின் அடிப்படையில் தொழில் கூட்டுறவுச் சங்கம் அமைத்துத்தர ஆவன செய்யப்படும் என்பதை மாண்புமிகு அம்மா அவர்களின் சார்பாகப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆஸ்டின்.

**திரு. ஆஸ்டின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தென்னை நார்த் தொழிற்சாலை என்பது பொள்ளாச்சியிலும் மற்றும் கன்னியாகுமரி மாவட்டத்திலும் சேர்த்து கிட்டத்தட்ட ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொழிற்சாலைகள் இருக்கின்றன. இங்கே வறுமைக்கோட்டிற்குக்கீழே வாழக்கூடிய பெண்கள் மற்றும் தொழிலாளர்கள் ஆயிரக்கணக்கிலே வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். இங்கே உற்பத்தி ஆகக்கூடிய பொருட்களில் கிட்டத்தட்ட 75 சதவிகிதம் கேரளா மாநிலத்தினரால்தான் கொள்முதல் செய்யப்படுகிறது. கேரளாவிலுள்ள அந்தச் சிறு தொழிற்சாலைகளுக்கு அங்கே மின் கட்டணம் குறைவாக இருக்கிறது. அதேநேரத்தில் தமிழ்நாட்டிலே உள்ள சிறு தொழிற்சாலைகளுக்கு மின் கட்டணம் அதிகமாக இருக்கிறது. மேலும், தமிழ்நாட்டிலே சிறு தொழில்களுக்கு ஆண்டுக்கு ஒருமுறை மின் கட்டணம் உயர்த்தப்படுகிறது. ஆனால் கேரளாவிலே 3 ஆண்டுகளுக்கு ஒருமுறைதான் உயர்த்தப்படுகிறது. எனவே, கேரளாவில் உள்ளவர்கள் தென்னை நார் பொருட்களை இங்கே வாங்குகிறபோது விலை குறைத்துத்தான் வாங்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. எனவே நான் தங்கள் மூலமாக

ஒன்றைக் கேட்க விரும்புகிறேன். இப்போது மின் துறையின் மூலமாக இந்தத் தொழிற்சாலைகள் additional deposit கட்ட வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். இதை இரத்து செய்வதற்கு இந்த அரசு முன்வருமா? மேலும் இவர்கள் நிலவள வங்கியிலே கடன் பெற்று இந்தத் தொழிற்சாலைகளைத் தொடங்கி இப்போது நஷ்டத்திலே நசிந்து கொண்டிருக்கிறார்கள். இவர்கள் பெற்ற கடனுக்கான வட்டியையும், அபராத வட்டியையும், விவசாயிகளுக்கு இரத்து செய்ததைப்போல இந்த அரசு இரத்து செய்வதற்கு முன்வருமா என்பதையும் தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேரளாவிலே தொழிற்சாலைகளுக்கு ஒரு யூனிட்டிற்கு 4 ரூபாய் 23 காசு மின் கட்டணமாக வசூல் செய்யப்படுகிறது. தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் 3 ரூபாய் 88 காசுகள். எனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறான தகவலை இங்கே சொல்லியிருக்கிறார்கள். அதோடு,* Additional Current Consumption Deposit-*ஐப் பொறுத்தவரையில் நான் ஏற்கெனவே இந்த மாமன்றத்திலே குறிப்பிட்டிருக்கிறேன். மாதந்தோறும் மின்சார வாரியத்தை நடத்துவதற்கு ஏறக்குறைய 900 கோடி ரூபாய் அளவில் செலவிடுகிற சூழ்நிலையில் ரொக்கம் மட்டுமே கிட்டத்தட்ட 250 கோடி ரூபாய்* Cash Deficit *மாதந்தோறும் இருக்கின்ற சூழ்நிலையில், கனிவோடு பரிசீலிக்கலாம் என்ற மனம் இருக்கிறது. ஆனால், பணம் இல்லாத சூழ்நிலை இருக்கிற காரணத்தால் தற்போது இந்தக் கோரிக்கையை ஏற்க இயலாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா எண் 10, திரு. வை. சிவபுண்ணியம், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.*

**10–**

## புதிய பேருந்துகள்

***236– திரு. வை. சிவபுண்ணியம்:**

*மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா–*

*மன்னார்குடியிலிருந்து இயக்கப்படும் அரசுப் பேருந்துகள் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளதால் இவற்றை மாற்றி, புதிய பேருந்துகளை இயக்கிட அரசு ஆவன செய்யுமா?*





**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*நடப்பு நிதியாண்டிலே போக்குவரத்துக் கழகங்களுக்கு மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். அந்த வகையிலே புதிய பேருந்துகளைப் பெறும்போது மன்னார்குடி கிளைக்கு முன்னுரிமை தரப்பட்டு புதிய பேருந்துகளை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*முற்பகல் 10–50*

**திரு. வை. சிவபுண்ணியம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மகிழ்ச்சிகரமான செய்தியைச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், கடந்த கால ஆட்சியிலே இந்தக் கோரிக்கைகளைப் பலமுறை வைத்திருக்கிறேன். இங்கேயும், அந்தத் துறைக்குப் பொறுப்பான முன்னாள் அமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள். மறுக்கமாட்டார் என்று கருதுகிறேன். தினசரி அந்தக் கேள்வியைக் கேட்பேன். ஏனோ தெரியவில்லை. மன்னார்குடி என்ற காரணத்தினாலேயே – பழைய வியாபாரிகள் சொல்வதுபோல, ஓட்டை, உடைசல், ஈயம், பித்தளைக்குப் பேரிச்சம்பழம் வழங்கப்படும் என்று கிராமத்திலே கூவி பழைய இரும்பு வியாபாரிகள் கேட்பார்கள். அதைப்போல – பழைய பேருந்துகள் என்னுடைய அந்தத் தொகுதிக்கு, அந்த டெப்போவுக்கு தேடிப் பிடித்துக் கொண்டுவந்து சேர்த்ததுபோன்று இருக்கிறது. அதிலே பயணமே செய்யமுடியாது. அப்படி ஒரு அபத்தமான சூழ்நிலை. மழை வந்துவிட்டால், குடையைப் பிடித்துக்கொண்டுதான் பேருந்தில் போகவேண்டும். இப்படிப்பட்ட நிலைமையிலே அந்தப் பேருந்துகள் ஓடிக்கொண்டிருக்கின்றன. நான் இதைக் கேலிக்காகச் சொல்லவில்லை, உண்மைநிலை அதுதான். அவர்களே பார்த்துக்கொள்ளலாம். அப்படிப்பட்ட சிரமமான நிலையை மாற்றுவதற்கான முயற்சியை எடுக்க வேண்டுமென்ற அடிப்படையிலேதான் இந்தக் கேள்வியை எழுப்பியிருக்கிறேன். ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னது மகிழ்ச்சி அளிக்கிறது, நம்பிக்கை அளிக்கிறது. விரைவான முறையிலே மாற்றவேண்டும். அங்கே 30–க்கும் மேற்பட்ட வழித் தடங்களில் ஓடிக்கொண்டிருந்த பேருந்துகள் நிறுத்தப்பட்டிருக்கின்றன. அப்படி நிறுத்தப்பட்ட பேருந்துகளையும் இயக்குவதற்கான முயற்சியையும் புதிய வழித் தடங்களுக்கான அந்த அனுமதியை வழங்குவதற்கான முயற்சியையும் அமைச்சர் அவர்கள் மேற்கொள்வார்களா என அறிய விரும்புகிறேன்.*

[2001 ஆகஸ்ட் 24

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது மன்னார்குடி கிளையில் 34 புறவழித் தடப் பேருந்துகளும், 24 நகர வழித் தடப் பேருந்துகளும் ஓடிக்கொண்டிருக்கின்றன. தற்போது தேவையான முறையில் பேருந்துகள் இயக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. தேவையின் அடிப்படையில், மன்னார்குடி பகுதியிலே அம்மா அவர்களின் அனுமதியோடு புதிய வழித் தடங்கள், தேவைப்பட்டால் அனுமதிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சுதர்சனம்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துத் துறையிலே சுமார் 17 ஆயிரம் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. அந்தப் பேருந்துகளிலே எத்தனை பேருந்துகள் 5 ஆண்டு காலத்திற்கு மேலாக இயக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன? அப்படி 5 ஆண்டுகளுக்கும் மேலாக இயக்கப்படுகின்ற அந்தப் பேருந்துகள் உடனடியாக மாற்றப்படுமா? காஞ்சிபுரத்தைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்குகின்ற பேருந்துக் கழகம் சுமார் 850 பேருந்துகளைக் கொண்ட கழகம். அதிலே ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மன்னார்குடியிலே இருந்து காஞ்சிபுரத்திற்கு வந்துவிட்டீர்கள் என்றால் எப்படி? மன்னார்குடிக்குத்தான் அவர் பதில் சொல்கிறார். சரி, கேளுங்கள்.

**திரு. டி. சுதர்சனம்:** அதிலே 400-க்கும் மேற்பட்ட பேருந்துகள் 5 ஆண்டுகளுக்கும் மேல் அதிகமாக ஓடிக் கொண்டிருக்கின்ற காரணத்தால் மிகவும் பழுதடைந்திருக்கின்றன. எனவே, அந்தப் பேருந்துகளுக்குப் பதிலாக புதிய பேருந்துகளை இயக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேருந்துகள் 6 ஆண்டுகள் ஓடிய பிறகுதான் புதிய பேருந்துகள் மாற்றப்படும். அதற்கு முன்னாலே, இருக்கின்ற பேருந்துகள் பழுது பார்க்கப்பட்டு, சரி பார்க்கப்பட்டு, ஓட்டப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2001 ஆகஸ்ட் 24]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. பொன்முடி.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மன்னார்குடியிலே ஓடுகின்ற 34 புறநகர்ப் பேருந்துகளும், 24 நகரப் பேருந்துகளும் எந்தத் தேதியிலிருந்து ஓடுகின்றன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா? அவை இந்த 3 மாத காலத்திலே ஓட்டப்பட்டனவா அல்லது முதலிலேயிருந்து ஓடிக் கொண்டிருக்கின்றனவா என்பதை உங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு தனிக் கேள்வி போடும்படி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி யசோதா.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மன்னார்குடிக்கு சம்பந்தம் இல்லையென்றாலும்கூட, மாநகரத்திற்கு சம்பந்தம் இருக்கின்ற காரணத்தினாலே கேட்கின்றேன். மாநகரப் பேருந்துகள் என்றும், கிராமப்புறப் பேருந்துகள் என்றும் இரண்டாக வரிசைப்படுத்தியிருக்கின்ற காரணத்தினால், சென்னைக்கு அருகிலே இருக்கின்ற ஸ்ரீபெரும்புதூர் தொகுதியை ஒட்டிய பல கிராமங்களுக்கு 1/2 கிலோ மீட்டர் தாண்டினால், அந்தப் போக்குவரத்து எல்லையைத் தாண்டிவிடுகிறது என்ற காரணத்தினாலே மிகப் பெரிய குறைபாட்டிற்கு ஆளாக்கப்பட்டிருக்கிற நிலை உள்ளது. பொதுவாக, மாநகரத்திற்கு, அந்த எல்லைக்கோட்டிற்கு மத்தியிலேதான் நிற்கவேண்டும், அதைத் தாண்டி கொஞ்சம்கூட வரக்கூடாது என்கின்ற நிலைமையை மாற்றுவதற்கு ஏதேனும் உத்தேசம் இருக்கின்றதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதுபோல போக்குவரத்து விதிகளின்படி, 30 கிலோ மீட்டர் தூரம் நகரப் பேருந்துகளும், அதற்கு மேலே புறவழித் தடப் பேருந்துகளும்

இயக்குவதற்கு சட்டத்திலே இடம் இருக்கிறது. ஆனால், உங்களுடைய குறைகளைத் தீர்ப்பதற்கு புதிய வழித் தடங்கள் விடுவதற்கு வேண்டுமானால் யோசிக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 6 ஆண்டுகள் கடந்து, 7 ஆண்டுகளாக, 8 ஆண்டுகளாகக்கூட வேலூர், விழுப்புரம் போன்ற பகுதிகளிலே நிறைய பேருந்துகள் ஓடிக்கொண்டிருக்கின்றன என்று சொல்வதைவிட, ஆங்காங்கே நின்று கொண்டிருக்கின்றன என்றுதான் சொல்லவேண்டும். வேலூரிலிருந்து சென்னைக்கு வரும்போது பார்த்தாலேகூட, 10 பேருந்துகள் அந்த இடங்களிலே நின்று கொண்டிருக்கும். உதிரி பாகங்கள் இல்லாமல், சரியாகப் பழுதுபார்க்க முடியாமல் இருக்கின்ற நிலையை மாற்றியமைப்பதற்காக, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுப்பார்களா? ஆறு ஆண்டுகள் முடிந்துபோன பேருந்துகளுக்குப் பதிலாக, இந்த ஆண்டு எத்தனை புதிய பேருந்துகள் வாங்கி, எல்லா கழகப் பேருந்துகளுக்கும் அளிக்கப்படும் என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10–55*

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஐந்து ஆண்டுகளிலே தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருந்த பிரச்சினையை, மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். கடந்த மூன்று மாத காலமாக, அந்த நிலைமைகள் எல்லாம் மாற்றியமைக்கப்பட்டு, போக்குவரத்துக் கழகங்கள் சீரமைக்கப்பட்டு, இப்போது நல்லமுறையிலே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதை நான் மன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் மணி அவர்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேருந்து வசதி பற்றிய கேள்வி, மன்னார்குடியில் தொடங்கி, பரவலாக எல்லாத் தொகுதிகளுக்கும் சென்று கொண்டிருக்கிறது. ஆனால், எல்லா



மாண்புமிகு உறுப்பினர்களுடைய கோரிக்கையும் அதுதான். எல்லாத் தொகுதிகளிலும் இப்படிப்பட்ட தேவைகள் இருக்கின்றன. ஆகவே, 234 தொகுதி சட்டமன்ற உறுப்பினர்களுடைய கோரிக்கையாக நான் வைத்துக்கொள்ள விரும்புவது, கடந்த ஆட்சியிலேகூட ஒரு தொகுதிக்கு இரண்டு நகரப் பேருந்துகள் என்று கொடுத்து, அவசியத் தேவைகள் இருக்கக்கூடிய இடங்களிலே அதையெல்லாம் ஆவன செய்வதாகச் சொன்னார்கள். அப்படிச் சொல்லிவிட்டு, என்னுடைய தொகுதியிலே வழங்கவில்லை. அது வேறு. என்னுடைய தொகுதிக்குக் கடைசிவரையிலே கேட்டுக்கூட, அன்றைய போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் வழங்கவில்லை. நான் வாதாடினேன்; சண்டை போட்டேன்; கடைசிவரையிலே வழங்கவில்லை. அதை வேதனையோடு குறிப்பிட்டாலும்கூட, புதிதாகப் பொறுப்பேற்றுள்ள இந்த ஆட்சி ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியினுடைய பொதுமக்களுடைய போக்குவரத்துக் குறைகளை நிவர்த்தி செய்யக்கூடிய வகையிலே புதியதொரு திட்டத்தின் அடிப்படையிலே ஒரு தொகுதிக்கு இரண்டு அல்லது மூன்று பேருந்துகள் விடுவதற்கு ஆவன செய்யுமா என்ற கோரிக்கையை அனைவரின் சார்பிலே முன்வைத்து அமர்கிறேன்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 1991 ஆம் ஆண்டு முதல் 1996 ஆம் ஆண்டு வரை அம்மாவினுடைய ஆட்சியிலேதான், போக்குவரத்துக் கழகங்கள் எல்லாம் மேம்பட்டு, ஒரு பொற்கால ஆட்சியாக இருந்தது என்பதை இந்த மன்றத்திலுள்ள உறுப்பினர்கள் அனைவரும் அறிவார்கள். ஆனால், என்ன காரணம் என்றே தெரியவில்லை; ஓட்டப்பட்ட பெரும்பான்மையான பேருந்துகள், கடந்த ஆட்சிக் காலத்தில் நிறுத்தப்பட்டுவிட்டன. ஆனால், அதை எல்லாம் இப்போது மீண்டும் இயக்குவதற்கு அம்மாவினுடைய அரசு முயன்று கொண்டிருக்கிறது. மேலும், உங்களுடைய கோரிக்கைகள் பரிசீலிக்கப்படும் என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்–விடைகள் முடிவுற்றன. அடுத்து, திருத்திய நிதிநிலை அறிக்கையின்மீது பொது விவாதம்....

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்

### (அ) சென்னை மாநகர மேயர், மாண்புமிகு தமிழக முதல்வரை மரியாதை நிமித்தம் சந்திக்காதது மற்றும் முதலமைச்சர் பதவி ஏற்பு விழாவிற்கு அழைப்பு அனுப்புதல்

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பிரச்சினையை இந்த அவையில் நான் எழுப்ப விரும்புகிறேன். கேள்வி நேரத்தில் அதை எழுப்புவது மரபாகாது என்பதனால், கேள்வி நேரம் முடியும்வரை நான் காத்திருந்தேன். எதிர்க்கட்சி உறுப்பினர்கள், குறிப்பாக, தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள் அடிக்கடி மரபுகளைப் பற்றி இங்கே பேசுகிறார்கள். கேள்வி நேரத்தின்போது, மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சரவர்கள் ஒரு கருத்தைத் தெரிவித்ததற்காக, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எழுந்து அதற்கு ஆட்சேபம் தெரிவித்து, அப்படிக் கூறுவது மரபல்ல என்று தெரிவித்தார். அதைப்போலவே, தீப்பெட்டி குடிசைத் தொழிலைக் காப்பதற்காக ஒரு தீர்மானத்தை இங்கே நிறைவேற்றுவது பற்றி நான் பேசியபோது, அப்படிக் கேள்வி நேரத்தில் பேசுவது மரபல்ல என்று மாண்புமிகு துரைமுருகன் அவர்கள் இங்கே சொன்னார்கள். மரபைப் பற்றிப் பேசக் கூடாதவர்கள் எல்லாம் இங்கே மரபுகளைப் பற்றிப் பேசுகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இருப்பினும், மாண்புமிகு தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள் பேசுகின்றபோது, ஏதோ எல்லா மரபுகளையும் அவர்கள்தான் காக்கிறார்கள் என்பதுபோல் இங்கே தெரிவிக்கிறார்கள். ஒரு புதிய ஆட்சி பொறுப்பேற்ற பிறகு, மாநிலத்தின் முதலமைச்சரை, சென்னை மாநகராட்சி மேயர் வந்து மரியாதை நிமித்தமாகச் சந்திக்க வேண்டும் என்பது மரபு. (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், தி.மு.க. சட்டமன்ற உறுப்பினராக இருக்கின்ற சென்னை மாநகராட்சி மேயர் இன்றுவரை முதலமைச்சரை வந்து சந்திக்கவில்லை. இதுதான் தி.மு.க.-வினர் மரபுகளைக் காக்கின்ற இலட்சணமா என்பதை அறிய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மேயரே இருக்கிறார். அவரே பதில் சொல்லட்டும்.

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மரபுகள் என்று சொல்வது, சட்டமன்றத்தினுடைய முறைகளை,



ஏதேனும் சில நியாயங்களுக்காகக்கூட மீறி நடக்கிறபோது, மாற்றி நடத்துகிற போது, அந்தப் புதிய முறை வந்து விடுமோ என்ற காரணத்தால், சட்டமன்ற விதிமுறைகளாக ஏற்கெனவே குறிப்பிடப்பட்டிருக்கின்றவற்றைத்தான் சொல்கிறோமே தவிர, குறிப்பிடப்படாததைச் சொல்லவில்லை. இந்த அவையிலே பேசுகிறபோது, சில குற்றம் குறைகளைச் சொல்கிற வாய்ப்பு, ஆளும் கட்சிக்கும் இருக்கிறது; எதிர்க்கட்சிக்கும் இருக்கிறது. அதை முறையோடு சொல்வதற்கான வழிமுறை வகுக்கப்பட்டிருக்கிறது. கேள்வி நேரத்திலே குற்றம் சொல்லக்கூடாது என்பது – கேள்வி கேட்கிறவர்கள், ஒரு குற்றச்சாட்டாக அந்தக் கேள்வியைக் கேட்கக் கூடாது. இடையிலே குற்றம் சொல்லக் கூடாது. குறை சொல்லலாம்; இது நடைபெறவில்லை என்று சொல்லலாம். ஆனால், குற்றச்சாட்டாக அது ஆகிவிடக் கூடாது என்பது—இந்தச் சட்டமன்றத்தினுடைய நடைமுறையில் செயல்படுவதற்கு வசதியாக அமைக்கப்பட்ட ஒரு மரபு. அதுவே தவிர வேறல்ல.

*முற்பகல் 11–00*

அதேபோல, அடுத்து மேயரைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். மேயர் ஏன் முதலமைச்சரை வந்து காணவில்லை என்று கேட்டார்கள். காண்பது ஒன்றும் தவறு என்று திராவிட முன்னேற்றக் கழகம் கருதவில்லை. சூழ்நிலையின் காரணமாக, ஒரு மாறுபட்ட உணர்வு இருக்கிற காரணத்தால், போய்ப் பார்க்கிறபோது தவறான எண்ணங்கள் வரும் என்ற ஓர் எண்ணம் எங்களுக்கு இருக்கிறது. எனக்கேகூட இருக்கிறது. நான்கூட எளிதாக முதலமைச்சரையோ அல்லது மற்ற அமைச்சர்களையோ பார்ப்பதில்லை. அது என்னுடைய மனப் பான்மையில் ஊறிப்போன ஒன்று. என்ன காரணம் என்றால், ஒரு மாறுபட்ட கருத்து இருப்பவர்களை, நாமாகப் போய்ச் சென்று சந்திக்கக் கூடிய ஒரு நிலைமை ஏற்படக்கூடாது; அவசியமாக இருந்தால், சட்டமன்றத்திலே சொல்லிக்கொள்வோம் என்றுதான் நான் கருதுகிறேன். ஆகவே, அந்த முறையிலே மேயர் சந்திக்கவில்லையே தவிர, முதலமைச்சரிடம் மாறுபாடு இல்லாத நிலைமை இருக்குமானால், அதிலும் குறிப்பாக, சென்னை மாநகர நிர்வாகத்தை ஏன் கலைக்கக்கூடாது என்கிற கேள்வி இந்த அரசாங்கத்தால் எழுப்பப்படாமல் இருந்திருக்குமானால், எந்த ஒரு வேற்றுமையும் இல்லாமல், அவரவர்களுடைய பொறுப்புக்கேற்ற இடத்தில் அவரவர்கள் இருக்கிறோம் என்ற உணர்வோடு சந்திப்பதற்கு மாறுபாடு கிடையாது. ஆனால், சந்திக்கவில்லை என்பது ஒரு பெரிய குற்றச்சாட்டாகவும் ஆகாது. சில நேரங்களில், மரபுகளை நம்மால் காப்பாற்ற முடியவில்லை என்பதையும் இந்த அவை அறியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மேயர், பேசுங்கள்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் கேட்ட ஒரு வினாவிற்கு நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் விளக்கமாகத் தன்னுடைய பதிலைத் தந்திருக்கிறார்கள். எனவே, நான் அதிகம் விளக்கம் சொல்ல விரும்பவில்லை. இருந்தாலும், ஒரே ஒரு கேள்வியை மாத்திரம் நம்முடைய அவைத் தலைவர் மூலமாகக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். மரபைப் பற்றி நம்முடைய முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால், அதே முதலமைச்சர் அவர்கள், பதவிப் பிரமாணம் எடுத்த நேரத்திலே, முறையாக மேயருக்கு அழைப்பு அனுப்பப்படவில்லை என்பதை நான் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பதவியேற்பு விழாவிற்கு அழைப்புகள் அனுப்புவது Public Department. ஆளுநருடைய செயலாளர் அந்தப் பட்டியலைத் தருகிறார். ஆகவே, இம்முறை நடைபெற்ற பதவிப் பிரமாண விழாவிற்கு அழைப்புகள் யாருக்கு அனுப்ப வேண்டும், யாருக்கு அனுப்பக்கூடாது என்பதுபற்றி முதலமைச்சரிடம் கலந்தாலோசிக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மணி, உட்காருங்கள். பேராசிரியர் அவர்களே, பேசுங்கள்.

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநருடைய செயலாளர் செயல்படுவதில் ஒரு குறை ஏற்பட்டது என்ற அடிப்படையில் அனுப்பப்படவில்லை என்றோ அல்லது யாருக்கு அனுப்பலாம், யாருக்கு அனுப்பக்கூடாது என்று தீர்மானிக்கிற ஒரு தகுதி ஆளுநருடைய செயலாளருக்கு இருந்தது என்றோ பொருள்படும்படியாக முதலமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அப்படி ஒரு நிலை மாநகராட்சியினுடைய தேர்ந்தெடுக்கப்பட்ட மேயராக இருக்கிற ஒருவரை அழைக்கலாமா, கூடாதா என்ற கேள்விக்கு உரியதாக



அது அமையாது. ஆகவே, அப்படி நடைபெற்றிருக்குமானால், அதுவும்கூட ஒரு வகையில் மரபை மீறியது என்றுதான் நான் சொல்ல முடியும்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநருடைய செயலாளர்மீது புகார் கூறவேண்டும் என்பது என்னுடைய நோக்கம் அல்ல. அப்படி நான் எதுவும் கூறவில்லை. எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், நான் சொன்னதைத் திரித்துக் கூறவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். மேயர் அவர்களுக்கு அழைப்பு அனுப்பப்படவில்லை என்ற விவரம் இப்போதுதான் எனக்குத் தெரியவந்துள்ளது. இதைப்பற்றி நான் விசாரிக்கிறேன்.

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் மீதோ, ஆளுநருடைய செயலாளர் மீதோ நான் குற்றம் சொல்லவில்லை. குறையும்படவில்லை. நடைமுறையில் ஏற்பட்ட ஒரு குறை என்ற அளவில், அதற்கு அவருடைய எண்ணங்கள் காரணமாக இருக்கலாமோ என்ற எண்ணத்தை முதலமைச்சர் அவர்கள் பேச்சிலேயிருந்து நான் புரிந்துகொண்டேன். அந்த அடிப்படையிலேதான் சொன்னேனே தவிர, தனிப்பட்ட முறையிலோ அல்லது அனுப்பவில்லை என்பதை ஒரு குற்றச்சாட்டாகவோ, யார்மீதும் சொல்ல நான் விரும்பவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதலமைச்சர் அவர்கள் "அது என்னுடைய கவனத்திற்கு வரவில்லை" என்றுதான் குறிப்பிட்டார்கள். தன்னுடைய கவனத்திற்கு வந்து அந்த அழைப்பு அனுப்பப்படாமல் இல்லை என்று குறிப்பிட்டார்கள். அவர் கேட்டது, "மாநகராட்சியினுடைய மேயர் மரியாதை நிமித்தமாக முதலமைச்சரைச் சந்திப்பது மரபு; அந்த மரபு கடைப்பிடிக்கப்படவில்லையே" என்று அவர்கள் கேட்கிறார்கள். இனியாவது கடைப்பிடிக்க உத்தேசம் உண்டா, ஸ்டாலின் அவர்களே?

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாநகரத்தை, மாநகராட்சியைக் கலைக்கிற நோக்கம் அரசாங்கத்திற்கு இல்லாமல் இருக்குமானால், அவர் சந்திப்பதில் எந்த மாறுபாடும் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லாமே கலையக்கூடிய நேரம் வந்துவிட்டது. முடியக்கூடிய நேரம் வந்துவிட்டது. திரு. ஜி.கே. மணி.

*முற்பகல் 11-05*

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே ஒரு நல்ல அரசியல் சூழ்நிலை உருவாக வேண்டும் என்ற

நல்ல எண்ணத்தோடு, ஆர்வத்தோடு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். தமிழ்நாட்டைப் பொறுத்தவரையிலே, ஆளும் கட்சியாக இருந்தாலும், எதிர்க்கட்சியாக இருந்தாலும், பார்க்க வேண்டிய நேரத்திலே பரஸ்பர உணர்வோடு எல்லோரும் பார்க்க வேண்டும். இது மரபு என்று சொன்னாலும்கூட, மரபு அல்லாத செயலாக இருந்தாலும்கூட, அந்த ஒரு நல்ல சூழ்நிலை தமிழகத்திலே உருவாக வேண்டும் என்ற நல்ல நிலையை இங்கே நான் வற்புறுத்துகிறேன்.

உதாரணமாக, மத்திய அரசாங்கத்திலேகூட, மாண்புமிகு பிரதமர் வாஜ்பாய் அவர்களும், எதிர்க்கட்சி வரிசையிலே இருக்கக்கூடிய சோனியா காந்தி அவர்களும் விழாக்களிலே கலந்துகொள்கிறார்கள். அனைத்துக் கட்சிக் கூட்டத்திலே கலந்துகொள்கிறார்கள். அருகருகே உட்கார்ந்து கொண்டு பேசுகிறார்கள்; உணவு உண்பதைப் பார்க்கிறோம். பத்திரிகையிலே செய்தியாகப் பார்க்கிறோம். நேரடியாகக்கூட நான் பார்த்தேன். மற்ற மாநிலங்களிலும் அப்படிப்பட்ட நல்ல சூழ்நிலை உருவாகிக் கொண்டிருக்கிறது; இருந்து கொண்டிருக்கிறது; மேலும் நடைமுறையிலே இருக்கின்ற காரணத்தினாலே, தமிழகத்திலே கருத்து வேறுபாடுகளை மறந்து, அரசியல் ரீதியாக மாறுபாடுகள் இருந்தாலும்கூட, மாச்சரியங்கள் இருந்தாலும் கூட, அதையெல்லாம் மறந்து, நல்ல மண், தமிழ் மண்; மற்ற மாநிலங்களுக்கு எடுத்துக்காட்டான மண் என்ற வகையிலே, மற்றவர்களுக்குப் பாடம் புகட்டக்கூடிய வகையிலே, தமிழ்நாட்டிலே ஆளும் கட்சி, எதிர்க் கட்சிகள் எல்லாம் பரஸ்பரமாக இருக்கக்கூடிய ஒரு நல்ல சூழ்நிலை உருவாக வேண்டுமென்று எங்களுடைய பாட்டாளி மக்கள் கட்சியின் கோரிக்கையை முன்வைத்து அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பாட்டாளி மக்கள் கட்சி, இதற்கு பாலம் போடுவதற்குத் தயார் என்றால், எல்லோரும் ஒத்துக்கொள்வார்கள்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு துரைமுருகன், நிதிநிலை அறிக்கையின்மீது பொது விவாதத்தில் பேச ஆரம்பியுங்கள். பேசுங்கள். இந்தப் பிரச்சினை முடிந்தது. (குறுக்கீடு) இந்தப் பிரச்சினை முடிந்தது. துரைமுருகன் அவர்கள், நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு பேச வேண்டும்.

**திரு. பரிதி இளம்வழுதி:** Point of Order.



## (ஆ) உறுப்பினர்களின் முன்னறிவிப்புகள்

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசிடமிருந்து பதில் வந்தவுடன் எடுத்துக்கொள்ளலாம்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** காட்பாடி பிரச்சினை முடிந்தது. உட்காருங்கள்.

**திரு. பரிதி இளம்வழுதி:** நான் எழுந்து கேட்டால், வாய்ப்புத் தரமாட்டேன் என்கிறீர்கள்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களைத்தான் கூப்பிடப்போகிறேனே, உட்காருங்கள்.

**திரு. பரிதி இளம்வழுதி:** I am on a point of order.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** We are having our own doubt. We would like to get it clarified.

## (இ) சென்னை மாநகர மேயர், மாண்புமிகு தமிழக முதல்வரை மரியாதை நிமித்தம் சந்திக்காதது மற்றும் முதலமைச்சர் பதவி ஏற்பு விழாவிற்கு அழைப்பு அனுப்புதல்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு நல்ல விவாதத்தை, நல்ல மரபுகளைத் தொடங்கி வைத்தார்கள். அதேபோன்று, எதிர்க்கட்சித் தலைவர் மாண்புமிகு பேராசிரியர் அவர்களும் நல்ல கருத்துக்களை இங்கே முன்மொழிந்திருக்கிறார்கள். உண்மையிலேயே இது ஒரு ஆரோக்கியமான அரசியலுக்கு, தமிழ்நாட்டிற்குத் தேவையானதாக நான் கருதுகிறேன். இப்படி ஒருவரை ஒருவர் மதித்து நடப்பது மட்டுமல்லாமல்,

[திரு. ஜி. பழனிசாமி] [2001 ஆகஸ்ட் 24

பொதுவாக தமிழ்நாட்டின் நலனைக் கருதி, தமிழ்நாட்டினுடைய வளர்ச்சியைக் கருதி, மத்திய அரசிலிருந்து கேட்டுப் பெறக்கூடிய நிலையில், பல்வேறு தீர்மானங்கள் பொறுத்தவரை, இன்னும் பல்வேறு முரண்பாடுகளிலே நம்முடைய மாநிலம் அமைந்திருக்கிறது என்பதுதான்.

குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், சமீபத்திலே நம்முடைய காவிரி நதிநீர்ப் பிரச்சினையிலேகூட, கருத்து முரண்பாடு இல்லாமல் இதுபோன்ற கருத்துக்களை முன்மொழிந்து, ஆளும் கட்சியா, எதிர்க்கட்சியா என்று பார்த்து, கருத்து மோதல் மூலமாக பல தடைப்பட்டிருக்கின்ற காலத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கக்கூடிய விவாதமாக இன்றையதினத்திலே அமைந்திருக்கிறது. இதுபோன்ற நல்ல விவாதங்களைத் தொடங்குவதற்குக்கூட, ஆளும் கட்சியைச் சார்ந்தவர்களும், எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்களும், ஓர் அரசியல் ஆரோக்கியத்தோடு நடந்து கொள்கிற விதத்தை, ஒரு பண்பாடாக எடுத்துக்கொள்வது என்பது, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு மிகவும் உகந்ததாக இருக்கும். அதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்திருக்கிறார்கள். எதிர்காலத்தில் அதுபோன்ற நிகழ்ச்சிகள் நடைபெறுவதற்கான வாய்ப்பை உருவாக்க வேண்டுமென்று கேட்டு, அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு லத்தீப் அவர்கள்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சராக, இன்றைய முதலமைச்சர் பொறுப்பேற்பதற்கு, ஆளுநர் மாளிகைக்கு அழைக்கப்பட்டபோது இன்றைய முதலமைச்சர் அவர்கள், அன்று அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராகக்கூட தேர்ந்தெடுக்கப்பட்டேன் என்று கடிதத்தை அளித்திருந்தார்கள். எனவே, கடிதம் அளிக்கப்பட்ட கட்சி ஒன்றால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு தலைவர், அரசுத் துறையிலே அன்றைக்கு அவருக்கு இருந்த பொறுப்பு என்ன? அவர் முதலமைச்சராகப் பொறுப்பேற்றதற்கு முன்பு அவருக்கு இருக்கக்கூடிய பொறுப்பு என்ன?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** லத்தீப் அவர்கள், அதைத்தான் முதலமைச்சர் அவர்களும் சொன்னார்கள், "என்னுடைய கவனத்திற்கு வரவில்லை" என்று.



2001 ஆகஸ்ட் 24]

**திரு. ம. அப்துல் லத்தீப்:** அந்த விழாவிற்கு அழைக்கக்கூடிய பொறுப்பு, அழைப்பு அனுப்பக்கூடிய பொறுப்பு, இப்படியொரு விழா நடக்கிறது என்ற தகவல் கொடுக்கக்கூடிய பொறுப்பு, வெறும் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அவருக்கா அல்லது அவரைப் பொறுப்பேற்க வரவழைக்க வேண்டும் என்று இருக்கக்கூடிய துறையினர் அல்லது ஆளுநருடைய பொறுப்பா என்பதைத் தெரிவிக்க வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு துரைமுருகன்.

**திரு. துரைமுருகன்:** லத்தீப் பாய். (சிரிப்பு) Sorry. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஹேமச்சந்திரன். துரைமுருகன், நீங்கள் திருத்திய நிதிநிலை அறிக்கையில், பேசும்போது பேசுங்கள்.

**திரு. துரைமுருகன்:** ஸ்டாலின் அவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அழைப்பு அனுப்பவில்லையென்று சொல்லவில்லை. அழைப்பு யார் அனுப்ப வேண்டுமோ அவர்கள் அனுப்பவில்லை என்று சொன்னார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஹேமச்சந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே ஆரோக்கியமான ஒரு அரசியல் வளர்ச்சியை ஏற்படுத்துவதற்கு இரண்டு கட்சிகளும், அதாவது பிரதான எதிர்க்கட்சி, ஆளும் கட்சியோடும், அதேபோன்று சபையிலே இருக்கக்கூடிய நடவடிக்கைகளோடும் ஒத்துழைத்துப் போவதன் வழியாகத்தான் முடியும். அந்தமுறையிலே, ஒரு ஆரோக்கியமான விவாதத்திற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு தொடக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அதை நாம் எந்த உணர்வுடன் பின்பற்ற வேண்டுமோ அந்த உணர்வுடன் பின்பற்ற வேண்டுமென்று இந்த அவையிலே இருக்கிற அனைவரையும் நான் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆரோக்கியமான விவாதத்தை, திரு. துரைமுருகன் அவர்கள் தொடங்குவார். (குறுக்கீடு) துரைமுருகன் எழுந்து பேசுங்கள். எழச்சொன்னால், எழுந்து நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) உங்களைத்தான் அழைத்தேன்.

## (ஆ) உறுப்பினர்களின் முன்னறிவிப்புகள்—தொடர்ச்சி

**திரு. சி. ஞானசேகரன்:** பேரவைத் தலைவர் அவர்களே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கவன ஈர்ப்புதானே? நாளைக்கு அரசிடமிருந்து பதில் வந்தவுடன் எடுத்துக்கொள்ளலாம். (குறுக்கீடு) திரு. துரைமுருகன், எழுந்து பேசுங்கள். பரிதி, உட்காருங்கள். பேரவைத் தலைவரால் அழைக்கப்படுகிறவர்தான் பேசவேண்டும். (குறுக்கீடு) நீங்கள் அமருங்கள்.

**திரு.பரிதி இளம்வழுதி:** அப்போது முன் வரிசையில் இருப்பவர்களைத்தான் நீங்கள் அழைப்பீர்களா? எங்களை அழைக்க மாட்டீர்களா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முன் வரிசையில்தான் பேராசிரியர் அவர்கள் இருக்கிறார்கள். திரு. துரைமுருகன், நீங்கள் பேசுங்கள்.

**திரு. பரிதி இளம்வழுதி:** I am on a point of order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன், நீங்கள் பேசுங்கள்.

**திரு. பரிதி இளம்வழுதி:** பேரவைத் தலைவர் அவர்களே....

**திரு. துரைமுருகன்:** சார். இரண்டு பேருமே பேசமுடியாது. என்னை இக்கட்டிலே மாட்டிவிடாதீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் ஆரம்பியுங்கள். உங்களை அழைத்திருக்கிறேன், நீங்கள் பேசுங்கள். பரிதி இளம்வழுதி, உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் அடுத்து பேசுகிறீர்கள் என்றால் அழைக்கிறேன். பரிதி இளம்வழுதி, நீங்கள் உட்காருங்கள். திரு. துரைமுருகன், நீங்கள் பேசுங்கள்.

**திரு. துரைமுருகன்:** நீங்கள் பேசச் சொன்னால் பேசுகிறேன். என்னை இக்கட்டிலே மாட்டிவிடுகிறீர்கள்.

## (இ) சட்டமன்ற நடவடிக்கைகளைத் தொலைக்காட்சியில் ஒளிபரப்புதல்

**திரு. பரிதி இளம்வழுதி:** சார், நான் point of order கேட்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுடைய point of order என்ன? அதைச் சொல்லுங்கள்.



**திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற கூட்டத் தொடரின்போது, இறுதி நாளுக்கு முதல் நாள், நான் சட்டமன்றக் கூட்டத் தொடருக்கு வந்தபோது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் ஒரு விளக்கம் கேட்டேன். அவரும் அதற்குப் பதில் அளித்தார்கள். சட்டமன்ற நடவடிக்கைகளை நேரடியாக, பொது மக்கள் பார்ப்பதற்காக இங்கே T.V. Camera-க்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன; மற்ற மாநிலங்களில் நடத்துவதைப்போல இங்கே நடத்துகிறோம் என்று அவர்களும் பதில் சொன்னார்கள். சொல்லிவிட்டு, இரண்டு நாட்களாக Films Division எடுக்கிற அந்தக் காட்சியை தங்கள் வசதிக்கேற்ப edit செய்து, அதை மற்றத் தொலைக்காட்சிகளுக்குக் கொடுக்கிறார்கள். அன்று நான் கேட்டபோது, எல்லாத் தொலைக்காட்சிகளுக்கும்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Edit செய்கிற வேலையெல்லாம் அவர்களுக்குத் தெரியாது. Edit செய்கிற வேலையெல்லாம் யார் செய்வார்கள் என்று தெரியும், உட்காருங்கள்.

## 3. திருத்திய வரவு–செலவுத் திட்டம், 2001–2002, பொது விவாதம்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2001–2002 ஆம் ஆண்டிற்கான திருத்திய நிதிநிலை அறிக்கை மீது விவாதம். திரு. துரைமுருகன்.

***திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. நடப்பு நிதியாண்டிற்கு நம்முடைய நிதி அமைச்சர் அவர்களால் இந்த மாமன்றத்திலே வைக்கப்பட்டிருக்கிற இந்த நிதிநிலை அறிக்கையின்மீது என்னுடைய கருத்துக்களை நான் சொல்வதற்காக வாய்ப்புத் தந்ததற்காக, நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். பொதுவாக, ஒரு 5 ஆண்டு காலம் ஆட்சியிலே இல்லாமல் இருந்து, ஆட்சிக்கு வருகிற ஒரு கட்சி முதல் நிதிநிலை அறிக்கையை அளிக்கிறபோது, அளிப்பவர்களுக்கும் ஓர் உற்சாகம் இருக்கும்; மக்களிடத்திலும் ஒரு பரபரப்பு இருக்கும், என்னென்ன சலுகைகள் இருக்குமோ, என்னென்ன விஷயங்கள் இருக்குமோ என்று. படித்துப் பார்த்தால், புதிய தொழில்களுக்கு பல யுக்திகளைக் கையாண்டிருப்பார்கள்; இளைய சமுதாயத்தினருக்குப் புதிய வழிமுறைகளைக் காட்டியிருப்பார்கள்; வறுமை ஒழிப்பிற்கும், வளமான சமூக அமைப்பிற்கும் பலவிதமான புதிய திட்டங்கள், நிதிநிலை அறிக்கையிலே இருக்கும்; பொருளாதார ஸ்திரத்தன்மைக்கு பலமான நங்கூரம் பாய்ச்சப்பட்டிருக்கும்; இப்படிப் பல்வேறுபட்ட கண்கவர் கதம்ப

மாலையாக, நிதிநிலை அறிக்கையை, நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் இந்த மன்றத்திற்கு அளித்திருப்பார் என்று நானும் புரட்டிப் பார்த்தேன். ஆனால், நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள், இவற்றையொட்டி வராமல், ஒரு மளிகைக் கடையில் கணக்குப் பிள்ளையின் கணக்குப் புத்தகத்தைப்போல, தன்னுடைய நிதிநிலை அறிக்கையை இந்த மாமன்றத்திலே படைத்திருக்கிறார்கள். அவரால் அற்புதமாக நிதிநிலை அறிக்கையைப் படைக்க முடியாதா என்றால், அத்தகைய ஆற்றல் அவருக்கு இல்லையென்று நான் சொல்லமாட்டேன். காரணம், இந்த அவையிலே இருப்பவர்களில் நீண்ட நாட்களாக அவரை நான் அறிந்தவன். அத்தகைய ஆற்றல் உள்ளவர்தான். ஆனால், அவர் என்ன சொல்லலாம்? "என்னால் என்ன செய்ய முடியும் துரைமுருகன்? நானே நிதிநிலை அறிக்கையைப் பார்த்திருக்கிறேன்; 692 கோடி ரூபாய் பற்றாக்குறை இருக்கிறது; இதற்கே, ஆட்டைத் தூக்கி மாட்டில் போட்டு, மாட்டைத் தூக்கி ஆட்டில் போட்டு, அதைப்பண்ணி, இதைப்பண்ணி, நான் ஏதோ manage பண்ணி, இதைக் கொண்டுவந்து நிறுத்தியிருக்கிறேன்; இதற்குமேல் என்னால் என்ன செய்ய முடியும்" என்று சொல்லலாம். இன்னும் அற்புதமான திட்டங்களைக் காணோம் என்று, மளிகைக் கடைக்காரன் கணக்குப் புத்தகம் என்று சொல்கிறாரே, இது நியாயமா என்றுகூட அவர் கேட்கலாம். ஆனால், நான் அந்த நிதிநிலை அறிக்கையினுடைய Budget Performance-க்கு எல்லாம்கூட போக முடியவில்லை. ஆனால், நிதிநிலை பற்றாக்குறைக்கு அவர் சொல்லியிருக்கிற காரணத்தைத்தான் நான் பார்த்தேன். அவருடைய நிதிநிலை அறிக்கையிலே, 6.5–ஆம் para-விலே ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார். 'தமிழக அரசின் நிதிநிலைமை வரலாறு காணாத அளவிற்குச் சீர்கேடான நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறது' என்று சொல்லியிருக்கிறார். இது ஒன்று.

*முற்பகல் 11–15*

அடுத்து, முந்தைய அரசு ஏற்படுத்திவிட்டுச் சென்ற மோசமான நிதிநிலைமைதான் இத்தகைய சூழலுக்குக் காரணமாக அமைந்துவிட்டது என்று கடந்த காலத்திலே ஆட்சியில் இருந்த எங்கள்மீது குற்றச்சாட்டைச் சுமத்திவிட்டு, ஆகையினால்தான் இந்த நிலைமை என்று அவர் தன்னுடைய பழியிலேயிருந்து விலகிக்கொள்ள முற்படுகிறார் என்று நான் கருதுகிறேன். ஆனால், தங்கள் மூலமாக நிதியமைச்சர் அவர்களை நான் கேட்கிறேன். சென்றமுறை ஆண்ட அரசு நிதிநிலையில் அதிகமாக உங்களுக்கு இருப்பு வைக்காமல் போயிருக்கலாம்; இருப்பு வைத்த அரசுதான் நல்ல அரசு; இருப்பு வைக்காமல் போனால், அது மோசமான அரசு என்று எந்தப் பொருளாதாரம் தெரிந்தவர்களும் சொல்லமாட்டார்கள். நிறைய திட்டங்களைப் போட்டு, அதற்காகச் செலவு செய்கிறபோது, நிதிப் பற்றாக்குறை ஏற்படத்தான் செய்யும்....



**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு துரைமுருகன் பேசும்போது, விளக்கமாக அவருக்குரிய பாணியிலே பேசுகின்றார். ஓர் ஆட்சி பதவியை விட்டுவிட்டுச் செல்லும்போது, பணத்தை விட்டுவிட்டுச் செல்லவேண்டுமோ, இல்லையோ அது அவருடைய விருப்பம். திட்டங்களைப் போடுவதற்காக, பணங்களை எல்லாம் செலவு செய்து விடுவதில்லை. இரண்டாவது, கஜானாவை காலி செய்ததோடு மட்டுமல்லாமல், கடனையும் வைத்துவிட்டுப் போயிருக்கிறீர்கள் என்றுதான் இப்போது நான் கேட்கிறேன். உதாரணத்திற்குச் சொல்கிறேன். Lignite Corporation இருக்கிறது; அதற்கு royalty 2.5 சதவீதம் தருவதாக இப்போது ஒரு முடிவு எடுக்கப்பட்டு வந்திருக்கிறது. அதற்கு 80 கோடி ரூபாய் ஆண்டிற்குக் கிடைக்கும். அதைக்கூட, 2001–லிருந்து 2003 வரையில் மூன்று ஆண்டுகளுக்கான பணத்தையும் வாங்கி, 250 கோடி ரூபாயைச் செலவு செய்துவிட்டார்கள். ஆகவே, இப்போது இருக்கிற அரசு ஏதாவது திட்டங்களைப் போட வேண்டுமென்றால், கஜானா காலியாக இருந்தால்கூடக் கடனைப் பெற்றுவிடலாம்; கடனையே ஏற்படுத்தியிருக்கும்போது, இந்த அரசு என்ன செய்ய முடியும்? அதைத்தான் அவர் விளக்கியிருக்கிறார் என்பதைத் தவிர, வேறு ஒன்றும் கிடையாது என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்வது பொருளாதாரத் தத்துவம். அது நிதியமைச்சருக்குப் புரியும். (குறுக்கீடு) உங்களுக்கும் தெரியும். கல்வியமைச்சரும் படித்தவர்தான். இல்லையென்று சொல்லவில்லை. Deficit budget வரலாம்; கடன் வாங்கலாம் ஒரு அரசு. அத்தகைய நிலைமையில், வாங்கியிருக்கிற Revenue Receipt–ல், வந்த பணம் போதாமல் கடனும் வாங்கி, அந்தக் கடனைத் திட்டச் செலவுகளுக்காகச் செலவு செய்கிறபோது, ஒரு ஆட்சி deficit-ஆகக்கூட budget போட முடியும். ஆனாலும், நாட்டு முன்னேற்றத்திற்கு அது பயன்படுகிறதா என்றுதான் பார்க்கவேண்டும். இங்கே தந்திருக்கிற வெள்ளை அறிக்கையிலேகூட, அதற்குக் காரண காரியங்களை நம்முடைய நிதியமைச்சர் சொல்லியிருக்கிறார். பதினோராம் நிதிக் குழு, தமிழ்நாட்டிற்கு மத்திய வரிகளின் பங்கினை, (குறுக்கீடு) அது 16.4–வது பாரா; இது 16.5–வது பாரா....

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு அரசு பதவியை விட்டு இறங்கிச் செல்லும்போது, நிதியை வைத்துவிட்டுச் சென்றதா என்பதை மாத்திரம் பார்த்து, அந்த அரசின் செயல்திறனை மதிப்பிட முடியாது என்று மாண்புமிகு உறுப்பினர் இங்கே பேசினார்கள். அவர்களுடைய அரசு செயல்பட்ட விதத்திற்கும், அதற்கு முந்தைய என்னுடைய அரசு செயல்பட்ட விதத்திற்கும் உள்ள வேறுபாட்டை, ஒரேயொரு புள்ளிவிவரம் மூலமாக இங்கே நான் தெரிவிக்க விரும்புகிறேன். State Transport Undertakings – போக்குவரத்துக் கழகங்களில் ஏற்பட்ட நஷ்டத்தைக் கூட்டிப் பார்த்தால், 1995–96 ஆம் ஆண்டில், அதாவது நாம் ஆட்சியை விட்டு இறங்கிப் போகும்போது cumulative loss – கூட்டு நஷ்டம் – 533 கோடி ரூபாயாக இருந்தது. தி.மு.க. ஆட்சி செய்துவிட்டு, 2001-ல் ஆட்சியை விட்டு இறங்கும்போது, அந்த cumulative loss, 2,035 கோடி ரூபாயாக உள்ளது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இதுதான் முந்தைய தி.மு.க. ஆட்சியின் நிர்வாகத் திறன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. துரைமுருகன்:** தலைவர் அவர்களே...

**டாக்டர் க. பொன்முடி:** அண்ணே, அண்ணே, கொஞ்சம் இருங்கள் அண்ணே...

*முற்பகல் 11–20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, திரு. பொன்முடி பேசுங்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த அ.தி.மு.க. ஆட்சியிலே, 533 கோடி ரூபாய்க்கு cumulative loss. அந்தக் கடனுக்கான வட்டியின் மூலமே, 2000 கோடி வந்திருக்கும். அவர்களே வெள்ளை அறிக்கையிலே சொல்லியிருக்கிறார்கள். போக்குவரத்துத் துறையிலே ஏற்பட்டிருக்கிற நட்டங்களுக்குக் காரணம் என்ன என்பதை வெள்ளை அறிக்கையிலேயே சொல்லியிருக்கிறார்கள். அதிலே கொடுக்கப்பட்ட settlement, ஊழியர்களுக்கான உயர்வுகள், அவைகளின் மூலமாக ஏற்பட்டிருக்கிற செலவுகள் என்று. போக்குவரத்துக் கட்டணம் மற்ற மாநிலங்களைவிட இங்கே குறைவாக இருக்கிறது காண்பித்திருக்கிறார்கள். அவைகளின் மூலமாக ஏற்பட்ட இழப்புத்தானே தவிர, நிர்வாகத் திறமையின்மையினால் மட்டுமே ஏற்பட்ட இழப்பு அல்ல. போக்குவரத்துக் கழகங்களைப் பொறுத்தவரையில், அதிலே வசூலிக்கப்படுகிற கட்டணங்கள்தான் அவற்றினுடைய நிலைமையை



நிர்ணயிக்கிறது. வேண்டுமானால், அந்தக் கட்டணத்தை உயர்த்தாமலேயே இவர்கள் அதைச் சரி செய்வார்கள் என்று சொன்னால், நிச்சயமாக இவர்களுடைய நிர்வாகத் திறமையை நான் ஏற்றுக்கொள்கிறேன். பேருந்துக் கட்டணத்தை உயர்த்தாமல், இப்போது -- அவர்கள் ஒன்றும் பழைய கடனைச் செலுத்துவதன் மூலம் loss பண்ண வேண்டாம் – இருப்பதை வைத்துக் கடன் வராமல் பார்த்துக் கொண்டாலேகூட இவர்களுடைய நிர்வாகத் திறமையைப் பாராட்டுவதற்கு நான் தயாராக இருக்கிறேன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, ஒரேயொரு நிமிஷம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாக்குப் போக்குகள் சொல்லி, நிர்வாகத் திறமையின்மையை மூடி மறைக்க முடியாது. நாங்கள் ஆட்சியில் இருந்தபோதுகூட, மற்ற மாநிலங்களைவிட இங்கே bus கட்டணம், பேருந்துக் கட்டணம் குறைவாகத்தான் இருந்தது. ஆனால், அப்போதிருந்த cumulative loss-ஐப் பார்த்தால், 1991–92–ல் 186 கோடி ரூபாய்; 1992–93–ல் 236 கோடி ரூபாய்; 1993–94–ல் 284 கோடி ரூபாய்; 1994–95–ல் 326 கோடி ரூபாய்; 1995–96–ல் 533 கோடி ரூபாய். ஆக, நாங்கள் ஆட்சி செய்த காலத்தில் பதவியேற்றபோது இருந்த cumulative loss 186 கோடி ரூபாய். நாங்கள் பதவியை விட்டு இறங்கும்போது, அது 533 கோடி ரூபாயாக இருந்தது. ஆனால், தி.மு.க. ஆட்சிக்கு வந்த பிறகு, அவர்கள் பதவியேற்றபோது இருந்த cumulative loss 533 கோடி ரூபாய்; அவர்கள் பதவியை விட்டு இறங்கும்போது 2,035 கோடி ரூபாய் ஆக உயர்ந்திருக்கிறது. அதிகரித்திருக்கிறது என்று சொன்னால், அதற்கு அவர்களுடைய நிர்வாகத் திறமையின்மைதான் காரணம் என்று கூறுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 183 கோடியிலிருந்து 533 கோடி என்பது எத்தனை percentage? அதுமட்டுமல்ல, 1991–லேயிருந்து 1994 வரையிலேயும் cash loss என்பதே கிடையாது. Cash loss ஆரம்பித்தது 1995–96–லேதான், 75 கோடி ரூபாய். 1991–94 வரையிலும் ரொம்பத் திறமையாக நிர்வாகம் பண்ணீர்கள் என்றால், ஏன் cash loss 1995–96–லே வந்தது? 4 ஆண்டு காலம் loss இல்லை. ஆனால், 1995–96–லே 75 கோடி ரூபாய் cash loss. அப்போது அவர்கள் ஆட்சியிலேயே, 183 கோடியிலிருந்து கிட்டத்தட்ட 400 சதவீதம்

உயர்ந்து 580 கோடி வந்திருக்கிறது. Percentage-படி போட்டுப் பார்த்தீர்கள் என்றால், 580 கோடியிலிருந்து 2,000 கோடி என்பது அதே 400 சதவீதம்தான். ஆக, விலைவாசி ஏற்றங்கள் அதுவும் குறிப்பாக, பேருந்துக் கட்டணம் மற்ற மாநிலங்களைவிடக் குறைவாக இருப்பது; (குறுக்கீடு) நான்தான் சொல்கிறேனே, சரி நிர்வாகத்தை நீங்கள் சிறப்பாக நடத்துங்கள். பேருந்துக் கட்டணத்தை உயர்த்தாமல் நிர்வாகத்திலே கடன் வராமல் போக்குவரத்துத் துறையை நீங்கள் நடத்துவீர்கள் என்று சொன்னால், உண்மையிலேயே எங்களிடம் நிர்வாகத் திறமை இல்லை என்பதை ஏற்றுக்கொள்வோம்.

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இறுதி உரையிலே இதற்கெல்லாம் விளக்கம் தரலாம் என்று இருக்கிறேன். (குறுக்கீடு) இருப்பினும், இப்போது ஒன்றைக் கூற விரும்புகிறேன். மூன்று முறை போக்குவரத்துக் கழகங்களுக்குக் கட்டண உயர்வு ஏற்பட்டது. Diesel விலை உயர்வும் ஏற்பட்டது. ஆனால், diesel விலை உயர்வோடு கட்டண உயர்வை ஒப்பிட்டுப் பார்க்கின்றபோது, முறைகேடுகளும், சீர்கேடுகளும் நடந்த காரணத்தினால், இந்த இழப்பு இவ்வளவு அதிகமாக 2,000 கோடிக்கு மேல் ஏற்பட்டுவிட்டது என்பதுதான் உண்மை. அதை நாங்கள், வெள்ளை அறிக்கையிலேயே தெளிவு படுத்தியிருக்கிறோம். போக்குவரத்து நிறுவனங்களில் பற்றாக்குறை மேலும் அதிகரித்தது, பொருட்கள் வாங்குவதிலேயும், அனைத்து நிர்வாக நடைமுறைகளிலும் போதிய சிக்கன அணுகுமுறைகள் மேற்கொள்ளப் படாததாலும், அதனையொட்டி ஏற்பட்ட பொருட்கள் மற்றும் துணை பாகங்களின் கொள்முதல் விலை அதிகரித்ததாலும் இந்த இழப்பு ஏற்பட்டது என்று சொல்லியிருக்கின்றோம். அதைத்தான் நேற்றுகூட நான் அவையிலே சொன்னேன். G.O.75 என்று ஒரு G.O.-வைப்போட்டு, தமிழகத்திலேயே இருக்கின்ற தொழிற்சாலைகளிலேயிருந்து உதிரிப் பாகங்களை வாங்காமல், பிற மாநிலங்களிலிருந்து அதிக விலை கொடுத்து, தரம் கெட்ட பொருட்களை வாங்கியதால், நிர்வாகச் செலவு அதிகமாகி நட்டம் அதிகமாக ஏற்பட்டது என்பதுதான் உண்மை.

**டாக்டர் க. பொன்முடி:** தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** போதும், திரு. துரைமுருகன், நீங்கள் பேசுங்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** குறை சொல்கிறார்கள். அதற்குப் பதில்...



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, போதும். இது லாவணிக் கச்சேரி இல்லை. (குறுக்கீடு) நீங்கள் தொடர்ந்து லாவணி நடத்திக் கொண்டிருந்தீர்கள் என்றால், அவையை நடத்த முடியாது. திரு. துரைமுருகன், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) இல்லை, பொன்முடி, உட்காருங்கள். உங்கள் கேள்விகள் எல்லாவற்றுக்கும் இறுதி உரையிலே பதில் சொல்வார்கள். திரு. துரைமுருகன், பேசுங்கள். (குறுக்கீடு) இறுதியாகப் பதில் சொல்கிறபோது, எல்லாவற்றுக்கும் பதில் சொல்வார்கள். துரைமுருகன், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) பொன்முடி, நீங்கள் உட்காருங்கள்.

**திரு. துரைமுருகன்:** தலைவர் அவர்களே, இப்போது நான் பேசுகிறேனா? (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, உங்களுக்குக் கொடுத்த வாய்ப்பு முடிந்துவிட்டது, உட்காருங்கள்.

**திரு. துரைமுருகன்:** நேரம் முடிந்துவிட்டதா? எனக்கா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, உங்களுக்கு இன்னும் இரண்டு நிமிடங்கள் இருக்கின்றன. (சிரிப்பு) நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) திரு. துரைமுருகன், நீங்கள் பேசுங்கள்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு ஒன்றைச் சொல்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் மற்ற அமைச்சர்களும் உறுப்பினர்கள் பேசுவதிலே குறுக்கிடுவதிலே தவறில்லை. ஆனால், அவர்களுக்கு பதில் சொல்வதற்கு நிறைய வாய்ப்பு உண்டு. ஒருநாள் மாண்புமிகு முதலமைச்சர் பேசிக் கொண்டிருந்தார். நான்கூட Krishna Water பற்றிக் கேட்க எழுந்தேன். 'நான் பேசி முடித்த பிறகு துரைமுருகன் பேசலாம்' என்று சொன்னார். அதுதான் நியாயம் என்று உட்கார்ந்தேன். ஆனால், உறுப்பினர்கள் முதலமைச்சர் பேசுவதிலே குறுக்கிடுவதைவிட அவருக்குத்தான் அதிகமான உரிமை உண்டு. ஆனால், முதலமைச்சர் நன்றாகவும் பேசுகிறார், எல்லாம் Point, point-ஆகச் சொல்கிறார்.

*முற்பகல் 11–25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் நிதிநிலை அறிக்கைக்கு வாருங்கள்.

**திரு. துரைமுருகன்:** ஆகையினாலே, நான் என்ன சொல்கிறேன் என்று கேட்டீர்கள் என்றால், (குறுக்கீடு) அதனாலே நான் என்ன சொல்கிறேன் என்று கேட்டீர்கள் என்றால் *(மேசையைத் தட்டும் ஒலி) (சிரிப்பு)* அதிலேபோய் என்ன இருக்கிறது? Correct-ஆகப் பேசுகிறார் என்று சொல்வது தப்பா? அப்பொழுது தப்பாகச் சொன்னால், தப்பு என்று சொல்ல வேண்டும். ஆகையினாலே, நான் பேசி முடித்ததற்குப் பிறகு, மாண்புமிகு அமைச்சர் பதில் சொல்லுங்கள். அது right. அடுத்த விஷயத்திற்கு நான் போகிறேன். ஆகையினாலே, இந்த மாநிலம் முன்னேறிய மாநிலமாக இருந்தது என்பதற்காகத்தான் வெள்ளை அறிக்கையிலே நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள், 11–ஆம் நிதிக் குழு, தமிழ்நாட்டிற்காக மத்திய வரிகளின் பங்கினை, 6.637 சதவீதத்திலிருந்து 5.38 சதவீதமாகக் குறைக்க பரிந்துரை செய்திருக்கிறது. இதன் விளைவாக, மாநில அரசு 2000–2005 ஆம் ஆண்டுகளில் ரூ. 2,794 கோடியை இழக்க வேண்டிவரும். நிதி ஆதாரங்களைப் பெருக்குவதற்காகப் புதிய வழிமுறைகளைக் கண்டறிவதில், தமிழ்நாடு போன்ற சிறப்பாகச் செயல்படும் மாநிலங்களுக்கு அதிக நிதி ஆதாரங்களைப் பிரித்துக் கொடுக்க, மத்திய அரசு காட்டிவரும் தயக்கம் தடையாக உள்ளது என்று, சிறப்பாகச் செயல்படும் தமிழ்நாடு மாநிலம் என்று நம்முடைய நிதியமைச்சர் அவர்களே ஒரு certificate கொடுத்துவிட்டு (குறுக்கீடு) இப்பொழுதுதானே சொன்னேன் எழுந்திருக்க வேண்டாம் என்று. (குறுக்கீடு) ஐயோ, இராமச்சந்திரா!.. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நிதியமைச்சர் அவர்களே, வேறு ஒன்றும் இல்லை. அவ்வப்போது அவரை வளர்த்த தலைவருடைய பெயர் ஞாபகத்திற்கு வரும்; ஆகவே, அதைச் சொல்கிறார். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியத் துணைக்கண்டத்திலே, தமிழகம், மராட்டிய மாநிலம், குஜராத் மாநிலம் ஆகிய மாநிலங்கள், ஒட்டுமொத்தமாக முன்னிலையில் இருப்பது நாடறிந்த உண்மை. ஆனால், 1991–லிருந்து 1996 வரை தமிழகம் எந்த அளவிற்கு ஒரு முன்னேறிய நிலையில் இருந்ததோ, அந்த நிலையிலிருந்து 1996–லிருந்து 2000 வரை பின்தங்கி விட்டது; பின் தள்ளப்பட்டுவிட்டது என்பதுதான் உண்மை. அதை நான் இறுதி உரையிலே விளக்கிக் கூறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துரைமுருகன், உங்களுக்கு இன்னும் எவ்வளவு நேரம் வேண்டும்?



**திரு. துரைமுருகன்:** நான் பேசவே இல்லை Sir.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இவ்வளவு நேரம் பேசினீர்களே?

**திரு. துரைமுருகன்:** இப்போதுதான் கடவுள் வாழ்த்தைப் பாடியிருக்கிறேன். அதற்குள்ளே, உங்கள் சபைக்கு சலாம் சொல்வதற்கே இவ்வளவு நேரம் ஆகிவிட்டது.

மூன்றாவதாக இன்னொன்று. அதிக செலவு தருகிறோம் revenue receipt-லே என்று சொல்ல வேண்டும் என்றால், உதாரணத்திற்கு ஒன்று சொல்கிறேன். கல்வியை மட்டும் சொல்கிறேன். நீங்கள் ஆட்சியிலே இருந்தபோது நியமிக்கப்பட்ட இடைநிலை ஆசிரியர்கள் 8,450 பேர். நாங்கள் 5 ஆண்டு காலத்திலே நியமித்தவர்கள் 41,877 பேர். முதுநிலை பட்டதாரி ஆசிரியர்கள், உங்களுடைய ஆட்சிக் காலத்திலே நியமனம் செய்யப்பட்டவர்கள் 843 பேர். ஆனால், கலைஞருடைய காலத்திலே நியமனம் செய்யப்பட்டவர்கள், 2,916 பேர். பட்டதாரி ஆசிரியர்கள் நாங்கள் ஆட்சிக்கு வருவதற்கு முன்னால் உங்கள் ஆட்சியிலே 838 பேர்தான் நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்கள். கலைஞருடைய காலத்திலே, 4,046 பேர் நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்கள். சிறப்பு ஆசிரியர்கள் உங்களுடைய ஆட்சிக் காலத்திலே ஒருவரும் நியமிக்கப்படவில்லை. ஆனால், கலைஞர் ஆட்சிக் காலத்திலே, 2,270 பேர் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். தொகுப்பு வீடுகள் உங்களுடைய ஆட்சியிலே.... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கல்வித் துறை அமைச்சர் அவர்களே. நிதியமைச்சர் அவர்கள் கடைசியாகப் பதில் சொல்லட்டும். இப்போது விட்டுவிடுங்கள். இல்லையென்றால், இதைக் காரணமாகக் காட்டி நேரத்தை அதிகமாகக் கேட்பார். (குறுக்கீடு)

***மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** உறுப்பினர், மானியத்திலே பேசியிருந்தால் விட்டு இருக்கலாம். இருந்தாலும்கூட, ஆசிரியர் நியமனத்தைப் பற்றி ரொம்ப விளக்கமாகச் சொல்லியிருக்கிறார்கள். நான் அதற்கு விளக்கம் தரவேண்டும் இல்லையா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கல்வி மானியத்திலே அதைப் பார்த்துக்கொள்ளலாம். (குறுக்கீடு)

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு துரைமுருகன் அவர்கள் பேசும்போது, அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே பட்டியலிட்டு எவ்வாறு எல்லாம் ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டார்கள்

என்றார். ஆனால், 1991-96-லே அவ்வாறு நியமிக்கவில்லை என்று சொல்லியிருக்கின்றார். அதை நான் மறுக்கவில்லை. ஏற்றுக்கொள்கிறேன். ஆனால், எந்தச் சூழ்நிலையில் அவ்வாறு நடைபெற்றது என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். 1991-96-லே ஆசிரியர்கள் நியமனம் ஆரம்பித்தபோது, அப்போது சிலர் court-க்குச் சென்று stay வாங்கிவிட்டார்கள். உடனடியாக அந்த நியமனம் செய்வதற்கு stay வாங்கியிருக்கிறார்கள். (குறுக்கீடு) அதற்கு records இருக்கிறது. நான் சொல்கிறேன், இருங்கள். நான் சொல்லிவிட்ட பிறகு, சொல்லுங்கள். அதனாலேதான், அந்தச் சூழ்நிலை ஏற்பட்டது. இது ஒன்று. இரண்டாவது, 1996-க்குப் பிற்பட்ட பகுதியில் அவர் சொன்னதுபோல, 48,000-க்கு மேற்பட்ட ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டார்கள் என்றால், அதற்குப் பணம், நிதிநிலை அந்த நேரத்திலே Black Board Operation திட்டத்தில் அதிகமாக மத்திய அரசால் தரப்பட்டது. அதையும் பயன்படுத்தியதன் காரணமாக, அதிகமான ஆசிரியர்களை நியமித்தார்கள். ஆனால், இந்த ஆண்டு, இப்போது ஆட்சிப் பொறுப்பேற்ற 3 மாதத்திற்குள்ளாகவே, நாங்கள் ஏறக்குறைய 10,000-க்கும் அதிகமான ஆசிரியர்களை நியமிக்க இருக்கிறோம். அதில், இப்போது 4,000 ஆசிரியர்களை நியமனம் செய்தாகிவிட்டது. ஆகவே, அந்தப் புள்ளிவிவரங்களோடு இந்த ஆண்டு புள்ளிவிவரங்களையும் பாருங்கள், அதிகமாகவே இருக்கும்.

*முற்பகல் 11-30*

**திரு. துரைமுருகன்:** அதேமாதிரி தொகுப்பு வீடுகள். நீங்கள் ஆட்சியில் இருந்த காலத்திலே கட்டப்பட்டது 1,20,700. கலைஞர் காலத்திலே கட்டப்பட்டது 2,96,113.

*(திரு. துரைமுருகன் தன்னுடைய இருக்கையில் அமர்ந்து கொண்டார்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன், பேசுங்கள்.

**திரு. துரைமுருகன்:** அந்த மந்திரி இப்போது எழுந்துகொள்வாரே. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன், பேசுங்கள். (குறுக்கீடு) இது என்ன நகைச்சுவை நேரமா? நீங்கள் பேசுங்கள்.

**திரு. துரைமுருகன்:** என்ன சார் பண்ணுவது? நகைச்சுவை நேரமா என்கிறீர்கள். ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு மந்திரி பதில் சொல்கிறார்கள்.



**திரு. பி.ஆர். சுந்தரம்:** அவர் என்ன ஜோக் அடிக்கிறாரா? எங்களுக்கும் ஜோக் அடிக்கத் தெரியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம், உட்காருங்கள்.

**திரு. துரைமுருகன்:** ஜோக் அல்ல. This is the attitude of the House, attitude of the Treasury Bench. (Interruption) Please ask him to sit down. (குறுக்கீடு) சரி சுந்தரம், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துரைமுருகனுடைய இயல்பு எனக்குத் தெரியும்; கல்லூரி காலத்திலிருந்து தெரியும். அவருடைய பேச்சுப் பாணியே அதுதான்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** அவர் ஜோக் அடிக்கிற மாதிரி...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சுந்தரம், நீங்கள் உட்காருங்கள்.

**திரு. துரைமுருகன்:** இல்லை, இல்லை, ஒவ்வொரு அமைச்சரும் எழுந்துகொள்கிறார்கள் என்று நான் சொன்னேன். அதுமாதிரி செய்தேன். (குறுக்கீடு) I don't want to make a quarrel with him. (குறுக்கீடு)

அதுமட்டுமல்லாமல், வருவாய்க் கணக்கில் பற்றாக்குறை அதிகமாக இருந்தது என்பதற்குக் காரணம் கடந்த 5 ஆண்டுகளில் வருவாய்க் கணக்கில் பற்றாக்குறை கட்டுப்பாடில்லாமல் வளர்ந்ததற்குக் காரணம், அரசின் நடப்புச் செலவு மிக அதிகமாக உயர்ந்ததுதான் என்பதையும் நம்முடைய அமைச்சர் அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். அது எப்படி உயர்ந்தது என்பது குறித்து வெள்ளை அறிக்கையிலே நம்முடைய நிதியமைச்சர் சொல்கிறார்:

"மைய அரசின் ஐந்தாவது ஊதியக் குழு பரிந்துரைகளை நிறைவேற்றியதன் விளைவாக கடந்த மூன்றாண்டுகளில் சம்பளங்கள், படிகள், ஓய்வூதியங்கள் குறித்த செலவு மிக விரைவாக உயர்ந்துள்ளது.

பணியாளர்களுக்கும், ஓய்வூதியதாரர்களுக்கும் பொங்கல் பரிசு வழங்கியதாலும், மத்திய அரசுப் பணியாளர்களுக்கு அகவிலைப்படி திருத்தியமைக்கப்பட்டதற்கு இணையாக தொடர்ந்து அகவிலைப்படியை உயர்த்தி வழங்கி வந்ததாலும், ஊதிய வகையில் மாநில அரசின் மொத்தச் செலவு அதிகரித்திருக்கிறது.

1984-ல் ரூபாய் 67 கோடியாக இருந்த ஓய்வூதியச் செலவு, 2000-2001-ல் சுமார் ரூபாய் [illegible]2 கோடியாக அளவு கடந்து உயர்ந்துள்ளது.

223438
சென்னை-600 008

இவ்வகையிலான செலவு, கடந்த ஐந்தாண்டுகளில் ஆண்டொன்றுக்கு சராசரியாக 30 சதவீதம் என்ற கற்பனைக்கு எட்டாத அளவில் அதிகரித்துள்ளது."

ஆகையினாலேதான் Revenue receipt-லே அதிகமான பற்றாக்குறை. செலவுகளை அதிகமாகச் செய்யலாம். நம்முடைய நிதியமைச்சர் அவர்களே கேட்கலாம். சரி, இவ்வளவு இருக்கிறதே, நீங்கள் ஏன் வருவாயைப் பெருக்கவில்லை என்று கேட்கலாம். நம் ஊரில் வருவாயைப் பெருக்க முடியாது. இந்தக் கஷ்டம் உங்களுக்கு இனிமேல்தான் தெரியும். ஏனென்று கேட்டால், வீட்டு மின்சாரக் கட்டணம், ஏற்றக் கூடாது; பேருந்துக் கட்டணம், ஏற்றக் கூடாது; வரி போடக் கூடாது. எதைப் போட்டாலும் அதற்கொரு போராட்டம் வந்துவிடும். நீங்கள் இனிமேல்தான் அதை அனுபவிப்பீர்கள். ஏனென்றால், நாங்கள் பேருந்துக் கட்டணத்தை ஏற்றிவிட்டோம். இங்கே மிகப் பெரிய புரட்சி வெடித்தது. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் பொன்முடி அவர்கள் சொன்னதைப்போல, தமிழகத்திலேதான் குறைவான பேருந்துக் கட்டணம். ஒரு கிலோமீட்டருக்கு மராட்டிய மாநிலத்திலே 42 காசுகள்; பஞ்சாப் மாநிலத்திலே 40 காசுகள்; ஆந்திராவிலே 32 காசுகள்; இராஜஸ்தானிலே 32 காசுகள்; கேரளாவிலே 28 காசுகள்; ஒரிஸாவிலே 26 காசுகள்; கர்நாடக மாநிலத்திலே 25.75 காசுகள்; தமிழ்நாட்டிலே 22 காசுகள். ஆகையினாலே எந்தவிதமான வரியையும் அதற்கு மேலே ஏற்ற முடியாத சூழ்நிலை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேருந்துக் கட்டணத்தை உயர்த்த பரிந்துரை செய்கிறீர்களா?

**திரு. துரைமுருகன்:** இல்லை, இல்லை. ஏன் வருவாயைப் பெருக்க முடியவில்லை என்று கேட்டால், இந்த நிலைமைகளை வைத்துக்கொண்டு, இருப்பதை வைத்துக்கொண்டு நாம் செய்ய வேண்டிய நிலை வந்த காரணத்தால்தான், அதிகமான வருவாயை செலவுக்கேற்ற வகையிலே வேகமாக ஈட்ட முடியவில்லை என்பதற்காகத்தான் சொல்கிறேன்.

இன்னொன்று. இங்கே நம்முடைய வேலு அவர்கள் பேசுகிறபோது ஒன்றைக் கேட்டார்கள். பெரியார் அவர்கள், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமானாலும், திராவிட முன்னேற்றக் கழகமானாலும் எல்லோருக்கும் தந்தை. அந்தப் பெரியாருடைய பெயரில் சமத்துவபுரங்கள் கட்டப்பட்டன. அந்தச் சமத்துவபுரங்கள் குறித்து நிதிநிலை அறிக்கையிலே ஒன்றும் சொல்லவில்லையே என்று சொல்லி, ஏன் என்று கேட்டார். உடனே, முதலமைச்சர் அவர்கள் எழுந்து, அவைபற்றி Budget-லே சொல்ல முடியாது. அவையெல்லாம் நடைமுறையில் இருப்பவை; எல்லாவற்றையும் நிதிநிலை அறிக்கையிலே சொல்ல முடியாது என்று சொன்னார்கள்.



ஒரு பத்திரிகையில் எழுதினார்கள். "These are on-going projects and hence they have not been figured in the Budget. But that does not mean that they have been buried." நாங்கள், on-going projects என்ற காரணத்தால், Budget-லே குறிப்பிடவில்லையே தவிர, அவையெல்லாம் கைவிடப்படவில்லை என்று சொன்னார்கள். ஆனால், நிலைமை என்னவென்று கேட்டால், Performance Budget–லே நம்முடைய பெரியாருடைய சமத்துவபுரத்திற்குப் பணம் ஒதுக்கப்பட்டுள்ளதா என்று பார்த்தால் – இதிலே நான் படித்துப் பார்த்தேன். நம்முடைய நிதி அமைச்சர் அவர்களுக்குத் தெரிவிக்கிறேன், சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஒதுக்கியிருக்கிறீர்கள்; அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்திற்கு ஒதுக்கியிருக்கிறீர்கள். ஆனால், சமத்துவபுரத்திற்கு ஒரு ரூபாய்கூட ஒதுக்கவில்லை. பூஜ்யம், பூஜ்யம் என்று போட்டிருக்கிறீர்கள். ஆனால், முதலமைச்சர் அவர்கள் இங்கே என்ன சொன்னார்கள்? That does not mean it is buried — நாங்கள் அதைக் கைவிடவில்லை; புதைத்துவிடவில்லை என்று சொன்னார்கள். ஆனால், நிதிநிலை, Performance Budget-லே இல்லையே பணம்?

*முற்பகல் 11-35*

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூறியது சமத்துவபுரத்திற்கு மட்டுமல்ல; தி.மு.க. ஆட்சிக் காலத்தில் நடைமுறையில் இருந்த திட்டங்கள் கைவிடப்பட்டனவா என்ற பொருளோடு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசினார்கள். அதற்கு, those schemes are not given up; they are on-going schemes என்ற பொருளோடுதான் மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொன்னார்கள்.

**திரு. துரைமுருகன்:** குறிப்பாகவும், சிறப்பாகவும் அவர் பெயரைச் சொல்லிச் சொன்னார். ஐயா அவர்களுடைய பெயரை, பெரியார் அவர்களுடைய பெயரிலே உள்ள சமத்துவபுரம் என்று சொன்னார். அதற்குத்தான் முதலமைச்சர் அவர்கள் எழுந்து சொன்னார். நீங்கள் வேண்டுமானால் Proceedings-ஐ எடுத்துப் பாருங்கள். (குறுக்கீடு) அதனால்தான் இதைப்பற்றி எழுதி வைத்திருக்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துரைமுருகன் பேசி முடிக்கட்டும்.

**திரு. துரைமுருகன்:** அதேமாதிரி Budget-லே பார்த்தால், பலவற்றில் திட்டங்களைச் சொல்லுகிறபோது அற்புதமாகச் சொல்லியிருக்கிறார்கள். எனக்கு மகிழ்ச்சிதான். அது ஒன்றும் பெரிது கிடையாது. வீராணம் திட்டம், இரண்டு ஆண்டுகளுக்குள் செயல்படுத்தப்படும் என்று நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். இத்திட்டத்திற்கான நிதியின் ஒரு பகுதியை மாநில அரசும், எஞ்சிய பகுதியை தேசிய நிதி உதவி நிறுவனங்களும் ஏற்கும் என்று சொல்லியிருக்கிறீர்கள். Right. ஆனால், மாநில அரசு பணம் போடப்போகிறது. இரண்டு ஆண்டுகளில் செயல்படுத்த வேண்டுமென்று சொன்னால், இப்போதிருந்து ஆரம்பிக்க வேண்டும். இப்போதிருந்து ஆரம்பிக்க வேண்டுமென்றால், நிதி ஒதுக்கி இருக்க வேண்டும். ஆனால், Performance Budget-ல் பணம் ஒதுக்கவில்லை. இப்போது பணம் ஒதுக்காமல் நீங்கள் எப்போது பணம் ஒதுக்கப் போகிறீர்கள்? Atleast ஒரு token-ஆகக் கூட ஒதுக்கியிருக்கலாம். ஒதுக்கவில்லை. அப்படியென்றால், 699 கோடி என்றால், இதற்கெல்லாம் பணம் சேர்த்தால், இன்னும் Budget-ல் deficit ஏறிக்கொண்டே இருக்கும். ஆனால், நீங்கள் புத்திசாலித்தனமாக இதையெல்லாம் காட்டவில்லை. இன்னும் deficit அதிகமாகும் என்று மிகவும் கெட்டிக்காரத்தனமாக ஒன்றைச் செய்துள்ளார் நம்முடைய நிதியமைச்சர். யார், யார் தங்கப் பதக்கம் வாங்குகிறார்களோ, அவர்களுக்குப் பணம் என்று சொல்லிவிட்டார். வாங்க முடியாது என்று ஒன்று உண்டு பாருங்கள், அதற்கு ஒரு கோடி ஒதுக்கீடு செய்துவிட்டார். எது நடக்காதோ அதற்குச் சொல்லிவிட்டார். அது மாதிரிதான். வீராணம் திட்டத்திற்குப் பணத்தை ஒதுக்கவில்லை.

மூன்றாவதாக, கொசஸ்தலையாறு, திருக்கண்டலம், ஜமீன்கொரட்டூர், திருநீர்மலை, பள்ளிக்கரணை ஆகிய இடங்களில் நீர்த்தேக்கங்கள் கட்டுவது. இந்த நீர்த்தேக்கங்கள் கட்டுவதற்காக நீங்கள் பணத்தை ஒதுக்கியிருக்கிறீர்களா என்று பார்த்தால் – இதிலே நான் பார்த்தேன் – அதற்குப் பணம் ஒதுக்கப்படவில்லை. இங்கே இருக்கிறது. நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பாலாற்றிலே நாங்கள் வயலூர் causeway regulator கட்டப்போகிறோம் என்று சொன்னார்கள். அதற்காக 77 கோடி ரூபாய்க்கு estimate போட்டிருக்கிறீர்கள். ஆனால், ஒரு ரூபாய்தான் ஒதுக்கியிருக்கிறீர்கள். ஒரு ரூபாய் token-ஆக ஒதுக்கியிருப்பதை நாம் தெரிந்துகொள்ள வேண்டும். ஆனால், 77 கோடி ரூபாய்க்கு என்ன செய்யப் போகிறீர்கள்? அதேமாதிரி Reservoir across Cooum Zamin -



22 crores of Rupees; அதேமாதிரி Pallikkaranai Swamp - 55 crores of Rupees. ஆனால், இதற்கெல்லாம் estimate காண்பித்துவிட்டு, ஒரு ரூபாய் token-ஆகக் காண்பித்து இருக்கிறீர்கள். ஆகவே, போய்விடுமா? அல்லது fulfil ஆகுமா என்பதுதான் என்னுடைய கவலை. ஏனென்றால், token என்பதோடு விட்டுவிடுவார்கள், எனக்குத் தெரியும். 1991–ல் நாவலர், நிதியமைச்சராக இருந்து இங்கே ஒரு Budget படித்தார். இங்கே, நம்முடைய உறுப்பினர் பாலகிருஷ்ணன் அவர்களுடைய தொகுதியிலே மலட்டாறு என்று ஒரு ஆறு இருக்கிறது. அந்த மலட்டாறுக்கு token-ஆக ஒரு ரூபாய் ஒதுக்கினார்கள். கடைசியில் நாங்கள் ஆட்சிக்கு வந்து 1996–ல் பார்க்கிறேன். அந்த மலட்டாறுக்கு ஒரு ரூபாய் ஒதுக்கியது ஒரு ரூபாயாகவே இருந்தது. பெயரே மலட்டாறு என்பதால் விட்டுவிட்டார்கள். அதற்குப் பிறகு, 16 கோடி ரூபாயை ஒதுக்கி, அந்தத் திட்டத்தைக் கொண்டு வந்து சேர்த்திருக்கிறோம். ஆகையினாலே, அந்த நிலைமையைப் பார்க்கிறபோது--

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் 28 பேர் பேசவேண்டும். இன்னும் 5 மணித்துளிகளில் உங்கள் உரையை முடித்துக்கொள்ளுங்கள். கொஞ்சம் உதவி செய்யுங்கள்.

**திரு. துரைமுருகன்:** நீங்கள் இப்போது உட்காரச் சொன்னாலும் உட்கார்ந்து விடுகிறேன். சபாநாயகர் என்ன சொல்கிறாரோ அதைத்தான் நான் செய்கிறேன். எனக்குப் பிரச்சினை ஒன்றும் கிடையாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் 5 மணித்துளிகள், உங்களுக்குப் பெருந்தன்மையோடு தருகிறேன்.

*முற்பகல் 11-40*

**திரு. துரைமுருகன்:** அடுத்து, இன்னொரு திட்டம். மிகவும் technical-ஆகப் போட்டிருக்கிறார்கள். M.L.A.-க்களுக்கு fund ஒதுக்கியிருக்கிறார்கள். M.L.A.-க்களுக்கு, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்திற்காக 2001–2002–ல் திருத்திய மதிப்பீட்டிலே, 181 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்க, தற்போது 193 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. Right. அதற்குப் பிறகு, memorandum-லே எழுதுகிறார்கள். ஏனைய ஒதுக்கீடுகளில் அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட 75 கோடி ரூபாய, தன்னிறைவுத் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட 40 கோடி ரூபாய், ஊரக துப்புரவுப் பணியாளர்களுக்கு ஒதுக்கப்பட்ட 19 கோடி ரூபாய், வேலைவாய்ப்புத்

திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட 39 கோடி ரூபாய், ஜவஉறர் வளர்ச்சித் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட 26 கோடி ரூபாய் ஆகியவையும் இதில் அடங்கும். ஆக, இந்த 193 கோடி ரூபாயிலே, இவை எல்லாம் அடங்கும். இந்தக் கையிலே கொடுத்துவிட்டு, இந்தக் கையிலே எடுத்துக் கொண்டீர்கள். M.L.A.-க்களுக்கு ஒன்றும் இல்லை. நாவலர்தான்,

"சீனி சர்க்கரை சித்தப்பா,
சீட்டிலே எழுதி நக்கப்பா"

என்று அடிக்கடி சொல்வார்.

அதோடு மட்டுமல்ல, ஊரகப் பகுதிகளில் மகளிருக்காக கழிப்பறைகள் கட்டும் புதிய திட்டத்திற்காக ரூபாய் 50 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இத்துடன் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்திலிருந்து ரூ. 42 கோடி இப்பணிக்கு எடுத்துக்கொள்ளப்படும். அதுவும் போய்விட்டது. அடுத்து பாருங்கள், கிராம நிர்வாக அலுவலர்களுக்காக, அந்தந்த ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களில், அலுவலகக் கட்டடம் கட்டிக் கொடுக்கும் புதிய திட்டத்திற்காக, தனியே ரூ. 12 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இத்துடன் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்திலிருந்து மேலும் 12 கோடி ரூபாய் ஒதுக்கப்படும். ஆக... (குறுக்கீடு)

***மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) முக்கியமான Point பேசுகிறார். (குறுக்கீடு)

**திரு. துரைமுருகன்:** நிதியமைச்சர் கடைசியாகச் சொல்கிறேன் என்று சொல்லியிருக்கிறார் இல்லையா?... (குறுக்கீடு)

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** நிதியமைச்சர் சொல்கிறார் என்று இல்லை. எல்லா அமைச்சர்களும் கூட்டாகச் சேர்ந்துதானே சொல்ல வேண்டியிருக்கிறது. அப்படி நிதியமைச்சர் மட்டும் சொல்ல வேண்டியதாக இருந்தால்...

**திரு. துரைமுருகன்:** நீங்கள் பேசுவதால் எனக்கு ஒன்றும் ஆட்சேபணை இல்லை.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசிக்கொண்டே இருக்க முடியாது. ஓரிரு நிமிடங்களில் உரையை முடித்து விடுங்கள்.



**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. அவருக்கு ஒதுக்கப்பட்ட 5 நிமிடத்தை அப்படியே வைத்துக்கொள்ளுங்கள். அது அவருக்கு இருக்கட்டும். அதிலிருந்து நான் எடுத்துக்கொள்ளவில்லை. சட்டமன்ற உறுப்பினர்களுக்கு பணம் ஒதுக்கப்படுவதைப் பற்றிச் சொல்லியிருக்கிறார். இந்தத் திட்டங்கள் நல்ல திட்டங்கள். சட்டமன்ற உறுப்பினர்களே கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், துரைமுருகன் சட்டமன்ற உறுப்பினர்; அவருக்கு 82 இலட்சம் கொடுத்தால், செலவு பண்ணுவதை யாரும் தடுக்க முடியாது. 82 இலட்சம்...(குறுக்கீடு) நான் சொல்கிறேன், கேளுங்கள் (குறுக்கீடு) நான் சொல்கிறேன், இருங்கள். 82 இலட்சம் ரூபாய் ஒரு சட்டமன்ற உறுப்பினருக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பணத்தை அவர் விருப்பப்பட்டால்தான் தர முடியுமே தவிர... (குறுக்கீடு) (கூச்சல்–குழப்பம்) அதிலிருந்து ஒரு பகுதியை எடுத்துக்கொள்ள முடியாது.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** இருங்கள், நான் விளக்கம் தருகிறேன். (குறுக்கீடு) இல்லை, இல்லை, அதையெல்லாம் செய்வதற்காக ஒரு பரிந்துரை சொல்கிறோம். பரிந்துரை சொல்கிறோமே தவிர, அது அனைவரையும் கட்டுப்படுத்தாது. (குறுக்கீடு) இந்த மாதிரியாக திட்டங்களுக்கு அதைப் பயன்படுத்திக்கொள்ளலாம் என்று ஒரு guidelines-தான். Guidelines-படி செய்யப்படும் என்றுதான் சொல்கிறோம். (குறுக்கீடு) இல்லை, இல்லை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன், பேசி முடியுங்கள்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் சொல்வது உண்மையென்றால், மாண்புமிகு கல்வி அமைச்சருக்கு நன்றி. (குறுக்கீடு)

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சுந்தரம், மாண்புமிகு அமைச்சர் நிற்கிறார், நீங்களும் நின்று கொண்டிருந்தால் என்ன அர்த்தம்?

**திரு. பி.ஆர். சுந்தரம்:** இல்லை, ஒரு பதில் சொல்ல வேண்டும். அமைச்சர் பதில் சொல்லிக் கொண்டிருக்கிறார். எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அத்தனை பேரும்...

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** திரு. சுந்தரம் அவர்களே, கொஞ்சம் இருங்கள், நான் சொல்கிறேன்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சுந்தரம், அவர்கள் பேசிக் கொண்டிருக்கும்போது, நீங்கள் பேசிக் கொண்டிருந்தால் எப்படி? நீங்கள் உட்காருங்கள். *(கூச்சல்–குழப்பம்)*

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்ல வந்தது, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து பணத்தைக் கொடுப்பதாக, ஒதுக்குவதாக திரு. துரைமுருகன் பேசிக் கொண்டிருக்கிறார். *(குறுக்கீடு)* அதில் இதைத்தான் சொல்கிறீர்கள். சட்டமன்ற உறுப்பினருக்கு ஒதுக்கப்பட்ட பணத்தை எப்படிச் செலவிடுவது என்பது குறித்து, சில guidelines இருக்கின்றன. அதிலே சில திட்டங்களை நாங்கள் சொல்கிறோம். இந்தப் பகுதிக்கு, இந்தத் திட்டத்திற்காகப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று சொல்வதற்கு ஒரு guidelines கொடுத்திருக்கிறார்கள். *(குறுக்கீடு)* இருங்கள், நான் சொல்கிறேன். அதற்காக, 82 இலட்சம் ரூபாயை நீங்கள் இப்படித்தான் செலவு செய்ய வேண்டுமென்று முடிவெடுத்தால், அதற்காக இந்த அரசு குறுக்கே நிற்காது. அந்தந்தச் சட்டமன்ற உறுப்பினருக்கு உரிமை உண்டு. அதற்குப் பணம் போதாது; அந்தப் பணத்தைப் பெறுவது எப்படி என்பதை அரசு ஆராய்ந்து, அதற்கு முயற்சி செய்யும். திட்டங்கள் குறித்து நாங்கள் guidelines கொடுத்திருந்தாலும், நீங்கள் அந்தப் பணத்தை வைத்துச் செயல்பட வேண்டிய அவசியம் கிடையாது. பணத்தைப் பெறுவதற்கு வாய்ப்புகள் இருக்கும். ஆகவே, ஏதோ M.L.A.–க்களுக்குப் பணத்தை நாங்கள் கொடுத்துவிட்டு, நாங்கள் வாங்கிக் கொண்டோம் என்று சொல்வது தவறு. அது ஒரு guidelines-தான். நீங்கள் பயன்படுத்தலாம் என்றுதான் சொல்லியிருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன், 5 மணித்துளிகளுக்குள் பேசி முடியுங்கள்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. *(குறுக்கீடு)*

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சுந்தரம், உட்காருங்கள். அவரைப் பேசி முடிக்க விடமாட்டீர்கள் போலிருக்கிறது. நீங்கள் உட்காருங்கள். அவர் பேசி முடிக்கட்டும்.



**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளக்கத்திற்கு நன்றி. இன்னொன்று, கவர்னர் உரையிலே கொடுத்திருக்கிறார்கள். *(குறுக்கீடு)*

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சுந்தரம், அவர் பேசி முடிக்கட்டும், நீங்கள் உட்காருங்கள். அவர் பேசி முடித்தவுடன் நீங்கள் கேளுங்கள். நான் உங்களைக் கூப்பிடுகிறேன்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கவர்னர் உரையிலே ஒரு கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். நிதிநிலை அறிக்கையிலேயும்... *(குறுக்கீடு)*

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியைப் பற்றிப் பேசுகின்றபோது, கிராம நிர்வாக அலுவலர்களுக்கு அலுவலகக் கட்டடங்கள் கட்டுவதற்காக உள்ள நிதியிலேயிருந்து இதற்கு நிதியை ஒதுக்கிவிட்டதாக, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதை ஒரு குறையாக எடுத்துச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இதே விஷயங்களை சென்ற ஆட்சி, தி.மு.க. ஆட்சிகாலத்திலே சட்டமன்ற உறுப்பினர்களுக்கு நிதியை ஒதுக்கீடு செய்து, ஒவ்வொரு தொகுதியிலேயும் 3, 4 இலட்சம் ரூபாய் வீதம் கணினி பாடத் திட்டத்திற்குள்ள கட்டடம் கட்ட வேண்டுமென்று நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று சுற்றறிக்கையே சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டது. அதற்கான நிதியை ஒதுக்குவதற்கான முயற்சிகளை சென்ற ஆட்சியிலே எடுத்தார்கள். ஆகவே, நிதியையும் ஒதுக்கித் தந்து, திட்டங்களையும் சொல்கிற பொறுப்பை சென்ற ஆட்சியிலேயும் சொன்னார்கள் என்பதைத்தான் இந்தச் சட்டமன்றத்திற்குச் சொல்ல விரும்புகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

*முற்பகல் 11–45*

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களுடைய விளக்கம் எனக்கு திருப்திகரமாக இருந்தது. அதை இந்த அரசு காப்பாற்ற வேண்டும். மூன்றாவதாக, நம்முடைய கவர்னர் உரையிலேயும் சரி, நிதிநிலை அறிக்கையிலேயும் சரி, ஒரு கருத்தை அழகாகச் சொல்லியிருக்கிறார்கள். நிர்வாகத்தை வேகப்படுத்த வேண்டும் என்பதற்காக 'கோப்புகளை முடிக்கும் வாரம்' என்று வைத்து, வேகப்படுத்துவோம் என்று

தெரிவித்திருக்கிறார்கள். அது நல்ல செய்திதான். ஆனால், நிலைமை என்னவென்று கேட்டால், இந்து பத்திரிகை ஒரு செய்தியை 14 ஆம் தேதி வெளியிட்டிருக்கிறது.

"The Tamil Nadu Revenue Department Employees Association has urged the Government to give early postings to I.A.S. officers and D.R.O.s who it said, have been kept on compulsory wait for more than a month.

The Association in a release here today said over 10 I.A.S. Officers and a number of D.R.O.s were not given postings. Similarly, 10 Deputy Collectors who were promoted to D.R.O. cadre in the last regime were not given postings in the new cadre as the promotion list was yet to be cleared in the Chief Minister's office. If it was not cleared before this week, the Association said , the panel would lapse. As most of these officers belonged to the Adi-Dravida Community, the Association wanted the Government to clear the file at the earliest and give suitable postings for them."

அதாவது, கோப்புகளை முடிக்கும் வாரம் என்று கவர்னர் உரையிலே படிக்கப்பெற்றதற்குப் பிறகு இந்த ஆட்சியிலே அரிசனங்களுக்கு அதிகமாக promotion இல்லாமல் தத்தளிக்கிறார்கள் என்று இங்கே இருக்கிற Revenue Association இன்றைக்கு ஓர் அறிக்கையைக் கொடுக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. இதுதான் கோப்புகளை வேகமாக முடிக்கும் வாரமா? அல்லது முறிக்கும் வாரமா என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

உங்களுக்கு நான் அதிகமாகத் தொல்லை தர விரும்பவில்லை. கடைசியாக ஒன்று. போலீஸ் இலாகாவை நவீனப்படுத்துவது என்று சொல்லியிருக்கிறீர்கள். தேவைதான். காரணம் போலீஸ் இலாகா ஒரு நாட்டிற்குத் தேவை. ஜோடி இல்லாத மாடப் புறா; சேடியில்லாத இராஜகுமாரி எப்படி இருக்கமுடியாதோ அப்படித்தான் ஒரு நாட்டிலே போலீஸ் இல்லாத ஒரு நிர்வாகம் இருக்க முடியாது. அண்ணா அவர்கள் சொன்ன கருத்து அது. ஆகையினாலே (குறுக்கீடு) Why you are coming to the mike என்பது எனக்குத் தெரியும். ஆகையினாலே அறிஞர் அண்ணா அவர்கள் சொன்னதைப்போல அது தேவைதான். காரணம் உயிருக்கும், உடைமைக்கும் பாதுகாப்பு அளிப்பது போலீஸ்தான். யார் ஆட்சியிலே இருந்தாலும், போலீஸ் இலாகா இல்லாவிட்டால், நிர்வாகத்தை நடத்த முடியாது. இன்றைக்கு அந்த இலாகாவை நவீனப்படுத்துவதில் எல்லாம் எனக்கு மாறுபட்ட கருத்து அல்ல. ஆனால் போலீஸ் இலாகா என்பது என்ன? மக்களுக்கும் ஆட்சியாளருக்கும் இடையிலே சட்டம்–ஒழுங்கைப்



பரிமாற்றம் செய்ய ஒரு காலத்திலே இராணுவம்தான் இருந்தது. ஆனால், இராணுவத்திற்குத் தரப்படுகின்ற training வேறு. எனவே, மென்மையாக அவர்களால் பொதுமக்களை அணுகமுடியவில்லை என்றுதான்–ஆதிகாலத்து மன்னர்கள் இராணுவத்தை வைத்து ஆண்டார்கள்–இடையிலே மென்மைப்படுத்தப்பட்ட ஒரு இலாகாவை, போலீஸ் இலாகாவைக் கொண்டுவந்தார்கள். ஆனால் இந்த இலாகாவை நீங்கள் நவீனப்படுத்துகிறீர்கள். மாறுபட்ட கருத்து அல்ல. ஆனால் நான் அவர்களுக்குத் தெரிவிப்பது என்னவென்றால், கொஞ்சம் நனித்தக்க நாகரீகத்தையும் அந்த போலீஸ் இலாகாவிற்கு நீங்கள் கற்பிக்க வேண்டுமென்று இந்த அவையிலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

நேற்றைக்கு நான் ஒரு T.V.–யைப் பார்க்கிற வாய்ப்பு கிடைத்தது. **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் அவர்கள் சொல்கிற இந்தக் கருத்து அவைக்குறிப்பிலே ஏறாது. ஏனென்றால் நீங்கள் எந்த T.V.–யைக் குறிப்பிடுகிறீர்கள் என்றும் தெரியும். அவையெல்லாம் விசாரணைக் கமிஷனுக்கு உட்படுத்தப்பட்ட காரணத்தினால் அவை அவைக்குறிப்பிலே ஏறாது. சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. துரைமுருகன்:** சரி, நீங்களாவது கேட்டுக்கொள்ளுங்களேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் பார்த்துவிட்டேன். நான் கேட்டேன். பார்த்தேன். அதனால்தான் சொல்கிறேன். விசாரணைக்கு உட்பட்டது.

**திரு. துரைமுருகன்:** ரசித்தீர்களா? ஆகையினாலே சொல்கிறேன். ஆனால் ** அது நாட்டிற்கு நல்லதல்ல. Man-eater ஆகப் போலீஸ் இலாகா மாறிவிட்டால் இன்றைக்கு மற்றவர்களுடைய இரத்தத்தைச் சுவைக்கின்ற அந்த Man-eaters நாளைக்கு அதேவேளை வேறொருவருடைய இரத்தத்தைச் சுவைக்கின்ற ஒரு காலம் வரும். இது நாட்டிற்கு, ஜனநாயகத்திற்கு நல்லதல்ல என்பதை எடுத்துக்கூறி, ஆட்சியாளர்கள் போலீஸ் இலாகாவை இன்றைக்கு வளர்க்கிறீர்கள். நல்லமுறையில் வளருங்கள். அதுதான் வருகின்ற சமுதாயத்திற்குச் சரியாக இருக்குமே தவிர, எதிர்க்கட்சிகளை அடக்குவதற்கு போலீஸ் இலாகாவைப் பயன்படுத்தாதீர்கள். காரணம் இராணுவத்தைப் பயன்படுத்தியவர்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

களெல்லாம்கூட தோற்றுப்போய் இருக்கிறார்கள். வேண்டுமானால், ஒரு கட்சியை அழிக்கலாம். ஆனால் வெற்றிடத்தைக் காற்று நிரப்பும். இது விஞ்ஞானத் தத்துவம். இன்னொருவர் தோன்றிக்கொண்டேயிருப்பார். இந்தத் தத்துவத்தை உணராமல், நாம்தான் நிலையானவர்கள் என்ற எண்ணம் இருக்குமானால், இந்த ஆட்சி சர்வாதிகாரப் பாதையை நோக்கிப் போகிறது என்று பொருள் என்று கூறி, வாய்ப்பிற்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

*முற்பகல் 11–50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பத்திரிகைகளுக்குத் தலைப்புச் செய்தி வந்துவிட்டது.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறை மக்களின் நலனைப் பேண வேண்டுமென்பது புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியினுடைய கொள்கை. கடந்த கால ஆட்சியிலேதான், கடந்த 5 ஆண்டுகால ஆட்சியிலேதான், அப்பாவி மக்கள் மீது பொய் வழக்குப் போடுவதிலும் அதிகாரிகள்மீதுகூட தவறான பொய் வழக்குகள் போடுவதிலும் காவல் துறை ஈடுபடுத்தப்பட்ட வரலாறு கடந்த கால ஆட்சியினுடைய வரலாறு. அது புரட்சித் தலைவியினுடைய ஆட்சியினுடைய வரலாறு அல்ல என்பதை நான் சொல்ல விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர்.

**டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** தலைவர் அவர்களே....

**திரு. துரைமுருகன்:** தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் சொல்ல வேண்டிய கருத்தைச் சொல்லிவிட்டீர்கள். நிதி அமைச்சர் அதற்குப் பதிலாகச் சொல்ல வேண்டிய கருத்தைச் சொல்லிவிட்டார். பிரச்சினை முடிந்தது. அடுத்து, டாக்டர் சி. விஜயபாஸ்கர்.

***டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, வான் தோன்றி, வளி தோன்றி, அக்கினி தோன்றி, ஊன் தோன்றி, உயிர் தோன்றி, உடலும் தோன்றி, நீர் தோன்றி. நிலம் தோன்றி, நெருப்பும் தோன்றி, வளருகின்ற இந்த மாபெரும் உலகினிலே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திலே சத்துணவு தந்த சரித்திர



நாயகன், வங்கக் கடலோரம் சந்தனப் பேழையிலே துயில் கொள்ளும் அந்த தங்கத் தலைவன் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய ஆற்றல் மிக்க வழித்தடமாய், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் லட்சோப லட்சம் தொண்டர்களின் வழித்தடமாய் இயங்கிக் கொண்டிருக்கின்ற தமிழ்கூறும் நல்லுலகம் போற்றும் அறிவுசால் அன்னையே, "தோன்றின் புகழொடு தோன்றுக" என்ற வள்ளுவரின் வாக்கிற்கிணங்க புகழோடு தோன்றி வாழ்ந்துவரும் தாயே, தமிழே. உபநிஷத்தில் தைத்திரிய பறவை என்ற பறவை பற்றிய ஒரு குறிப்பு வருகின்றது. அந்தப் பறவையானது கரடு முரடான உணவை இயற்கையிலிருந்து எடுத்துச் சாப்பிட்டுவிட்டு, தன் வாய்க்குள் வைத்துக் கொண்டு. பக்குவப்படுத்தி, தன் குஞ்சுகள் எளிதில் சாப்பிடுகிற மாதிரியும் தன் குஞ்சுகளுக்கு அந்த கரடுமுரடான உணவு எளிதில் ஜீரணிக்கிற மாதிரியும் கொடுக்குமாம். அதுபோல எத்தர்களும், பித்தர்களும் தந்திட்ட எண்ணற்ற சோதனைகளைத் தாங்கிக்கொண்டு எங்களுக்கு சட்டமன்ற உறுப்பினர் என்ற ஆசனத்தைத் தந்திட்ட என் அன்னைக்கு என்னுடைய முதல் வணக்கத்தை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கின்றேன்.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

ஈடுஇணையில்லா இமாலய வெற்றியை நடைபெற்ற சட்டமன்றப் பேரவைத் தேர்தலிலே ஈட்டித் தந்து, இன்றைக்கு இந்த எளியோனையும் மாண்புமிக்க, மரபுமிக்க, மதிப்புமிக்க இந்த மாமன்றத்திலே உரையாற்ற வாய்ப்புத் தந்த அன்னைக்கு என் நெஞ்சார்ந்த பணிவான வணக்கங்களைக் கரம்கூப்பி, சிரம் தாழ்த்தி தெரிவித்துக்கொள்கின்றேன்.

புதுக்கோட்டையை புரட்சித் தலைவியினுடைய புகழ் கோட்டையாக்கி, மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முதல்வராக வேண்டும் என்பதற்காக இரட்டை இலைச் சின்னத்திலே வாக்களித்து, ஏறத்தாழ 29 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்த புதுக்கோட்டை சட்டமன்றத் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கு என்னுடைய மனமார்ந்த, நெஞ்சார்ந்த நன்றிகளை புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய சார்பாகவும், இயக்கத்தினுடைய சார்பாகவும் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

2001–2002 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையின்மீது பேசுகின்ற வாய்ப்பு குறித்து பெருமகிழ்ச்சியடைகின்றேன். நூறு மாதங்களில் செய்யவேண்டிய சாதனைகளை நூறே நாட்களில் செய்து சாதனை

படைத்திருக்கிறீர்கள் என்று சொன்னால் அது மிகையாகாது. கழக அரசு நூறே நாட்களில் இந்த மாபெரும் சாதனையைப் படைத்திருக்கிறது. நூறே நாட்களில் இந்தச் சாதனையைச் செய்திருக்கிறது என்று இங்கே சில பேருக்கு வேதனையாக இருக்கின்றது. ஆனால், மக்கள் வியக்கிறார்கள், பாராட்டுகிறார்கள், மக்கள் போற்றுகிறார்கள். பாய்ந்து செல்கின்ற ஆற்றின் திசையிலே படகு செலுத்துவது என்பது எளிதான காரியம். ஆனால் ஓடுகின்ற ஆற்றின் திசையை எதிர்த்து எதிர்த்திசையிலே படகு செலுத்துவது என்பது மிகவும் கடினமான காரியம்.

*(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)*

நான் இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால், சீர்கேடான நிதிநெருக்கடியான இந்த நிலையிலும்கூட, அரசினுடைய கஜானா முற்றிலுமாகக் காலியாகிவிட்ட இந்த நிலைமையிலும்கூட இப்படி ஓர் அற்புதமான Budget–ஐத் தந்திருக்கின்றார்களே என்று நினைக்கின்றபோது நாங்கள் பெருமிதம் கொள்கின்றோம். ஏனென்றால் இன்றைக்கு ஆன்றோர்கள் பாராட்டுகின்ற Budget ஆக இருந்து கொண்டிருக்கிறது; சான்றோர்கள் பாராட்டுகின்ற Budget ஆக இருந்துகொண்டிருக்கிறது. அறிவுசால் அறிஞர்கள் பாராட்டுகிறார்கள். சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் உள்ள நடுநிலையாளர்கள் பாராட்டுகிறார்கள். கல்வியாளர்கள் பாராட்டுகிறார்கள். ஆசிரியர்கள் பாராட்டுகிறார்கள். இன்றைக்கு ஏடுதூக்கி நாளைய நாடு காக்க புறப்பட்டுக் கொண்டிருக்கும் மாணவர் சமுதாயம் இந்த Budget–ஐப் பாராட்டிக் கொண்டிருக்கிறது. நெற்றி வியர்வையை நிலத்திலே சிந்தி பாடுபட்டு உழைக்கும் பாட்டாளி வர்க்கம் இந்த Budget–ஐப் பாராட்டிக் கொண்டிருக்கிறது; விவசாயிகள் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். கணினி மேதைகள் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள்; ஆனால் சில பேருக்கு பாராட்ட மனமில்லை. பூதக் கண்ணாடி வைத்து தேடிக் கொண்டிருக்கிறார்கள். நீங்கள் என்ன தேடினாலும் உங்களுக்கு எதுவும் கிடைக்காது என்பதை இந்த நேரத்திலே நான் பணிவோடு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*முற்பகல் 11–55*

அனைவருக்கும் கல்வி, பள்ளிகளுக்கு உயர்வு, ஆதிதிராவிட மாணவிகளுக்கு சைக்கிள், இத்தகைய திட்டங்களுக்காக மாணவர் சமுதாயமும், பெற்றோர் சமுதாயமும், இன்றைக்கு இந்த Budget–ஐப் பாராட்டிக்கொண்டிருக்கின்றன.



விளையாட்டு வீரர்களுக்காக உலக அளவில் போட்டியிடும் திறனைக் கண்டறியும் திட்டம், "World Beaters Talent Spotting Scheme" என்ற ஓர் அற்புதமான திட்டத்தின்கீழே இனி இந்த நாட்டிலே, தமிழகத்திலே மூலைமுடுக்கெல்லாம் தேங்கிக் கிடக்கின்ற, பொதிந்து கிடக்கின்ற, தங்கிக் கிடக்கின்ற ஆற்றல்கள், விளையாட்டு வீரர்களுக்கு இருக்கக்கூடிய ஆற்றல்கள் வெளிக்கொணரப்பட்டு, அந்த ஆற்றல்களை இனி தமிழகத்திலே ஒரு சிறந்த ஆற்றலாக மாற்றி, விளையாட்டுத் துறையிலே புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு பல்வேறு சாதனைகளை ஈட்டுவதற்கு இந்தத் திட்டம் வழிவகை செய்திருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஒன்றா, பத்தா, நூறா, ஆயிரமா இல்லை இலட்சமா! இல்லை, இல்லை, ஒரு கோடி ரூபாய். ஒலிம்பிக்கிலே தங்கப்பதக்கம் பெற்றால் ஒரு கோடி ரூபாய் என்று அறிவித்து இருக்கிறீர்களே, தாயே, விளையாட்டு இனிமேல்தான் வேகமெடுக்க இருக்கிறது. இந்த அறிவிப்பின்மூலம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் விளையாட்டுத் துறையின்மீது எந்த அளவிற்கு அக்கறை கொண்டுள்ளார்கள் என்பது தெரிகிறது. 'தமிழன் என்று சொல்லடா, தலைநிமிர்ந்து நில்லடா' என்ற வரிகளுக்கு இணங்க, உலக அரங்கிலே, தமிழனுடைய தரத்தை உயர்த்தி, உலக அரங்கிலே தமிழ்நாட்டுக்குப் பெருமையை ஏற்படுத்தித் தரக்கூடிய வகையிலே இந்த ஒரு கோடி ரூபாய் என்ற அறிவிப்பு, விளையாட்டு வீரர்களுக்கு ஊக்கம் அளித்து, உற்சாகத்தைக் கொடுத்து, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்ன நினைத்தாரோ அதற்கு கை மேல் பலன் கிடைக்கும் என்று சொன்னால் அதிலே ஐயமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மருத்துவத் துறையில்தான் பல மகத்தான திட்டங்களை அறிவித்திருக்கிறீர்கள். ஆரம்ப சுகாதார நிலையம் சிறிய மருத்துவமனையாக உயர்த்தப்படுகிறது என்று அறிவித்திருக்கிறீர்கள். மருத்துவமனைகளுக்கு generator வசதி செய்துகொடுப்பது பற்றி அறிவிக்கப்பட்டிருக்கிறது. இதற்கெல்லாம் முத்தாய்ப்பு வைப்பதைப்போல, சாலை விபத்துக்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தக்க நேரத்தில் மருத்துவ வசதி அளிப்பதற்காக பொருத்தமான இடங்களில் விபத்து காய சிகிச்சை மையங்கள் - Accident Trauma Centre - அமைக்கப்படும் என்ற அறிவிப்பு பொதுமக்களுக்கு மிகப் பெரிய வரப்பிரசாதமாகும். இனிமேல் இந்த அறிவிப்பால், பொதுமக்களுடைய நீண்ட நாளைய ஏக்கம் தீருகிறது, நீண்ட நாளைய பயம் போகிறது என்று சொன்னால் மிகையில்லை.

புகையிலை, பான் மசாலா, குட்கா போன்றவற்றிற்குத் தடை விதித்ததன்மூலம், கழக அரசு மக்கள் நலம் காக்கும் அரசு மட்டுமல்ல, இது மாணவர் நலம் காக்கும் அரசு, இது இளைஞர்கள் நலம் பேணும் அரசு என்பதை நிரூபித்திருக்கிறோம் என்று நினைக்கின்றபொழுது, மிகுந்த பெருமையாக இருக்கின்றது. உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் என்பது பாட்டு வரிகள். அந்தக் கூற்றுக்கு இணங்க, உழவுத் தொழிலில் வியத்தகு மாற்றங்களைச் செய்திட்ட இந்த அரசு விஞ்ஞானத் துறையையும் விட்டு வைக்கவில்லை. நவீன அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சிக்கான எம்.ஜி.ஆர். அறிவுநகர் என்ற உலகத்தரத்தோடு அமைக்கப்படும் என்ற அறிவிப்பு, அறிவியல் துறையிலே புதிய மைல்கல் என்று சொல்வதிலே நாங்கள் பெருமிதம் அடைகிறோம்.

புதிய Tidel பூங்கா Phase 2 என்ற அறிவிப்பின்மூலம் இனி தமிழகம், தகவல் தொடர்பு தொழில்நுட்பத்தில் புரட்சி செய்ய உள்ளது என்பது மறுக்க முடியாத உண்மை. சென்னைக்கு மட்டுமல்ல, இந்த Phase 2 பகுதியினை அனைத்து மாநகரங்களுக்கும் விரிவுபடுத்துவது என்று நீங்கள் சொல்லியிருப்பது எங்களுக்குக் கூடுதலான மகிழ்ச்சி தருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். வெளிநாட்டு நிறுவனங்களுக்கும், மென்பொருள் நிறுவனங்களுக்கும் Tidel அமைப்பு, இனி எல்லா உதவிகளும் செய்யும் என்று அறிவித்திருக்கிறீர்கள். இந்த அறிவிப்பின்மூலம் தமிழகம் இந்தியாவில் மட்டுமல்ல, உலக அரங்கில் முக்கியத்துவம் வாய்ந்த மாநிலமாக அம்மா அவர்களால் உருவாக்கப்பட இருக்கிறது என்பதை நினைக்கின்றபொழுது பெருமகிழ்ச்சி கொள்கின்றோம். தகவல் தொழில்நுட்பத் துறையிலே, உலக வரைபடத்திலே, தமிழகத்திற்கு இனி தனி இடம் கிடைக்கச் செய்யும் வகையில் அம்மா அவர்களின் சிந்தனையில் உதித்த இந்தச் சீர்மிகு திட்டத்திற்கு மாணவர் சமுதாயமும், வருங்கால கணினி மேதைகள் சமுதாயமும் தங்களுடைய பெருமையான பாராட்டுக்களை இங்கே தெரிவித்துக்கொண்டிருக்கின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு பொன்முடி அவர்கள், இங்கு நேற்று பேசுகின்றபோதுகூட "கடந்த கால ஆட்சியில் எங்களால் நிறைவேற்றப்பட்ட திட்டங்களுக்கு நீங்கள் இன்றைக்கு மெருகூட்டிக்கொண்டு இருக்கிறீர்கள், புதிய திட்டம் எதுவும் இல்லை" என்று சொன்னார். ஆக, அவர் சொல்லுகின்ற கூற்றின்படி பார்த்தால், கடந்த கால ஆட்சியிலே, மெருகில்லாத பல திட்டங்களைத்தான் நீங்கள் அறிவித்து இருக்கிறீர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை நீங்களே ஒப்புக்கொண்டிருக்கிறீர்கள் என்பதை அறியும்போது வேதனையாக இருக்கிறது. இது மட்டுமல்ல, அரசுக்கும், மக்களுக்கும், தகவல் தொடர்பு



தங்குதடையின்றி நடைபெற இணையத் தளங்கள், Portals on the Internet ஏற்படுத்தப்படும் என்ற அறிவிப்புகள் புதிய அறிவிப்புகள்; அரிய அறிவிப்புகள். இவை செயற்கரிய திட்டங்கள் என்பதை நாம் அனைவரும் ஏற்றுக்கொண்டாக வேண்டும். புரட்சித் தலைவி அம்மா அவர்களின் சிந்தனையில் உதித்த இந்தச் சீர்மிகு திட்டத்தின்மூலம் இனிமேல் கிராம நிர்வாகத்தைக்கூட, தலைமைச் செயலகத்தோடு, computer முறையிலே இணைக்க அரசு முயற்சி மேற்கொள்ளும் என்பது மிகப் பெரிய அரிய சிறந்த திட்டமாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்பது ஒரு எஃகுக் கோட்டை. அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்பது ஒரு இமயம். ஏன் என்றால் புரட்சித் தலைவர் காலத்திலிருந்து, என்ன நடந்தாலும், எது நடந்தாலும், தடுமாறாத தலைமைதான் எங்கள் தலைமை. மலை குலைந்தாலும் நிலை குலையாத தலைமைதான் எங்கள் தலைமை. "Courage is to stand in the eye of the tornado and be calm" என்று விவேகானந்தர் சொல்லியிருக்கின்றார். ஆக அந்தவகையிலே தைரியம் மிக்க தலைமைதான் எங்கள் தலைமை. நிதானம் இழக்காத தலைமை, ஆத்திரப்படாத தலைமை, அவசரப்படாத தலைமை, வீரமான தலைமை, விவேகமான தலைமை. தன்னலம் கருதாத தங்கத் தலைவி புரட்சித் தலைவி அவர்கள், பொன் நகை துறந்தாலும் புன்னகை மாறாத புரட்சித் தலைவி எங்கள் தலைவி அவர்கள்.

'உச்சிமீது வானிடிந்து வீழுகின்றபோதினும் ,
அச்சமில்லை, அச்சமில்லை, அச்சமென்பதில்லையே'

என துச்சர்களைத் தன் சுண்டு விரல்களால் தூக்கி எறியக்கூடிய ஆற்றல் மிக்கவர் எங்களுடைய புரட்சித் தலைவி அவர்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கின்றேன் (மேசையைத் தட்டும் ஒலி)

*நண்பகல் 12–00*

ஒரு மணி நேரம்கூட பதவியில் இல்லாமல் இருக்க முடியாதவர்கள், ஒரு மணி நேரம்கூட பதவி சுகத்தை அனுபவிக்காமல் இருக்க முடியாதவர்களெல்லாம், இன்றைக்கு சிறிய நடவடிக்கைகளுக்கெல்லாம், சிற்சில நடவடிக்கைகளுக்கு, சின்ன வழக்குகளுக்கெல்லாம் பயப்படுகிறார்கள், அஞ்சுகிறார்கள், நாடகமாடுகிறார்கள், நடுங்குகிறார்கள், பிரச்சினையைத் திசை திருப்பப் பார்க்கிறார்கள். கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்று தாரக மந்திரத்தைத் தெரிவித்துவிட்டு, நாங்கள்

அண்ணாவின் தம்பிகள் என்று வெளியிலே பேசுபவர்களிடத்திலே இங்கே அவையிலே கடமை, கண்ணியம், ஆகிய இரண்டும் தட்டுப்பாடாக இருக்கிறது என்பதை நினைத்தால் எங்களுக்கு வேதனையாக இருந்துகொண்டிருக்கிறது. அற்ப கற்கள் வைரத்தைப் பார்த்து வசைபாடி நாங்கள் வைரம்தான் என்று சொன்னால் உங்களைப் பார்த்து எங்களால் பரிதாபப்படத்தான் முடியும் என்பதை நான் கூறிக்கொள்கிறேன். இமயத்தைப் பார்த்து இருட்டிலே இருக்கிற கூழாங்கற்கள் கூறியதாம், உன்னைவிட நான் உயரமென்று; நகைக்காமல் இருக்க முடியவில்லை. எங்கள் அம்மா சொன்னதுபோல, இது இரண்டாயிரம் வருடத்தின் மிகப்பெரிய ஜோக் என்பதை நான் இந்த நேரத்திலே மீண்டும் வலியுறுத்திக் கூறுகிறேன்.

மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுக்கு இங்கே என்னுடைய பணிவான வேண்டுகோளை புதுக்கோட்டை சட்டமன்றத் தொகுதியின் சார்பாகத் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். புதுக்கோட்டை, புரட்சித் தலைவியினுடைய கோட்டை; புதுக்கோட்டை, புரட்சித் தலைவியினுடைய கோட்டை என்று நிரூபிக்கக்கூடிய வகையில், மக்கள் ஏறத்தாழ 29 ஆயிரம் வாக்குகளை அள்ளித் தந்திருக்கிறார்கள். ஆனால் காலம் காலமாக, தொன்றுதொட்டு கடந்த ஆட்சியின்போதுகூட புதுக்கோட்டை மாவட்டம் என்றால், ஏதோ பின்தங்கிய மாவட்டம் என்றே அகராதியில் சொல்லி வருகிறார்கள். ஆகவே, புரட்சித் தலைவி அவர்கள், இந்தப் புதிய யுகத்தில், புரட்சித் தலைவியின் ஆட்சியில் இனி இந்த வார்த்தை களையப்பட்டு, புதுக்கோட்டையை தொழிற்பேட்டையாக மாற்ற அரசு ஆவன செய்யவேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். புதுக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு C.T.Scan வசதி செய்து தரவேண்டுமென்று இந்த நேரத்தில் தொகுதி மக்களின் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன். செயல்பட்டுக் கொண்டிருக்கிற காவிரி கூட்டுக்குடிநீர்த் திட்டத்திலே பற்றாக்குறையைப் போக்கி, நகர்ப்புறங்களில் மட்டுமல்லாது, நகரை ஒட்டிய மற்ற பகுதிகளுக்கும் காவிரிக் குடிநீர் கிடைத்திட ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நீண்ட நெடுங்காலமாகப் போராடிக் கொண்டிருக்கிற காமராஜபுரம், நரிமேடு, காந்தி நகர் பகுதி மக்களுக்குப் பட்டா வழங்கிடவும், சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சுந்தர்வக்கோட்டை பகுதியிலே முந்திரி அதிகமாக விளையக்கூடியதால், அங்கே ஒரு முந்திரித் தொழிற்சாலையையும், அங்கே பயிலக்கூடிய மாணவர்களுக்குத் தொழிற் பயிற்சிக் கல்லூரியையும் அமைக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.



நிமிர்ந்த நன்னடை, நேர்கொண்ட பார்வை, யாருக்கும் அஞ்சாநெஞ்சம் கொண்டு. எதிர்நீச்சல் போட்டுக்கொண்டு, சோதனைகளைச் சாதனைகளாகவும், சாதனைகளைச் சரித்திரமாகவும் மாற்றக்கூடிய வல்லமை படைத்த ஆற்றல் மிக்க புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய இந்த அரசு என்னுடைய தொகுதிக்கு இந்தத் திட்டங்களையெல்லாம் நிறைவேற்றும் என்ற நம்பிக்கையைத் தெரிவித்துக்கொண்டு, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுடைய வாயிலாக நான் இந்த மாமன்றத்தில் ஒரேயொரு செய்தியை எதிர்க்கட்சியில் இருக்கிறவர்களுக்கு வைக்க இருக்கிறேன்.

அடிமை விலங்கை அறுத்தெறிந்த ஆபிரகாம் லிங்கன் ஒருமுறை நாட்டின் மிக முக்கியமான உயர் அதிகாரிகள் மாநாட்டில் பேசும்போது சொல்கிறார், 'எல்லா அதிகாரிகளும், எல்லா அதிகாரங்களும் என்னை விட்டுப் போனாலும்கூட, இந்த நாட்டில் உள்ள எல்லா உயர்மட்டமும் என்னை கைவிட்டுவிட்டாலும்கூட, நான் ஒன்றே ஒன்றின் துணையுடன் வெற்றிகரமாக என்னுடைய திட்டங்களையெல்லாம் செயல்படுத்துவேன்' என்று கூறியிருக்கிறார். அந்த ஒன்று 'என்னுடன் எப்போதும் பின்னிப் பிணைந்திருக்கிற என் தன்னம்பிக்கை' என்று சொன்னாராம் ஆபிரகாம் லிங்கன். ஆகவே அன்னையே, புரட்சித் தலைவி அம்மா அவர்களே, அந்த ஆபிரகாம் லிங்கனின் மனோதிடத்தை இன்றைக்கு உங்கள் உருவில் இந்த நாடே பார்த்துக்கொண்டிருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது. நான் ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், ஆயிரம் சோதனைகளை எதிர்கொண்டபோதிலும், 'ஐயோ! கொலை பண்ணுறாங்களே' என்ற எந்த அலறல் சத்தமும் எங்கள் போயஸ் தோட்டத்துத் திசையிலிருந்து புறப்பட்டதில்லை (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2001–2002 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கைமீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக என்னுடைய கருத்துக்களைச் சொல்ல நான் விரும்புகிறேன். குறிப்பாக, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் அளித்த அறிக்கையை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நாங்கள் முழுமையாக வரவேற்கக் கடமைப்பட்டுள்ளோம். நிதிநிலை அறிக்கைமீது நான் பேசுவதற்கு முன்பாக, சில விவரங்களை நான் கூறுவது என்னுடைய

அரசியல் கடமையாகக் கருதக் கடமைப்பட்டுள்ளேன். இன்றைக்கு மத்திய அரசினுடைய பொருளாதார நிலைமை குறித்து மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் மிகப் பொறுப்புணர்வோடு இங்கே பல்வேறு சம்பவங்களைக் கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள்.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

ஒன்றைச் சொல்ல வேண்டுமென்று சொன்னால் ஒரு நல்ல ஆட்சிக்கான அறிகுறி 'விளையும் பயிர் முளையிலே தெரியும்' என்று சொல்வார்களே அதுபோன்று வேளாண்மைத் தொழிலுக்கு முன்னுரிமை கொடுத்து 70% விவசாயம் நடந்து கொண்டிருக்கிற நம்முடைய நாட்டுக்கு முன்னுரிமை கொடுத்துக் கொண்டிருக்கின்ற அரசு நம்முடைய அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு. நான் பல்வேறு நிதிநிலை அறிக்கைமீதான விவாதங்களிலே கலந்து கொள்கிற ஒரு வாய்ப்பைப் பெற்று இருந்தாலும்கூட இந்த நிதிநிலை அறிக்கை என்பது ஒரு வித்தியாசமான நிதிநிலை அறிக்கையாக சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. வேளாண்மைக்கு முன்னுரிமை கொடுத்து மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையைச் சமர்ப்பித்திருக்கிறார்கள். இதை நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அதோடுமட்டுமல்லாமல் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய பொதுச் செயலாளர் மரியாதைக்குரிய முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வருவதற்கு முன்பாக பல்வேறு தடைக்கற்களை நீக்கி ஆட்சிப் பொறுப்பை ஏற்று இன்றையதினத்திலே முதலமைச்சராகப் பொறுப்பேற்றிருக்கிறார்கள்.

*பிற்பகல் 12–05*

ஒன்றை நான் நினைவுபடுத்துவது என்னுடைய கடமையாகக் கருதுகிறேன். நடந்து முடிந்திருக்கின்ற சட்டமன்றத் தேர்தலில் இரண்டு தொகுதிகளில் மட்டுமல்ல, நான்கு தொகுதிகளிலே அவர்கள் போட்டியிட்டார்கள். அவர் தேர்தலிலே நிற்கக்கூடாது என்பதற்காக என்னென்ன காரணங்களைக் கண்டுபிடிக்க வேண்டுமோ அவற்றையெல்லாம் தேடிக் கண்டுபிடித்து, தேர்தலிலே நிற்காததற்கு என்னென்ன வாய்ப்புகளை உருவாக்க வேண்டுமோ அத்தனையையும் செய்து முடித்தார்கள். அதுகூட பரவாயில்லை. தமிழகத்தில் இருக்கிற 234 தொகுதிகளையும் தன்னுடைய தொகுதி என்ற முறையிலே கருதி முதலமைச்சர் அவர்கள் சிறந்த பணியாற்றினார்கள். தோழமைக் கட்சியா, ஆளும் கட்சியா, தன் கட்சியைச் சார்ந்தவர்களா என்றுகூடப் பார்க்காமல்,



குறிப்பாக தன்னுடைய தோழமைக் கட்சியினுடைய வேட்பாளர்கள் வெற்றி பெற வேண்டும் என்பதற்காக சில தொகுதிகள் விடுபட்டிருந்தபோதிலும்கூட அத்தனை தொகுதிகளிலும் தன் கட்சியைச் சார்ந்தவர்கள் சிறப்பான முறையிலே வெற்றிபெற பாடுபட வேண்டும் என்று உறுதியோடு நின்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வெற்றியைத் தேடித் தந்திருக்கிறார்கள். அவர்களுக்கு நான் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதோடுமட்டுமல்லாமல் இன்றைக்கு முதலமைச்சராகப் பொறுப்பேற்றுச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். முதலமைச்சர் பொறுப்பையும் அவர்கள் ஏற்கக் கூடாது என்பதற்காக என்ன காரணங்களைக் கண்டுபிடித்துச் சொல்ல வேண்டுமோ அதற்கான காரணங்களையும் தேடிக் கொண்டிருக்கிறார்கள். இது அரசியலிலே நாட்டு மக்கள் நிர்ணயிக்கிற தீர்ப்புகள். அதற்குள்ளே போய் நான் விவரங்களைக் கூறுவதற்கு விரும்பவில்லை. இருந்தபோதிலும்கூட இன்றைக்கு மத்தியிலே பாரதிய ஜனதா கட்சி ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருக்கிறது. அந்த ஆட்சியைப் பார்த்தோம் என்று சொன்னால் ஒரு தலையாட்டி பொம்மையைப் போன்று மத்தியிலே ஆண்டுகொண்டிருக்கிற பாரதிய ஜனதா கட்சியினுடைய ஆட்சி இன்றைக்கு இருந்துகொண்டிருக்கிறது. தோழமைக் கட்சிகளுக்கு, அவர்களுடைய கூட்டணிக் கட்சிகளுக்கு அடிபணிந்து மத்தியிலே இருக்கிற ஆட்சி எவ்வளவு பலஹீனமாக இருக்கிறது என்பதற்கு ஓர் உதாரணம், தமிழகத்தில் மேதகு ஆளுநரை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தார்கள். இங்கே இருக்கக்கூடிய நல்ல சிறந்த அதிகாரிகளை மாற்றுவதற்கு, தங்களுடைய கட்டுப்பாட்டுக்குள் வரவேண்டும் என்பதற்காக இன்றையதினத்தில் அழைத்துக் கொண்டிருக்கிறார்கள். இதுதான் ஒரு கூட்டாட்சியினுடைய தத்துவம். எவ்வளவு கேலிக்கூத்தை நடத்த வேண்டுமோ அவ்வளவு கேலிக்கூத்துகளை இன்றையதினத்திலே மத்தியிலே இருக்கக்கூடிய பாரதிய ஜனதா கட்சியினுடைய ஆட்சி நடத்திக்கொண்டிருக்கிறது.

நேற்றுகூட மேற்கு வங்கத்தினுடைய முதலமைச்சர் பட்டாச்சாரியா அவர்கள் மத்திய அரசை வன்மையாகக் கண்டித்திருக்கிறார்கள். தமிழகத்திலே ஒரு ஜனநாயகத்தை நிலைநாட்ட வேண்டும் என்று சொன்னால், ஜனநாயகத்திலே ஒரு கூட்டாட்சித் தத்துவத்தை உருவாக்க வேண்டுமென்று சொன்னால் ஒவ்வொரு மாநிலத்தில் இருக்கிற அதிகாரிகளை கூட்டணிக் கட்சிகளுடைய நிர்பந்தத்திற்கு

ஆட்படுத்தக்கூடாது என்று கண்டித்து இருக்கிறார். இந்த ஜனநாயகத்தைப் பாதுகாக்கக்கூடிய விதத்தில் அது உருவாக்கப்பட்டிருக்கிறது.

அதுமட்டுமல்லாமல் இன்றைக்கு வேளாண்மைத் தொழிலுக்கு பல்வேறு முன்னுரிமைகள் தரப்பட்டிருக்கின்றன. ஒன்றை நான் குறிப்பிட விரும்புகிறேன். 1991 ஆம் ஆண்டிலிருந்து தமிழ்நாட்டினுடைய பொருளாதார நிதிநிலையை மத்திய அரசு ஆய்வு செய்து, மத்திய அரசினுடைய நிதிநிலையிலிருந்து தமிழ்நாட்டிற்குச் சேர வேண்டிய பங்கை எந்த அளவுக்குத் தொடர்ந்து மறுத்து வந்திருக்கிறது என்பதனை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் மிகச் சுருக்கமாக இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். 10% இன்றைக்கு குறைந்து வந்திருக்கிறது. அந்தக் குறைவின் காரணமாகக்கூட 292 கோடி ரூபாய் அளவிற்கு நம்முடைய மாநிலத்திலே மிகப் பெரிய பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது. நமக்கு வரவேண்டிய வருவாயை, நமக்குச் சேர வேண்டிய வரியை மத்திய அரசு முற்றிலுமாகப் புறக்கணித்திருக்கிறது. இதை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பாக நான் வன்மையாகக் கண்டிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*பிற்பகல் 12-10*

இன்னொன்றையும் இதிலே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். மத்திய அரசு சொல்லக்கூடிய திட்டங்களை நிறைவேற்றுகிற மாநிலங்களில் ஒரு மாநிலமாக தமிழகம் இருக்கிறது. குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை முழுமையாக நிறைவேற்றியிருக்கிற மாநிலம் என்று சொன்னால் இந்தியாவிலேயே அது தமிழ்நாடு மட்டும்தான். அப்படியென்று சொன்னால், இதைக்கூட மதிக்காத ஒரு மத்திய அரசு இன்றையதினம் நிதியை வழங்காமல், அதற்கு மாறான நடவடிக்கையை, இங்கே இருக்கும் சிறந்த அதிகாரிகளை மாற்றுவதிலே முனைப்பு காட்டிக் கொண்டிருக்கிற நிலைமையை நாம் பார்க்க வேண்டியிருக்கிறது. நம்முடைய தமிழ்நாட்டிலே பல அமைச்சர்கள் இருக்கிறார்கள். அமைச்சர்கள் எல்லாம் பொறுப்புக்கு வருகிறபோது பொறுப்புணர்வோடு நடந்துகொள்ள வேண்டும். அது மத்திய அமைச்சராகவும் இருக்கலாம்; அல்லது மாநில அமைச்சராகவும் இருக்கலாம். இல்லையென்றால் இருக்க முடியாது. ** இது தமிழ்நாட்டினுடைய வரலாறு. வாக்களித்த நாட்டு மக்களுக்குச் செய்ய வேண்டிய சரியான கடமைகளை பக்குவமாக அமைச்சர் பெருமக்கள் செய்ய வேண்டும். அப்போதுதான் மதிப்பார்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



அவற்றையெல்லாம் நாம் பார்க்கிறோம். இது ஜனநாயகத்திலே எவ்வளவு கேடுகளை விளைவிக்கும் என்பதை நாம் பார்க்க வேண்டிய நிலையிலே இருந்து கொண்டிருக்கிறோம்.

இன்றையதினம் நிதிநிலை அறிக்கையிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதுபோன்று, தமிழ்நாட்டினுடைய இந்த நிதி நெருக்கடியிலும் நம்முடைய விவசாயிகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டு, பல்வேறு திட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதிலே சொல்லப்பட்டிருப்பதிலேயிருந்து ஒன்றை நான் சொல்லுகிறேன். தமிழ்நாட்டு விவசாயிகள் பெற்று இருக்கிற கூட்டுறவுக் கடனுக்கு வட்டி, அபராத வட்டியை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தள்ளுபடி செய்திருக்கிறார்கள். இங்கேகூட மாண்புமிகு எதிர்க்கட்சித்தலைவர் பேராசிரியர் அவர்கள் 3 தினங்களாகச் சொன்னார்கள். எனக்கு ஒரு கதைதான் ஞாபகத்திற்கு வருகிறது. ஒருவனுக்கு திருமணம் நடந்து பத்தாண்டுக்காலம் ஆகியும் குழந்தையே பிறக்காத காரணத்தால், அவன் தனக்கு ஒரு வாரிசு வேண்டுமென்று எதிர்பார்த்தான்; மனைவியிடத்திலே கெஞ்சிக் கேட்டான். நமக்கு வாரிசே இல்லை; கடந்த 10 ஆண்டுக்காலமாக வாழ்க்கை நடத்திப் பார்த்தோம்; எனவே, வேறு ஒரு திருமணத்தை செய்துகொள்கிறேன் என்று சொன்னான். அந்த அம்மாகூட அனுமதித்தார்கள். திருமணம் செய்து இரண்டாவது மனைவியோடு உள்ளே வரும்போது மூத்த மனைவி கேட்டாளாம், குழந்தையோடு உள்ளே வருகிறீர்களா என்று. அது மாதிரிதான் இருக்கிறது. ஐந்தாண்டுகால திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் அப்போது ஆட்சி புரிந்தவர்களிடம் கூட்டுறவுக் கடனை, வட்டியைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று நாங்கள் எல்லாம் கேட்டபோது, அவற்றையெல்லாம் தள்ளுபடி பண்ண முடியாமல், இன்றைக்கு இவர்கள் அதற்காக 100 கோடி ரூபாயை ஒதுக்கினால் இது மட்டும் போதுமா; அது நிறைவேறுமா என்று கேட்பது எவ்வளவு பெரிய கேலியாக இருக்கிறது என்பதுதான் தமிழக மக்களுக்குத் தெரிகிறது. நான் யாரையும் குற்றம் சொல்ல வேண்டுமென்று சொல்லவில்லை. ஏனென்று சொன்னால், ஒவ்வொரு தடவையும் நான் மட்டுமல்ல, இங்கு இருக்கிற பல்வேறு அரசியல் கட்சிகளைச் சார்ந்தவர்கள் எல்லாம் கேட்டபோது NABARD வங்கியைப் பாருங்கள், NABARD வங்கியைப் பாருங்கள் என்று சொன்னார்கள். ஆனால் அந்த NABARD வங்கியினுடைய அனுமதியோடுதான் இன்றையதினம் வட்டியும் அபராத வட்டியும் ரூ.310 கோடிக்கு தள்ளுபடி செய்ய அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதைக்கூட முதலமைச்சர் அவர்கள் காலத்தோடு அறிவிப்பார்கள் என்று நாங்கள் எதிர்பார்க்கவில்லை. இதை

யாரும், எந்த விவசாயியும் எதிர்பார்க்காத நேரத்தில் அறிவித்திருப்பதை நான் மனப்பூர்வமாக வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

அதேபோன்று நீலகிரி தேயிலைத் தோட்ட விவசாயிகள் போராடிய நேரத்தில் அவர்கள்மீது போடப்பட்ட வழக்குகளால் அவர்கள் பாதிக்கப்பட்டபோது, அவர்களுக்காக ஒரு நபர் Commission வழங்கிய தீர்ப்பின்படி 33 இலட்சம் ரூபாயை அவர்களுக்கு வழங்க வேண்டுமென்று இந்த மாமன்றத்தில் சொன்னோம். முதலமைச்சர் உடனடியாகக் கூப்பிட்டு, பாதிக்கப்பட்டவர்களுக்கு எல்லாம் உடனடியாக நிவாரணத்தை வழங்கி இருக்கிறார்கள். இவையெல்லாம், கேட்காமல் செய்கிற ஓர் அற்புதமான திட்டம். இதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதோடுமட்டுமல்ல, அந்த விவசாயிகளுக்கு இப்படிச் செய்திருந்தாலும்கூட, நான் தஞ்சை மாவட்ட விவசாயிகளைப் பற்றி மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இது ஒரு நீண்டகாலத் திட்டம்; இதுகுறித்து மத்திய அரசை வலியுறுத்த வேண்டும்; அதை மாநில அரசும் செய்யவேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன். அதாவது பயிர் இன்சூரன்ஸ் திட்டம். தஞ்சை, நாகை, திருவாரூர் மாவட்டங்களில் இயற்கைச் சீற்றங்களால் பாதிக்கப்படும் வருடங்களில் தொடர்ந்து விவசாயிகளுக்குக் கடனைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று சொல்வதற்குக் காரணமே, அவர்கள் பாதிக்கப்பட்ட காரணத்தால்தான். ஏற்கெனவே இதுபோன்ற பயிர் இன்சூரன்ஸ் திட்டம் கொண்டுவந்த பின்னால் விவசாயிகள் பாதுகாக்கப்பட்டு இருக்கிறார்கள். ஆக, எதிர்காலத்தில் தமிழ்நாட்டில் அதற்கு ஒரு சிறப்பான திட்டத்தைக் கொண்டுவந்து, பயிர் இன்சூரன்ஸ் திட்டத்தை அமல்படுத்த வேண்டும். அதற்கு உங்களுடைய பதிலை நாங்கள் எதிர்பார்க்கிறோம் என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*பிற்பகல் 12–15*

நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வது என்னவென்றால், காவிரி நதி நீர்ப் பிரச்சினை காரணமாக சரியாக தஞ்சை மாவட்டத்திற்கு தண்ணீர் போய்ச் சேரவில்லை. நட்ட குறுவைப் பயிர்களை எப்படிப் பாதுகாப்பது என்று விவசாயிகள் மிகவும் வேதனைக்குள்ளாகியிருக்கிறார்கள். கர்நாடகத்தோடு நேற்று முதலமைச்சர் அவர்கள் பேசுவதாகச் சொல்லியிருக்கிறார்கள். மத்திய அமைச்சரோடு



பேச்சு வார்த்தை நடத்துவதாகச் சொல்லியிருக்கிறார்கள். சம்பாவைச் சாகுபடி பண்ணுவதற்கு தண்ணீர் இல்லாமல் இருக்கிற நிலைமை இன்றையதினத்திலே ஏற்பட்டிருக்கிறது: ஆகையினால் இப்படி சிரமப்பட்டுக்கொண்டிருக்கிற விவசாயிகளுக்கு செப்டம்பர் மாதத்திலே தங்களுடைய முதலை, வட்டியைச் செலுத்துவது என்பது முடியாத காரியம். ஆகையினால் அந்த நாட்களை நீட்டித்துக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பருவ காலத்திலே, அறுவடை காலத்திலே அதைக் கட்டுவதற்கான வாய்ப்புகளை நீங்கள் ஏற்படுத்திக் கொடுத்தால் அந்த விவசாயிகள் முழுமையாக நன்மை அடைய முடியும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதோடு இந்த தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் என்பதைப் பொறுத்தளவிலே ஒரு நல்ல திட்டம்; வரவேற்க வேண்டிய திட்டம். அதிலே மலையடிவாரத்திலே பழத் தோட்டங்களை அமைப்பது என்கிற ஒரு திட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறார்கள். ஏற்கெனவே கீழ் ஊற்று இல்லை. ஏரியிலே தண்ணீர் கிடையாது. அதேபோன்று கிணறுகள் வற்றிப் போய்விட்டன. மலையடிவாரங்களிலே தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தைக் கொண்டுவந்தால் அந்தத் தண்ணீருடைய முகப்பை அவர்கள் கட்டுப்படுத்திவிடுவார்கள். ஆகையினால் இருக்கிற தண்ணீர் வராமல் ஒரு பாதகமான சூழ்நிலை ஏற்பட்டுவிடும். எனவே மலையடிவாரங்களில் அதைப் போன்ற தோட்டங்களை அமைப்பது என்பதை அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து நில உச்சவரம்புச் சட்டம். பண்ணையைப் பாதுகாக்க வேண்டும் என்பதற்காக நில உச்சவரம்புச் சட்டத்தைத் தளர்த்துவது என்று இங்கே நிதிநிலை அறிக்கையிலே கொண்டு வந்திருக்கிறார்கள். நான் இன்றுகூட பலபேர் பற்றிச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். பண்ணைப் பாதுகாப்பிற்காக நில உச்சவரம்புச் சட்டத்தை தளர்த்துவது என்று சொல்வது முற்றிலும் சரியானதல்ல. இன்னும் எங்களுடைய மாவட்டத்திலே பல நிலக் குவியல்கள் இருந்துகொண்டு இருக்கின்றன. அப்படிப்பட்ட ஊர்களை நான் சொல்வதற்குக்கூடத் தயாராக இருக்கிறேன். பண்ணைப் பாதுகாப்புத் திட்டத்திலே பல ஆயிரக்கணக்கான ஏக்கர்கள் பினாமியாக எழுதிவைக்கப்பட்டு நிலங்கள்கூடத் தரிசாகக் கிடக்கின்றன. அந்த நிலத்தைச் சாகுபடி செய்ய முடியாத நேரத்தில், பண்ணைகளைப் பாதுகாக்க வேண்டும் என்பதற்காக இந்தச் சட்டத்தைத் தளர்த்த வேண்டும் என்பது சரியல்ல. ஒரு நீண்ட

போராட்டத்திற்குப்பின் "சாணியடி, சாட்டையடி" போன்ற பல போராட்டங்களை நடத்தி இந்த நில உச்சவரம்புச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இந்தச் சட்டத்தைத் தளர்த்துவதன் மூலமாக ஏழை விவசாயிகள் மிகப்பெரிய பாதிப்புக்குள்ளாவார்கள். எனவே அவ்வாறு தளர்த்துவதை உடனடியாக மீண்டும் வாபஸ் பெற வேண்டும் என்று கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக வலுவாக இந்த நேரத்திலே உங்களிடத்திலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்தச் சட்டம் என்பது நீண்ட வரலாற்றிற்குப் பிறகு கொண்டுவரப்பட்டிருக்கிற ஒன்று. அந்தச் சட்டத்தை நீங்கள் மீண்டும் தளர்த்தக்கூடாது என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதோடுமட்டுமல்லாமல், விவசாயத் தொழிலாளர்களுடைய வருமானம் அதிகரிக்க வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இன்றைக்கு தமிழ்நாட்டிலே ஒரு கோடி விவசாயத் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அவர்களுடைய வாழ்க்கை மேம்பாட்டுக்கு கோலப்பன் குழுவினுடைய சிபாரிசுகளை உடனடியாக நீங்கள் அமல்படுத்த வேண்டும். அதிலே விவசாயத் தொழிலாளிகளுடைய வாழ்க்கை சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் குறித்துச் சொல்லப்பட்டிருக்கிறது. எனவே, கோலப்பன் குழுவினுடைய அறிக்கையை நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மீனவர்களுக்கு எப்படியெல்லாம் சட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறோமோ, அறிவித்திருக்கிறோமோ அதைப்போன்று விவசாயத் தொழிலாளர்களுக்கும் கொண்டு வந்து அவற்றை அமல்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் விவசாயிகளுடைய நெல்லுக்கு 50 கோடி ரூபாய் மானியம் வழங்குவதாக மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுடைய அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஒரு குவிண்டாலுக்கு குறைந்தபட்சம் நூறு ரூபாயாவது உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கரும்புக்கும் ஒரு டன்னுக்கு ஆயிரம் ரூபாய் வழங்குவது பற்றிப் பரிசீலனை செய்து அதையும் வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தது டி.கே.எம். 9 ரக நெல். அதை வெளி மாநிலங்களுக்குக் கொண்டு போகலாம் என்பது விவசாயிகளிடையே மிகப் பெரிய வரவேற்பைப் பெற்றிருக்கிறது; நல்ல வரவேற்பு இருக்கிறது. இருப்பினும் நம்முடைய அதிகாரிகளும் சரி, வியாபாரிகளும் சரி, நரித் தந்திரம் படைத்தவர்கள். எல்லோரையும் ஏமாற்றக்கூடிய விதத்திலே அவர்கள்



செய்வார்கள். ஏனென்றால் சென்ற அரசைப் பார்த்தீர்கள் என்றால் ஏழு container - ration அரிசியைக் கடத்தினார்கள். அதிகாரிகளுடைய அனுமதியோடு செய்யப்பட்டது அதெல்லாம். (மேசையைத் தட்டும் ஒலி) ஒன்றிரண்டு அல்ல; தமிழ்நாட்டிலேயே. நெல் விளையாத கன்னியாகுமரியிலிருந்து 7 container-களில் போனது அரிசி. அதையெல்லாம் செய்தவர்கள்; ஆகவே எல்லாவற்றுக்கும் தயாராக இருப்பார்கள். ஆகையினால் இப்போது டி.கே.எம்.9 என்று சொல்லி எல்லாவற்றையும் சேர்த்து வேறு மாநிலங்களுக்குக் கொண்டுபோனால் நம்முடைய மாநிலத்தில் பற்றாக்குறை ஏற்பட்டுவிடும். இதுசம்பந்தமாக அதிகமான முன்னெச்சரிக்கையோடு காரியங்களைச் செய்ய வேண்டும். இதில் அதிகாரிகளும் பழி வாங்குவார்கள். அதுபோன்று வியாபாரிகளும் நரித் தந்திரத்தோடு செயல்படுவதற்கான முயற்சிகளை மேற்கொள்வார்கள் என்பதைத் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

*பிற்பகல் 12-20*

அடுத்து நீர்நிலைப் பகுதி சம்பந்தமாகப் பேச நான் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களிடத்திலே விதி 74-ன்கீழ் அறிவிப்புக் கொடுத்தேன். நேற்றுகூட இதற்குப் பதில் வந்திருக்கிறது. இதுபற்றி நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கிற காரணத்தால், இதை சிறப்புக் கவன ஈர்ப்பு அறிவிப்பாக எடுத்துக்கொள்ள முடியாது என்று சொல்லப்பட்டிருக்கிறது. தமிழ்நாட்டினுடைய நீர்நிலைமை எப்படி இருக்கிறது என்று சொன்னால், பெரும்பாலும் அண்டை மாநிலங்களை நம்பி வாழவேண்டி இருக்கிறது. கர்நாடகா, ஆந்திரா, கேரளா ஆகிய மாநிலங்களை நம்பி நாம் இருக்கிறோம். அதை நம்பித்தான் விவசாயம் செய்ய வேண்டியிருக்கிறது. குடிதண்ணீர்ப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டிய அவசியம் இருக்கிறது. நீர்நிலைகளைப் பாதுகாக்க வேண்டும் என்று சொன்னால் அதற்கான விரிவான திட்டங்களை இந்த அரசு கொண்டுவர வேண்டும்.

தரிசு நில மேம்பாட்டுத் திட்டங்களைக் கொண்டுவர வேண்டும் என்று சொன்னால், அந்தத் திட்டம் சிறப்பாகச் செயல்பட வேண்டும் என்று சொன்னால், தமிழ்நாட்டில் பெய்யக்கூடிய மழைநீரைப் பாதுகாக்கக்கூடிய சிறப்புத் திட்டங்களை முதலில் நீங்கள் கொண்டுவர வேண்டும். அப்படிக் கொண்டுவந்தால்தான் தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தை நிறைவேற்ற முடியும். இல்லையென்றால் இந்த அரசு கொண்டுவரக்கூடிய திட்டங்களை பிற அரசு வருகிறபோது

நடைமுறைப்படுத்த முடியாமல் போய்விடும். உதாரணமாக, சென்ற அரசு கொண்டு வந்த உழவர் சந்தைத் திட்டம் இப்போது நம்மால் கைவிடப்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. இவையெல்லாம் முன்யோசனை இல்லாமல் கொண்டுவந்த திட்டங்கள். எனவே தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தைக் கொண்டுவர .வேண்டும் என்று சொன்னால் நீர் ஆதாரங்களைக் கண்டிப்பாகச் செயல்படுத்த வேண்டும். மழை நீரைப் பாதுகாக்க சிறப்புத் திட்டங்களைக் கொண்டுவர வேண்டும். அதுவும் தஞ்சை மாவட்டம் போன்ற காவிரிப் படுகையில் ஆயிரக்கணக்கான ஏக்கர்களில் நீர் ஆதாரங்கள் சேமிக்கக்கூடிய கால்வாய்களை உருவாக்குவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். அப்படிக் கொண்டு வருகிறபோதுதான் நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிட்டிருப்பதுபோல இலவச மின்சாரத்திற்கு அரசு கொடுக்கக்கூடிய மானியம் குறைக்கப்படும்; தரிசு நில மேம்பாட்டுத் திட்டங்கள் செயல்படும். நீர் இல்லாமல் திட்டங்களை நிறைவேற்ற முடியாது; ஏட்டளவில்தான் இருக்கும். ஆகவே இதுபோன்ற திட்டங்களுக்கு முன்னுரிமை கொடுத்து, அதற்கான பணிகளை நீங்கள் மேற்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். திட்டத்திற்கு உட்பட்டு இருப்பதைத்தான் நான் சொல்கிறேன்.

காவிரிப் படுகையில் சுமார் 100 ஆண்டுகளுக்கு மேலாக இருக்கக்கூடிய, 204 பாலங்களைப் புதுப்பிக்கின்ற நல்ல திட்டத்தைக் கொண்டு வந்ததற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், நிதி அமைச்சர் அவர்களுக்கும் நான் பாராட்டைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். 100 கோடி ரூபாய் இதற்காக Budget-லே ஒதுக்கப்பட்டிருக்கிறது. பாலங்களை எடுத்துக்கொண்டால், என்னுடைய தொகுதியிலேகூட இப்போது பல பாலங்கள் உடைந்து, மாற்றுவழிப் பாதையில் போக வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. இதற்கு ஒரு நல்ல முயற்சியை எடுத்திருக்கிறார்கள்.

அடுத்து மாநிலச் சாலை மற்றும் மாவட்டச் சாலைகளுக்கு 1,900 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது ஒரு நல்ல திட்டம். வரவேற்கக்கூடிய திட்டம். உண்மையிலேயே உணர்ந்து, அரசு இதனைச் செய்திருக்கிறது. கிராமப்புறத்திலே வாழ்ந்து கொண்டிருக்கிற 80 சதவிகித மக்கள், ஊராட்சி ஒன்றியச் சாலைகள், மாவட்ட ஊராட்சிச் சாலைகள், பேரூராட்சிச் சாலைகளைச் செப்பனிட வேண்டும் என்று நினைக்கிறார்கள்.



நம்முடைய சட்டப் பேரவை உறுப்பினர்கள் எல்லாம் தொகுதிப் பக்கம் போகும்போது – யாரும் எதையும் கேட்டிருக்க மாட்டார்கள் – ஒவ்வொருவரும், ஒவ்வொரு இடத்திலேயும் கேட்பது, சாலைகளைக் கொடுங்கள், எங்கள் சாலைகளைப் பாருங்கள் என்பதுதான். இந்த அரை நூற்றாண்டிலே அநேகமாக இந்தக் கோரிக்கையைத்தான் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். நானே 25 வருடங்களாக சட்டமன்ற உறுப்பினராக இருக்கிறேன், இதைத்தான் கேட்டுக் கொண்டிருக்கிறேன். வேறு எதையும் கேட்டதில்லை. எந்த ஊருக்குப் போனாலும், கிராமப்புறத்திலே இருக்கிற சாலைகளைப் பாருங்கள், இந்தச் சாலைகளைச் செப்பனிட்டுத் தாருங்கள் என்று கேட்கிறார்கள். எனவே உள்ளாட்சித் துறைகளுக்கு அதிகமான நிதியை ஒதுக்கி, மாவட்ட ஊராட்சிகளுக்கு அதிகமான நிதி அதிகாரங்களை வழங்கி, இதற்கான நிதியை இந்த அரசு ஒதுக்கி பணிகளைச் செய்ய வேண்டும். இப்போதுள்ள நிலையினை மாற்றுவதற்கான முயற்சிகளை நீங்கள் எடுத்தால்தான் அடிப்படைப் பிரச்சினையில், 80 சதவிகித மக்கள் வாழ்க்கையை நடத்தக்கூடிய பிரச்சினையில் நிரந்தரத் தீர்வு காண முடியும். அதைப் பரிசீலித்து அதற்கான சிந்தனையை இந்த அரசு மேற்கொண்டு, நிதியை ஒதுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*பிற்பகல் 12–25*

அடுத்ததாக ஆலைகள். நிதியமைச்சர் அவர்கள் பல்வேறு விஷயங்களைச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் மூடிய ஆலைகளைப் பற்றி எதுவும் குறிப்பிடவில்லை. தமிழ்நாட்டில் பல இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் வேலையிழந்து நிற்கிறார்கள். ஆகவே மூடியிருக்கிற ஆலைகளைத் திறப்பதற்கு நம்முடைய அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று பஞ்சாலைகள். தமிழகத்தில் இருக்கிற விசைத்தறி, கைத்தறி ஆலைகள் என்பது சாதாரணமல்ல. 18 ஆலைகள் மூடப்பட்டிருக்கின்றன. இறக்குமதிக் கொள்கையால் அந்தத் தொழில் பாதிக்கப்பட்டிருக்கிறது. 4 கோடி என்ற அளவுக்கு துணிகளை உற்பத்தி செய்யக்கூடிய நம்முடைய மாநிலத்தில், இறக்குமதிக் கொள்கையால் அத்தொழில் தடைப்பட்டு நிற்கிறது. சேலம், நாமக்கல், கோவை, திருப்பூர், கரூர், ஈரோடு, திருச்செங்கோடு, பள்ளிப்பாளையம் போன்ற பகுதிகளிலே இருக்கக்கூடிய (குறுக்கீடு) – எடப்பாடியையும் சேர்த்துக்கொண்டால் –

கைத்தறி, விசைத்தறித் தொழில் பெரிய அளவுக்குப் பாதிக்கப்பட்டிருக்கிறது. பல இலட்சம் பேர் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவருவது என்னவென்றால், நாம் 2.5 சதவிகிதம் வரியை உயர்த்தி இருக்கிறோம். ஆனால் மகாராஷ்டிராவில் 1 சதவிகிதம்தான் வரி. இதையும் கைத்தறி, விசைத்தறித் தொழிலாளர்கள் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

அதேபோன்று Bandage துணி. இராஜபாளையம் அருகில் உள்ள சத்திரப்பட்டியில், தமிழ்நாட்டில் ஒரே ஒரு இடத்தில் மட்டுந்தான் அது உற்பத்தி செய்யப்படுகிறது. ஏற்கெனவே 1 கோடி ரூபாய் அளவுக்கு அவர்கள் உற்பத்தி செய்தால் அவர்களுக்கு வரியே இல்லை என்கிற நிலையை சென்ற அரசு அறிவித்திருக்கிறது. அந்தத் தொழிலில் ஈடுபட்டவர்கள் நலிவடையாமல் பாதுகாக்கப்பட்டிருக்கிறார்கள். அதைத் தொடர்ந்து கடைப்பிடிப்பதோடு மட்டுமல்லாமல், அப்படி அறிவிக்கப்பட்ட பின்னால் ஏற்கெனவே இருந்த 1 கோடி ரூபாய் வரியைக் கட்ட வேண்டும் என்று அவர்களை நிர்பந்தம் செய்வதாகத் தெரிகிறது. அதையும் இந்த அரசு பரிசீலனை செய்து, அவர்களுக்கு நீங்கள் மறுவாழ்வு அளிப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து தீப்பெட்டித் தொழில் பற்றி இங்கே கேள்வி நேரத்திலே விவாதம் வந்திருக்கிறது. இந்த விவாதம் நாடாளுமன்றத்திலே கிளப்பப்பட்டபோது, தீப்பெட்டித் தொழிலில் புதிய இயந்திரத் தொழிலைப் புகுத்துவதற்கு மத்திய அரசு அனுமதி வழங்கவில்லை என்றும் நாங்கள் எந்த ஒரு அனுமதியையும் கொடுக்கவில்லையென்றும், அங்கு இருக்கக்கூடிய அதிகாரிகள் உங்களிடத்திலே வேறு விதமாகச் சொல்லி, ஏமாற்றி, உங்களிடத்திலே அனுமதி பெற்றுவிடுகிறார்கள் என்றும் நாடாளுமன்றத்திலே பதில் அளிக்கப்பட்டிருக்கிறது. சமீபத்திலே நடந்த விஷயம். அப்படிப் பதில் அளிக்கப்பட்டது. அதற்கான நகலை வேண்டுமென்றால் நாளைக்கு நான் தங்களிடத்திலே கொடுக்கத் தயாராக இருக்கிறேன். அதை ஒரு கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர வேண்டும். பல இலட்சம் தீப்பெட்டித் தொழிலாளர்கள் நடத்திய பேரணியில் மாண்புமிகு பேரவைத் தலைவரும், நானும் – நாங்கள் இரண்டு பேரும் – கலந்துகொண்டு சமீபத்திலே பேசினோம்; தேர்தல் நடைபெறுவதற்கு முன்பாகப் பேசினோம். அப்போது 'அண்ணா திராவிட முன்னேற்றக்



கழக ஆட்சி வரப்போகிறது, உங்களுடைய வாழ்வுக்கு விடிவுகாலம் காண்போம்' என்று பேரவைத் தலைவர் அவர்களும் சொன்னார்கள். நானும் சொன்னேன். அந்த நம்பிக்கை எங்களிடத்திலே இருக்கிறது. அந்த நம்பிக்கையோடு தீப்பெட்டித் தொழிலாளர்களை நீங்கள் பாதுகாக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

தேங்காய் உற்பத்தியில் பெரிய அளவுக்கு விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். கொப்பரைத் தேங்காய் கொள்முதலில் ஏற்கெனவே பல முறைகேடுகள் நடைபெற்றிருக்கின்றன. கேரளாவில் தேங்காயை அரசாங்கமே கொள்முதல் செய்கிறது. அதேபோல, சென்ற அரசின் ஆட்சியிலே கொள்கையாக இதை ஏற்றுக்கொண்டார்கள். எனவே தேங்காய்க் கொள்முதல் செய்வதைப்பற்றி இந்த அரசு மறுபரிசீலனை செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைவிட நல்ல பல திட்டங்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். ஆதிதிராவிட மக்கள், கிராமப்புறங்களில் படிக்கக்கூடியவர்களுக்கு, தொழிற்படிப்புக் கல்லூரிகளில் 25% என இட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது எவ்வளவு பெரிய வாய்ப்பு என்கிறீர்கள்! எத்தனை மாணவர்களுக்கு பொறியியல் படிப்புக்கு இடம் கிடைத்திருக்கிறது! எத்தனை மாணவர்களுக்கு மருத்துவக் கல்லூரிகளில் இடம் கிடைத்திருக்கிறது! வாழ்க்கையிலே நினைத்துப் பார்க்க முடியாத அளவிற்கு இன்பத்திலே அவர்கள் இருக்கிறார்கள். இதிலே கல்வி அமைச்சர் அவர்களுக்குச் சொல்ல வேண்டிய ஒன்று உள்ளது. கிராமப்புறங்களிலே உள்ள பேரூராட்சிகளிலே உள்ள மேல்நிலைப் பள்ளிகளிலே படிக்கின்ற மாணவர்களுக்கு அந்த விதி பொருந்தாமல் இருக்கிறது. அதை நீக்க வேண்டும். கிராமங்களிலே, பேரூராட்சிகளில் உள்ள மேல்நிலைப் பள்ளிகளிலே படித்தாலும் அந்த மாணவர்களுக்கும் அரசு அறிவித்த சலுகை கிடைக்கிறவகையில் நீங்கள் அதற்கான அறிவிப்பைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று 100 நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும், 125 உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகவும் உயர்த்தி இருப்பது உண்மையிலேயே ரொம்ப நல்ல விஷயம். அது பாராட்டுதற்குரியது. இதுபோன்ற நல்ல விஷயங்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இதில் ஒரு கருத்தைச் சொல்ல வேண்டும். ஆசிரியர்கள் இடமாற்றம். இதில் லஞ்ச, லாவண்யம் இடம்பெறவில்லை. அரசின் தலையீடு இல்லாமல் நடைபெற்றிருக்கிறது. அரசியல் தலையீடு இல்லாமல், லஞ்ச, லாவண்யத்திற்கும் வாய்ப்பு இல்லாதவகையில், ஒரு சம நிலைப் பணியை நம்முடைய கல்வி அமைச்சர் அவர்கள் கொண்டுவந்து, ஆசிரியர்களை இடமாற்றம் செய்திருக்கிறார்கள். இதில் கல்வி அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருவது என்னவென்றால், நான் மேல்நிலைப் பள்ளிகளுடைய பெற்றோர்–ஆசிரியர்கள் சங்கத்தினுடைய தலைவர். அதிலே எங்களுக்கு 32 ஆசிரியர்கள் இருக்கிறார்கள். அதில் 20 பேர் போய்விட்டார்கள். 12 பேர்தான் இருக்கிறார்கள். இப்போது 12 பேருக்கும் P.T.A.விலிருந்து ஆசிரியர்கள் போடவேண்டியிருக்கிறது. குறைந்தபட்சம் 1500 ரூபாயாவது பாடம் தொடங்குவதற்குக் கொடுக்க வேண்டியிருக்கிறது. இன்றைக்கு பள்ளி மாணவர்களிடத்திலே, பெற்றோர்களிடத்திலே வசூல் செய்ய முடியாது. வசூல் செய்யக்கூடாது. இது நமது உத்தரவு.

*பிற்பகல் 12–30*

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடும்போது மாறுதலின் காரணமாக அவர்களுடைய பள்ளியிலிருந்து பல ஆசிரியர்கள் இடம் பெயர்ந்திருக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த இடங்களையெல்லாம் இன்னும் ஒரு மாதத்துக்குள்ளாக நிரப்புவதற்கு அனைத்து நடவடிக்கைகளையும் இந்த அரசு எடுத்துக்கொண்டிருக்கிறது. ஆகவே காலி இடங்களுக்கு நீங்கள் சொல்வதுபோல, பெற்றோர்– ஆசிரியர் சங்கங்கள் மூலமாக ஆசிரியர்களை அமர்வு செய்தால்கூட அதற்குரிய பணத்தை அரசு ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. ஜி. பழனிசாமி:** ரொம்ப நன்றி. பெற்றோர்–ஆசிரியர் சங்கத்தின் மூலமாக ஆசிரியர்களை நியமித்து, அவர்களுக்கான பணத்தை அரசே கொடுக்க வேண்டுமென்று சொல்கிற ஒரு நல்ல விதியை, ஒரு முன்னுதாரணத்தை கல்வி அமைச்சர் கொண்டு வந்தார் என்றால் உண்மையிலேயே அது எங்களுக்கு மகிழ்ச்சியளிக்கிறது.

அதேபோன்று ஊரிலேயிருந்து இன்று காலையிலே எனக்குத் தந்தி வந்திருக்கிறது. திருத்துறைப்பூண்டி தொகுதி எடையூரிலே உள்ள மேல்நிலைப் பள்ளியிலே ஆசிரியர் பற்றாக்குறை இருக்கிறது; இந்தப் பற்றாக்குறையைப்பற்றி உடனடியாக நீங்கள் சட்டமன்றத்திலே அமைச்சர்



அவர்களிடத்திலே சொல்லி, அதை உடனடியாகப் போடவேண்டுமென்று சொன்னார்கள். அதனாலேதான் நான் அந்த விஷயத்தை உங்களுடைய கவனத்துக்குக் கொண்டு வந்திருக்கிறேன்.

அதேபோன்று கல்வி பயிலும் ஆதிதிராவிட பழங்குடி இன மாணவிகளுக்கு சைக்கிள் வழங்குகிற திட்டம். இது ஓர் அற்புதமான திட்டம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய சிந்தனையிலே உதித்த திட்டம். இந்தத் திட்டத்தை உண்மையிலேயே நாங்கள் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறோம். இது ஒரு நல்ல திட்டம்.

அதோடுமட்டுமல்லாமல், நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலேயும், கல்வி அமைச்சர் அவர்களிடத்திலேயும் கேட்டுக்கொள்ள விரும்புவது, தமிழ்நாட்டிலே 1 ஆம் வகுப்பு முதற்கொண்டு 5 ஆம் வகுப்பு வரை ஆங்கில மழலைப் பள்ளிகள் உள்ளிட்டு இருக்கிற அனைத்துப் பள்ளிகளிலும் தமிழ் மொழி பயிற்சி மொழியாக ஆக்கப்பட வேண்டும். இது மிக அவசியமானது. இதை நாம் செய்யவே முடியவில்லை. ஆனால் சொல்லிக் கொண்டேயிருக்கிறோம். இதை எங்கேயிருந்து தொடங்கவேண்டும் என்றால் தலைமைச் செயலகத்திலிருந்து உள்ளாட்சி அமைப்புகள் வரையிலும் கொண்டு வரவேண்டும். அப்படிக் கொண்டு வந்தால்தான் அதை நிறைவேற்ற முடியும். ஆகவே அதற்கான முயற்சிகளையும் நீங்கள் மேற்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, ஆதிதிராவிட மாணவர்கள், பிற்பட்ட மாணவர்களுக்கு வழங்கப்படும் hostel fees அதிகமாக உயர்த்தப்பட்டிருக்கிறது. 225 ரூபாயிலிருந்து 300 ரூபாயாக உயர்த்தியிருக்கிறீர்கள். உறுப்பினர்கள் எல்லாம் சொன்னார்கள். இன்றைக்கு ஏறியிருக்கிற விலைவாசியில் அது போதாது, அதை 350 ரூபாயாகவாவது உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று அவர்கள் கேட்டிருக்கிறார்கள். சமூக நல அமைச்சருக்கு ரொம்ப வேண்டியது இது. அவர்களுக்குத்தான் அந்தச் சிரமம் எல்லாம் இருக்கிறது. ஆகையினாலே அதையும் நீங்கள் உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அப்புறம் பெண் குழந்தைகளைப் பற்றி. நம்முடைய ஐ. கணேசன் ரொம்ப நன்றாகச் சொன்னார்கள். * தெரிந்துதான் நான்கு பெண் குழந்தைகள். * தெரிந்துதான் எங்களுக்கு மூன்று பெண் குழந்தைகள். எங்களுடைய

* உறுப்பினர் திரும்பப் பெற்றுக் கொண்டதற்கிணங்க மாற்றப்பட்டது.

வாழ்க்கையிலே அதுதான் நிம்மதி. குழந்தைகளை ஈன்றெடுத்துவிட்டோம். எப்படித் திருமணம் பண்ணிக் கொடுப்பது என்று தெரியவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்களே, என்னையும் அதிலே சேர்த்துக் கொள்ளுங்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உங்களையும் சேர்த்துக்கொள்ள வேண்டுமா? ஏழை எளிய மக்கள் எப்படி பெண்களுக்குத் திருமணம் செய்து கொடுப்பது என்று தடுமாற்றமாக இருக்கிறார்கள். ஆக, இரண்டு பெண்களுக்காவது திருமணம் பண்ணிக் கொடுக்கிற ஒரு நல்ல வாய்ப்பை உருவாக்கித் தந்திருக்கிறீர்கள். மூன்று பெண் குழந்தைகள், நான்கு பெண் குழந்தைகள் இருக்கிறவர்களுக்கும் இந்தச் சலுகைகளை, இரண்டு பெண் குழந்தைகளுக்காகவாவது சலுகை அளிக்கிற திட்டத்தை நீங்கள் கொண்டுவர வேண்டும். குடும்பக் கட்டுப்பாட்டிலே தமிழ்நாடுதான் முதல் இடத்திலே இருக்கிறது. அதனால் இங்கே வாக்காளர்கள் எண்ணிக்கை குறைந்து போய்விட்டது.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ** மூன்று பெண் குழந்தைகள் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். அதனைத் தெரிந்துதான் மூன்று பெண் குழந்தைகள என்று மாற்றிக்கொள்ளும்படி நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி அவர்களே, அரை மணி நேரம் கடந்துவிட்டது. சீக்கிரம் உரையை முடித்து விடுங்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** ** என்பதை வேண்டுமானால் அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடுங்கள். நான் வாபஸ் வாங்கிக்கொள்கிறேன். தெரிந்தே, ஆண் குழந்தை வேண்டுமென்று, தெரிந்தே பெண் குழந்தையாக ஈன்றெடுதது விட்டார்கள். அது அவர்கள் செய்த பாவம் அல்ல. ஆகையினால் அதையும் இங்கே அமைச்சர் அவர்கள் பரிசீலிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நல்ல திட்டம் இது. எல்லா இடங்களிலும் நல்ல வரவேற்பு இருக்கிறது. இதிலேயிருக்கிற சிறிய குறைபாடுகள் நீக்கப்பட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

** உறுப்பினரின் வேண்டுகோளுக்கிணங்க அகற்றப்பெற்றது.



மருத்துவமனைகள் பற்றி இங்கே சொல்லியிருக்கிறார்கள். உண்மையிலேயே இன்றைக்கு இருக்கிற மருத்துவமனைகளுடைய நிலைமை எப்படியிருக்கிறது என்று சொன்னால், ஒரு அரசு மருத்துவமனைக்குப் போக வேண்டுமென்று சொன்னால், அந்த மருத்துவமனை நோய்களைப் போக்க வேண்டிய மருத்துவமனையாக இருக்க வேண்டும். ஆனால் மருத்துவமனை நோய்களுடைய இருப்பிடமாகவே இருக்கிறது. யாராவது ஒருவர் போய் ஒரு வைத்தியம் பார்க்க வேண்டுமென்றால் வேறு வியாதியை அந்த மருத்துவமனையிலேயிருந்து எடுத்துக்கொண்டு வருகிறார். கருவாட்டுக் கடைக்கும், மருத்துவமனைக்கும் ஒரே வாடையாகவா இருக்க வேண்டும். எந்த ஆஸ்பத்திரியிலும் நுழைந்து வெளியே வர முடியாது. நான் ஒவ்வொரு தடவையும், ஒவ்வொரு மாதமும் எங்கள் தாலூகா மருத்துவமனைக்குச் சென்று வருவது வழக்கம். அங்கே போய்ப் பார்த்தோம் என்று சொன்னால் மருந்து வாடையைவிட நோய் வாடை இருக்கிறது பாருங்கள். மிகவும் மோசமாக இருக்கிறது. நீங்கள் Doctor-களை நியமிக்கிறீர்களோ, நியமிக்கவில்லையோ, அதற்கு வேண்டிய துப்புரவுத் தொழிலாளர்களை நியமியுங்கள். அங்கே துப்புரவுத் தொழிலாளர்களே இல்லை. எந்த மருத்துவமனையிலும் கிடையாது. அநேகமாகப் பார்த்தால் 1,000 நோயாளிகள் வரக்கூடிய இடத்திலே ஒரே ஒரு துப்புரவுத் தொழிலாளி. அவர் போஸ்ட்–மார்ட்டத்துக்கு கொண்டு போவாரா, இல்லை அங்கே பெருக்குவதற்குப் போவாரா, Doctor வீட்டிற்கு வேலை பார்ப்பாரா? இவ்வளவு மோசமான நிலைமை. அவ்வளவு இடமும் காலியாக இருக்கிறது. ஆகவே துப்புரவுத் தொழிலாளர்களை நீங்கள் எல்லா மருத்துவமனைகளிலும் நியமிப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

*பிற்பகல் 12–3.5*

ஓர் ஆரம்ப சுகாதார நிலையத்துக்குப் போனேன். அங்கே பார்த்தீர்கள் என்று சொன்னால் ஒரு Doctor இருந்தார். ஒரு Nurse இருந்தார். ஒரு van இருந்தது. அதில் இருக்கக்கூடிய 2 Helpers இருந்தார்கள். அவர்களுக்கு ஓராண்டிற்கு 1,60,000 ரூபாய் சம்பளம். அங்கே கொடுக்கக்கூடிய மருந்து இருக்கிறது பாருங்கள் அது 50,000 ரூபாய்தான். அந்த ஆரம்ப சுகாதார நிலையத்தில் 1,60,000 ரூபாய் சம்பளம் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். அதில் மருந்துகளை அதிகப்படுத்த வேண்டும். யாரைப் பார்த்தாலும் சீட்டுகள்தான் எழுதிக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இது நான் நேரிலே போய் விசாரித்தது. அமைச்சர்களுக்கு அந்தப் பட்டியல் தெரியும். அவர்களே வழங்குவதுதானே? அவர்கள் சொல்லி இருப்பார்கள், கரெக்டாக டைரக்டரே

சொல்லி இருப்பார். ஆக, அதற்கெல்லாம் உரிய மருந்துகளை வழங்குவதற்கு நீங்கள் ஏற்பாடு செய்ய வேண்டும்.

அதேபோன்று என்னுடைய தொகுதியிலே உள்ள தாலூகா மருத்துவமனை பற்றி பல தடவை நான் பேசிப் பேசி அலுத்துப் போய்விட்டது. கேள்வி கேட்டுப் பார்த்தேன். பேசியும் பார்த்து விட்டேன். Director Office மாடியிலே ஏறி ஏறி இறங்கி அலுத்துப் போய்விட்டது. எந்தக் காரியமும் நடைபெறவில்லை. என் தொகுதியிலே இருக்கக்கூடிய தாலூகா மருத்துவமனை மிகவும் பழையது. போராடிப் போராடி ஒரு கோடியே 60 லட்ச ரூபாய்க்கு ஒரு O.P. Block மட்டும் கட்டியிருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களும், முதலமைச்சர் அவர்களும் 200 படுக்கையோடு அந்த ஆஸ்பத்திரியைத் தொடங்குவதாக வாக்குறுதி தந்திருக்கிறார்கள். பதில் வந்திருக்கிறது. உண்மையிலேயே மகிழ்ச்சியாக இருக்கிறது. இந்த முறை அது நிறைவேற்றப்படும் என்று நான் எதிர் பார்க்கிறேன். நம்பிக்கையோடு இருக்கிறேன். அதையும் நிறைவேற்றிக் கொடுக்க வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே, என் தாலூகாவிலே ஆரம்ப சுகாதார நிலையங்கள் 6 இருக்கின்றன. அவற்றிற்கும் இதுபோன்ற வசதிகளை சிறப்பாகச் செயல்படுத்தித் தர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஊர்களைச் சொன்னால் நேரம் அதிகமாகிவிடும். நான் பேரவைத் தலைவரைப் பார்த்துத்தான் நேரத்தின் அருமையைத் தெரிந்துகொண்டு பேசுகிறேன்.

அடுத்து சட்டமன்ற உறுப்பினருடைய மேம்பாட்டு நிதி. இப்போது 82 இலட்ச ரூபாயை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். உண்மையிலேயே மகிழ்ச்சி; அதற்காக நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஒரு கோடி ரூபாயாகக் கொடுத்துவிடுங்கள். ஒரு கோடி ரூபாயாகக் கொடுங்கள். அந்த ஒரு கோடி ரூபாய் கொடுத்தீர்கள் என்று வைத்துக்கொள்ளுங்கள், அதிகாரிகளைவிட சட்டமன்ற உறுப்பினர்களாகிய நாங்கள் சரியாகச் செயல்படுவோம். நான் சட்டமன்ற உறுப்பினராக இருந்த காலத்தில் எனக்கு வந்திருக்கிற அந்தப் பணத்திலிருந்து முறையாக எந்தெந்த இடங்களில் பள்ளிக்கூடம் வேண்டுமோ அந்தந்த இடங்களில் பள்ளிக்கூடம் கட்டினோம். எந்த ஊரில் படித்துறை இல்லையோ அங்கே கட்டினோம். எந்த ஊரில் சாலையைப் போட்டுக் கொடுக்க வேண்டும் என்று சரியாகப் பார்த்து tender முறையிலே வேலையைச் செய்யுங்கள். M.L.A. சிபாரிசில் கொடுக்காதீர்கள்; அந்தப் பணத்திற்கு Tender முறையிலே வேலை செய்யுங்கள். அப்போதுதான் சரியாக இருக்கும். இதைச் சென்ற சட்டமன்றக் கூட்டத்திலேயும் நான் வலியுறுத்திப் பேசியிருக்கிறேன். அதுதான் அப்போது சரியாகவும் நேர்மையாகவும் நடந்தது. அந்தவகையிலே இப்போதும் செய்யுங்கள். ஆக அதை ஒரு கோடி ரூபாய் ஆக்குங்கள். இப்போது அமைச்சரைக் கேட்டுக் கொண்டிருக்கும் பள்ளிக்கூடத்திற்கு அப்போது நாங்கள் கேட்டுக்கொண்டிருக்க மாட்டோம். அடுத்த முறை, நாங்களே பணம் கொடுத்துவிடுவோம். ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு யாராவது கட்டடம் வேண்டுமென்றால் கொடுத்து விடுவோம். பல்வேறு வேலைகளுக்குப் பணம் கொடுக்க வேண்டுமா, கொடுத்துவிடுவோம். முக்கால்வாசி நாங்கள் கொடுப்பது உள்ளாட்சித் துறை அமைச்சருக்குத்தான் கொடுப்போம். ஆமாம். கூட்டுக் குடிநீர்த் திட்டம். சமூக நலத் துறை, இதற்கெல்லாம் நாங்கள் செய்கிறோம்.



பொதுவாக, அதிகாரிகள் எந்தச் சட்டமன்ற உறுப்பினரையும் கலந்துபேசி ஒரு திட்டத்தைச் செய்வதே கிடையாது. என்ன செய்கிறார்கள் என்றால் அவர்கள் இஷ்டத்திற்கு அறிவித்து விடுவார்கள். நாங்கள் என்றால் எந்த இடத்தில் சிரமம் இருக்கிறது என்று கண்டறிந்து, எது அவசியம் என்று பார்த்து, தேவைப்படுகிற இடத்தைப் பார்த்து நிதிகளை ஒதுக்குவோம். ஆக ஒரு கோடி ரூபாயாக நீங்கள் உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்று நான் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளக்.கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உரையைச் சீக்கிரம் முடித்துக் கொள்ளுங்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** அடுத்து நம்முடைய பத்திரிகையாளர்கள். 2 லட்சம் ரூபாய் ஓய்வு பெறுகிறபோது என்று சொல்லியிருக்கிறார்கள். அது நல்ல அறிவிப்பு. பிறகு அவர்களுக்கு வீடு கொடுப்பதில் கவனம் செலுத்துவதாகச் சொல்லியிருக்கிறீர்கள். பத்திரிகை ஆசிரியர் குடியிருப்பில் குடியிருப்பவர்கள் பல பேர் இறந்து போய்விட்டார்கள். அவர்கள் குடும்பம் மட்டும் இருக்கிறது. அவர்களுக்கு வேறு எந்த வருமானமும் இல்லை. அதுபோன்ற வீடுகளில் இருக்கிற பத்திரிகை ஆசிரியர்களின் குடும்பங்களுக்கு அந்த வீட்டை இனாமாகக் கொடுத்து விடலாம். அதில் ஒன்றும் பிரச்சினையே கிடையாது. அதற்கு பெரிய தொகை வரப்போவதும் இல்லை. அவர்கள் யாரும் கேட்க முடியாது. அவர்கள் பேசவும் முடியாது. ஆக அந்த ஒரு கோரிக்கை இருக்கிறது. அந்தக் கோரிக்கையை நீங்கள் நிறைவேற்றித் தரவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

விளையாட்டுத் துறையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நல்ல ஆர்வம் காட்டியிருக்கிறார்கள். அதுமாதிரி ஒலிம்பிக் போட்டியிலே கலந்துகொள்ளும்போது, மாநில அளவிலே, அகில இந்திய அளவில் கலந்துகொள்கிறபோது, அவர்களை ஊக்குவிக்கும்பொருட்டு மற்ற விளையாட்டோடு மட்டுமல்லாமல் இன்றைக்கு பளு தூக்கும் போட்டிகள் கிராமப்புறங்களிலே, தாலூகா தலைநகரங்களிலே சரியாக நடத்திக் கொண்டிருக்கிறவர்களுக்கு கருவிகள் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். இல்லையென்றால் சட்டமன்ற உறுப்பினர்களே கொடுக்கலாம் என்று அனுமதி கொடுத்தால்கூட நாங்கள் அவர்களை ஊக்குவிக்கத் தயாராக இருக்கிறோம். ஆக அதை நீங்கள் பரிசீலனை செய்து அவர்களுக்கும் வழங்கப்பட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*பிற்பகல் 12-40*

அடுத்து 44-வது எண் அரசாணை. ஏற்கெனவே, நம்முடைய அரசு இருந்தபோது வலியுறுத்தினேன். நாம் சட்டமன்றத்திலே பேசியிருக்கிறோம். அந்த 44 ஆம் எண் அரசாணையை இரத்து செய்து, மீண்டும் பழைய நிலையை அமல்படுத்த வேண்டும்.

அதேபோன்று சிறு தொழிலைப் பாதுகாப்பதற்கு இந்த 75-வது எண் அரசாணையைத் தளர்த்தியிருப்பது உண்மையிலேயே வரவேற்க வேண்டியது. சிறு தொழில், குறுந் தொழிலைப் பாதுகாக்கின்ற ஒரு நல்ல திட்டம். அதையும் நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த உணவு மண்டலத்தை ஒரு மண்டலமாக ஆக்க வேண்டும். பல உணவு மண்டலமாக இருப்பதை ஒரு மண்டலமாக நடைமுறைப் படுத்தினால் பல்வேறு தவறுகளைத் தடுக்க முடியும்; சேதாரங்களைக் குறைக்க முடியும். அதற்கான முயற்சிகளை நீங்கள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

போக்குவரத்துத் துறையைக்கூட ஒரு மண்டலமாக ஆக்கலாம். எத்தனை M.D.? எத்தனை A.C.Car? எத்தனை Room? எவ்வளவு செலவு? அப்படியாவது போக்குவரத்துத் துறையிலே நிர்வாகம் சரியாக இருக்கிறதா என்றால் நிர்வாகம் சரியாகவே இல்லை. ஆகவே, ஒரு மண்டலமாக ஆக்கினால் அவற்றையெல்லாம் ஒழுங்குபடுத்துவதற்கு நல்லதொரு வாய்ப்பை உருவாக்க முடியும். ஆகவே ஒரு மண்டலமாக உருவாக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



நாடு சுதந்திரம் பெற்றபின்னால் பல்வேறு திட்டங்களை நாம் அறிவித்திருக்கிறோம். இன்றைக்கு விஞ்ஞானம் வளர்ந்திருக்கிறது. Hi-tech வந்திருக்கிறது. மாதிரி கிராமங்களை உருவாக்கி இருக்கிறோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நல்ல திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

12,619 ஊராட்சிகளில் பெண்கள் குளிப்பதற்கு, கழிவறை கட்டுவதற்கு ஒரு நல்ல திட்டம் – எல்லா இடத்திலும் கட்ட வேண்டுமென்று – கொண்டு வந்திருக்கிறார்கள். இதை வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

ஒரு சமத்துவ சுடுகாட்டை எல்லா ஊராட்சிகளிலும் கொண்டு வாருங்கள். நாட்டில் ஜாதிச் சண்டை நடந்து இருக்கிறது. பல போராட்டங்கள் இருக்கின்றன. கிராமப்புறங்களில் எல்லா இடங்களிலும் சுடுகாட்டு shed கட்டிக் கொடுங்கள் என்கிறார்கள். சாலை போட்டுக் கொடுங்கள் என்கிறார்கள். நான் எல்லா சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் வந்திருக்கின்ற கோரிக்கையைச் சொல்கிறேன். இந்த 12 ஆயிரம் ஊராட்சிகளிலும் ஓரிடத்தில் ஒரு சமத்துவ சுடுகாடுகளை நீங்கள் அமைக்க வேண்டும். நல்ல சாலைகளை, நல்ல சுடுகாடுகளை, தரமான concrete கட்டடமாகக் கட்டுவதிலே நீங்கள் முயற்சிகளை மேற்கொண்டால் இந்தியாவிற்கே தமிழ்நாடு ஒரு மாதிரி மாநிலமாக, சிறந்த மாநிலமாக தமிழ்நாடு இருக்கும். இன்னும் நம் நாட்டில் சுதந்திரம் பெற்று 50 ஆண்டுகளாக சுடுகாட்டுப் பாதை கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். நாம் எங்கெங்கோ போய்க் கொண்டிருக்கிறோம். விஞ்ஞானத்தை எல்லாம் சொல்லிக் கொண்டிருக்கிறோம். பல திட்டங்களைச் சொல்லிக் கொண்டிருக்கிறோம். எனவே, இந்த அடிப்படையான பிரச்சினையில் தீர்வு காணுவதிலே அரசு கவனம் செலுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) முடித்துவிடுகிறேன்.

பல்வேறு மானியக் கோரிக்கைகள் வருகிறபோது பல்வேறு விவரங்களைக் கூறலாம் என்று இருந்தாலும்கூட, இந்த நிதிநிலை அறிக்கையிலே பேசுவதற்கு வாய்ப்பு அளித்ததற்கு, துணைத் தலைவர் ரொம்ப பொறுமையாக இருந்து கேட்டதற்கு-மணி அடித்தாலே எனக்குப் பேச்சு வராது, இருந்தாலும் பேசுவதற்கு அனுமதி கொடுத்ததற்கு- நன்றி கூறி அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ.கு. முருகேசன்.

**திரு. ஆ.கு. முருகேசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உழைப்பவரே உயர்ந்தவர் என்கிற உன்னதக் கொள்கைக்கு உயிர் தந்த உத்தமத் தலைவியே, கடைக்கோடி தொண்டனையும் கண்டெடுத்து உயர் பதவிகள் வழங்கிய புதுயுகத்தின் புரட்சித் தலைவியே, மீண்டும் இத்தமிழ் மண்ணில், மனிதப் புனிதர் புரட்சித் தலைவர் ஆட்சியைக் கொண்டு வருவேன் என சபதமேற்று அதை நிறைவேற்றி, இன்று 6 கோடி தமிழர்களின் தலைவியாக, தமிழ்நாட்டின் முதல்வராகப் பதவியேற்று இருக்கும் எங்கள் சிங்க நிகர் தலைவியே, 'அச்சம் என்பது மடமையடா, அஞ்சாமை திராவிடர் உடமையடா' என்ற கவிஞரின் வரிகளுக்கு உயிர் கொடுத்து, 5 ஆண்டுகாலம் ஆட்சியாளர்களின் அச்சுறுத்தல்களுக்கும் அவதூறு வழக்குகளுக்கும், அஞ்சாது, துணிவோடு தன்னந்தனியாக மக்கள் துணையோடு இன்று ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருக்கும் தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களே, மிகச் சாதாரணமான என்னைக் கண்டெடுத்து ஆத்தூர் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்வு செய்து, எனது தொகுதிக்குத் தேர்தல் பிரச்சாரத்திற்கு வருகை தந்து, இன்று என்னை ஆத்தூர் சட்டமன்ற உறுப்பினராக உருவாக்கிய தங்கள் பாதமலர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைக் காணிக்கையாக்குகிறேன்.

இந்த நேரத்தில், பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் என்னை வெற்றி பெறச்செய்த ஆத்தூர் சட்டமன்றத் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் எனது நன்றியைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் அரசின் முதல் நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்து அந்த நிதிநிலை அறிக்கையில் நாட்டின் முதுகெலும்பாக விளங்கும் விவசாயப் பெருங்குடி மக்களின் வாழ்விற்கு அரிய பல திட்டங்களை அறிவித்திருக்கும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

விவசாயப் பெருங்குடி மக்களின் கடன் சுமையை நீக்கும்வகையில் ரூ.310.51 கோடி அளவிற்கு, கூட்டுறவுச் சங்கக் கடனுக்கான வட்டி மற்றும் அபராத வட்டியை இரத்து செய்தமைக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

புதிதாக ஆரம்பிக்கப்படவிருக்கும் வேளாண் வணிகத் துறை, விவசாயிகளின் வாழ்வில் முக்கிய அங்கமாக விளங்கும் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை.



சுமார் 20 இலட்சம் ஹெக்டேர் தரிசு நிலத்தை விளை நிலமாக மாற்றும் இந்த அரசின் முயற்சி நிச்சயம் வேளாண்மைத் தொழிலை மேம்படுத்தும். தமிழக விவசாயிகளின் வேண்டுகோளுக்கு இணங்க டி.கே.எம். 9 ரக நெல்லையும், அரிசியையும், வெளி மாநிலங்களுக்குக் கொண்டு செல்ல அனுமதித்தமைக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். வருங்காலத் தூண்களாம், இளைஞர்களின் நலம் காக்க பொது இடங்களில் புகைபிடித்தல், குட்கா மற்றும் பான்மசாலா ஆகியவற்றைப் பயன்படுத்தத் தடை செய்ய எடுத்துள்ள முயற்சி இளைஞர்கள் மீது இவ்வரசுக்கு உள்ள அக்கறையைக் காட்டுகிறது.

*பிற்பகல் 12–45*

சிறுபான்மை மக்களின் நலனைப்பற்றி மேடையில் பேசுவதோடு நில்லாமல் வக்ஃப் வாரியத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு ரூ.40 இலட்சத்தை இந்த நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கீடு செய்து சாதனை நிகழ்த்திக் காட்டிய மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு எனது நன்றியைக் காணிக்கையாக்குகிறேன். கிராமச் சந்தைகள் கூடும் இடங்களுக்கு மின் விளக்கு வசதியும், கழிப்பிட வசதியும், குடிநீர் வசதியும் செய்துதர ஆவன செய்ததை மகிழ்ச்சியோடு வரவேற்கிறேன். ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின மாணவிகளுக்கு பட்ட மேற்படிப்பு வரை இலவசக் கல்வித் திட்டத்தைக் கொண்டு வந்ததும், பதினோராம் மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு படிக்கும் ஆதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவிகளுக்கு இலவச மிதிவண்டி வழங்கியதையும், ஆதிராவிட பழங்குடியின மாணவர் விடுதியில் உணவிற்காக மாதம் ஒன்றுக்கு ரூ.225 என வழங்கி வந்ததை ரூ.300 ஆக உயர்த்திக் கொடுத்ததும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணவ மாணவியர் மீது இந்த அரசுக்கு உள்ள அக்கறையைத் தெளிவுபடுத்துகிறது. கல்வி வளர்ச்சியில் அக்கறை கொண்டுள்ள இந்த அரசு, இந்நிதியாண்டில் 100 நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும், 125 உயர்நிலைப் பள்ளிகளை, மேல்நிலைப் பள்ளிகளாகவும் உயர்த்திக் கொடுத்தமைக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியை தமிழக முதல்வர் அம்மா அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கிராம நிர்வாக அலுவலர்களுக்கு என்று நிலையான அலுவலகம் இல்லாத நிலையை மாற்றி, பொதுமக்கள் எளிதில் கிராம நிர்வாக அலுவலரோடுத் தொடர்பு கொள்ளுகின்ற வகையில் தமிழகம் முழுவதும் படிப்படியாக 12,619 கிராம நிர்வாக அலுவலர் அலுவலகம் கட்டித்தர ஆவன செய்தமைக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனது தொகுதியில் உள்ள ஆத்தூர் நகரில் அனைத்து மகளிர் காவல் நிலையத்தை இந்த ஆண்டில் அமைத்துக் கொடுத்த மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு எனது சார்பாகவும், எனது தொகுதி மக்களின் சார்பாகவும் இதயபூர்வமான நன்றியைக் காணிக்கையாக்குகிறேன்.

பல ஆண்டுகள் செய்ய வேண்டிய சாதனைகளை சில நாட்களில் செய்து சரித்திர சாதனை புரிந்த மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பின்தங்கிய தொகுதியான எனது ஆத்தூர் சட்டமன்றத் தொகுதியில் பின்வரும் அத்தியாவசியப் பணிகளைச் செய்துதர வேண்டுமென்று பணிவுடன் வேண்டுகிறேன்:

கல்லாறு அணைத் திட்டம் – ஆத்தூர் ஊராட்சி ஒன்றியம்; இராமநாயக்கன் பாளையம், கல்லாற்றில் நீர்த்தேக்கம் அமைத்திட வேண்டும். இந்நீர்த்தேக்கம் அமைக்கப்பட்டால் ஆத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் சுமார் 2,500 ஹெக்டேர் நிலம் நிரந்தரப் பாசன வசதி பெறும். மேலும், ஆத்நீர் நகராட்சிப் பகுதிக்கு குடிநீர் வசதி ஏற்படவும் இந்நீர்த்தேக்கம் பேருதவியாக இருக்கும். இத்திட்டம் குறித்து கடந்த புரட்சித் தலைவரின் ஆட்சிக் காலத்தில் அரசுக்கு மதிப்பீடு தயார் செய்து அனுப்பப்பட்டுள்ளது. மழை நீரை மட்டுமே நம்பி வாழ்கின்ற இப்பகுதி விவசாயப் பெருங்குடி மக்களின் வாழ்க்கையில் இதய தெய்வம் அம்மா அவர்கள் ஒளி விளக்கேற்றி வைத்திட இந்த அரிய திட்டத்தைத் தங்களது ஆட்சிக் காலத்தில் நிறைவேற்றித் தரவேண்டுகிறேன்.

80 ஆண்டு பழைய பாழடைந்த பாலத்தை அப்புறப்படுத்தி புதிய பாலம் அமைத்திட வேண்டுதல். ஆத்தூர் நகராட்சிக்கும், நரசிங்கபுரம் பேரூராட்சிக்கும் இடையேயுள்ள சிற்றாற்றில் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் சுமார் 80 ஆண்டுகளுக்கு முனனர் கட்டப்பட்ட மிகவும் பழமையான, மோசமான நிலையில் பாலம் ஒன்று உள்ளது. இது மிகவும் குறுகலான பாலம். தற்போது உளுந்தூர்பேட்டை – சேலம் சாலை, தேசிய நெடுஞ்சாலையாக உயர்த்தப்பட்டு சாலைகளும், பாலங்களும் அகலப்படுத்தப்பட்டு தேசிய நெடுஞ்சாலை அந்தஸ்தைப் பெற்றுள்ளது. இடையில் இந்தக் குறுகிய பாலம் அடிக்கடி விபத்துகளை உருவாக்கி, தினம்தினம் உயிர்ப்பலியை ஏற்படுத்துகிறது. இதய தெய்வம் அம்மா அவர்கள் எங்கள் பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான ஆட்கொல்லி பாலத்தை அகற்றி புதிய பாலம் அமைத்துத்தர வேண்டுமென்று பணிவோடு வேண்டுகிறேன்.



ஆத்தூர் அரசு மருத்துவமனையை தலைமை மருத்துவமனையாக உயர்த்திட வேண்டுதல். ஆத்தூர் அரசு மருத்துவமனை, உளுந்தூர்பேட்டை முதல் சேலம் வரையிலான தேசிய நெடுஞ்சாலையில் அமைந்துள்ள ஒரே மருத்துவமனையாகும். நெடுஞ்சாலையில் ஏற்படக்கூடிய விபத்துகளால் அடிக்கடி ஏராளமான உயிர்ப்பலிகள் ஏற்படுகின்றன. இதைத் தவிர்க்க ஆத்தூர் அரசு மருத்துவமனையை மாவட்டத் தலைமை மருத்துவமனையாகத் தகுதி உயர்த்தித் தரவேண்டும். ஆத்தூர் அரசு மருத்துவமனை, முந்தைய ஆட்சிக் காலத்தில் தலைமை மருத்துவமனையாக உயர்த்திட வேண்டியிருந்தது. ஆனால், அன்றைய தினத்தில் எங்கள் மாவட்டத்தில் மந்திரியாக இருந்தவருக்கும், சட்டமன்ற உறுப்பினராக இருந்தவருக்கும் ஏற்பட்ட மோதல் காரணமாக தலைமை மருத்துவமனை அந்தஸ்து வேறு ஊருக்குச் சென்றுவிட்டது. ஆத்தூர் அரசு மருத்துவமனையைத் தலைமை மருத்துவமனையாக உயர்த்துகிற நேரத்தில், மருத்துவமனைக்காக ஒதுக்கப்பட்ட நிலம். அருகில் உள்ளது. இந்நிலத்தைக் கையகப்படுத்தி ஆத்தூர் அரசு மருத்துவமனையை விரிவுபடுத்தி, எங்கள் பகுதி மக்களின் கனவாக உள்ள தலைமை மருத்துவமனைத் திட்டத்தை இதய தெய்வம் அம்மா அவர்கள் கருணை உள்ளத்தோடு நிறைவேற்றித்தர பணிவோடு வேண்டுகிறேன்.

*பிற்பகல் 12-50*

நகராட்சி நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்தித் தரவேண்டுதல். ஆத்தூரில் அரசினர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் 4,000 மாணவர்களும், அரசினர் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் 4,500 மாணவியர்களும் போதிய கழிப்பிட வசதிகள் ஏதுமின்றி, கடுமையான இடநெருக்கடிக்கு இடையே மிகுந்த சிரமத்துடன் படித்து வருகின்றனர். மாணவ, மாணவியர்களின் இந்த அவல நிலையைக் கருத்தில் கொண்டு, ஆத்தூர் முல்லைவாடியில் உள்ள நகராட்சி நடுநிலைப் பள்ளியை, உயர்நிலைப் பள்ளியாக உயர்த்தித் தர பணிவோடு வேண்டுகிறேன். இப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்தித் தரும்போது இப்பள்ளிக்குத் தேவையான இடத்தினை முல்லைவாடி அரசு தோட்டக்கலைப் பண்ணையில் எவ்வித உபயோகமும் இல்லாமல் இருக்கும் நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலத்தில் 10 ஏக்கர் நிலத்தினை ஒதுக்கித் தந்து ஒரு தரமான புதிய பள்ளியை உருவாக்கித் தர அம்மா அவர்கள் ஆணையிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மலை வாழ் மக்கள் மேம்பாடு. சாலை வசதி மற்றும் பேருந்து வசதி ஏற்படுத்தித் தருதல். எனது ஆத்தூர் சட்டமனறத் தொகுதிக்குட்பட்ட பெரிய கல்ராயன் மலைப் பகுதியில் 38 குக்கிராமங்கள் உள்ளன. இவற்றில் சுமார் 15,000 மக்கள் வசித்து வருகின்றனர். இங்கு ஏராளமான விவசாய விளைபொருட்கள் விளைகின்றன. இவ்விளைபொருட்களை கீழே சந்தைக்குக் கொண்டுவர இயலாத நிலை உள்ளது. மேலும் உடல்நிலை பாதிக்கப்பட்டவர்களைக் கூட தொட்டில் கட்டி தோளில் சுமந்து, நடந்தே வரவேண்டிய பரிதாப நிலையில் இங்குள்ள மலைவாழ் மக்கள் வாழ்ந்து வருகின்றனர். எனவே மலைவாழ் மக்கள் மேம்பாட்டிற்காக, தார்ச் சாலை அமைத்து. பேருந்து இயக்கினால் இம்மக்களின் வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்படும். எனவே இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்கள், பெரியகல்ராயன் மலையில் உள்ள கருமந்துறை முதல் குன்னூர் கிராமம் வரை தார்ச் சாலை அமைத்து அரசுப் பேருந்து இயக்கிட ஆவன செய்ய பணிவுடன் வேண்டுகிறேன்.

குடிநீர் மேம்பாடு. ஆத்தூர் தொகுதி குடிநீருக்கான ஆதாரம் மிகவும் குறைவான பகுதியாகும். குடிநீரை விலைக்கு வாங்க வேண்டிய அவல நிலையில் ஆத்தூர் இருக்கிறது. இதய தெய்வம் அம்மா அவர்களின் கடந்த ஆட்சிக் காலத்தில் மேட்டூர் – ஆத்தூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்றி, ஆத்தூர் நகராட்சிப் பகுதிக்கும், எனது தொகுதியில் உள்ள வழியோரக் கிராமங்களுக்கும் நிரந்தரக் குடிநீர் வசதி செய்து தரப்பட்டுள்ளது. இதய தெய்வம் அம்மா அவர்களின் கருணையால், குடிநீரை விலைக்கு வாங்கி வந்த நாங்கள் இன்று காவிரி நீரால் குளித்து வருகிறோம். இதற்காக எனது தொகுதி மக்கள் சார்பாகவும், என் சார்பாகவும் நெஞ்சார்ந்த நன்றியை அம்மா அவர்களின் பாதத்தில் பணிந்து சமர்ப்பிக்கிறேன்.

மேலும், எனது தொகுதியில் உள்ள ஆத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள கிராமங்களுக்கும், பெத்தநாயக்கன்பாளையம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள கிராமங்களுக்கும், மேட்டூர்–ஆத்தூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை விரிவுபடுத்தி, குடிநீர்ப் பஞ்சத்தைப் போக்கிட வேண்டுமென்று அம்மா அவர்களைப் பணிந்து வேண்டுகிறேன்.

ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் அமைத்துத்தர வேண்டுதல். எனது தொகுதியில் உள்ள ஆத்தூர் நகராட்சியில் இரண்டு குற்றவியல் நீதிமன்றங்களும், ஓர் உரிமையியல் நீதிமன்றமும், சார்பு நீதிமன்றமும் இயங்கி வருகின்றன. நான்கு நீதிமன்றங்களும் ஒன்றுக்கொன்று தொலைதூரத்தில் உள்ளன. இதனால் நீதிமன்றத்திற்கு வரும்



பொதுமக்களும், வழக்கறிஞர்களும் மிகுந்த சிரமத்திற்கு ஆளாகின்றனர். இந்நிலையில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் அமைத்திட நரசிங்கபுரம் பேரூராட்சியில் சுமார் 2.75 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்து பேரூராட்சியால் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அரசுக்கு அனுப்பப்பட்டு உள்ளது. எனவே பொதுமக்களின் நலன் கருதி இதய தெய்வம் அம்மா அவர்கள் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் அமைத்திட ஆணை பிறப்பிக்க வேண்டுமாய்ப் பணிவுடன் வேண்டுகிறேன்.

அரசு மகளிர் கலைக் கல்லூரி அமைத்திட வேண்டுதல். எனது ஆத்தூர் சட்டமன்றத் தொகுதியில் இதுநாள்வரை அரசு கலைக் கல்லூரியோ அல்லது தனியார் கலைக் கல்லூரியோ அல்லது அரசு அல்லது தனியார் தொழில்நுட்பக் கல்லூரியோ ஏதும் இல்லை. பத்துக்கும் மேற்பட்ட அரசு மேல்நிலைப் பள்ளிகள் இருந்தும் கல்லூரிகள் இல்லாததால், மாணவ, மாணவியர்கள் வெளியூர் சென்று மேல்படிப்புப் படிக்க வேண்டிய நிலை உள்ளது. "அனைவருக்கும் கல்வி" என்னும் அரிய திட்டத்தை அறிவித்து கல்வி வளர்ச்சியை ஊக்கப்படுத்தும் இதய தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆத்தூர் தொகுதியில் ஒரு அரசு மகளிர் கலைக் கல்லூரி அமைத்துத் தரவேண்டுமாய் அம்மா அவர்களின் பாதம் தொட்டுப் பணிந்து வேண்டுகிறேன்.

ஆத்தூர் நகராட்சிப் பகுதியில் புறவழிச் சாலை அமைக்க வேண்டுதல். ஆத்தூர் நகராட்சி முதல்நிலை நகராட்சி ஆகும். இந்நகராட்சியில் காமராஜனார் சாலை என்ற ஒரேயொரு பிரதானச் சாலை மட்டுமே உள்ளது. இந்தச் சாலை வழியாக தினமும் அரசு ஆண்கள் மற்றும் பெண்கள் மேல்நிலைப் பள்ளிகளுக்கு சுமார் 9,000 மாணவ, மாணவியர்கள் சென்று வருகின்றனர். மேலும், இச்சாலை சென்னை–சேலம் செல்லும் தேசிய நெடுஞ்சாலையில் இருப்பதால், மிகப் பெரிய போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. இதே சாலையில் அரசுத் துறை வங்கிகளும், அரசு மருத்துவமனையும். திரையரங்குகளும். அரசுத் துறை நிறுவனங்களும் நிறைந்து உள்ளன. இதனால் போக்குவரத்து நெருக்கடியும், அடிக்கடி விபத்தும் ஏற்பட்டு போக்குவரத்து தடை ஏற்பட்டு, மணிக்கணக்கில் போக்குவரத்து நின்றுவிடுகிறது. இதனால் உள்ளூர் மக்களும், பேருந்துப் பயணிகளும் தினந்தோறும் அவதிக்குள்ளாகி வருகின்றனர். எனவே, பொதுமக்களின் மிக முக்கிய கோரிக்கையான இந்தப் புறவழிச் சாலையை அமைத்துத் தரவேண்டும் என்கிற கோரிக்கையை ஏற்று ஆத்தூர் நகரின் தெற்குப் பகுதியில் புதிய புறவழிச் சாலை அமைத்துத் தர இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆவன செய்ய வேண்டுமெனப் பணிவோடு கேட்டுக்கொண்டு எனக்கு

இவ்வளவு நேரமும் பேசுவதற்கு வாய்ப்பு கொடுத்த மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி அமர்கிறேன்.

*பிற்பகல் 12–55*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.என் இலட்சுமணன்.

***திரு கே.என். இலட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பாரதிய ஜனதா கட்சியின் சார்பாக ஏற்கெனவே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சில விஷயங்களை இந்த நிதிநிலை அறிக்கை விஷயமாகப் பேசியிருக்கின்றார்கள். அவர் குறிப்பிட்ட விஷயங்களை விட்டுவிட்டு வேறு சில விஷயங்களை மட்டும் நான் பேச இருக்கின்றேன்.

இந்த 2001–2002 ஆம் ஆண்டைய Budget–ஐ இந்த மாமன்றத்திலே ஒரு நல்ல நாள் பார்த்து வைத்திருக்கின்றார்கள். அதை நான் வரவேற்கின்றேன். நம்முடைய நிதியமைச்சர் மாண்புமிகு திரு. பொன்னையன் அவர்கள் – பெயர் சொல்லக்கூடாது, மன்னிக்கவும், நம்முடைய ஊர்க்காரர், திருச்செங்கோட்டுக்காரர், இருவருக்கும் ஒரே மாவட்டம்தான் – மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் அம்மா அவர்கள் ஒரு நல்ல நாள் பார்த்து அமாவாசை அன்று இந்த நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்ய வேண்டுமென்று குறிப்பிட்டு வைத்திருக்கின்றார்கள். அதை நாங்கள் வரவேற்கின்றோம். அமாவாசை அன்று இதைத் தாக்கல் செய்ய வேண்டுமென்பது டாக்டர் அம்மா அவர்களின் ஆசை. அதை வரவேற்கின்றோம்.

நிதிநிலை அறிக்கையிலே பல நாட்களாக, பல மாதங்களாக ஏன் பல வருடங்களாக பணப்புழக்கம் மிகவும் குறைந்துவிட்டது, இது பொருளாதாரச் சீரழிவிற்கு வழிவகுத்துவிட்டது, இதைச் சரி செய்ய வேண்டுமென்று நிதிநிலை அறிக்கையிலே கொடுக்கப்பட்டிருக்கிறது. நிதிநிலை அறிக்கை மூலம் தோராயமாக எந்தத் திசையிலே தமிழகத்தை இட்டுச் செல்லப்போகிறோம் என்று காண்பிக்க முடியும் என்பது எங்களுக்குத் தெரியும். புள்ளிவிவரத்தோடு சொல்ல முடியாது. ஆனாலும், இந்தப் பணப்புழக்கத்திற்கு எத்தனையோ காரணங்கள் இருந்தாலும்கூட, ஒருசில காரணங்களை இந்த அரசு நிவர்த்திச் செய்து அதற்கான வேலைகளிலே, பணிகளிலே ஈடுபட்டால் கண்டிப்பாகப் பணப்புழக்கம் நன்றாகச் சீர்பெறும் என்று நாங்கள் நினைக்கின்றோம்.



அரசு Contractors செய்த பணிகளுக்கு அரசு கொடுக்க வேண்டிய பணம் பல 100 கோடி ரூபாய் பல ஆண்டுகளாக நிலுவையில் இருக்கின்றது. ஆகையினாலே Contractors–க்குப் பணம் போகாததனாலே கீழே பணம் செல்ல முடியாமல் ஒரு தேக்க நிலை ஏற்பட்டு அதனால் பணப்புழக்கம் என்பது சீரழிந்துவிட்டிருக்கின்றது என்பதும் ஒரு காரணம்.

அடுத்து, Co-optex கைத்தறிச் சங்கங்களிலிருந்து கொள்முதல் செய்கின்றார்கள். பல வருடங்கள் ஆகியும் அவர்களுக்கு நூற்றுக் கணக்கான கோடி ரூபாய் கொடுக்கப்படாமல் இருக்கின்றது. ஆகையினாலே கூட்டுறவு கைத்தறிச் சங்கங்கள் எல்லாம் Co-optex–லேயிருந்து பணம் பெறாமல் கீழே பலர் உற்பத்தி செய்கின்ற பொருட்களை வாங்காமல் பணக் கஷ்டம் ஏற்பட்டிருக்கின்றது. அதையும் நிவர்த்தி செய்ய வேண்டும்.

கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் கரும்பைக் கொள்முதல் செய்து ஒரு வருடம் ஆகியும்கூட அந்தக் கரும்பு விவசாயிகளுக்குப் பணம் பட்டுவாடா செய்யவில்லை. Cutting order–ம் பல வருடங்களாகக்கூடக் கொடுக்கப்படவில்லை. இதனாலேயும் இந்தப் பணப்புழக்கம் சீர்கெட்டிருக்கின்றது. அதையும் நம்முடைய அரசு கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றோம். அதேபோல, கூட்டுறவு வங்கிகள் எல்லாம் கடன் திரும்ப வசூல் ஆகாத காரணத்தினாலே, கடன் கொடுப்பதில் மிகவும் சிக்கனமாக இருந்து கொண்டிருப்பதாலேயும் பணப்புழக்கம் சரியாக இல்லாமல் இருந்து கொண்டிருக்கின்றது. அதற்கு அரசு, கூட்டுறவு வங்கிகள் மூலமாக கொஞ்சம் தாராளமாகக் கடன் கொடுக்கின்ற ஒரு நிலைமையை ஏற்படுத்தித் தந்தால் மிகச் சிறப்பாக இருக்கும் என்று நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்.

*பிற்பகல் 1–00*

வேளாண் துறைக்கு மிகச் சிறப்பான இடம் நிதித் திட்டத்திலே கொடுக்கப்பட்டிருக்கின்றது. வரவேற்கின்றோம். நம்முடைய நாடு வேளாண் துறையிலே விவசாயத்தை நம்பி இருக்கின்ற நாடு. 75 சதவிகித மக்கள் விவசாயிகள். நம்முடைய உயிர்த் தொழில் பயிர்த் தொழில். அதுதான் நம்முடைய உயிர்த் தொழில். இந்தத் திட்டத்திலே குறைந்தது 70 சதவிகிதம் நிதி ஒதுக்கீடு தந்து, விவசாயம் செய்தால் இலாபகரமாக நடத்த முடியும். 50 ஆண்டு காலமாக வெந்து, நொந்து போய் இருக்கின்ற விவசாயிகளுக்கு ஒரு நல்ல ஆதரவு கொடுக்க வேண்டும். விவசாயிகள் வளர்ந்தால் வாணிபம் வளரும், வாணிபம் வளர்ந்தால், நாடே வளரும்.

அந்த நிலையிலே விவசாயத்திற்கு முதலிடம் நிதி ஒதுக்கீட்டிலே கொடுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கின்றோம். நில உச்சவரம்பைத் தளர்த்தலாமா என்கின்ற ஒரு யோசனையை நிதிநிலை அறிக்கையிலே கொடுத்திருக்கின்றார்கள். அது ஆபத்தானது. மீண்டும் பண்ணையார் ஆட்சி வந்துவிடக் கூடாது. ஆகையினாலே உச்சவரம்பைக் கண்டிப்பாகத் தளர்த்திவிடக் கூடாது என்று பணிவோடு கேட்டுக்கொள்கின்றோம். நீர்ப்பாசனத்திற்காக பல திட்டங்களையெல்லாம் சொல்லி இருக்கின்றார்கள், வரவேற்கிறோம். கூடவே, நம்முடைய மேட்டூர் அணை நீரானது நேராக, திருச்சி, தஞ்சை மாவட்டங்களிலே பயிர்த் தொழில் செழிப்பதற்கு பயன்படுகிறதேயொழிய சேலத்திலே அந்த மேட்டூர் அணை இருந்தபோதிலும்கூட, அந்த மாவட்டத்திற்கோ ஈரோடு, திருச்செங்கோடு, நாமக்கல் போன்ற பிற மாவட்டங்களுக்கோ பயன் தருவதில்லை. அதற்குரிய ஒரு திட்டத்தை காமராஜர் அவர்கள் இருந்தபோது தீட்டிக் கொடுத்திருந்தார்கள். அந்தத் திட்டத்தை விரைவுபடுத்த வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கின்றேன். அதேபோல, அவினாசி-அத்திக்கடவு திட்டத்தையும் விரைவிலே கொண்டு வந்து அந்தப் பகுதியிலே இருக்கின்ற தண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமென்று சொல்லியிருக்கின்றார்கள். அதை நம்முடைய பாரதப் பிரதமர் அவர்கள் கோவை வந்திருக்கும்போது குறிப்பிட்டார்கள். இந்த அவினாசி-அத்திக்கடவு திட்டத்திற்கு மத்திய அரசும் கண்டிப்பாக ஆதரவு கொடுக்கும் என்று சொல்லியிருக்கின்றார்கள். அதனை தயவுசெய்து நிதியமைச்சர் கொஞ்சம் மனதிலே வைத்துக்கொண்டு அவர்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கின்றோம்.

தென்னை மரத்தைப் பற்றி, தேங்காய் விலைச் சரிவு பற்றி, அதனாலே ஏற்பட்ட நார்த் தொழில் பாதிப்பு பற்றியெல்லாம் சொல்லி இருக்கின்றார்கள். தென்னை மரமும் பல நோயால் பீடிக்கப்பட்டு. இன்றையதினம் அழிந்து கொண்டிருக்கின்றது. இவற்றையெல்லாம் பார்க்கும்போது, அந்த நோய் வராமல் தடுக்க வேண்டும் என்றால் கள்ளை இறக்க வேண்டுமென்று சில விஞ்ஞானிகள் சொல்லிக் கொண்டிருக்கின்றார்கள். ஆகவே, இந்த அரசு கள்ளைக் கொண்டு வருவதற்கு யோசிக்குமா என்று நான் கேட்க விரும்புகின்றேன். கள்ளுக் கடை திறந்தால் பரவாயில்லை என்றுகூட நினைக்கத் தோன்றுகிறது. விதேசி சரக்கு குடிக்கலாம். ஆனால், சுதேசி சரக்குக் குடிக்கக் கூடாதா? கொஞ்சம் யோசித்துப் பார்த்து, தென்னை மரத் தொழில் செழிப்படைவதற்கு கள்ளுக் கடையைத் திறக்கலாமா என்று யோசனை செய்யுமாறு நான் யோசனை சொல்கிறேன். அவ்வளவுதான்.



மகளிர் தொழில் அபிவிருத்தி அடைவதற்கு, செழிப்பு அடைவதற்கு நல்ல திட்டங்களையெல்லாம் சொல்லியிருக்கின்றார்கள். உண்மையிலே பார்க்கப்போனால், இந்த அவையிலே அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாகப் பல மாதர்கள் இங்கே வீற்றிருப்பதைப் பார்த்தால் நமக்கெல்லாம் பொறாமையாக இருக்கிறது. நம்முடைய கட்சியிலே இப்படி எப்போது 30 சதவிகிதம் M.L.A-க்கள் வரப்போகிறார்கள் என்கின்ற அளவிற்கு-சந்தோசமான ஒரு பொறாமை, வேறல்ல-மகளிர் முன்னேற்றம் கண்டிப்பாக வேண்டும். அதற்காக டாக்டர் முதலமைச்சர் அவர்கள் நல்ல ஒரு தொடக்கத்தை தொடங்கியிருக்கின்றார்கள். அது வெற்றி பெற வேண்டுமென்று நாங்கள் உளமார நினைக்கின்றோம்.

*பிற்பகல் 1-05*

தொழிற் பூங்கா, பெண் முனைவோர்களுக்கு, மகளிர் முனைவோர்களுக்கு ஊக்கம் கொடுப்பதற்காக 4 தொழிற் பூங்காக்களை ஆரம்பிக்க இருக்கிறீர்கள். அதில் ஒன்றை சென்னையிலே அடையாறு பகுதியிலே ஆரம்பிக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். சென்னையில் பல குடிசைகள் இருக்கின்ற பகுதிகளிலேயும்...

***மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவை உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்றபோது மகளிருக்காக சென்னையிலே ஒரு தொழிற்பேட்டை தொடங்க வேண்டுமென்ற கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சென்னைக்கு அருகிலேயிருக்கிற பள்ளிக்கரணை என்கின்ற பகுதியிலே மகளிருக்காக புதிய தொழிற்பேட்டை தொடங்குவதற்குண்டான வாய்ப்பினை உண்டாக்கியிருக்கிறார்கள் என்பதையும், மேலும் தமிழகத்திலே 4 பகுதிகளிலே மகளிருக்காக தொழிற்பேட்டைகள் தொடங்குவதற்குண்டான தக்கதொரு நடவடிக்கைகளை அம்மா அவர்கள் மேற்கொண்டிருக்கிறார்கள் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே.என். இலட்சும்ணன்:** மிக்க நன்றி, மிக்க மகிழ்ச்சி. சென்னையிலேயுள்ள பல குடிசைப் பகுதிகளையும், குப்பங்களையும் நான் சென்று பார்க்கின்ற நேரத்திலே அங்கேயிருக்கின்ற குழந்தைகளெல்லாம் வேலைக்குப் போய்விடுகின்றனர். பள்ளிக்குப் போய்ப் படிப்பதற்கு அவர்களுக்கு வாய்ப்பே இல்லாமல் தொழில் செய்தாக வேண்டிய ஒரு

நிலையிருக்கிறது. அங்கே இருக்கின்ற ஒரு சிலர் இரவுப் பாடசாலைகளை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இந்த அரசு இப்பேர்ப்பட்ட குழந்தைகளுக்கு, காலையிலே வேலைக்குப் போய்க் கொண்டு, இரவிலே படிக்க ஊக்கம் உள்ள குழந்தைகளுக்கு, ஆதரவாக இரவுப் பாடசாலைகளையும் பல இடங்களிலே தொடங்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 2 பெண் குழந்தைகள் இருந்தால் அந்தக் குடும்பத்திற்கு ஆதரவாக நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு திட்டத்தினைக் கூறியிருக்கிறார்கள். குடும்பக் கட்டுப்பாடு திட்டம் சமுதாயத்திற்கு மிகமிக இன்றியமையாதது. ஜனத்தொகை பெருகப் பெருக, எந்த ஆட்சி வந்தாலும் சரி, ஒரு நல்லாட்சியைக் கொடுப்பதற்குத் திணற வேண்டிவரும்: திட்டங்களெல்லாம் தோல்வி அடைந்துவிடும். ஆகவே, குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டம் மிகமிக அவசியம். இரண்டு குழந்தைகளுக்கு மேல் இருக்கின்ற பெற்றோர்களுக்கு அரசு உத்தியோகம் கிடையாது என்று சொனனால்கூடப் பரவாயில்லை. அத்தகைய ஒரு சட்டத்தைக் கொண்டுவர இந்த அரசு யோசிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கடுமையான குடிநீர்ப் பிரச்சினை இருக்கிறது. (மணியடிக்கப்பெற்றது) ஒரே நிமிடத்தில் பேசி முடித்துக்கொள்கிறேன். கடைசி Point. கடுமையான குடிநீர்ப் பிரச்சினை இருப்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அத்தனைபேரும் உணர்ந்திருக்கிறார்கள். சென்னையிலே நம்முடைய அமைச்சர் பெருமக்கள் எல்லாம் இருப்பது என்னுடைய மயிலாப்பூர் தொகுதியிலேதான். அங்கேதான் கடுமையான தண்ணீர் பிரச்சினை இருக்கிறது. அதையும் தீர்த்து வைக்கவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். அரசு அலுவலகங்களிலே ஒளிவுமறைவற்ற தன்மையை உறுதிப்படுத்த வேண்டுமென்ற ஆசையை நிதியமைச்சர் அவர்கள் தெரிவித்து இருக்கிறார்கள். அதை வரவேற்கிறோம், பாராட்டுகிறோம். அதற்காக ஒரு சட்டத்தை உருவாக்கினால் பரவாயில்லை. எல்லா அரசு ஊழியர்களும் குறைந்தது 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை தங்களுடைய சொத்துக் கணக்கை அந்தந்த அதிகாரிகளுக்கும், அலுவலகங்களுக்கும் கொடுக்க வேண்டுமென்ற ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தால் அங்கே transparency ஒளிவுமறைவுத்தன்மை இல்லாமல், நேர்மையாக உழைக்கின்ற அதிகாரிகள் உருவாவார்கள் என்பதைத் சொல்லிக்கொண்டு, வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜே. ஹேமச்சந்திரன்.



*பிற்பகல் 1–10*

**திரு. கே.என். இலட்சுமணன்:** சென்னையிலே வருகின்ற விநாயகர் சதுர்த்தி ஊர்வலத்திற்கு முதலிலே காவல் துறை தடை விதித்த போதிலும், நம்முடைய முதலமைச்சர் மாண்புமிகு ஜெயலலிதா அம்மையார் அவர்கள் பரந்த உள்ளத்தோடு, உண்மை நிலையை அறிந்துகொண்டு அந்தத் தடையை நீக்கியதற்காக பாரதிய ஜனதா கட்சியின் சார்பாக டாக்டர் அம்மா அவர்களுக்கு கோடி கோடி, நமஸ்காரங்கள். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி டி. யசோதா.

***திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக பாரதிய ஜனதா கட்சியின் சட்டமன்ற உறுப்பினர் அவர்களை நான் கேட்டுக்கொள்வது, பரந்த மனது இந்த அரசுக்கு உண்டு என்று கூறி முதல்வர் அவர்களைப் பாராட்டி அமர்ந்திருக்கின்ற உறுப்பினர் அவர்கள் இதனை மத்தியிலே இருக்கின்ற அவர்களது ஆட்சியாளர்களுக்கு தெரிவிப்பார்களா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**திரு. கே.என். இலட்சுமணன்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனையை நான் முழு மனதுடன் வரவேற்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) வாஜ்பாய் அவர்கள் எல்லோரையும் அணைத்துக்கொண்டு இந்த நாட்டு மக்களுக்காகத் தன்னுடைய வாழ்நாளையே அர்ப்பணித்துக் கொண்டு சேவை செய்கின்ற உத்தமர். உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்லுகின்றேன். தவறாக நினைத்துக் கொள்ளக்கூடாது. எலியும், பூனையுமாக தமிழ்நாட்டில் இருக்கின்ற கட்சிகளைக்கூட, தலைவர்களைக்கூட ஒன்றிணைத்து, உறுதுணையாக இருந்து கூட்டணியை ஏற்படுத்திய அனுபவம் உங்களுக்கெல்லாம் தெரியும். கண்டிப்பாக என் மனதில் இருக்கிறது. உரிய நேரத்தில், உரிய விதத்தில் அம்மாவினுடைய பெருமையைக் கண்டிப்பாகச் சொல்வேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதே யோசனை எனக்கு முன்பே கிடைத்திருக்கிறது. Signal கிடைத்திருக்கிறது. நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

223438

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் தாக்கல் செய்திருக்கின்ற நிதிநிலை அறிக்கையில் நம்முடைய பின்தங்கிய பகுதி மக்களையும், அதேபோன்று பெண்களையும் முன்னேற்றமடையச் செய்வதற்கும், அவர்களுடைய வாழ்க்கையை மேம்படுத்துவதற்கும்வல்ல நல்ல திட்டங்கள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. இந்தத் திட்டங்களை எல்லாம் நான் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே வரவேற்கின்றேன். இந்த நேரத்தில் நான் ஒவ்வொரு திட்டத்தைப் பற்றியும் பட்டியல் போட்டுச் சொல்வதற்கு நேரத்தினுடைய அருமை காரணமாக முடியவில்லை. இந்த நாட்டு மக்களுடைய வளர்ச்சிக்கு என்று உருவாக்கப்பட்டிருக்கின்ற பல நல்ல திட்டங்களை நான் வரவேற்பதோடு, சில விஷயங்களைச் சுட்டிக்காட்டுவதற்கும் இந்த நேரத்தைப் பயன்படுத்திக் கொள்ள விரும்புகின்றேன். இந்த நிதிநிலை அறிக்கையில், நம்முடைய தொழில் வளர்ச்சியைப் பொறுத்த அளவில் சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், நம்முடைய பரம்பரைத் தொழில்கள் இன்று அழிந்து வருகின்றன. அவற்றிற்கு உயிரூட்டக்கூடிய முறையிலே உள்ள தகுந்த நடவடிக்கைகள் இந்த அறிக்கையில் இல்லை என்பதை வேதனையோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். பஞ்சாலைத் தொழில், இஞ்சினியரிங் தொழில், இதுபோன்ற பல தொழில்கள் இந்த நிலையில் இருந்து கொண்டிருக்கின்றன. அவற்றைப் பாதுகாத்துக் கொள்வதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். நீலகிரி மாவட்டத்தில் தேயிலை தொழிலுக்குப் பாதுகாப்புக் கொடுக்கக்கூடிய முறையிலே உள்ள நடவடிக்கையை இந்த அரசு எடுத்திருக்கிறது. அதற்காக நான் இந்த அரசையும், அதற்காக பிரத்தியேக ஆர்வம் காட்டிய தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்களையும் நன்றியுடன் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த நேரத்தில் நான் ஒன்றை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன். இதுபோன்று பாதிக்கப்பட்ட ஒரு தொழில், இரப்பர் தொழில் என்பதை இந்த அரசு நன்றாக அறியும். இரப்பருக்கு இன்றைக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புக்குத் தகுந்த நிவாரணம் அல்லது பாதுகாப்புக் கொடுக்கக்கூடிய முறையிலே உள்ள நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டும். குமரி மாவட்டத்திலே இருக்கிற சிறு தோட்ட உரிமையாளர்கள் சங்கம், rubberised roads ஏற்படுத்துவதனுடைய தேவையையும், அப்படி உருவாக்குவதற்குக் கிடைக்கப் பெறுகிற வாய்ப்பைப் பற்றியும் சுட்டிக்காட்டியிருக்கிறது. நான் அதுசம்பந்தமாக



ஒரு மகஜரைக்கூட மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களிடம் கொடுத்து, அவருடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறேன்.

பிற்பகல் 1-15

நம்முடைய சென்னை மாநகரத்திலே, சிட்கோ வளாகத்திலே அப்படிப்பட்ட ரோடுகள் போடப்பட்டிருக்கின்றன என்று தெரிகிறது. இப்போது குமரி மாவட்டத்திலே இரப்பர் தொழிலிலே ஈடுபட்டிருக்கிற சிறு விவசாயிகளும், அதேபோன்று தொழிலாளிகளும் ஏறத்தாழ 25,000-க்கும் அதிகமான மக்கள் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். அவர்களுக்குப் பாதுகாப்புக் கொடுப்பதற்குத் தகுந்த அளவில் உள்ள நடவடிக்கைகளை - மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எப்படி தேயிலைத் தொழிலில் ஏற்படுத்தினார்களோ, அதேபோன்று இதிலேயும் ஏற்படுத்த முடியும். அதற்குத் தகுந்த நடவடிக்கைகளை - எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இதோடு சேர்ந்த பிரச்சினையைத்தான், இந்த வளர்ச்சிக்கெல்லாம் காரணமான குமரி மாவட்டத்தின் வளர்ச்சிக்குப் பிரதானமான ஒரு அம்சம் என்ற முறையிலேதான் குளச்சல் துறைமுகத்தை உருவாக்க வேண்டுமென்று ஆய்வு நடத்தப்பட்டிருக்கிறது. தென் தமிழகத்தினுடைய வளர்ச்சிக்கு அந்தத் துறைமுகம் பயன்படும் என்பதால் அந்தத் துறைமுகத்தை உருவாக்குவதற்கு, இரத்தினவேல் பாண்டியன் கமிட்டி சிபாரிசு செய்திருப்பதாகத் தெரிகிறது. அந்த முறையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

அதேபோன்று நான் இந்த நேரத்திலே ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். குமரி மாவட்டத்தைப் பொறுத்த அளவிலே, சுற்றுலா வளர்ச்சி என்பது நல்லமுறையிலே வளர்வதற்கான வாய்ப்புகள் அங்கு இருக்கின்றன என்பதற்கு நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், அந்தத் துறையினுடைய அமைச்சர் அவர்களுக்கும் சில விவரங்களைக் கொடுத்திருக்கிறேன். அந்த முறையிலே அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்பதை நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோன்று, குமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் மருத்துவக் கல்லூரி என்பது மிகவும் முக்கியமான பிரச்சினையாக இருந்து கொண்டிருக்கிறது என்பது அரசுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்கு தெரியும். அங்கே 2 நாடாளுமன்ற உறுப்பினர்கள்

நிதி ஒதுக்கிக் கொடுத்திருக்கிறார்கள். ஏற்கெனவே, அங்கேயிருந்த T.B.Hospital வளாகத்தில் இருந்த கட்டடங்கள் பராமரிக்கப்பட்டு இருக்கின்றன. ஆகவே அந்த மருத்துவக் கல்லூரியை அங்கே அமைத்துத் தருவதற்கு தகுந்த நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு குலசேகரத்திலே இருக்கிற மருத்துவமனையை தாலுகா தலைமை மருத்துவமனையாக உயர்த்தித்தர நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று இந்த நேரத்திலே ஹோமியோபதி, சித்தா, ஆயுர்வேதா போன்ற மருத்துவத் துறைகளையும் வளர்ப்பதற்காக தகுந்த அளவில் உள்ள நடவடிக்கைகளை இந்த அரசு எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். மற்ற மாநிலங்களில் எல்லாம் ஹோமியோபதிக்கு என்று தனியாக இயக்குநரகம் இருக்கிறது. ஆனால் இங்கே இல்லை. அதைச் செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

இன்னொரு விஷயத்தை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். போக்குவரத்தைப் பொறுத்த அளவிலே 16.5 கோடி ரூபாய் bus pass சலுகைக்காகக் கொடுக்கப்படுகிறது என்று சொல்லப்படுகிறது. போக்குவரத்துக் கழகங்களிலே இருக்கிற ஒரு பிரதான பிரச்சினை நிர்வாகச் சீர்கேடுதான். ஆகவே மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள், ஏற்கெனவே போக்குவரத்துத் துறையினுடைய அமைச்சராக இருந்து நல்ல அனுபவம் பெற்றவர் என்ற காரணத்தாலே, இந்த விஷயத்தைப் பற்றி நான் பிரத்தியேகமாக எடுத்துச் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. இந்தப் போக்குவரத்துக் கழகங்களை ஒருங்கிணைத்து, மாற்றி நிர்வாகச் செலவைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அதுதான் இன்றைக்குப் பிரதான பிரச்சினையாக இருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதேபோன்று, நம்முடைய பத்திரிகையாளர்களைப் பொறுத்த அளவிலே pension போன்ற சில விஷயங்கள் எல்லாம் அவர்களுக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது. நான் ஒன்றை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். 12 ஆம் தேதி நடந்த நிகழ்ச்சிகள் சம்பந்தமாக அமைக்கப்பட்டிருக்கிற கமிஷனுடைய terms–ல் பத்திரிகை நிருபர்கள் சம்பந்தமாகக் கொடுக்கப்பட்டிருக்கிற விஷயத்திலே சில கருத்து மோதல்கள் இருப்பதாகத் தெரிகிறது. ஆகவே பத்திரிகைத் தொழிலிலே ஈடுபட்டிருப்பவர்களை அழைத்து, நம்முடைய மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் அதை ஒரு பொருத்தமான terms —ஆக



உருவாக்குவதற்கு முயற்சிகளை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்கு இவற்றையெல்லாம் நான் சொல்கிற நேரத்திலே, ஒரு விஷயத்தை எடுத்துச் சொல்லாமல் இருக்க முடியவில்லை. ஏனென்றால், இந்த நிதிநிலை அறிக்கை..... (குறுக்கீடு)

*பிற்பகல் 1–20*

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹேமச்சந்திரன் அவர்கள், பத்திரிகையாளர்களுக்காக அமைக்கப் பட்டிருக்கிற கமிஷனுடைய Terms of reference பற்றிக் கூறியிருக்கிறார்கள். இதில் மிகத் தெளிவாகவே இருக்கிறது. 'To suggest norms and guidelines to be followed by the media persons who cover processions and demonstrations in order to ensure their protection including the safe distance to be maintained by them.' என்று இருக்கிறது. அதுமட்டுமல்லாமல், முதல் பிரிவிலும்கூட, அவர்களுக்குப் பாதிப்பு எதுவும் ஏற்பட்டிருக்கிறதா என்பதைப்பற்றிய reference–ம் அதிலே இருக்கிறது.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்ததோடு, ஒரு வெள்ளை அறிக்கையையும் தாக்கல் செய்திருக்கிறார்கள். அந்த வெள்ளை அறிக்கையைப் பொறுத்த அளவிலே, தனியான விவாதம் இல்லை. ஏதேனும் கருத்துகள் இருந்தால், இந்த நிதிநிலை அறிக்கையோடு சேர்த்துச் சொல்ல வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்தக் காரணத்தினால், நான் ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்த வெள்ளை அறிக்கை ஒரு 'Negative approach'–லேயிலிருந்து உருவாக்கப்பட்டிருக்கிறதோ என்ற பயம் எங்களுக்கு இருக்கிறது. இந்த வெள்ளை அறிக்கையைப் பொறுத்த அளவிலே ஒரு பிரதானமான அம்சம் என்னவென்றால், தமிழகத்தினுடைய வருவாயைப் பற்றிச் சொல்கிற நேரத்தில் மத்திய அரசினுடைய வரிகளில் ஏற்பட்டிருக்கின்ற குறைபாடுகள் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கின்றன. 1999–லே 20 சதவிகிதமாக இருந்தது, இப்போது 16 சதவிகிதமாகக் குறைந்திருக்கிறது. அதேபோன்று, 8.48 சதவிகிதம், ஏழாவது Finance Commission–லே கிடைக்கப்பெற்றது என்றால், 11–வது Finance Commission–லே அது 5.385 ஆகக் குறைகிறது. 2005 ஆம் ஆண்டு வருகிற நேரத்திலே 2,946 கோடி ரூபாய் இழப்பு ஏற்படுகிறது என்று சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது.

*(மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு. பி.ஆர். சுந்தரம் தலைமை)*

இதற்கு மேலாக மத்திய அரசிடமிருந்து கிடைக்கப்பெற வேண்டிய Grant 1992-93—லே 12 சதவிகிதம் கிடைத்தது. இப்போது 1999-2000—லே 8 சதவிகிதமாகக் குறைந்திருக்கிறது. இதற்கெல்லாம் அடிப்படையாக இருக்கிற காரணங்களைப் பொறுத்த அளவிலே, இன்று மாநில அரசுக்கு ஏறத்தாழ 5,465 கோடி ரூபாய் இழப்பு, subsidy வழியாக ஏற்பட்டிருக்கிறது என்று சொல்லப்படுகிறது. இந்த subsidy என்பது இந்த நாட்டிலே இருக்கிற ஏழை மக்களுடைய வாழ்வோடு சம்பந்தப்பட்டிருக்கிற துறைகளுக்குக் கொடுக்கப்படுகிற subsidy என்பதை மறந்துவிடக்கூடாது. பொது விநியோகக் கடைகளுக்கு, விவசாயத்திற்கு, கைத்தறிக்கு, கல்விக்கு, அதேபோல, தொழில் துறைக்கு, போக்குவரத்திற்கு, கால்நடைத் தொழிலுக்கு, வீட்டுவசதிக்கு, சமூக நலனுக்கு எல்லாம் கொடுக்கப்படுவது இந்த subsidy. இதன் காரணமாக ரூ.5,465 கோடி இழப்பு ஏற்பட்டிருக்கிறது என்று சொல்கிற நேரத்திலே, இதுதான் இன்றைக்கு தமிழகத்தினுடைய நிதிநிலைப் பற்றாக்குறைக்குக் காரணமா? நேற்றையதினம் நம்முடைய வணிக வரித் துறையினுடைய அமைச்சர் அவர்கள், இங்கே ஒரு கேள்விக்கு விளக்கம் கொடுக்கிற நேரத்திலே 6,000 கோடி ரூபாய் இழப்பு – evasion of tax – இன்றைக்கு தமிழகத்தில் ஏற்பட்டிருக்கிறது என்றார்கள். அதைப்பற்றி ஒன்றுமே இந்த வெள்ளை அறிக்கையிலே குறிப்பிடப்படவில்லை, துரதிர்ஷ்டம்.

அதேபோன்று, நான் இன்னும் ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மின்சாரத்தைப் பொறுத்த அளவிலே, மின்சாரத் துறைக்கு 3,000 கோடி ரூபாய்க்கு மேல் இழப்பு இருக்கிறது என்று சுட்டிக்காட்டப் பட்டிருக்கிறது. ஆனால், line loss அல்லது மின்சாரம் திருடப்படுவதன்மூலமாக எத்தனை இலட்சம் அல்லது எத்தனை கோடி ரூபாய் இழப்பு தமிழகத்திலே ஏற்பட்டிருக்கின்றது என்பதை நாம் பார்க்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, transmission of loss என்பது, அகில இந்திய ரீதியில் ஒப்பிடும் போது, ஏறக்குறைய தமிழ்நாட்டில் மிகக்குறைவாக இருக்கின்ற ஒரு நிலைமை உள்ளது. சதவிகிதம் என்று பார்க்கும்போது, ஒட்டுமொத்தமாக 16.5 சதவிகிதம். மகாராஷ்டிராவிலே ஏறக்குறைய 44 சதவிகிதம். எனவே அகில இந்திய ரீதியிலே நம்முடைய மாநிலத்திலே மட்டும்தான் 16.5 சதவிகிதம். இது உள்ள நிலைமை. ஒட்டுமொத்தமாக உலக அளவில் நாம் ஒப்பிடும்போது, U.S.A. நாட்டிலே மட்டும் ஏறக்குறைய 4 சதவிகிதம் அளவிற்கு மின் சுடத்தி மூலம் transmission loss-ஐ suppress செய்திருக்கிறார்கள். எனவே நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இந்தத் துறையை ஆய்வு செய்யும்போது, அதேபோன்று நம்முடைய மாநிலத்திலும் அது குறைக்கப்பட வேண்டும் என்கின்ற கருத்தைச் சொன்னார்கள். அதன் அடிப்படையிலே ஒரு Master Plan தயாரிக்கப் பட்டிருக்கிறது. ஏறக்குறைய தமிழ்நாடு முழுவதும் transmission loss-ஐக் குறைக்க வேண்டுமென்றால், 4 சதவிகிதம் அளவிற்குக் குறைக்க 4000 கோடி ரூபாய் தேவை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



*பிற்பகல் 1-25*

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாற்றுத் தலைவர் அவர்களே.....

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.ஆர். சுந்தரம்):** அமைச்சர் அவர்கள், பேசுகின்றார்கள்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் பேசும்போது ஆறாயிரம் கோடி ரூபாய் அளவிற்கு வரி ஏய்ப்பு இருப்பதாக, tax evasion இருப்பதாகக் கூறினார். அது தவறு. பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் வணிக வரியை ஆரம்பித்த காலத்திலேயிருந்து, இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் 1996—ல் ஆட்சியை விட்டு இறங்கும்போதுவரை இருந்த வரி பாக்கி மொத்தம் 650 கோடிதான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால், கடந்த 5 ஆண்டுகால ஆட்சியில் வணிக வரித் துறைக்குப் பொறுப்பேற்றிருந்த முன்னாள் முதலமைச்சர் வரி வசூலிப்பு செய்வதில் சரியான முறையைக் கடைப்பிடிக்காததால் மட்டும் – 650 கோடி ரூபாய் அளவிற்கு இருந்த – வரி பாக்கி 6500 கோடி ரூபாயாக இருந்தது. அதிலும் குறிப்பாக, கடந்த இரண்டு ஆண்டு காலத்தில் மட்டும் 3000 கோடி ரூபாய் அளவிற்கு வரி வசூலிக்காமல் நிறுத்தியிருக்கிறார்கள். அதை ஏன் வசூலிக்கவில்லை, யாருக்காக வசூலிக்கவில்லை என்பதை அவர்கள்தான் சொல்ல வேண்டும். ஆகவே இந்த 6,500 கோடி ரூபாய் வரி வசூலை எப்படி வசூலிப்பது என்ற திட்டத்தை இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆராய்ந்து அதற்கான திட்டத்தை அறிவிக்க உள்ளார்கள் என்பதை உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே—

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சீக்கிரம் பேசி முடியுங்கள். 3 நிமிடத்திலே பேசி முடியுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** Excuse me, Sir. அதாவது மாண்புமிகு மின் துறை அமைச்சருடனோ அல்லது Commercial Tax அமைச்சருடனோ நான் மாறுபடவில்லை. என்னுடைய point என்னவென்றால், இந்த வரி வசூலிக்காமல் 6000 கோடி அளவிற்கு இருக்கிறது. அதற்கு மேலே transmission loss—ஐப் பொறுத்தவரையில் நான் இன்னும் வரவில்லை. ஆனால், மின்சாரத்திலே திருட்டு நடக்கிறது. போன சட்டமன்றப் பேரவையிலே நான் உறுப்பினராக இருந்த நேரத்திலே, சேலம் மாவட்டத்திலே ஒரு தொழிற்சாலையில் 11 இலட்சம் ரூபாய் அளவிற்கு திருட்டு நடந்திருப்பது சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மின்சாரத் திருட்டை முழுமையான அளவிற்கு ஒடுக்க வேண்டுமென்கின்ற அடிப்படையிலே நம்முடைய தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ள உத்தரவிட்டிருக்கிறார்கள். எனவே, மின்சார வாரியத்தில் Anti power theft squad இருக்கிறது, Flying Squad இருக்கிறது. இந்த இரண்டும் தவிர Operation, Maintenance என்று சொல்லக்கூடிய அளவிற்கு அந்தந்தப் பகுதியிலே பார்க்கின்ற பொறியாளர்கள் இதைக் கண்காணிக்க வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறார்கள். எனவே இந்த மூன்று மாதத்திலே, எந்தக் காலத்திலேயும் இல்லாத அளவிற்கு கடுமையான அளவிற்கு மின்சாரத் திருட்டை முழுமையான அளவிற்கு ஒடுக்க வேண்டுமென்கிற ரீதியிலே சுமார் 30 கோடி ரூபாய் அளவிற்கு மின்சாரத் திருட்டு கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அந்த Assessment 30 crores என்று நான் இங்கே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, I am very sorry. Hon'ble Minister has misunderstood me. நான் அந்த விவாதத்திற்குள்ளே வரவில்லை. என்னுடைய கேள்வி என்னவென்றால், இன்று மின்சாரத் திருட்டு காரணமாக, இழப்பு ஏற்படுகிறது. மின்சாரத் திருட்டு என்பது சாதாரண மக்கள் நடத்துவது அல்ல; வசதி படைத்தவர்கள் நடத்துகிறார்கள். நிலச்சுவான்தார்கள், தொழிற்சாலைகளுடைய உரிமையாளர்கள் நடத்துகின்ற ஒரு விஷயம். ஆகவே, இந்த நிலை காரணமாக ஏற்பட்டிருக்கிற நிதிநிலைப் பற்றாக்குறைக்கு இந்த ஏழை மக்களை.....



**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தினந்தோறும் செய்தி படிக்கின்ற ஒரு கருத்து இருக்கும் என நினைக்கின்றேன். இரண்டு நாட்களுக்கு முன்பாகக்கூட, ஏறக்குறைய ஒரு பெரிய தொழிற்சாலையிலே ஒன்றரை கோடி ரூபாய் அளவிற்கு மின்திருட்டு கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இந்த மூன்று மாதத்திலே இப்போது நீங்கள் பார்த்தீர்களேயானால் ஏறக்குறைய வாரத்திற்கு ஒரு நான்கு முறையாவது மின்சாரத் திருட்டு குறித்து பத்திரிகையிலே செய்தி வந்திருக்கிறது என்பதை நீங்கள் நிச்சயமாக அறிய முடியும். எனவே, இந்த அரசு முழுமையான அளவிற்கு அதைக் கட்டுப்படுத்துவதற்கு, மின்சாரத் திருட்டே இல்லாமல் ஆக்குகின்ற அளவிற்கு நிச்சயமாக நடவடிக்கையை நாங்கள் எடுப்போம் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே—

*பிற்பகல் 1—30*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியோடு அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** பேரவைத் துணைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹேமச்சந்திரன் கூறும் கருத்து அரசுக்குப் புரிகிறது. கிட்டத்தட்ட மின் உற்பத்தியிலே 29 சதவிகிதம் உழவர்களுக்காக இலவச மின்சாரம் என்ற நிலையும், மின் இழப்பு என்ற முறையிலே 16.5 சதவிகிதம் என்ற நிலையும் உள்ளது. ஆனால், இதிலே விவசாயிகளுக்கு என்ற பெயரிலே, விவசாயிகளுக்கு அளிக்கப்படுகின்ற மின் கட்டணத்தில் மீட்டர் இல்லாத காரணத்தினால், அந்த விவசாயிகளுக்கு ஒதுக்கப்படுகின்ற 29 சதவீத மின்சாரத்தில், ஒரு குறிப்பிட்ட பகுதி தொழிற்சாலைகள் under-metering மூலமாகவோ, கொக்கி போட்டோ திருடுவது அரசினுடைய கவனத்திற்கு வந்திருக்கிறது. கடந்த காலத்தில், அளவு கடந்து அது நடைமுறையில் இருந்திருக்கிறது. அதனால்தான், மின்சாரத் துறைக்கு கிட்டத்தட்ட 4,800 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டிருக்கிறது. அந்த இழப்பு விவசாயிகளினால் ஏற்பட்ட இழப்பு என்றோ அல்லது line loss—னால் மட்டும் ஏற்பட்ட இழப்பு என்றோ அரசு கருதவில்லை. அந்தத் தவறு நடந்து இருக்கிறது. அதைத் தடுப்பதற்கு கட்டாயமாக அரசு நடவடிக்கை எடுக்கும். கிட்டத்தட்ட ஆண்டுக்கு 1200 கோடி ரூபாய் அதாவது 16.5% அரசுக்கு மின் இழப்பு

ஏற்பட்டிருக்கிறது. அதிலும் under-metering கொக்கி போன்ற முறைகளில் திருட்டுகள் நடக்கின்றன. அவற்றைக் கட்டாயமாகத் தடுத்து, களைந்தெடுக்க இந்த அரசு நடவடிக்கை எடுக்கும். அதற்கு புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. அரசு எடுக்கிற நடவடிக்கைகளுக்கு எங்களுடைய பூரண ஒத்துழைப்பு, பாராட்டு. இன்று என்னுடைய நிலை என்னவென்றால், இத்தகைய பற்றாக்குறையினால் ஏழையெளிய மக்களுக்கு இருக்கிற வசதிகள் மேலே கை வைக்கிற ஒரு போக்கு, அரசுக்கு ஏற்படுமோ என்ற ஐயப்பாடு இந்த white paper-ஐப் படித்ததற்குப் பிறகு ஏற்படுகிறது. ஒரு வேளை என்னுடைய நிலை தவறாக இருந்தால், அதை மாற்றிக்கொள்வதற்கு.....

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுக்கென கிடைத்த revenue receipts மொத்த வருவாய் குறைந்துவிட்ட நிலை. அப்படிக் குறைந்ததற்குப் பல காரணங்கள். அதிலே ஒரு காரணம், மைய அரசு ஒதுக்க வேண்டிய நிதியை ஒதுக்கவில்லை. ஒதுக்க வேண்டும் என்று மைய அரசிலே இடம் பெற்றிருக்கிற எதிர்க்கட்சியான திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரைக்கும், மாநில சுயாட்சிக் கொள்கையை தன்னகத்தே கொண்டிருக்கிற ஓர் இயக்கம், அந்தக் கொள்கையை வலியுறுத்தி, இந்தப் பேரவையிலே, நிதியமைச்சர் என்ற நிலையிலே, திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர், பலமுறை பேசி இருக்கின்றார். மைய அரசிலே தற்போது அக்கட்சியினர் அங்கத்தினர்களாக இருக்கின்றார்கள். மத்திய ஆட்சி, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியாக இருக்கின்றது. அந்த ஆட்சி, மத்திய அரசினுடைய மற்ற அங்கத்தினர்களிடம் வற்புறுத்தி, மாநிலத்திற்கு அதிக நிதியைப் பெற்றுத் தந்திருக்கவேண்டும். 3 ஆண்டு காலமாக அந்த ஆட்சியிலே இருக்கிறார்கள். அவர்களுடன் போராடி, வாதாடி, மாநிலத்திற்கு அதிக நிதி தரவேண்டும், குறைக்கக்கூடாது என்று -- the financial power of the State -- கேட்கத் தவறிவிட்டார்கள். ஆட்சியிலே இருந்தவர்களுடைய கவனம் எல்லாம் கடந்த 3 ஆண்டு காலமாக புரட்சித் தலைவி மீது பொய் வழக்குகளைப் போடுவதும் (மேசையைத் தட்டும் ஒலி) அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை ஒடுக்குவது என்ற அந்த வகையிலே ஈடுபட்டுக்கொண்டு, மைய அரசிடம் போராடி, வாதாடி, நிதி அதிகாரத்தைப் பெற்று நாட்டைக் காக்கத் தவறிவிட்டார்கள் என்பதை எடுத்துக்காட்டுவதற்காகத்தான் இந்த



வெள்ளை அறிக்கையிலே அதைக் குறிப்பிட்டிருக்கிறோமே தவிர, ஏழை எளியோர்களின் subsidy-யை நாங்கள் ஒழித்துவிடுவோம், எடுத்துவிடுவோம் என்று அதிலே நாங்கள் குறிப்பிடவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் சீக்கிரம் உரையை முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. என்னுடைய நிலையும் அதுதான். அதாவது ஏற்கெனவே திராவிட முன்னேற்றக் கழகம் இங்கே ஆட்சிப் பொறுப்பில் இருந்த காலத்தில், அவர்கள் மைய அரசின் ஆட்சிப் பொறுப்பில் இருக்கிற கட்சியோடு எடுத்துக் கொண்ட உறவு காரணமாக, தமிழகத்திற்குக் கிடைக்க வேண்டிய விஷயங்களைக்கூட கேட்டுவாங்குவதில் தவறிவிட்டார்கள் என்பதுதான் என்னுடைய கருத்து. நெய்வேலி லிக்னைட்டினுடைய அந்த ராயல்டி பற்றிச் சொன்னார்கள். அந்த ராயல்டியை நமக்குக் குறைத்துக் கொடுப்பதற்கு எந்த உரிமையும் இல்லை. That royalty should be renewed. அதுபோன்ற விஷயங்களில் எல்லாம் நாம் அதிகமாக rate கேட்டுப் பெறவேண்டும். அதற்கு அரசு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். இந்தப் பின்னணியில் நான் ஒன்றிரண்டைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்த அரசு, வேளாண்மை மேம்பாட்டுத் திட்டத்தைப் பொறுத்தளவில் குறிப்பிட்டுச் சுட்டிக்காட்டியிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி அவர்கள் சில கருத்துகளைச் சொன்னார்கள். அதில் நான் உடன்படுகிறேன். ஆனால், அதனுடைய பின்னணியில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்றால், Land Ceiling Act--ஐப் பொறுத்தவரை, re-open செய்வதற்கும் இந்த அரசு சிந்திக்க வேண்டிவரும். அது மிகப் பெரிய ஆபத்தான விஷயம் என்று நான் சொல்வேன். (மணியடிக்கப்பெற்றது) இரண்டு நிமிடங்களில் பேச்சை முடித்துக் கொள்கிறேன். இந்த நேரத்தில் ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

*பிற்பகல் 1-35*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் பேசுவது பற்றி எனக்கு ஒன்றும் ஆட்சேபணை இல்லை. ஆனால், மற்ற உறுப்பினர்களெல்லாம் இங்கே என்னை வெறிக்கப் பார்க்கிறார்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:**இரண்டு நிமிடங்களில் பேச்சை முடித்துவிடுகிறேன். அதாவது மேற்கு வங்கத்தில் இருக்கிற அரசு, அதிபட்சமான நிலத்தை, உபரி நிலத்தை எடுத்து விவசாயிகளுக்கு விநியோகம் செய்ததன் விளைவாக விவசாயிகளுக்கு ஒரு உத்வேகம் ஏற்பட்டது. அதாவது நிலமற்ற விவசாயிகளுக்கு அந்த நிலத்தில் விவசாயம் செய்ய வாய்ப்பு கிடைத்ததால் அவன் சந்தோஷப்பட்டு அதிகமான உற்பத்தியை ஏற்படுத்திக் கொடுத்ததன் விளைவாகத்தான் இன்று மேற்கு வங்கம் இந்தியாவிலேயே அதிகமான நெல் உற்பத்தி செய்கின்ற மாநிலமாக மாறி இருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இதில் மூன்றே மூன்றை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இன்று இந்த மாநிலத்திலே திராவிட முன்னேற்றக் கழகம் தேர்ந்தெடுக்கப்பட்ட ஓர் அரசை எப்படி de-stabilise செய்ய முயற்சி எடுத்ததோ, அதேபோன்று ஒரு முயற்சியை மேற்கு வங்காளத்தில் தேர்தலுக்கு முன்னால், மம்தா பானர்ஜியை முன் வைத்துக்கொண்டு மத்திய அரசின் உதவியோடு அவர்கள் முயற்சி எடுத்தார்கள் என்பதை இந்த நாடு அறியும். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சீக்கிரம் பேச்சை முடியுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** இப்படிப்பட்ட முயற்சிகளுக்கெல்லாம் பல்வேறுவிதமாக ஆதரவுகளையும், பின்துணையையும் மத்திய அரசினர் கொடுத்தார்கள். இங்கே பெர்னாண்டஸ் தலைமையில் குழுவை அனுப்பி விஷயங்களைத் தில்லுமுல்லாக்க எப்படி முயற்சிக்கிறார்களோ (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோன்ற முயற்சிகளை அன்றைக்கு அவர்கள் எடுத்தார்கள். ஆனால், மக்கள் அனுமதிக்கவில்லை. தேர்தலில் முடிவு என்ன? தேர்தலில் மதச்சார்பற்ற ஜனநாயகக் கூட்டணி... (குறுக்கீடுகள்) நான் பேசி முடித்த பிறகு சொல்லுங்கள். உறுப்பினரின் கேள்விக்கு நான் பதில் சொல்லத் தயார். நான் பேசி முடித்ததற்குப் பிறகு தி.மு.க. உறுப்பினர்கள் கேட்கட்டும், நான் பதில் சொல்கிறேன். I am not afraid of it.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் சீக்கிரம் பேசிமுடியுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** அதாவது அவர்கள் ஒன்றை நன்கு தெரிந்துகொள்ள வேண்டும். அவர்கள் சென்ற சட்டப்பேரவைக் கூட்டத்திலே தொடர்ந்து மேற்கு வங்க அரசு என்ன செய்தது, மேற்கு



வங்கத்தில் அதைச் செய்தார்களா, இதைச் செய்தார்களா என்றெல்லாம் கேட்டார்கள்; மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அவர்களோடு இருந்தவர்களெல்லாம் கேட்டார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேச்சை இத்துடன் முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** அன்றைக்குத் தேர்தலில் கிடைத்த படிப்பினை என்ன? பல்வேறு முறையில் மேற்கு வங்கத்தைக் குறை சொன்னவர்கள் இன்று மக்களால் வெளியேற்றப்பட்டு இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மேற்கு வங்க அரசுக்கு எதிராக, மம்தா பானர்ஜியும், பி.ஜே.பி-யும் எவ்வளவோ முயற்சித்த பிறகும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினர் மீண்டும் ஆட்சிப் பொறுப்பிற்கு வந்தார்கள் என்பதை மறந்துவிடக்கூடாது. அந்தப் படிப்பினை உங்களுக்கும் இருக்கட்டும். இதைத்தான் உங்களுக்கு நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

## 4. அறிவிப்பு

### சட்டமன்ற உறுப்பினர்களுக்கு சிற்றுண்டி வழங்கல்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இன்று மாலை சட்டமன்றப் பேரவைக் கூட்டம் நடைபெறவிருப்பதால், மாலை 4-30 மணி அளவில், சட்டமன்றப் பேரவையை ஒட்டிய மண்டபத்தில் உறுப்பினர்களுக்கு சிற்றுண்டி வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பேரவையின் காலை நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன.

பேரவை மீண்டும் பிற்பகல் 4-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-38 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

பிற்பகல் 4-30 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் டாக்டர் **கா. காளிமுத்து** அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.

## 3. திருத்திய வரவு–செலவுத் திட்டம், 2001–2002, பொது விவாதம்–தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2001–2002 ஆம் ஆண்டிற்கான திருத்திய நிதிநிலை அறிக்கை மீது பொது விவாதம், திரு. ஆஸ்டின்.

***திரு. ஆஸ்டின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2001–2002–க்கான நிதிநிலை அறிக்கை மீது நடைபெறக்கூடிய பொது விவாதத்திலே பங்கேற்றுப் பேசுவதற்கு எனக்குக் கிடைத்திருக்கின்ற வாய்ப்பிற்காக உங்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை முதற்கண் தெரிவித்துக்கொள்கின்றேன். பொதுவாக தேர்தல் முடிந்து ஒரு புதிய அரசு பொறுப்பேற்று அவர்கள் போடக்கூடிய Budget எப்படி இருக்கும் என்று சொன்னால், முதல் ஆண்டிலே போடக்கூடிய Budget ஓரளவுக்கு வரி இல்லாத Budget ஆகவும், மக்களுக்குப் பல்வேறு திட்டங்களைக் கொடுக்கக்கூடிய Budget ஆகவும், அதற்குப் பிறகு வரக்கூடிய இரண்டு ஆண்டுகளிலே ஓரளவுக்கு வரிகளைப் போட்டுப் பற்றாக்குறையைச் சீர் செய்யக்கூடிய Budget ஆகவும், இறுதி ஆண்டிலே வரக்கூடிய Budget தேர்தல் நோக்கத்திலே போடக்கூடிய Budget ஆகவும் வரி இல்லாத Budget ஆகவும் இருப்பதுதான் வழக்கம். இந்த Budget–ஐப் பொறுத்தவரையில்கூட, பொது மக்களானாலும் சரி, தொழிலாளர் களானாலும் சரி, விவசாயப் பெரு மக்களானாலும் சரி, அரசு ஊழியர்களானாலும் சரி, நெசவாளர்களானாலும் சரி, அத்தனை பேரும் மிகப்பெரிய ஒரு எதிர்பார்ப்போடு காத்து இருந்தார்கள். புதிய ஆட்சி வந்திருக்கின்றது; நல்ல பல திட்டங்கள், பல்வேறு சலுகைகள் நமக்குக் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்போடு இந்த Budget–ஐ இந்த நாட்டு மக்கள் எதிர்நோக்கி இருந்தார்கள். ஆனால், இந்த Budget வாசிக்கப்பட்ட பிறகு ஒரு மிகப் பெரிய ஏமாற்றம்தான் அவர்களுக்கு ஏற்பட்டு இருக்கின்றது என்று நான் கருதுகின்றேன்.

இங்கு ஏற்கெனவே பேசிய மாண்புமிகு உறுப்பினர் வேலு அவர்கள் பணப்புழக்கத்தைப் பற்றிச் சொன்னார்கள். அதற்கு மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்கூட பணப்புழக்கம் போகப்போகச் சரியாகிவிடும்; அரசாணை எண் 75–ஐ நாங்கள் இரத்துச் செய்துவிட்டோம், எனவே, நாட்டிலே சிறுகச்சிறுக அந்த பணப்புழக்கம் கூடிவிடும் என்று சொன்னார்கள். பணப்புழக்கம் என்பது தமிழ்நாட்டிலே மட்டுமல்ல, இந்தியாவிலுள்ள பிற மாநிலங்களில் மட்டுமல்ல, இன்றைக்கு உலகம் முழுவதும் உள்ள அத்தனை நாடுகளிலும் money circulation என்பது



இப்படித்தான் இருக்கின்றது. திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்தாலும் சரி, தேர்தலிலே அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்தாலும் சரி அல்லது ஆண்டவனே ஆட்சிக்கு வந்தாலும் சரி இந்த பணப்புழக்கத்தை அவ்வளவு குறுகிய காலத்திற்குள்ளாக யாராலும் சீர் செய்ய முடியாது. இது பொது மக்களுக்கு அன்றைக்குத் தெரியாமல் போய்விட்டது. தேர்தலுக்கு முன், நாங்கள் வந்தால் பணப்புழக்கம் கூடிவிடும். தமிழ்நாட்டில் பாலாறும் தேனாறும் ஓடிவிடும் என்றெல்லாம் சொன்ன வார்த்தைகளை நம்பி அவர்கள் வாக்களித்து, இன்றைக்கு ஒரு வாய்ப்பு உங்களுக்குக் கிடைத்திருக்கின்றது. எனவே, நீங்கள் சொன்னதுபோல பணப்புழக்கம் கூடாவிட்டாலும்கூடப் பரவாயில்லை; அது முடியாத ஒன்று. விலைவாசியையாவது ஓரளவுக்குக் கட்டுப்படுத்தி இருக்க வேண்டும். முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் பொன்முடி அவர்கள் இங்கே பேசியபோது மளிகைக் கடையில் விற்கக்கூடிய, தாய்மார்கள் பயன்படுத்தக்கூடிய அந்தப் பொருட்களினுடைய விலை எந்த அளவுக்கு ஏறி இருக்கின்றது என்பதைக் குறிப்பிட்டார்கள். மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்கூட அதை ஒத்துக்கொண்டார்கள். அது மத்திய அரசினுடைய வரி விதிப்பினால், நெருக்கடியினால் ஏற்பட்ட விலைவாசி ஏற்றம் என்றுகூடச் சொன்னார்கள். ஆகவே, விலைவாசி ஏறி இருக்கின்றது என்பதை எதிர்க்கட்சிகளும் ஒத்துக்கொண்டிருக்கின்றன. ஆளும் கட்சியான நீங்களும் ஒத்துக் கொண்டிருக்கிறீர்கள். எனவே, அந்த அளவிற்கு விலைவாசி இருக்கின்றது. அடுத்தபடியாக வேகமான செயல்பாடு என்று சொல்லி, இந்த ஆட்சி வந்தவுடனே அதுபற்றிச் சொன்னீர்கள். அரசு இயந்திரம் வேகமாக முடுக்கிவிடப்படும். வேகமான செயல்பாட்டை நாங்கள் இந்த ஆட்சியிலே காட்டுவோம், கோப்புகள் எல்லாம் எங்கேயும் தேங்கிக் கிடக்காது, வேகமாக நகர்ந்துவிடும் என்று சொன்னார்கள். நான் ஒன்றைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைக்கு நெடுஞ்சாலைத் துறையில் கிட்டத்தட்ட 7 தலைமைப் பொறியாளர்கள் பணியிடங்கள் காலியாக இருக்கின்றன. அவர்களுக்குக் கீழே கிட்டத்தட்ட 10, 15 கண்காணிப்புப் பொறியாளர்கள், அவர்களுக்குக் கீழே கோட்டப் பொறியாளர்கள் (குறுக்கீடு) நான் முடித்துவிடுகிறேன். இன்றைக்கு நெடுஞ்சாலைத் துறை என்பது இந்த நாட்டினுடைய உயிர் மூச்சு போன்றது.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்மிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் ஆஸ்டின் கூறியதுபோல நாங்கள் உடனடியாக அதற்கு நடவடிக்கை எடுத்து

இருக்கிறோம். அந்தக் கோப்புகள் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது என்பதை அவர்களுக்கு நான் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*பிற்பகல் 4–35*

**திரு. ஆஸ்டின்:** நான் அமைச்சர் மீது இதிலே குறை சொல்லவில்லை. நடைமுறையில் இருப்பதைத்தான் சொல்கிறேன். அமைச்சர் மீது தவறு என்று நான் சொல்லவில்லை. இந்தக் கோப்புகள் பதவி உயர்வுக்கான கோப்புகள். இன்றைக்கு நெடுஞ்சாலைத் துறை ஓர் உயிர் மூச்சான துறை. அதிலே இருக்கின்ற C.E. (General), C.E. (Highways) இந்த இரண்டு பதவிகளும் இன்றைக்கு காலியாக இருக்கின்றன. ஒரு மாத காலமாக காலியாக இருக்கின்றன. அதற்குக்கீழே உள்ள கண்காணிப்புப் பொறியாளர், C.E. (General)-னுடைய அந்த post-ஐயும் Additional Post-ஆகப் பார்க்கின்றார். Joint C.E. Post-ஐயும் Additional Post-ஆகப் பார்க்கின்றார். இது ஒரு unprecedent. இதற்கு முன்னாலே தமிழகத்திலே இப்படி நடந்தது இல்லை. ஒரு மாத காலமாக இந்தப் பதவி உயர்வுக்கான கோப்பு முதலமைச்சருடைய அலுவலகத்திலே கிடப்பிலே போடப் பட்டிருக்கிறது என்ற தகவலை நான் உங்களுக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறான கருத்தை இங்கே கூறியிருக்கிறார்கள். சிலர் மீது வழக்குகள் பதிவாகி இருக்கின்றன. அதன் காரணமாக அவர்களுக்குப் பதவி உயர்வு, promotion கொடுக்காமல் நாங்கள் வைத்திருக்கிறோம்.

**திரு. ஆஸ்டின்:** அடுத்தபடியாக எதிர்க் கட்சிகளுக்கு நீங்கள் அதிகமான வாய்ப்பினைக் கொடுக்க வேண்டும். நான் இதை ஏன் சொல்கிறேன் என்று சொன்னால் (குறுக்கீடுகள்) நிதிநிலைக்கு வருகிறேன். பேசுகிறேன். எதிர்க் கட்சிகளுக்கு வாய்ப்புக் கிடைத்தால்தான் அது ஆளுகின்றவர்களுக்கு அங்கே நடக்கக்கூடிய தவறுகள்.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆளும் கட்சிகளுக்கு வாய்ப்புகளே இல்லை என்ற காரணத்தினால்தான் இவ்வளவு சத்தம் வருகிறது.

**திரு. ஆஸ்டின்:** பேரறிஞர் அண்ணா அவர்கள்கூட ஒன்றைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். வேகமாக ஓடக்கூடிய குதிரைக்குக் கடிவாளம் போன்றது எதிர்க்கட்சி என்று சொல்லியிருக்கிறார்கள். எனவே நீங்கள் வேகமாகச் செயல்படுங்கள். உங்களுடைய செயல்பாட்டினை, திட்டங்களை முடுக்கிவிடுவதிலும், பொது மக்களுக்கு நல்ல பணிகளைச் செய்வதிலும் உங்களுடைய வேகத்தை நீங்கள் காட்டுங்கள். எதிர்க் கட்சிகளை ஒடுக்குவதிலே கொஞ்சம் வேகத்தை நீங்கள் குறைத்துக்கொள்ள வேண்டுமென்று நான் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.



அதைப்போல இப்போது காவல் துறையிலே இரண்டாம் நிலை காவலர்களுக்கான தேர்வு நடைபெற்று முடிந்திருக்கிறது. நான் இதற்காக ஏற்கெனவே ஒரு கவன ஈர்ப்பு அறிவிப்பை 5 நாட்களுக்கு முன்பாகக் கொடுத்து இருந்தேன். அது இன்னும் வரவில்லை. அதற்காக இந்தச் சந்தர்ப்பத்திலே நான் ஒன்றைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இளைஞர்கள் physical test–ஐ முடித்துவிட்டு, Written Test-ஐ முடித்துவிட்டு நேர்முகத் தேர்வுக்காகக் காத்திருக்கிறார்கள். 1 ஆம் தேதி, 2 ஆம் தேதி, 3 ஆம் தேதிக்கு அவர்களுக்குத் தனித்தனியாக நேர்முகத் தேர்வுக்கான அழைப்பு அனுப்பப்படுகிறது. அன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காவல் துறை கண்காணிப்பாளர்களுடைய மாநாட்டை சென்னையில் நடத்திய காரணத்தால் அந்த நேர்முகத் தேர்வு தள்ளி வைக்கப்பட்டு இருப்பதாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மூலம் பத்திரிகையிலே செய்தி தரப்பட்டிருக்கிறது, 16 ஆம் தேதி, 17 ஆம் தேதி, 18 ஆம் தேதிக்கு அந்த நேர்முகத் தேர்வு தள்ளி வைக்கப்பட்டிருக்கிறது என்று தனியாக அவர்களுக்கு அழைப்பு அனுப்பவில்லை (குறுக்கீடு) நான் முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் சந்தானம், தாங்கள்தான் அடுத்துப் பேசவேண்டும். பேசும்போது விளக்கம் சொல்லலாம்.

**திரு. ஆஸ்டின்:** நான் உரையை முடித்துவிடுகிறேன். முடித்தவுடன் சொல்லுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசி முடித்துவிடட்டும்.

**திரு. ஆஸ்டின்:** 16 ஆம் தேதி, 17 ஆம் தேதி, 18 ஆம் தேதிகளில் அவர்களுக்கு நேர்முகத் தேர்வு நடைபெறும் என்று பத்திரிகையிலே செய்தி வந்திருக்கிறது. கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அங்கே கிட்டத்தட்ட 50, 60 இளைஞர்கள் எழுத்துத் தேர்வை முடித்துவிட்டு நேர்முகத் தேர்வுக்குக் காத்திருந்தவர்கள். இந்த பத்திரிகைச் செய்தியைப்

பார்த்துவிட்டு 16, 17 ஆம் தேதிக்கு அங்கே போகின்றபோது 6 ஆம் தேதி, 7 ஆம் தேதி, 8 ஆம் தேதியே அந்த நேர்முகத் தேர்வை முடித்துவிட்டோம். நீங்கள் வராததால் உங்களுக்கு absent போட்டுவிட்டோம்; இனி எங்களால் ஒன்றும் செய்ய முடியாது, நாங்கள் list-ஐ அனுப்பியாயிற்று என்று அங்குள்ள அதிகாரிகள் சொல்லியிருக்கிறார்கள். அதாவது, 6 ஆம் தேதியிலிருந்து 14 ஆம் தேதி வரைக்கும் ஒரு batch நடத்துகிறார்கள். 1 ஆம் தேதி. 2 ஆம் தேதி, 3 ஆம் தேதிக்கு ஒரு batch நடத்துகிறார்கள். எனவே, 6 ஆம் தேதியிலிருந்து 14 ஆம் தேதி வரையிலான batch-க்கு மட்டும்தான் அங்கே தேர்வு நடந்திருக்கிறது. அதைக் கேள்விப்பட்டவர்கள் சிலர் 16, 17, 18–லே போகக்கூடியவர்கள் இந்த 6, 7, 8–லே கலந்து கொண்டிருக்கிறார்களே தவிர கிட்டத்தட்ட 50, 60 இளைஞர்கள் அங்கே தங்களுடைய சொந்தச் செலவிலே கிட்டத்தட்ட 200 கிலோமீட்டர் தூரம் பயணம் செய்து தங்களுடைய பணங்களை எல்லாம் செலவழித்து வந்தவர்கள், physical test–ல் கலந்து கொண்டுவிட்டு அதிலே தேர்வு செய்யப்பட்டவர்கள் இன்றைக்கு பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அவர்களுக்குத் தனியாகவாவது ஒரு நேர்முகத் தேர்வை நடத்தி இந்தப் பட்டியலோடு அவர்களையும் நீங்கள் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போன்று திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலோ அன்றைக்கு தந்தை பெரியாருடைய பெயரிலே ஒரு திட்டம் கொண்டுவரப்பட்டது, சமத்துவபுரம் திட்டம் என்று. அதைப்போன்று பேரறிஞர் அண்ணா அவர்களுடைய பெயரிலே அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் என்ற ஒரு திட்டத்தை அன்றைக்குக் கொண்டு வந்தார்கள். அதைப்போல புரட்சித் தலைவர் எம்ஜி.ஆர். அவர்களுடைய பெயரிலே ஏற்கெனவே அமைக்கப்பட்ட அந்த திரைப்பட நகருக்கு எம்ஜி.ஆர் திரைப்பட நகர் என்று சூட்டினார்கள். இன்றைக்கு தேர்தல் முடிந்து நீங்கள் புதிய ஆட்சியைத் தொடங்கியிருக்கிறீர்கள். பல்வேறு திட்டங்களை இந்த நிதிநிலை அறிக்கையிலே கொடுத்திருப்பதாக நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். ஏதாவது ஒரு திட்டத்திற்கு புரட்சித் தலைவர் எம்ஜி.ஆர் அவர்களுடைய பெயரை நீங்கள் சூட்டியிருந்தால் நாங்கள் உண்மையிலே மகிழ்ச்சி அடைந்திருப்போம். அதைச் சூட்டாமல் மறந்துவிட்டீர்கள். தேர்தல் காலத்தில்தான் உங்களுக்கு எம்ஜி.ஆருடைய நினைவு வரும், பிறகு மறந்துவிடுவீர்கள்.

*பிற்பகல் 4–40*



**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆட்சியையே எம்.ஜி.ஆர் ஆட்சி என்றுதான் சொல்லியிருக்கிறோம். எம்ஜி.ஆரின் பொற்கால ஆட்சி அமைப்போம் என்று புரட்சித் தலைவி அவர்கள் தேர்தல் வாக்குறுதியில் சொல்லியிருக்கிறார்கள். இந்த ஆட்சி எம்ஜி.ஆர் ஆட்சிதான். எல்லா திட்டங்களும் எம்ஜி.ஆர் திட்டங்கள்தான்.

**திரு. ஆஸ்டின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எம்ஜி.ஆர். ஆட்சி எம்ஜி.ஆர். வழியிலேயே நடக்கவேண்டுமென்றுதான் நாங்களும் சொல்லுகிறோம். எனவே, நீங்கள் கொண்டு வந்திருக்கின்ற பல்வேறு திட்டங்கள் வரவேற்கக்கூடிய திட்டங்கள்தான். நான் மறுக்கவில்லை. அதிலே அனைவரையும் கவர்ந்த ஒரு திட்டம் பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம் என்ற ஒரு திட்டத்தை நீங்கள் கொண்டு வந்திருக்கிறீர்கள். நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் இந்த அரசையும் கேட்டுக்கொள்வதெல்லாம் அந்தத் திட்டத்திற்கு புரட்சித் தலைவர் எம்ஜி.ஆர் பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம் என்ற பெயரை நீங்கள் சூட்ட வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். தலைவர் பெயரை வையுங்கள் என்று சொன்னதற்கு வரவேற்கக்கூடாதா? அதற்காகவாவது கை தட்டக் கூடாதா?

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அருமை சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களிடம் பேசவேண்டுமென்று கூறியிருக்கிறார்கள். இவர் கன்னியாகுமரி மாவட்டத்திலே மாவட்டச் செயலாளராக இருந்து நாடாளுமன்ற—

**திரு. ஆஸ்டின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுத்துக்கொள்கின்ற நேரத்தையும் எனக்குப் பேச ஒதுக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆஸ்டின், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்லிவிடட்டும்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நாடாளுமன்ற உறுப்பினராகி, ஆஸ்டின் என்ற பெயருக்கு அழகு சூட்டியவரே புரட்சித் தலைவி அவர்கள் தான் என்பதனை நான் இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆஸ்டின், மற்ற விவரங்களை, எதிர் எதிரேதானே உட்கார்ந்து கொண்டு இருக்கிறீர்கள்; பேசிக்கொள்ளுங்கள்.

**திரு. ஆஸ்டின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பொறுத்தவரையில் நமக்கு வேண்டியவர்தான். இதற்கெல்லாம் நான் பதில் சொல்லவேண்டுமென்பது தேவையில்லை. நான் நிதிநிலை அறிக்கைக்கு போகிறேன். இந்தப் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டத்திலே இரண்டு Clarifications இருக்கின்றன. இரண்டு சந்தேகங்கள் இருக்கின்றன. இதை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் இப்போது சொன்னாலும் சரி அல்லது பதிலுரையிலே அதற்கு விளக்கம் சொன்னாலும் சரி. இதிலே நீங்கள் குறிப்பிட்டு இருக்கிறீர்கள், ஒரு பெண் குழந்தை இருந்து அதில் தாய் தந்தை யாராவது ஒருவர் குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சை செய்திருந்தால் அவர்களுக்காக 20,650 ரூபாய் வைப்புத் தொகையாக வைக்கப்பட்டு, மாதம் ஒன்றுக்கு 150 ரூபாய் அந்த வட்டியிலேயிருந்து கிடைக்கும் என்று சொல்லி, இருபது ஆண்டுகள் கழித்து அவர்களுக்கு 80,000 ரூபாய் கிடைக்கும் என்று சொல்லியிருக்கிறீர்கள். அதேபோன்று, இரண்டு குழந்தைகள் இருந்தால் இதிலே பாதித் தொகை என்று சொல்லி மாதம் ஒவ்வொரு குழந்தைக்கும் 150 ரூபாய் கொடுக்கப்படும் என்று சொல்லியிருக்கின்றார்கள். இந்தக் குழந்தைகளுக்கான வயது வரம்புபற்றி இதிலே நீங்கள் சொல்லவில்லை. எந்த வயது என்ற வரையறையை நீங்கள் இதிலே கொடுக்கவில்லை. உதாரணத்திற்கு ஒரு குழந்தை 10 வயதிலே இருக்கிறது என்று வைத்துக்கொள்ளுங்கள். ஒரே குழந்தைதான், தாய் தந்தையருக்கு (குறுக்கீடு) நான் பேசி முடித்து விடுகிறேன். இப்படி உட்கார்ந்துகொண்டு பேசிக்கொண்டே இருந்தால் எப்படி நான் பேச முடியும்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் அமர்ந்துகொண்டு பேசக் கூடாது.

**திரு. ஆஸ்டின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 10 வயது நிறைந்த குழந்தையாக இருக்கும் என்று சொன்னால்...

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Upper limit 20 வயது வரை என நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. The upper limit is fixed as 20.



**திரு. ஆஸ்டின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 20 வயது அதிகபட்ச வயது என்று சொன்னால் 20 ஆண்டுகள் கழித்து இந்தப் பணம் கிடைக்கும்போது, 40 வயதிலேதான் அது அவர்களுக்குக் கிடைக்கின்ற வாய்ப்பு இருக்கிறது. அதற்காகத்தான் நான் இதைக் கேட்டேன். குழந்தைக்கு ஒரு வயது அல்லது இரண்டு வயதிலே இந்தத் திட்டத்தின்கீழ் பணம் deposit செய்யப்படுகிறதா என்பதற்காகத்தான் கேட்டேன். நீங்கள் 20 வயதிலேயிருந்து 20 ஆண்டுகள் கழித்து என்று சொல்லுகிறீர்கள். பிறந்தவுடன்—

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குழந்தை பிறந்தவுடன் இத்திட்டம் அமலுக்கு வரும்.

**திரு. ஆஸ்டின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குழந்தை பிறந்த பிறகுதான் வருகிறது. (குறுக்கீடு) பிறந்தவுடன் வருகிறது என்று சொன்னால் ஒரு குழந்தை பிறந்தவுடனேயே குடும்பக் கட்டுப்பாடு அறுவைச் சிகிச்சை செய்துவிட வேண்டும். அப்படிச் செய்தால்தான் வரும். பிறகு எப்படி அங்கே இரண்டாவது குழந்தை வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அதை விட்டுவிடுங்கள். இன்னொரு வேறுபாடு. ஒரு குழந்தை பிறந்தால் 150 ரூபாய் மாதம் வட்டித்தொகை வரும் என்று சொல்லி இருக்கிறார்களே, அதற்கு 20 ஆயிரம் ரூபாய் அங்கே deposit செய்யப்படுகின்றது. இரண்டு குழந்தை என்று சொன்னால் 14,450 ரூபாய் deposit செய்யப்படுகின்றது. ஒவ்வொரு குழந்தைக்கும் 150 ரூபாய் வருகிறது. வட்டி விகிதத்திலே சிறு வேறுபாடு இருக்கிறது. இதை நீங்கள் கவனத்திலே கொண்டு இதற்கான விளக்கத்தினை பதிலுரையிலே தரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, நிலம் இல்லாத மீனவர்களுக்கும்–உள்நாட்டு மீனவர்களுக்கும் சரி, கடலிலே மீன்பிடிக்கக்கூடிய மீனவர்களுக்கும் சரி –வீடு கட்டிக்கொடுக்கும் திட்டத்தை அறிமுகப்படுத்தி இருக்கிறீர்கள். அதை நான் வரவேற்கிறேன். கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்த வரையில் அங்கே 4 மாதங்கள் கடலிலே மிகப்பெரிய கொந்தளிப்பு ஏற்படும். மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குக்கூடத் தெரியும். சமீபத்திலே அந்தக் கொந்தளிப்பை நேரிலே சென்றுகூடப் பார்த்துவிட்டு வந்திருக்கிறார்கள். அங்கே கடற்கரையோரம் இருக்கக்கூடிய வீடுகள் எல்லாம் கடல் கொந்தளிப்பால் அடித்துச் செல்லப்படுகின்றன. இதற்கு ஒரு தீர்வு ஏற்படுவதற்காக, கடற்கரை ஓரத்திலே தடுப்புச் சுவர் எழுப்ப வேண்டுமென்று பல மாதங்களாக அவர்கள் கோரிக்கை வைத்துக் கொண்டு இருக்கிறார்கள். அங்கே என்னுடைய தொகுதியிலே கிழப்பள்ளம் பகுதியிலே—

*பிற்பகல் 4-4.5*

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினருக்கு நன்றாகத் தெரியும். கடலரிப்பு சம்பந்தமாக நானும் மாண்புமிகு அமைச்சர் திரு. இராஜேந்திர பிரசாத் அவர்களும் நேரடியாகச் சென்று மாண்புமிகு புரட்சித் தலைவி தமிழக முதலமைச்சரிடம் ஓர் அறிக்கையைச் சமர்ப்பித்திருக்கிறோம். அதன்படி உடனடியாக அங்கே Anti-sea Erosion Department ஒன்று நிறுவப்பட உள்ளது என்பதை நான் சட்டமன்ற உறுப்பினருக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. ஆஸ்டின்:** Anti-sea Erosion Department ஏற்கெனவே அங்கு இருக்கின்றது.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** பேரவைத் தலைவர் அவர்களே, மன்னிக்க வேண்டும். கடந்த காலத்திலே இல்லை. இப்போது நாங்கள் உடனடியாக நிறைவேற்றி இருக்கின்றோம்.

**திரு. ஆஸ்டின்:** என்னுடைய தொகுதியிலே கீழப்பள்ளம் பகுதியிலே இந்தக் கடலரிப்பைத் தடுப்பதற்காக, தடுப்புச் சுவர் எழுப்புவதற்காக அனைத்து ஆய்வுகளும் முடிக்கப்பட்டு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு அரசினுடைய உத்தரவுக்காகக் காத்து இருக்கின்றது. அதையும் பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, கீழமணக்குடி பகுதிக்கும் அமைச்சர் சென்று பார்வையிட்டு இருக்கின்றார்கள். 15 ஆண்டுகளுக்கு முன்பு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆட்சிக் காலத்திலே இந்தக் கடலரிப்பைத் தடுப்பதற்காக அங்கே கல் போடப்பட்டிருந்தது. 15 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் அதிலே கல் போட வேண்டும் என்று அந்தத் திட்டத்திலே ஏற்கெனவே இருப்பதாகச் சொன்னார்கள். அப்படி இருந்தால் அந்த கீழமணக்குடி பகுதிக்கும் அதை நீங்கள் செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 15 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட மீனவர் குடியிருப்புகள் இன்றைக்குப் பழுதடைந்திருக்கின்றன. ஆதிதிராவிடக் குடியிருப்புகளில், பழுதடைந்த வீடுகளுக்கு 6 ஆயிரம், 7 ஆயிரம் என்று சொல்லி பத்தாயிரம் ரூபாய் வரைக்கும் இன்றைக்கும் ஊராட்சி ஒன்றியத்தின் மூலமாக அவர்களுக்குப் பழுது நீக்குவதற்காக நிதி வழங்கப்படுகிறது. ஆனால், இந்த நிதி மீனவ கிராமங்கள் உள்ள மீனவக் குடியிருப்புகளுக்கு வழங்கப்படுவதில்லை. அதையும் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



அதைப்போல, கன்னியாகுமரி மாவட்டத்திலே கிருத்துவப் பரவர்கள் இருக்கின்றார்கள். இந்தக் கிருத்துவப் பரவர்கள் குறித்தும் நான் ஒத்திவைப்புத் தீர்மானத்திலே கொடுத்திருக்கின்றேன். அதற்கு வாய்ப்பு இல்லாததனால் நான் இதிலே பேசுகின்றேன். அந்த நேரத்தை இதிலே சரி செய்துவிடக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன். கிருத்துவப் பரவர்கள் ஏற்கெனவே 1989-லே போட்ட அரசாணையின் உத்தரவுப்படி மிகவும் பிற்படுத்தப்பட்டவர்கள் பட்டியலிலே சேர்க்கப்பட்டிருக்கின்றார்கள். பிறகு 1991-லே ஓர் அரசாணை போட்டு மீண்டும் அவர்கள் பிற்படுத்தப்பட்டவர்கள் பட்டியலிலே சேர்க்கப்பட்டு, அவர்கள் அரசாங்கத்திடம் பல்வேறு கோரிக்கைகள் வைத்தபிறகும் நிறைவேற்றப்பட முடியாமல் போனதால் உயர் நீதிமன்றத்திலே வழக்கைத் தொடுத்தார்கள். உயர் நீதிமன்றமும் 1991-லே போடப்பட்ட அந்த அரசாணையை இரத்து செய்து அவர்களை மிகவும் பிற்படுத்தப்பட்டவர்கள் பட்டியலில் சேர்க்கவேண்டும் என்று ஓர் உத்தரவினை வழங்கியிருக்கின்றது. அந்த உத்தரவு கிடைக்கப்பெற்று ஓராண்டாகிவிட்டது. 2000-லே போடப்பட்டது என்று நினைக்கிறேன். திராவிட முன்னேற்றக் கழக அரசிடம் முறையிட்டபோது, அமைச்சரவைக் கூட்டத்திலே அதை வைத்து Backward Class Commission-க்கு - பிற்படுத்தப்பட்டவர்கள் நல ஆணையத்திற்கு - பரிந்துரை செய்து அனுப்பியதாகச் சொன்னார்கள். ஆனால், இதுவரைக்கும் அவர்கள் மிகவும் பிற்படுத்தப்பட்டவர் பட்டியலில் சேர்க்கப்படவில்லை. இதற்காகப் பல்வேறு போராட்டங்களை, சாலை மறியல்களை நடத்தியிருக்கின்றார்கள். அதைக் கவனத்தில்கொண்டு கன்னியாகுமரி மாவட்டத்திலே உள்ள கிருத்துவப் பரவர்களை மிகவும் பிற்படுத்தப்பட்டவர்கள் பட்டியலில் உயர் நீதிமன்றத்தினுடைய ஆணையின்படி சேர்க்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல கிராம ஊராட்சிகளிலே மகளிருக்கு 2 இலட்ச ரூபாய் செலவிலே மகளிர் துப்புரவு வளாகங்கள் அமைப்பதற்காக 92 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கின்றீர்கள். குமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையிலே அங்கே கிட்டத்தட்ட 67 பேரூராட்சிகள் இருக்கின்றன. அதிலே 11 பேரூராட்சிகள் ஊராட்சிகளாக மாற்றப்பட்டதால் இன்றைக்கு 56 பேரூராட்சிகள் இருக்கின்றன. இந்தப் பேரூராட்சிகள் அனைத்துமே குக்கிராமங்களாகத்தான் அமைந்திருக்கின்றன. ஊராட்சிகளில் எப்படிக் கிராமங்கள் இருக்கின்றனவோ அந்த அடிப்படையில்தான் அங்குள்ள பேரூராட்சிகளிலேயும் கிராமங்கள் இருக்கின்றன. அந்த மாவட்டத்திற்கு வருகை தந்த முன்னாள் அமைச்சர்களுக்கெல்லாம் தெரியும். எனவே,

இந்தத் திட்டத்தினை குமரி மாவட்டத்திற்கு மட்டுமல்லாது, தமிழ்நாடு முழுவதற்குமாக பேரூராட்சிகளில் உள்ள மகளிருக்கென இதை விரிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) இப்போதுதான் subject–க்கே போகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு மணித்துளிகள்.

**திரு. ஆஸ்டின்:** 10 நிமிடங்கள். அதைப்போல...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆஸ்டின், இன்னும் ஐந்து மணித் துளிகள் எடுத்துக்கொள்ளுங்கள்.

**திரு. ஆஸ்டின்:** ஏதாவது குறுக்கீடு இல்லாமல் இருந்தால் ஐந்து மணித் துளிகள் எடுத்துக்கொள்கிறேன். சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதி மேம்பாட்டு நிதியைப் பொறுத்தவரையில் 25 இலட்ச ரூபாயிலே தொடங்கப்பட்டு, 77 இலட்சம் ரூபாயாக, கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே உயர்த்தப்பட்டது; அதை ஒரு கோடி ரூபாயாக உயர்த்த வேண்டும் என்று கட்சி பாராமல் ஆளும் கட்சியைச் சார்ந்தவர்களும், எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்களும் தோழமைக் கட்சியைச் சார்ந்தவர்களும் கோரிக்கை வைத்திருக்கிறோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதை ஐந்து இலட்சம் தான் அதிகரித்து இருக்கின்றார்கள். இது போதுமான தொகை அல்ல. இது ஆளும் கட்சி உறுப்பினர்களுக்கும் அதிருப்தியாகத்தான் இருக்கும் என்று நான் கருதுகிறேன். எனவே இதை ஒரு கோடி ரூபாயாக மாற்றினால் அரசாங்கத்திற்கு சுமை குறையும். பொதுமக்களுக்கும் பல்வேறு நன்மைகளைச் செய்ய முடியும் என்ற கருத்திலே, ஒரு கோடி ரூபாயாக உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, நெடுஞ்சாலைத் துறையின் மூலமாக இப்போது உலக வங்கியிடம் கடன் பெற்று ஆயிரத்துத் தொள்ளாயிரம் கோடி ரூபாய் செலவிலே மாநிலச் சாலைகளும், மாவட்டச் சாலைகளும் அமைக்கப்படும் என்று நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கின்றது. அந்த ஆயிரத்துத் தொள்ளாயிரம் கோடி ரூபாயிலே சாலைகளை அமைக்கின்ற திட்டம் ஒரு வரவேற்கத்தக்க திட்டம்தான். பல்வேறு பகுதிகளிலே இன்றைக்கு ஊராட்சிச் சாலைகள் நிதி இல்லாமல் மிகவும் பழுதடைந்து இருக்கின்றன. ஊராட்சிகளுக்குச் சொந்தமான அந்தச் சாலைகளையும் இந்தத் திட்டத்தின்கீழ் கொண்டுவந்தீர்களானால் பல்வேறு கிராமங்களுக்கு அது பலன் அளிக்கத்தக்கதாக இருக்கும் என்று இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.



அதைப்போல, நாகர்கோவிலிலே புற வழிச் சாலை அமைப்பதற்கான திட்டம்; அங்கே போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருக்கின்ற காரணத்தினால் புற வழிச் சாலை அமைக்கப்பட வேண்டும் என்ற திட்டம் வரைபடமாக கிட்டத்தட்ட 20 ஆண்டுகளுக்கு முன்பாகத் தயாரிக்கப்பட்டு இன்னும் கிடப்பிலே போடப்பட்டிருக்கிறது. அதையும் கருத்திற்கொண்டு சுங்காங் கடையிலேயிருந்து புத்தேரி–ஒழுகினசேரி–கோதகிராமம்–கருப்புக்கோட்டை வழியாக இந்தச் சாலை அமைக்கப்படும் என்று சொன்னால், குறைந்த செலவிலே குறுகிய தூரத்திலே திருநெல்வேலி நெடுஞ்சாலையையும், கன்னியாகுமரி சாலையையும் இந்தச் சாலை போய் அடைவதற்கு ஒரு வாய்ப்பாக இருக்கும். அதை இந்த நிதியாண்டிலே நீங்கள் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து விபத்துக்காய சிகிச்சை மையம் ஒன்றைத் தொடங்குவதாகச் சொல்லியிருக்கிறார்கள். இது வரவேற்கக்கூடிய திட்டம்தான். இருந்தாலும்கூட விபத்து ஏற்பட்ட பிறகு அளிப்பதுதான் இந்த சிகிச்சை. விபத்தைத் தடுப்பதற்காக நீங்கள் சில திட்டங்களை வகுத்தால்தான் இந்த விபத்து அதிகமாக நடப்பதை நாம் தடுப்பதற்கு முடியும். இப்போது சென்னையிலிருந்து செங்கல்பட்டு வரை செல்லும் சாலையின் நடுவிலே தடுப்பு எடுத்து இருவழிச் சாலையாக அந்தச் சாலை மாற்றப்பட்டிருக்கிறது. அங்கே விபத்துக்கள் குறைவாக இருக்கின்றன. இதுபோல தமிழ்நாட்டிலே உள்ள அனைத்து தேசிய நெடுஞ்சாலைகளிலும் சாலையின் நடுவிலே தடுப்பினை எழுப்பி இருவழிச் சாலையாகவோ நான்கு வழிச் சாலையாகவோ நீங்கள் மாற்றுவீர்கள் என்று சொன்னால் பெரும்பாலான விபத்துகளை எல்லாம் தடுப்பதற்கு ஒரு வாய்ப்பாக இருக்கும். அதற்கான மதிப்பீடுகளை நீங்கள் தயார் செய்து மத்திய அரசோடு தொடர்பு கொள்ள வேண்டும். இதை மத்திய அரசின் உதவியோடுதான் செய்ய முடியும்; அப்படிச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சாலை விபத்துகள் எப்போது நடைபெறுகின்றன என்றால், அதிகாலை 1 மணியிலிருந்து 4 மணி வரைக்கும்தான் பெரும்பாலான விபத்துகள் நடக்கின்றன. எனவே இதைக் கருத்திற்கொண்டு அரசாங்கம், இந்த இடைப்பட்ட நேரத்திலே கனரக வாகங்களை தேசிய நெடுஞ்சாலைகளில் ஓட்டுவதற்கு தடையைக் கொண்டு வரும் என்று சொன்னால், நிச்சயமாக விபத்துகளைப் பெருவாரியான அளவில் தடுப்பதற்கு ஏதுவாக இருக்கும்.

அடுத்து, மின்சார வாரியத்தின் இழப்பு ரூ. 4,938 கோடி என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதிலே மின் அனுப்பீட்டின் மூலமாக உள்ள இழப்பு மட்டும் கிட்டத்தட்ட 2,000 கோடி ரூபாய். காலையிலேகூடச்

சொன்னார்கள். கிட்டத்தட்ட 17 விழுக்காடு அந்த மின் அனுப்பீட்டின் மூலமாக வரக்கூடிய இழப்பு என்று. இதைத் தடுப்பதற்கு ஏதாவது திட்டங்களை வகுக்க வேண்டுமென்று நான் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன். அதுபோல மின் வாரியத் துறை 2,000 கோடி ரூபாயை மானியமாகக் கேட்டிருக்கிறது. ஆனால் நிதிநிலை அறிக்கையில் அவர்களுக்கு ஒதுக்கப்பட்டிருப்பது வெறும் 500 கோடி ரூபாய்தான். இடைப்பட்ட அந்த இழப்பினை எப்படி இந்த வாரியம் சரிக்கட்டப் போகிறது என்பது எங்களுக்குத் தெரியவில்லை. இதைப்பற்றி ஏற்கெனவே வெள்ளை அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். கர்நாடகம், ஆந்திரா ஆகிய மாநிலங்களைவிட தமிழ்நாட்டிலே மின் கட்டணம் குறைவு என்று சொல்லியிருக்கிறார்கள். அதைப் பார்க்கின்றபோது வருங்காலத்திலே தமிழ்நாடு அரசு நுகர்வோருக்கான மின் கட்டணத்தை உயர்த்துவதற்கான திட்டத்தை வைத்திருக்கிறதோ என்ற சந்தேகம் பலருக்கும் ஏற்படுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. சாதாரண, நகர மக்களாக இருந்தாலும் சரி, கிராம மக்களாக இருந்தாலும் சரி, இப்போது additional deposit–ன் காரணமாகவும், மின் கட்டண உயர்வின் காரணமாக மிகவும் துன்பத்திற்கு உள்ளாகியிருக்கிறார்கள். எனவே மின் கட்டணத்தை உயர்த்துவதற்குத் திட்டமிருந்தால் அதைக் கைவிட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு மணித்துளியில் உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. ஆஸ்டின்:** அடுத்து போக்குவரத்துத் துறை ஒரு மிகப் பெரிய, முக்கியமான துறை. இந்தப் போக்குவரத்துத் துறையைப் பற்றி கிட்டத்தட்ட எட்டே எட்டு வரிகள்தான் இந்த நிதிநிலை அறிக்கையில் இருக்கிறது. போக்குவரத்துத் துறையைச் சீர் செய்வதற்கு என்னென்ன செய்ய வேண்டும் என்பதையும் சொல்லவில்லை. ஏதாவது சிறப்பு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறதா என்பதையும் சொல்லவில்லை. போக்குவரத்து இலாகாவைப் பொறுத்தவரையில் சிறப்பு நிதி ஒதுக்கீடு செய்து அதற்கு ஏதாவது குழுவை அமைத்து, ஒவ்வொரு போக்குவரத்துக் கழகத்திற்கும் சட்டமன்ற உறுப்பினர்கள் அடங்கிய குழுவைக்கூட நீங்கள் அமைத்து ஆங்காங்கே ஆய்வு செய்து, எதனால் இழப்பு ஏற்படுகிறது என்பதைப் பார்த்து, அதற்கான சிறப்பு நிதி ஒதுக்கீடு செய்து உதிரி பாகங்களை வாங்கி, பேருந்துகள் வழியிலே நிற்காமல் ஓடினால்தான், அந்தப் போக்குவரத்துக் கழகங்கள் இலாபம் அடைய முடியும் என்பதைக் கருத்திற்கொண்டு, அதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



தேர்தலுக்கு முன்பாக திராவிட முன்னேற்றக் கழகத் தொழிற்சங்கங்கள் எல்லாம் ஒரு போராட்டத்தை நடத்தினர். போக்குவரத்துத் தொழிலாளர்களை அரசு ஊழியர்களாக ஆக்க வேண்டும் என்று சொன்னார்கள். அப்போது, ஆளுங்கட்சியிலே இன்றைக்கு இருப்பவர்கள் எல்லாம் நாங்கள் ஆட்சிக்கு வந்தால் போக்குவரத்துத் தொழிலாளர்களை அரசு ஊழியர்களாக ஆக்குவோம் என்று அன்றைக்கு வாக்குறுதி கொடுத்தார்கள்; இதுவரையிலே ஆக்கப்படவில்லை. அதையும் நீங்கள் கருத்தில் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் சந்தானம். (குறுக்கீடு) திரு. ஆஸ்டின் உரையை முடித்துக்கொள்ளுங்கள். நீங்கள் கேட்ட நேரம் முடிந்துவிட்டது.

**திரு. ஆஸ்டின்:** சென்னையில் ஏற்பட்டுள்ள குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இந்த அரசு பல்வேறு திட்டங்களை வகுத்திருப்பதாகச் சொல்லப்பட்டிருப்பதை நான் வரவேற்கிறேன். அதேநேரத்தில் கிருஷ்ணா நதிநீர்த் திட்டத்தைப் பற்றி இந்த நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிடப்படவில்லை. ஏற்கெனவே ஆளுநர் உரையிலே பேசுகின்றபோது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே கிருஷ்ணா நீர் வருவதாகச் சொல்லி, தமிழக முதல்வரும், ஆந்திர முதல்வரும் மோசடி செய்து விட்டார்கள், கால்வாயே வெட்டப்படவில்லை, பிறகு எப்படி கிருஷ்ணா நீர் வரும் என்று. இரண்டு மாதங்களுக்கு முன்பாக இருந்த குடிநீர்த் தட்டுப்பாட்டின் காரணமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், ஆந்திர முதலமைச்சர் அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதி, கிருஷ்ணா நீரை அனுப்ப வேண்டுமென்று கேட்டார்கள். முன்னாள் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களும் தேசிய ஜனநாயகக் கூட்டணிக் கட்சிகளுடைய தலைவர்களும் ஒரு தீர்மானத்தைப் போட்டு, ஆந்திர முதலமைச்சருக்குக் கோரிக்கை வைத்தார்கள். அந்த அடிப்படையிலே தமிழகத்திற்கு கிருஷ்ணா நதிநீர் வந்தது என்று அரசு அப்போது ஓர் அறிக்கை வெளியிட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம் உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. ஆஸ்டின்:** என்னுடைய சந்தேகம் எல்லாம், இரண்டு, மூன்று மாதங்களுக்கு முன்புதான் ஆளுநர் உரையிலே பேசுகின்றபோது கால்வாயே இல்லாமல் எப்படி கிருஷ்ணா நீர் வரும் என்று கேட்டார்கள். இந்த இரண்டு மாதங்களுக்குள்ளாக வெட்டப்படாத கால்வாய் வெட்டி முடிக்கப்பட்டு விட்டதா? அல்லது இதுவும் ஒரு மோசடி என்று

சொல்கிறீர்களா? அல்லது இப்போது எந்தக் கால்வாய் வழியாகத் தண்ணீர் வந்ததோ, அதே கால்வாய் வழியாகத்தான் முன்பு தண்ணீர் வந்தது என எடுத்துக்கொள்ளலாமா? இதற்கு அரசு விளக்கம் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 4–55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆஸ்டின், உங்கள் பேச்சுக்கு கை தட்ட வேண்டியவர்கள் கை தட்டி விட்டார்கள். பேச்சை முடியுங்கள். உட்காருங்கள். அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. சந்தானம்.

**திரு. ஆஸ்டின்:** இரண்டே இரண்டு கோரிக்கைகள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆஸ்டின், பேச்சை முடித்துக் கொள்ளுங்கள். (குறுக்கீடு) போதும், போதும் உங்கள் பேச்சை முடித்துக் கொள்ளுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. சந்தானம்.

***திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2001–2002 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை விவாதத்திலே எங்களது இயக்கத்தின் சார்பிலே என்னுடைய கருத்தினை எடுத்து வைப்பதற்கு வாய்ப்புத் தந்த உங்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைக் கூறிக்கொள்கிறேன். இந்த மன்றம் பல்வேறு அறிஞர்களையும், பண்பாளர்களையும் பெற்றிருந்த மன்றம். இன்றைக்குக் காலையிலேகூட இந்த மன்றத்தினுடைய மரபு பற்றிப் பேசப்பட்டது. இன்றைக்குத்தான் என்னைப் பொறுத்தளவிலே ஓரளவுக்கு இந்த மன்றத்தினுடைய மரபு காப்பாற்றப்பட்டு, ஆரோக்கியமான விவாதங்கள் நடைபெற்றிருக்கின்றன என்று எண்ணி நான் உண்மையிலேயே மகிழ்ச்சியடைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

'வள்ளுவன் தன்னை உலகினுக்கே – தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு'

என்று சொல்வார்கள். அந்த வள்ளுவனுடைய நெறியினை நாம் கடைப்பிடித்தோமா என்று சொன்னால், இந்த விவாதத்தினுடைய ஆரம்ப நாளிலே இந்த மன்றத்திலே வைக்கப்பட்ட பொருள் எல்லாம் எப்படி இருந்தன என்று சொன்னால்,

'இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று'



என்று சொல்வார் வள்ளுவர். எத்தனையோ இனிய செய்திகள் எல்லாம் இருக்க, அந்த இனிமையான செய்திகளை எல்லாம் இந்த மன்றத்திலே எடுத்துவைக்கத் தவறி, கனியை விட்டு, காயை மட்டும் எடுத்துக்கொண்ட நிலையை நாம் இந்த விவாதத்தினுடைய தொடக்கத்திலே பார்த்தோம். அவையெல்லாம் ஓரளவுக்குக் குறைக்கப்பட வேண்டும்; பண்பு காக்கப்பட வேண்டும் என்பதுதான் இந்த மன்றத்தினுடைய மரபு.

இங்கு திரு. ஆஸ்டின் கூட, எதிர்க்கட்சியினருக்கு அதிக வாய்ப்புகள் தரவில்லை என்று சொன்னார். தோழமைக் கட்சியாக இருந்தாலும்கூட, நாங்கள்கூட, எதிர்க்கட்சி வரிசையிலேதான் இருந்து கொண்டிருக்கிறோம். எங்களுக்கும் வாய்ப்புக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

நடந்து முடிந்த தேர்தலிலேயிருந்து இங்கு வந்திருக்கின்றவர்கள் எல்லாம், தங்கள் தலைவருடைய சிந்தனையிலே உதித்த திட்டங்கள்தான் இப்போது நிதிநிலை அறிக்கையிலே மறு வடிவம் பெற்று வந்திருக்கின்றன என்று சொல்கிறார்கள். நீங்கள் தேர்தல் களத்தைச் சந்திக்கிறபோது, எங்களுடைய பொற்கால ஆட்சி தொடர வேண்டும்; எங்களுடைய மிகச் சிறப்பான திட்டங்கள் எல்லாம் மக்களிடத்திலே சென்றடைந்து இருக்கின்றன; அவர்கள் எங்களுக்கு வாக்களிப்பார்கள் என்று உங்களுடைய நல்ல திட்டங்களை எல்லாம் எடுத்துச் சொன்னீர்கள். நீங்கள் 5 ஆண்டு காலம் செய்த சாதனைப் பட்டியலை வாசித்துக் காட்டினீர்கள். ஆனால், மக்கள் தீர்ப்பு எப்படி இருந்தது என்பதை நீங்கள் தயவுசெய்து சிந்தித்துப் பார்க்க வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) ஜனநாயகத்திலே, 'மக்கள் தீர்ப்புதான் மகேசன் தீர்ப்பு' என்று சொல்வார்கள். மக்கள் மன்றம்தான் இந்த நாட்டில் உயர்ந்த மன்றம். சட்டமன்றங்களையும், நாடாளுமன்றங்களையும் உருவாக்குகின்ற மன்றம் மக்கள் மன்றம். அந்த மன்றம் ஒரு தீர்ப்பை நமக்கு வழங்கியிருக்கிறது. இங்கு குறிப்பிட்டவர்கள் சொன்னதுபோல, இப்போது முதலமைச்சராக இருக்கின்ற புரட்சித் தலைவி அவர்கள் தேர்தலிலே போட்டியிட முடியாத அளவுக்கு நீங்கள் தடுத்திருந்தும்கூட–நீங்களெல்லாம் சொன்னீர்கள், அவர்கள் தேர்தலிலே போட்டியிட முடியவில்லை, அடுத்து உங்களுக்கு முதலமைச்சர் யார் என்கின்ற கேள்வியை மக்களிடத்திலே எழுப்பினீர்கள் –நாங்கள், அந்தக் கூட்டணிக் கட்சியைச் சேர்ந்தவர்கள், தலைவர் மூப்பனார் உட்பட அத்தனைபேரும், அவர்கள் தேர்தலிலே நிற்கவில்லை என்று சொன்னாலும், எங்களுடைய தலைவர், இன்றைக்கு இருக்கின்ற முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள்தான் என்பதை மிகத் தெளிவாக எடுத்து வைத்தோம். (மேசையைத் தட்டும் ஒலி) அதை இந்த மக்கள்

மன்றம் ஏற்றுக்கொண்டு, மிகச் சரியான வாக்குகளை இந்த அணிக்கு அளித்து - அதிலும்கூட நான் சொன்னேன், தமிழ் மக்கள் மிகுந்த தெளிவான சிந்தனையோடு இத்தனை கூட்டணி இருந்தாலும்கூட, இப்போது மத்தியிலே ஆளுகின்ற கூட்டணி ஆட்சி போல இல்லாது, தமிழகத்திலே ஒரு கட்சியினுடைய ஆட்சி, சிறந்த ஆட்சி இருக்க வேண்டும் என்பதற்காக அந்தக் கட்சிக்கு மட்டும் மக்கள் அறுதிப் பெரும்பான்மையான வாக்குகளை அளிப்பார்கள் என்று - வெற்றியைத் தேடித் தந்திருக்கிறார்கள்.

*பிற்பகல் 5-00*

மக்கள் வெற்றியைத் தேடித் தந்து, இந்த அரசு பொறுப்பேற்கின்ற நிலையிலிருந்தபோது, மக்கள் மன்றத்தினுடைய தீர்ப்பை மதித்து அன்றைக்கு ஆளுநராக இருந்தவர்கள் இன்றைய முதலமைச்சரை அழைத்து முதலமைச்சராகப் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்கள். அன்றிலிருந்தே எதிர்க்கட்சியாக இருக்கின்றவர்கள், ஆரோக்கியமாக ஒரு ஆறு மாத காலமாவது பொறுத்திருந்து இந்த அரசினுடைய செயல்பாடுகளைப் பார்த்து, அதிலேயிருக்கிற தவறுகளைச் சுட்டிக் காட்டியிருக்க வேண்டும். இல்லை, நல்லது என்று சொன்னால் அதைப் பாராட்டவில்லை என்று சொன்னாலும்கூடப் பரவாயில்லை, குறை சொல்லாமல் இருக்க வேண்டும். இன்றைக்கு முதலமைச்சராக இருக்கிறவர்கள் கோட்டையிலே கொடியேற்றிவிட்டு அன்றைக்கு ஒரு நல்ல செய்தியைச் சொன்னார்கள். ஒரு ஜனநாயகத்தினுடைய ஆரோக்கியத் தன்மை என்ன என்று சொன்னால் எதிர்க்கட்சியாக இருக்கிறவர்கள் ஆளுகின்ற கட்சியினுடைய செயல்பாடுகளைப் பாராட்டவில்லை என்று சொன்னாலும்கூட, அதை விமர்சனம் செய்து, அதற்கு ஊறு தேடாமல் இருந்தாலே அது பெரிய ஜனநாயக மரபு என்று சொன்னார்கள். அதுதான் உண்மையான ஜனநாயக மரபு. எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் எதற்கு இருக்கிறீர்கள் என்றால் ஆலோசனை சொல்வதற்கு. அரசிலே இருக்கிற தவறுகளைச் சுட்டிக் காட்ட இருக்கிறீர்கள். இப்போது நம்முடைய ஆஸ்டின்கூடச் சொன்னார்; காவலருக்கு ஆள் சேர்க்கிற பணியிலே, நேர்முகத் தேர்வு எல்லாம் தாமதமாகிக் கொண்டிருக்கிறது என்று சொன்னார். அந்தக் காவலர்களுக்கு உடற்பயிற்சித் தேர்வு, எழுத்துத் தேர்வு எல்லாம் முடிந்தது எந்தக் காலத்தில் என்பதை சகோதரர் சிந்தித்துப் பார்க்க வேண்டும். கடந்த ஆட்சிக் காலத்திலே அந்தத் தேர்வுகள் எல்லாம் நடந்து முடிந்து, அவர்களுக்கு வாய்ப்பு அளிக்கவில்லை என்கிற நிலையைப் பத்திரிகைகள்



எல்லாம் சுட்டிக்காட்டி, புதிதாக அரசு வந்தவுடனே அந்த அரசு தேர்வு செய்தவர்களை ஒரு கட்சி மனோபாவத்தோடு ஒதுக்கி விடுவார்களோ என்று சொல்கிற நேரத்தில், அதெல்லாம் இல்லை என்கிற முறையில் அவர்களுக்கு இன்றைக்கு நேர்முகத் தேர்வு நடத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதுதான் உண்மை.

**திரு. ஆஸ்டின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த ஆட்சியிலே தேர்வு நடந்தது, இந்த ஆட்சியிலே தேர்வு நடந்தது என்று அரசை நான் குறை சொல்லவில்லை. ஒன்றாம் தேதி, இரண்டாம் தேதி, மூன்றாம் தேதி என்று அவர்களுக்கு நேர்முகத் தேர்வுக்கு நேரடியாக அழைப்பு அனுப்பப்பட்டு விட்டது. ஆனால் பத்திரிகை மூலமாக அந்த அதிகாரிகள் 16, 17, 18 ஆம் தேதிக்கு மாற்றி வைத்திருக்கிறார்கள். அவர்களுக்கு நேராக தகவல் அனுப்பவில்லை. ஆனால், 16, 17 ஆம் தேதிகளில் அவர்கள் போகிறபோது 6 ஆம் தேதி, 7 ஆம் தேதி, 8 ஆம் தேதியே நேர்முகத் தேர்வை முடித்துவிட்டதாகச் சொல்கிறார்கள். எந்தவிதமான நேர்முகத் தேர்வுக்கான தகவலும் அவர்களுக்கு அனுப்பப்படவில்லை. இந்தத் தவறைத்தான் நான் சுட்டிக் காட்டினேனே தவிர, எந்த ஆட்சிக் காலத்திலே நடந்தது என்ற காரணத்தை நான் சொல்லவில்லை. இந்தத் தவறை அதிகாரிகள் திருத்திக்கொண்டு மீண்டும் ஒரு வாய்ப்பு அவர்களுக்குத் தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. லா. சந்தானம்:** அந்த நேரத்திலேகூட, அவர்களுக்கு நேர்முகத் தேர்வுக்கு தேதி எல்லாம் குறிப்பிடப்பட்டு, அது மாற்றி வைக்கப்பட்டது என்பதும் உண்மை. இந்த அரசு பொறுப்பேற்றவுடனே அவர்களையெல்லாம் நீக்கிவிடாத அளவிற்கு மீண்டும் அந்த வாய்ப்பினைக் கொடுத்திருக்கிறார்கள் என்பதுதான் உண்மை. அதை நீங்கள் பாராட்டவில்லை என்று சொன்னாலும் தயவுசெய்து குறை சொல்ல வேண்டாம் என்பதற்காகத்தான் இதை நான் எடுத்துச் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் சந்தானம், எதிர்க்கட்சித் தலைவர் பேசுகிறார்.

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சந்தானம் அவர்கள் இங்கே இப்போது மட்டும் அப்படி ஒரு முறையோடு நடைபெறுவதுபோலச் சொல்கிறார்கள். 1996 ஆம் ஆண்டு, தி.மு.க. ஆட்சி ஏற்பட்ட அந்தக் காலகட்டத்தில்,

அதற்கு முன்னால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆயிரத்துக்கும் மேற்பட்ட காவல் துறை அலுவலர்களின் அந்தப் பட்டியல் அப்படியே மாற்றப்படாமல் அவர்கள் அலுவலுக்கு எடுக்கப்பட வேண்டுமென்று ஆணையிடப்பட்டு, எடுக்கப்பட்ட விவரம் சந்தானம் அவர்களுக்கு நிச்சயமாகத் தெரிந்திருக்கும் என்று நான் நம்புகிறேன். அதுதான் அரசாங்க முறை.

**திரு. லா. சந்தானம்**: அதுபோலத்தான் இந்த அரசும் பெருந் தன்மையோடு நடந்து கொண்டிருக்கிறது என்பதைத்தான் நான் சுட்டிக்காட்ட விழைந்தேன். அதுபோல, இன்றைக்கு ஜனநாயகத்தின் மூலமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்த அரசை, அதைச் செயல்படுத்தவில்லை, இதைச் செயல்படுத்தவில்லை என்று சொல்கிறவர்கள் அதைச் செயல்படாமல் தடுக்கிற அளவிற்குப் பல்வேறு காரியங்களைச் செய்துகொண்டிருக்கிற காரணத்தினால்தான், இன்றைக்கு ஆட்சிக்கு வந்து இந்த மூன்று மாத காலத்திற்குள் எத்தனை சோதனைகளை ஏற்றுக் கொண்டு இந்த அரசு செயல்பட வேண்டிய கட்டாய நிலையிலே இருக்கிறது என்பதை நீங்கள் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். மக்கள் தீர்ப்பை நீங்கள் மதிக்க வேண்டும். மக்கள் இந்த ஆட்சிக்கு ஆளுகின்ற வாய்ப்பினைக் கொடுத்திருக்கிறார்கள். நீங்கள் மிகப் பொறுமையாக இருக்கவேண்டும். உங்களுடைய தத்துவம்தான் மாநிலத்திலே சுயாட்சி, மத்தியிலே கூட்டாட்சி என்பது; அது திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தாரக மந்திரம். இன்றைக்கு ஆட்சிகள், பதவிகள் மாறலாம், வரலாம், போகலாம். ஆனால் ஓர் இயக்கத்தினுடைய அடிப்படைத் தத்துவங்களிலிருந்து நிச்சயமாக மாறக்கூடாது என்பதிலே நீங்கள் தெளிவாக இருக்க வேண்டும். எனவே, மாநிலத்திலே சுயாட்சி, மத்தியிலே கூட்டாட்சி என்று சொன்னவர்கள் இன்றைக்கு மாநிலத்திலே இருக்கின்ற அரசுக்கு மத்திய அரசினுடைய துணையோடு பல்வேறு இடையூறுகளைச் செய்ய வேண்டும் என்று நினைக்கிறீர்களே அது எந்த வகையில் பொருத்தமாக இருக்கும் என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே உங்களுடைய கொள்கையிலே நீங்கள் பிடிப்பாக இருக்க வேண்டும், வலுவாக இருக்க வேண்டும். அந்த நிலையை எந்த நேரத்திலும், பதவி இருந்தாலும் சரி, பதவி இல்லை என்று சொன்னாலும் சரி அதை மாற்றிக்கொளளாத ஒரு நிலையை எடுத்துக்கொள்ள வேண்டும். நீங்கள் எல்லாம் மூத்த அரசியல்வாதிகள் என்பதை நான் இந்தக் கட்டத்திலே சுட்டிக்காட்டிச் சொல்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.



*பிற்பகல் 5-05*

அதைப்போல இப்போது அந்த விதத்திலே அந்த இடையூறுகள் எல்லாம் இல்லாத அளவுக்கு இந்த ஆட்சியை நடைபோட விட்டிருந்தால் 100 நாட்களிலே 100 ஆண்டு சாதனைகளை நிச்சயமாக நிகழ்த்துகிற நல்லதொரு ஆட்சியாகவே இந்த ஆட்சி இருக்கும். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால் இத்தனை இடர்பாடுகளையும் தாண்டிக்கூட இன்றைக்கு பல்வேறு நலத் திட்டங்களை இந்த அரசு நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறது.

'கடன்பட்டார் நெஞ்சம்போல் கலங்கினான் இலங்கை வேந்தன்' என்று சொல்வார்கள். அந்த அளவுக்கு கடன் சுமை என்பது ஒரு மனிதனுடைய மனதைப் பாதிக்கிற ஒரு நிலை. அந்த நிலையைப் பற்றியும் விவசாயிகள் பட்டிருந்த கடனைப் பற்றியும், அவர்கள் நெஞ்சத்திலே இருக்கிற சுமையைப் பற்றியும் பல்வேறு காலக் கட்டங்களில் எடுத்துச் சொல்லியும்கூட அன்றைக்கு நிறைவு செய்யப்படவில்லை. நாங்கள் 7 சதவிகிதம் வட்டி bonus-ஆகக் கொடுத்தோம் என்று சொன்னார்கள். ஆனால் எப்படி அறிவிக்கப்பட்டிருந்தது என்று சொன்னால் அந்த விவசாயி முழுமையாகக் கடனை எல்லாம் செலுத்திவிட வேண்டும்; செலுத்திய பின்பு அரசுக்குத் தெரிவித்து அதன் மூலமாக அந்தச் சலுகையைப் பெற வேண்டும் என்று இருந்தது. அந்தச் சலுகையின் மூலமாக யாராவது பயன்பெற்றிருக்கிறார்களா என்று சொன்னால் இல்லை என்கிற அளவுக்குத்தான் இருக்கிறது. இப்போது 310 கோடி அளவிலே தள்ளுபடி செய்துவிட்டு 100 கோடியை மட்டும் இந்த நிதிநிலை அறிக்கையிலே சேர்த்திருக்கிறீர்களே என்கின்ற கேள்வியைக்கூட இங்கே எழுப்பினார்கள். இங்கே கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் சொல்கிறபோதுகூட இதற்குள்ளாகவே ஏறத்தாழ 57 கோடி ரூபாய் அளவிற்கு மக்கள் இந்தப் பயனைப் பெற்றிருக்கிறார்கள் என்கிற புள்ளிவிவரத்தைச் சொன்னார்கள். அதைப்போல இன்றைக்கு நீங்களும் எங்களோடு சேர்ந்து – நாங்கள்கூட சொல்லிக் கொண்டிருக்கிறோம் – விவசாயிகளுக்கு நீங்கள் கொடுத்திருக்கிற காலக்கெடு போதாது, நீங்கள் செப்டம்பர் மாதம் 30 ஆம் தேதிக்குள்ளாகக் கட்ட வேண்டும் என்று சொல்லியிருக்கிறீர்கள், ஆனால் இந்த நேரத்திலே நெல்லோ, கரும்போ விளைகின்ற நேரம் அல்ல, இன்றைக்கு தஞ்சையிலேகூட இப்போதுதான் நெல்லைப் பயிர் செய்து கொண்டிருக்கிறார்கள். அதுபோல, மதுரை மாவட்டத்தைப் போன்ற பெரியார் பாசனங்களிலேகூட இப்போதுதான் விவசாயம் செய்து கொண்டிருக்கிறார்கள். எனவே அவர்கள்

விவசாயத்தினுடைய பலனை எடுத்து அந்தக் கடனை அடைக்கின்ற அளவுக்கு ஒரு காலக்கெடுவை நீட்டித்துக் கொடுங்கள் என்று சொல்லலாம். அதன் மூலமாக அதிகப்படியான செலவு வந்தாலும்கூட அதைத் துணை budget—லே சேர்த்துக்கொள்ள முடியும் என்கிற விதி எல்லாம் இருக்கிறது. எனவே அப்படி ஆரோக்கியமான ஆலோசனைகளை இந்த அரசுக்கு நீங்கள் சொல்ல வேண்டும்.

அதைப்போல தேயிலைத் தோட்ட விவசாயிகள். அந்தக் காலத்திலே தங்களுடைய தேயிலைக்கு விலை கிடைக்கவில்லை என்று போராடுகிற நேரத்திலே—இப்போது மனித உரிமையைப் பற்றியும், காவல் துறை கெட்டுவிட்டது என்று எல்லாம் சொல்கிறவர்கள் அன்று அந்தத் தேயிலை விவசாயிகள் தங்களுடைய பொருளுக்கு விலை கிடைக்க வேண்டும் என்கின்ற நியாயமான கோரிக்கையை வைத்துப் போராடுகிற நேரத்தில்—நீங்கள் நீலகிரி மாவட்டத்திலே என்ன நடவடிக்கை எடுத்தீர்கள் என்பதை சற்று தயவுசெய்து பின்னோக்கி சிந்தித்துப் பாருங்கள். அந்த விவசாயிகளுக்குக் கிடைத்த பரிசு அடியும், உதையும், சிறைவாசமும் தான். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால் இப்போது இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு உற்பத்தியாகின்ற விவசாயிகளுடைய தேயிலையை கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக வாங்கி, அரசே விற்பனை செய்யும் என்கிற நிலையை எடுத்திருக்கிறது. அதைத் தானே நாங்கள், சட்டமன்றத்திலே எல்லா எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்கள் எல்லாம், அன்றைக்கு உங்களோடு தோழமைக் கட்சியாக இருந்தவர்கள் எல்லாம் சொன்னோம். அவர்கள் உற்பத்தி செய்கிற அந்தத் தேயிலைக்கு ஒரு நியாயமான விலை கொடுத்து வாங்க நீங்கள் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக விற்பனை செய்யுங்கள் என்று சொன்னோம். செய்யவில்லையே! அதை இன்றைக்குச் செய்திருக்கிறார்கள். நீங்கள் ஏன் அதைப் பாராட்டக் கூடாது?

*பிற்பகல் .5–10*

அதுபோல, ஆசிரியர்கள் பணி மாற்றத்தில் எத்தனையோ இடையூறுகளைச் சந்தித்துக்கொண்டிருந்தார்கள். அந்த இடையூறுகளையெல்லாம் இன்றைக்குத் தவிர்த்து அவர்களுக்கெல்லாம் நியாயமான முறையிலே பணி மாற்றம் செய்வதற்குரிய நடவடிக்கையை எடுத்து இந்த அரசு செய்து முடித்திருக்கிறதே, அதை நீங்கள் பாராட்ட வேண்டாமா? இப்படி எத்தனையோ நலத் திட்டங்கள் இன்றைக்கு இந்த அரசின் மூலமாகச் செய்யப்பட்டிருக்கின்றன. மத்திய அரசினுடைய தலையீட்டின் காரணமாக, அந்த மனச் சுமையோடும்கூட இன்றைக்கு



நம் முதலமைச்சர் அவர்கள் மிகத் திறமையாக அத்தனை காரியங்களையும் செய்துகொண்டிருக்கிறார்கள்.

ஒன்றை நான் குறிப்பிடுகிறேன். அவர்கள் பெண்ணாக இருந்தாலும்கூட மிகுந்த துணிச்சல் உள்ளவர்கள், ஆற்றல் மிக்கவர்கள், நெஞ்சுரம் மிக்கவர்கள் என்பதை நான் சொல்லவில்லை. இந்த மாநிலத்தினுடைய முதலமைச்சராக இருந்த மாண்புமிகு முன்னாள் முதலமைச்சருடைய துணைவியார் அவர்கள் ஒரு பத்திரிகைக்குப் பேட்டி கொடுக்கின்ற நேரத்திலே அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள். இன்றைக்கு இருக்கின்ற முதல்வர்களைப் பற்றிச் சொல்கின்ற நேரத்தில், அரசியலுக்கு எல்லாம் அப்பாற்பட்டு, அவருக்கு இருக்கின்ற துணிவை (மேசையைத் தட்டும் ஒலி) நெஞ்சுரத்தை, உறுதியை நான் பாராட்டுகிறேன் என்று அவர்கள் குமுதம் என்கிற பத்திரிகையிலே பேட்டி அளிக்கும்போது குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த அளவிற்கு ஒரு துணிச்சல் மிக்க முதல்வராக இன்றைக்கு இருந்துகொண்டிருக்கிறார்கள். ஆகவே, நீங்கள் தயவுசெய்து, இந்த அரசு நடப்பதற்கு வழி வகுத்துக் கொடுங்கள். மக்கள் மன்றத்தை மதியுங்கள். மக்கள் வாக்களித்து தீர்ப்பளித்திருக்கிறார்கள். நீங்கள் அதை மதிக்க வேண்டும். குறுக்கு வழியாக ஆட்சிப் பொறுப்புக்கு வந்துவிடுவோம் என்று நினைக்காதீர்கள். தயவுசெய்து அதை மறந்துவிடுங்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சந்தானம் அவர்கள் 'குறுக்கு வழியாக நீங்கள் ஆட்சிக்கு வந்துவிட வேண்டுமென்று கருதாதீர்கள்' என்று சொல்கிறார்கள். குறுக்கு வழியே எங்களுக்குத் தெரியாது. அதிலேயும், ஆட்சிக்கு வருவதற்கு எந்தக் குறுக்கு வழியையும் என்றைக்கும் நாங்கள் தேர்ந்தெடுக்க மாட்டோம். முறைப்படி எந்தக் காலத்தில் தேர்தலைச் சந்திக்கிறோமோ அந்தக் காலத்தில்தான் மக்கள் எங்களைத் தேர்ந்தெடுத்தால்—நாங்களாகக்கூட வரமாட்டோம், மக்கள் தேர்ந்தெடுத்தால்—வருவோம். இன்னும்கூட, மக்கள் தேர்ந்தெடுக்கா விட்டால், அப்போதும்கூட எதிர்க்கட்சியாக இருப்பதிலே நாங்கள் வருத்தப்பட மாட்டோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேராசிரியர் குறிப்பிடும்போது குறுக்கு வழியில் ஆட்சிக்கு வர விரும்பவில்லை என்ற கருத்துப்படப் பேசியிருக்கிறார்கள். அதை வரவேற்கிறோம். ஆனால், சந்தானம் பொருள்பட பேசியது குறுக்கு வழியில் ஆட்சியைக் கவிழ்க்காதீர்கள் என்றுதான் அவர் சொல்லியிருக்கிறார். ஆகவே அதைச் செய்யமாட்டார்கள் என்று கருதுகிறேன்.

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் தம்பிதுரை அவர்களுக்கு, அரசியலிலே ஒருவர் ஈடுபட்டு அந்த் அரசியல் அடிப்படையிலே தவறான பாதையிலே போவதைத்தான் குறுக்கு வழி என்று சொல்வார்களே தவிர மற்றவற்றை குறுக்கு வழி என்று தம்பிதுரை அவர்களோ அல்லது அமைச்சர் பொன்னையன் அவர்களோ சொல்ல முடியாது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் அறியாதவர்கள் அல்ல. 1980 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலிலே திராவிட முன்னேற்றக் கழகம், அதனைச் சேர்ந்த கூட்டணிக் கட்சியான காங்கிரசும் வெற்றி பெற்றவுடனே, இந்த மாநிலத்திலே ஆட்சி செய்துகொண்டிருந்த புரட்சித் தலைவருடைய ஆட்சி, எம்ஜிஆருடைய ஆட்சி கலைக்கப்பட்டதா இல்லையா? (மேசையைத் தட்டும் ஒலி)

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1991 ஆம் ஆண்டில் தி.மு.க. ஆட்சி யாருடைய தூண்டுதலால், யாருடைய ஆதரவோடு, யார் மூலமாகக் கவிழ்க்கப்பட்டது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அறிந்து, அவர் பல தேர்தல் கூட்டங்களிலே பேசியிருக்கிறார்கள். ஆகவே, இடம், பொருள், ஏவல் என்ற நிலையில் நாம் மாறியிருக்கிறோம். அதுவே தவிர, நியாயங்கள் மாறுவதில்லை.

**திரு. லா. சந்தானம்:** அதைத்தான் நான் குறிப்பிடுகிறேன். அப்படிக் கவிழ்க்கப்பட்டு மீண்டும் தேர்தலைச் சந்திக்கின்றபோதுகூட, எம்.ஜி.ஆர். அவர்கள் மக்கள் ஆதரவைப் பெற்று திரும்பவும் தேர்தல் களத்திலே வெற்றி பெற்று தமிழகத்தின் முதல்வராக ஆட்சிப் பொறுப்பை ஏற்றார் என்கிற உண்மை வரலாறு இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதுபோல, உங்களையும் கலைத்தது உண்மை. ஆனால், அந்த அனுதாப அலை உங்களுக்கு வீசவில்லை. 1991–லே நடந்த தேர்தலிலே அ.தி.மு.க. வருகின்ற சூழ்நிலை இருந்தது. எனவே, கவிழ்க்கப்படுகின்ற முயற்சியிலே திராவிட முன்னேற்றக் கழகம் ஈடுபட்டு மீண்டும் தேர்தலைச் சந்தித்தால் உங்களுக்கு ராசியில்லை. எங்களுக்குத் தெரியும் அது. அது ஒரு அரசியல் அனுபவம்.

*பிற்பகல் 5–15*

**பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ராசியைப் பற்றி மிக நன்றாகத் தெரிந்த சந்தானம் அவர்கள்,



எங்களுக்கு ராசி இல்லை என்று சொன்னதை நான் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். தவறான பாதையில் போய் அதற்குப் பின் ஆட்சிக்கு வர முயற்சிக்கக் கூடாது என்ற அடிப்படையில் சொன்ன கருத்தைத்தான் நான் ஏற்றுக்கொண்டேனே தவிர, எம்.ஜி.ஆர். அவர்களுக்கு இருந்த, புரட்சி நடிகர் என்று பாராட்டப்பட்டு, புரட்சித் தலைவராக உயர்ந்த எம்.ஜி.ஆர். அவர்களுக்கிருந்த மக்களுடைய பேராதரவு, மக்களுடைய அன்பு, இந்த நாட்டிலே தமிழ்நாட்டிலே வேறு யாருக்கும் அப்படியொன்றும் அமையவில்லை. மற்றவர்கள் எல்லோருமே ஒவ்வொரு கட்டத்தில் மக்களுக்காக ஆற்றிய தொண்டு அடிப்படையில், அரசியல் செல்வாக்கு அடிப்படையில், தொடர்பு அடிப்படையில், பெற்ற செல்வாக்கைத்தான் அவர்கள் தங்களுடைய அரசியலில், தங்களுடைய செல்வாக்குக்கு அடிப்படையாகப் பயன்படுத்தமுடியும். ஆகையால் எம்.ஜி.ஆர். அவர்களை மற்றவர்களோடு ஒப்பிட்டு, அதே கண்ணோட்டத்துடன் எல்லாவற்றையும் பேசுகிறபோதுதான் இடர்பாடு ஏற்படுகிறது.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தளவுக்கு பேராசிரியர் அவர்களுடைய விளக்கத்தினையேற்று இனிமேலாவது இந்த ஆட்சி இருக்கின்ற காலத்திற்குள் – மக்கள் இந்த ஆட்சி 5 ஆண்டுகளுக்கு இருக்க வேண்டுமென்று வாக்களித்து இந்த ஆட்சிக்கு பொறுப்பைத் தந்திருக்கிறார்கள் – ஆரோக்கியமான முறையிலே, எதிர்க்கட்சி என்கிற முறையில் நல்ல ஆலோசனைகளைச் சொல்லி இந்த ஆட்சியிலே இருக்கிற தவறுகளைச் சுட்டிக்காட்டி அந்தத் தவறுகளைக் களைவதற்கு முன்வருவீர்களேயானால், அதை நிச்சயமாக நாங்கள் எல்லாம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். இந்த நிதிநிலை அறிக்கையிலே எல்லாத் தரப்பு மக்களுக்கும் பயன்படுகின்ற அளவிலே பல்வேறு திட்டங்கள் உள்ளன. விவசாயிகளுக்கு கடன், அபராத வட்டித் தள்ளுபடி, தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் போன்றவை உள்ளன. குடிநீர்த் திட்டங்களைப் பொறுத்தவரையில் மிகுந்த அக்கறையுடன் கிராமப்புறங்களுக்கும், நகர்ப்புறங்களுக்கும் அதைச் சீர் செய்ய வேண்டும் என்கிற நோக்கத்தோடு, அதற்குரிய நிதியை ஒதுக்கி கிராமப்புறங்கள், நகர்ப்புறங்களிலே இருக்கிற குடிதண்ணீர்த் தட்டுப்பாட்டை நீக்குவதற்கு இந்த அரசு சிறந்த முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் 5 மணித்துளிகள்.

**திரு. லா. சந்தானம்:** அதேபோல கிராமங்களிலே இருக்கின்ற சாலைகளையெல்லாம் சீர்செய்ய வேண்டும் என்பதற்காக அந்தச்

சாலைகளுக்கு நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதேபோல மகளிருக்கு பல்வேறு நலத் திட்டங்களைச் செய்திருக்கிறீர்கள். மிகுந்த பற்றாக்குறை இருக்கிறது என்பதை நானும் உணர்வேன். அந்தப் பற்றாக்குறையை நீக்குவதற்கு வரிகள் விதிப்பது என்பது தவிர்க்க முடியாது என்று இருந்தாலும்கூட நான் இந்த அரசுக்கு என்னுடைய வேண்டுகோள் ஒன்றை வைப்பதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

இன்றைக்கு தென்னை மரங்கள் ஏற்கெனவே நோயினால் பாதிக்கப்பட்டிருப்பதோடு தேங்காய் விலையும் மிகக் குறைவாக இருந்து கொண்டிருக்கிறது. தென்னை விவசாயிகள் எல்லாம் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதேபோலத்தான் பருத்தி விவசாயம் செய்கின்றவர்களும். இன்றைக்கு எத்தனையோ பஞ்சாலைகள் ஓடமுடியாததொரு சூழ்நிலையில் இருக்கின்றன. அதிலேயிருக்கிற தொழிலாளர்கள் எல்லாம் தங்களுடைய கோரிக்கைகளை முன்வைத்து, வேலை நிறுத்தம் செய்து கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு இந்த அரசின் முயற்சியால் சமாதானம் செய்து அவையெல்லாம் ஓடிக் கொண்டிருக்கின்றன. அப்படியிருக்கின்ற நேரத்திலே உங்களுடைய கஷ்டத்தையும் ஏற்றுக்கொண்டுகூட–தென்னை விவசாயிகள் ஏற்கெனவே மிகுந்த விலை வீழ்ச்சியிலே பாதிக்கப்பட்டிருக்கிறார்கள், அவர்கள் மீண்டும் பாதிக்கப்பட்டுவிடக் கூடாது என்பதைக் கருத்தில்கொண்டு–கொப்பரைத் தேங்காய்க்கும், பருத்திப் பொருட்களுக்கும் விதிக்கப்பட்டிருக்கிற வரியைத் தயவுகூர்ந்து இந்த அரசு மறு பரிசீலனை செய்ய வேண்டும். அவர்களுக்கு ஏதாவது வரி விலக்கு அளிக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்லிக்கொள்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல கரும்பு விவசாயிகள் எல்லாம் கடந்த 6, 7 மாதங்களாக அரவை செய்கின்ற ஆலைகளுக்குத் தங்களுடைய கரும்பைக் கொடுத்துவிட்டு. அதற்குரிய பணத்தைப் பெற முடியாத நிலையில் இருந்துகொண்டிருக்கிறார்கள். தயவுசெய்து, இந்த வட்டிச் சலுகைகளையெல்லாம் நீங்கள் கொடுத்திருக்கிறீர்கள். அவர்களுக்கு இந்தப் பணம் போய்ச் சேர்ந்தால்தானே கூட்டுறவுக் கடன்களை அவர்கள் முழுமையாக அடைத்து அவர்களுக்குக் கிடைக்கின்ற இந்த வட்டிச் சலுகையைப் பெற முடியும். எனவே அந்த முறையிலே நீங்கள் எப்படியாவது கரும்பு உற்பத்தி செய்கின்ற விவசாயிகளுக்கும் பணம் கொடுக்க வேண்டும்.



*பிற்பகல் 5–20*

அதுபோல, கிராமங்களிலே ஒரு ஆதாரத் தொழிலாக, இப்போது பால் உற்பத்தியாளர்கள் மாடுகளை வைத்து பால் கறந்து அதை உடனடியாக அரசுக்குக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். பால் உற்பத்தியாளர்களுக்கும் கடந்த 2, 3 மாதங்களாக பால் பணம் கொடுக்கப்படவில்லை என்கின்ற நிலை இருந்துகொண்டிருக்கிறது. இதையும் இந்த அரசு கொடுப்பதற்கு முழுமையான முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும் என்று அதை இந்த நேரத்திலே கோரிக்கையாக வைக்கின்றேன்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்தளவிலே, முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே ஆளுநர் உரையின் மீதான விவாதத்திற்குப் பதில் அளிக்கின்ற நேரத்திலே எங்கள் பகுதியினுடைய ஜீவாதாரத் திட்டமாகிய 58 கால்வாய் கிராமத் திட்டத்திற்கு நான் நிதி ஒதுக்கித் தருகிறேன் என்ற வாக்குறுதியைக் கொடுத்திருக்கிறார்கள். அது இன்னும் சற்று மந்தமாக, செயல்படாத நிலையிலே இருக்கிறது. அதை உடனடியாகச் செயல்படுத்துவதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதுபோல நேற்றைக்கு கேள்வி நேரத்திலே சொன்ன அசுவமாநதித் திட்டம். அது குறைந்த செலவில் மிகுந்த பயன் அளிக்கக்கூடிய ஒரு திட்டமாக இருக்கிறது. அதற்கும் இந்த ஆண்டு நிதி ஒதுக்கித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்களுடைய உசிலம்பட்டியிலே மாவட்ட மருத்துவமனை ஒன்று இருக்கிறது. அதிலே போதிய மருத்துவர்கள் இல்லை. அது மாவட்ட மருத்துவமனையாகச் செயல்படாத நிலையிலே இருக்கிறது. அதற்குரிய மருத்துவர்களையும் நியமித்து, வசதிகளையும் செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல அங்கே ஒரு பேருந்து நிலையம் இருக்கிறது. அந்தப் பேருந்து நிலையத்திலே இப்போது இருக்கின்ற நகராட்சி எந்தவிதமான அனுமதியும் இல்லாமல் ஏறக்குறைய 70 கடைகளைக் கட்டிக்கொண்டிருக்கிறது. நான் பலமுறை, இந்தத் தேர்தல் முடிந்த காலத்திலேயிருந்து அன்றாடம் உரிய அதிகாரிகளிடத்திலேயும் மற்றவர்களிடத்திலேயும் சொல்லிக்கொண்டிருக்கிறேன். ஆனால், அவை தொடர்ந்து நடந்துகொண்டே இருக்கின்றன. பகல் நேரத்திலே

நிறுத்திக்கொள்கிறார்கள். இரவு நேரங்களிலே அதிலே கடைகளை அமைத்துக்கொண்டிருக்கிறார்கள். அரசு எந்தவிதமான அனுமதியும் வழங்கவில்லை. அதை உடனடியாகத் தடுப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல குடிநீர்த் தட்டுப்பாடு மிகுதியாக இருக்கிறது. அந்தத் தட்டுப்பாடு இருக்கிற நேரத்திலே பொதுக் குழாய்களிலே தண்ணீர் விநியோகம் சரியாகக் கிடைக்காமல் லாரிகள் மூலம் தண்ணீர் கொடுத்துக்கொண்டிருக்கிற வேளையில், பணத்தைப் பெற்றுக்கொண்டு தனியாருக்கு குடிநீர்க் குழாய் இணைப்புக் கொடுப்பதாக அறிகிறேன். அதையும் உடனடியாகத் தடுத்து நிறுத்த வேண்டும் என்று கேட்டு, இந்த நல்ல வாய்ப்பினுக்கு நன்றியினைக் கூறி அமைகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு ம. அப்துல் லத்தீப் அவர்கள்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் திரு. பொன்னையன் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிற இந்த நிதிநிலை அறிக்கையை முழுமையாக நான் வழிமொழிந்து, ஆதரித்து ஒருசில கருத்துக்களைத் தெரிவிப்பதற்காக வாய்ப்பினை அளித்தமைக்கு உங்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. பொன்னையன் அவர்கள் அண்ணாவினுடைய தோட்டத்தில் மலர்ந்த முல்லை மொட்டு. அது இன்றைக்கு மலர்ந்து மணம் வீசுகின்ற ஓர் உணர்வைப் பெற்றிருப்பதைக் கண்டு, நான் அவரோடு நீண்டகாலமாகப் பணியாற்றியவன் என்ற முறையில், மகிழ்ச்சியடைகிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் நேரத்தை ஒதுக்கி இந்த நிதிநிலை அறிக்கையைத் தயார் செய்வதில் முழுமூச்சுடன் ஈடுபட்டு, மாநிலத்தினுடைய நிதிநிலையைப் பல்வேறு கோணங்களில், இந்த நிதிநிலை அறிக்கையை சமர்ப்பிப்பதன் வாயிலாக ஏற்பட இருக்கின்ற சாதக பாதகங்களை எல்லாம் ஆழமாகவும், அழுத்தமாகவும் ஆய்வு செய்து இந்த நிதிநிலை அறிக்கையைத் தயார் செய்திருக்கிறார்கள். இது ஓர் அற்புதமான நிதிநிலை அறிக்கை என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பொதுவாக, நிதிநிலை அறிக்கையைச் சமர்ப்பித்திருக்கிற இந்த அரசு உரிய காலத்திற்குள் செயல்பட்டு, மாநிலத்திற்குத் தேவையான



முன்னேற்றத் திட்டங்களை எல்லாம் அறிவித்தபடி தொடங்குவது மட்டுமல்ல, நிறைவேற்றக்கூடிய முழு வாய்ப்பையும் பெற வேண்டும். ஆளுபவர்கள் மட்டுமல்ல, ஆளப்படுபவர்கள் எல்லாம்கூட நம்பிக்கையோடு இந்த மாநிலத்தில் அவர்கள் வாழக்கூடிய ஒரு சூழ்நிலையை உருவாக்குவது ஆட்சியினருக்கு மட்டுமல்ல எல்லாத் தரப்பு மக்களுக்கும் அது இன்றியமையாதது என்பதை யாரும் மறுத்துவிட மாட்டார்கள் என்று நான் கருதுகிறேன்.

*பிற்பகல் 5-25*

பொதுவாகவே இன்றைக்கு ஆளுபவர்கள் ஜனநாயக அடிப்படையிலே தேர்வு செய்யப்படக்கூடியவர்கள். ஒரு காலத்தில் மன்னராட்சி இருந்த நிலை மாறி, மன்னர்தான் அதிகாரங்களுடைய கேந்திரம் என்பது இல்லாமல் அது முழுவதுமாகப் பரவலாக்கப்பெற்று, அந்த அதிகார கேந்திரங்களாக மக்களெல்லாம் உயர்வு பெற்று, ஜனநாயகம் நாட்டில் நிலைத்திட வேண்டும் என்ற நிலையில் இன்றைக்கு ஆட்சிகள் மத்தியிலும் மாநிலத்திலும் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. மன்னர் என்று சொன்னால் ஒருவரிடத்திலேதான் அதிகாரம் முழுவதும் இருக்கும். ஆனால், இன்றைக்கு நம்முடைய நாட்டில் உள்ள கோடிக்கணக்கான மக்களிடத்திலே அந்த அதிகாரம் மாற்றப்பட்டிருக்கிறது என்ற நிலையில் அந்த அதிகாரத்தை எப்படிப் பயன்படுத்துவது, அதற்கான அடிப்படை என்ன என்ற கேள்வி எழும்போதுதான், அந்த அதிகாரம் எல்லோரிடத்திலும் மாற்றப்பட்டு எல்லோரும் இந்த நாட்டு மக்கள், மன்னர் என்ற நிலை இன்றைக்கு ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தாலும், அது யார் மூலமாக நடைமுறைப்படுத்தப்படுகிறது என்று சொன்னால், அதைத்தான் நாம் இன்றைக்கு அரசமைப்புச் சட்டம் என்று சொல்கிறோம். அரசமைப்புச் சட்டத்தினுடைய முழுப் பிரதிநிதியாக, அதனுடைய பிரதிபலிப்பாக நாம் குடியரசுத் தலைவரை ஏற்றுக்கொண்டிருக்கிறோம். அரசமைப்புச் சட்டத்தினுடைய பிரதிநிதியாகக் குடியரசுத் தலைவர் அவர்கள் திகழ்கிறார்கள். எனவேதான் குடியரசுத் தலைவர் அவர்கள் இந்த நாட்டின் முப்படைத் தளபதியாக மட்டுமல்ல; நீதியின் கடைசித் தோற்றம்; அடிப்படை; the fountain of justice என்ற முறையில் ஜனாதிபதியை ஏற்றுக்கொண்டிருக்கிறோம். He is the custodian of the Constitution, இந்த நாட்டினுடைய அரசமைப்புச் சட்டத்தைப் பாதுகாக்கக்கூடிய முழு உரிமையும், கடமையும் பெற்றிருப்பவர் குடியரசுத் தலைவர். குடிமக்களுடைய அத்துணை அதிகாரங்களும் அவர்களிடத்தில்;

இன்றைக்கு மாற்றப்பட்டு இருக்கக்கூடிய அதிகாரங்கள் அனைத்திற்கும் பிரதிநிதியாக இருந்து குடியரசுத் தலைவர் செயல்படுகிறார். எனவே, அந்தக் குடியரசுத் தலைவர் அவர்கள்கூடக் கட்டுப்படக்கூடிய அளவுக்கு ஓர் அரசமைப்புச் சட்டம் உருவாக்கப்பெற்று, அதனடிப்படையிலே இந்த நாடு செயல்பட வேண்டும்; அதற்கு மாறாக நடப்பவர்கள் நாட்டையே எதிர்க்கக்கூடியவர்கள். சட்டத்தையே அவர்கள் துச்சமாக மதிக்கக்கூடியவர்கள் என்ற நிலையில், சட்டத்தையே துச்சமாக மதிக்கக்கூடியவர்கள் இந்த நாட்டிலே மதிப்புப் பெறக்கூடாதவர்கள், மதிக்கப்படக் கூடாதவர்கள் என்ற நிலையில் மிக உயர்ந்த நிலையில் வைக்கப்பட்டு, மன்னர்கள்தான் அனைத்து அதிகாரங்களுடைய மூலம் என்று ஏற்றுக்கொள்ளப்பட்ட அந்த மூலத்தின் பிரதிபலிப்பாக நம்முடைய அரசமைப்புச் சட்டம் இன்றைக்கு ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. அரசமைப்புச் சட்டத்தை மாற்றி, அதனை மீறி யார் நடந்துகொண்டாலும் அவர்கள் அதிகாரத்தைப் பயன்படுத்துவதற்கு மட்டுமல்ல; மக்களுடைய பிரதிநிதி என்ற முறையிலேகூட மதிக்கப்படக் கூடாதவர்கள். அனைத்து கண்ணியங்களையும் அனைத்து உரிமைகளையும் இழந்தவர்கள் என்ற நிலையில் அவர்கள் ஆக்கப்பட வேண்டும் என்ற முறையிலே நம்முடைய அரசமைப்புச் சட்டம் இன்றைக்குத் திகழ்ந்து கொண்டிருக்கிறது. அந்த அரசமைப்புச் சட்டம், அதிகாரப் பகிர்வு என்பதை ஏற்படுத்தியிருக்கிறது. Separation of powers; அது இந்த சமஷ்டி அரசு என்கின்ற முறையில் the Federal Constitution; அந்த Federal Constitution -லே வருவது separation of powers; separation of powers என்ன என்றால், இங்கு மாநிலங்களும் இருக்கின்றன; மத்திய அமைப்பு ஒன்றும் இருக்கிறது. எனவே மாநிலங்கள் எந்தெந்த அதிகாரங்களைப் பயன்படுத்த வேண்டும், மத்திய அரசிற்குரிய அதிகாரம் என்னென்ன? அதுமட்டுமல்ல, பொது அதிகாரங்கள் என்ன, இவற்றிற்கெல்லாம் அப்பாற்பட்டு இருக்கக்கூடிய மிச்சமுள்ள அதிகாரங்களை யார் பயன்படுத்த வேண்டும் என்பதற்காகத்தான் Central List, State List, Concurrent List and residuary powers என்று நம்முடைய அரசமைப்புச் சட்டத்தை உருவாக்கிய வித்தகர்கள் இதற்கான ஏற்பாடுகளைச் செய்திருக்கிறார்கள். நான் இரண்டு, மூன்று தினங்களுக்கு முன்பு நம்முடைய நாடாளுமன்ற...

*பிற்பகல் 5–30*

***டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு clarification. அது separation of powers கிடையாது. That is division of powers. Separation of powers is different. That is what I want to mention. It is just a clarification.



**THIRU M. ABDUL LATHEEF:** The hon. Member is keenly observing my observation. I stand amended. If that is so, I stand amended. I have no hesitation to get myself corrected. I thank you very much. Whether it is separation of powers or division of powers, whatever it may be; but 'separation of powers' is the proper term that is accepted by the legal luminaries; those who are tempered with the Constitutional spirit...' என்ற முறையிலே, நான் இங்கே சொல்வது இரண்டு தினங்களுக்கு முன்பு...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அனுபவம் பெற்றவர் பேசிக் கொண்டிருக்கிறார், முதியவர். (குறுக்கீடு) இல்லை, இல்லை நீங்கள் பேசுங்கள். நீங்கள் division of powers என்கிறீர்கள். ` அவர் separation of powers என்கிறார். இரண்டும் ஒன்றுதான்.

**THIRU M. ABDUL LATHEEF:** I accept your correction. What is the difficulty? I don't know. If you want to interfere; if that is your sole intention, then it is alright. I can accept. I know how to interfere and to deal with interference. நான் கேட்பது, இரண்டு, மூன்று தினங்களுக்கு முன்பு அதை விடுங்கள். பாராளுமன்றத்தில் ஒரு விவாதம்; என்ன விவாதம் என்றால், அதிலே இன்றைக்கு ஆளுங்கட்சியாக இருக்கிற B.J.P. ஒரு பக்கம்; அதாவது அந்த ஆளுங்கட்சி கூட்டணியினுடைய தலைமைக் கட்சியாக இருக்கிற B.J.P. ஒரு பக்கம். திராவிட முன்னேற்றக் கழகம், சமதா கட்சி, தெலுங்கு தேசம் மற்றும் திரிணாமுல் காங்கிரஸ் என்ற அவர்களுடைய கூட்டணிக் கட்சிகள் எல்லாம் ஓர் அற்புதமான காட்சியைப் பாராளுமன்றத்திற்குப் படைத்தது.

அந்தக் கூட்டணி ஆட்சியில் இடம் பெற்றிருக்கிற கட்சிகளில் பாரதிய ஜனதா தனிமையாக்கப்பட்டு, திராவிட முன்னேற்றக் கழகம் உள்ளிட்ட அனைத்துக் கட்சிகளும் அடிப்படையான ஒரு மாறுபாட்டை பாரதிய ஜனதாவோடு இருக்கின்ற தங்களுடைய வேறுபாட்டை வலியுறுத்திப் பேசின. என்னவென்றால், the national policy on education புதியதான கல்விக் கொள்கை; புதியதாக இன்றைக்கு பாரதிய ஜனதா கட்சியைச் சார்ந்த மாண்புமிகு முரளி மனோகர் ஜோஷி அவர்களுடைய கற்பனையில் உதித்த அந்தக் கல்விக் கொள்கை எப்படி பாடத் திட்டங்களில் இணைக்கப்பட்டிருக்கின்றது? The hidden agenda; the hidden agenda of the B.J.P; அது குறித்த கவலையை மட்டுமல்ல, மிக வேகமான எதிர்ப்பையும் நாடாளுமன்றத்தில் அவர்கள் காட்டியிருக்கிறார்கள். அதிலே ஒரு அபிப்பிராயம் சொல்லப்பட்டது. சோனியா காந்தி அவர்கள்

பேசியிருக்கிறார்கள். சோம்நாத் சாட்டர்ஜி அவர்கள் பேசியிருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த உறுப்பினர்கள் பேசியிருக்கிறார்கள். எல்லோரும் என்ன சொல்லியிருக்கிறார்கள் என்றால், Education is the subject included in the Concurrent List. Concurrent List-லே இருக்கிற ஒரு subject மீது எப்படி மத்திய அரசாங்கம் மாநிலங்களின் மீது திணிக்கும் வகையில் அந்த Concurrent List-லே இருக்கக்கூடிய ஒரு பொருளை இவர்கள் கையாளலாம்? அவர்களுடைய கோரிக்கை என்னவென்றால் even it it is found in the Concurrent List, there should be due concurrence of all the States concerned.

மாநிலங்களுடைய சம்மதம் இல்லாமல், அவர்களுடைய அபிப்ராயத்தைக் கேட்காமல் – Concurrent List – பொதுப் பட்டியலில் இடம் பெற்றிருக்கிற ஒரு பொருள் மீது மத்திய அரசாங்கம் இத்தகைய ஒரு தவறான நடவடிக்கையை மேற்கொண்டது முற்றிலும் ஏற்புடையதல்ல. இதை நாங்கள் கடுமையாக எதிர்க்கிறோம் என்று எல்லோரும் பேசியிருக்கிறார்கள்.

*பிற்பகல் 5–35*

This is about Concurrent List. But I would like to know from the hon. Minister or for that matter from the hon. Members of the Parliament who participated in this lively debate in the Lok Sabha; அவர்களிடமிருந்து தெரிந்துகொள்ள விரும்புவது என்னவென்றால், Concurrent List–லே தலையிட்டதை நீங்கள் பொறுத்துக் கொள்ளவில்லையே! அதைச் சட்டப்படி செல்லாது என்று சொல்கிறீர்களே! Ultra vires of the Constitution என்றெல்லாம் நீங்கள் வாதிட்டிருக்கிறீர்களே! Here is a case in Tamil Nadu that is a patent interference of the powers that be in Delhi which has the audacity to interfere in the field which is of exclusive State jurisdiction. நான் அதைக் கேட்கிறேன். State Jurisdiction–லே இருப்பது police; police என்பது not in the Concurrent List. It is in the State List. But in spite of that, the Central Government insist that its orders should be complied with by the State Government. இது எப்படிப் பொருத்தமாக இருக்கும்? Concurrent List–லே உள்ளதையே ஏற்றுக்கொள்ளாத கட்சிகள் என்னுடைய மரியாதைக்குரிய திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அல்லது சமதா கட்சியைச் சார்ந்தவர்கள், திரிணாமுல் கட்சியைச் சார்ந்தவர்கள், இவர்களெல்லாம் பாராளுமன்றத்திலேயே பிரதமரையே எதிர்த்து, முரளி மனோகர் ஜோஷியையே எதிர்த்து, இவர்களெல்லாம் ஆட்சியில் ஒரு



பங்காக இருந்துகொண்டே, how can you interfere என்று கேட்டிருக்கிறார்களே; — that too in the field which has been included in the Concurrent List — இந்த போலீஸ் சப்ஜெக்ட் என்பது – this is exclusively included—stands included in the State List.

மாநிலப் பட்டியலில் இடம்பெற்ற, முழுக்க, முழுக்க மாநில அரசு தன் அதிகாரங்களைச் செலுத்த வேண்டிய ஒன்றில், மத்திய அரசு தலையிடுகிறது. அண்ணாவினுடைய பெயரைச் சொல்கிறோம் நாம்; மாநில சுயாட்சி என்ற முறையிலே அண்ணாவினுடைய பெயரைச் சொல்கிறோம் நாம். அண்ணா இன்றைக்கு இல்லாமல் இருக்கலாம், அண்ணாவினுடைய ஆட்சி இருக்கிறது. அதை யாராவது மறுக்க முடியுமா? இந்தப் பக்கம் இருந்தாலும் அந்தப் பக்கம் இருந்தாலும் என்னைப் பொறுத்தவரையில் நீங்கள் யார் என்பது எனக்குத் தெரியும். ஆகையினால் அண்ணாவினுடைய ஆட்சி இன்றைக்கு இல்லை என்று யாராவது சொல்ல முடியுமா? அண்ணாவினுடைய ஆட்சி நடக்கின்ற இங்கே ஏதோ உங்களுக்குள்ளே இருக்கிற – எனக்கிருக்கிற கஷ்டம் மன்னிக்க வேண்டும், உங்களுக்குள்ளே இருக்கிற – தாயாதி சண்டையின் காரணமாக ஒரு முக்கியமான கொள்கை, அண்ணா வலியுறுத்திய கொள்கை, அந்தக் கொள்கைக்கு மாறாக இன்றைக்குத் தமிழ்நாட்டிலே குரல் எழுப்பப்படுகிறது என்று சொன்னால் யார் அண்ணாவினுடைய கொள்கையைக் குழி தோண்டிப் புதைக்க வேண்டுமென்று சொன்னார்களோ அவர்களுக்கு ஆக்கமும், ஊக்கமும் தரும் வகையில் நமக்குள்ளே இருக்கின்ற இந்த வித்தியாசங்களின் காரணமாக, போட்டாபோட்டிகளின் காரணமாக அண்ணாவினுடைய முக்கியமான ஒரு கொள்கையை இப்படிக் குழி தோண்டிப் புதைப்பதற்கு நாம் வழி வகுக்கலாமா என்பதுதான் என்னுடைய கேள்வி. நீங்கள் இங்கே உட்கார்ந்து கொண்டிருக்கலாம். வேறு சிலர் அங்கே உட்கார்ந்து கொண்டிருக்கலாம். அவர்களெல்லாம் நேற்று இங்கே இருந்திருக்கலாம். நீங்கள் இங்கே இருந்திருக்கலாம் அல்லது வெளியிலே இருந்திருக்கலாம். ஆனால், அண்ணாவினுடைய கொள்கை 1967–லேயிருந்து இந்த மன்றத்தை ஆண்டு கொண்டிருக்கிறது. அன்றைக்கும் ஆண்டது. இன்றைக்கும் ஆண்டுகொண்டு இருக்கிறது. அதைப் பலஹீனப்படுத்துகின்ற முயற்சியிலே யார் ஈடுபட்டாலும், அது சட்டப்படியல்ல; கொள்கைப்படியும் ஏற்புடையதல்ல என்பதை மிகுந்த மரியாதையோடு நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இங்கேயிருக்கிற போலீஸ்காரர்களை மாற்ற வேண்டுமென்று சொல்வது வேறு விஷயம். It is the exclusive privilege of the State Government. The Central Government has no business to issue an order to the Government of Tamil Nadu to get the officers transferred without there being a limit. (thumping of desks)

*பிற்பகல் 5–40*

I tell not for politics but to uphold the dignity and sanctity of the Constitution of India. If the Central Government transgresses such a limit, I utter a warning to them that they are playing with the fire, because it is a question of Tamil ego; it is a question of the sanctity of the Constitution, it is a question of the basic principle as propounded and evolved by late lamented leader Perarignar Anna. We cannot accept any interference from others. That is the Tamil ego. Therefore, -நான் சொல்கிறேன்–this Government must be firm. I congratulate the Hon.Chief Minister, the Chief Minister's boldness, clarity of thoughts (thumping of desks) and her courage and conviction is a source of great approbation not only by the Members of this House but all the people who have basic respect to the spirit of the Constitution and for a decent politics. நான் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்; தயவுசெய்து இனிமேல்–மத்தியப் பட்டியலில் மாநிலங்கள் தலையிடாது–மாநிலப் பட்டியலில் மத்திய அரசுக்கு no business to interfere. அதேநேரத்தில், Concurrent List–பொதுப் பட்டியல்–பொறுத்தவரை there should be a meaningful dialogue and consultation.

The Constitution expects consultation between Central and State authorities. I do agree. Whatever be the residuary powers; — மிச்சப்பட்ட அதிகாரம் – that is the exclusive power jurisdiction of the Central Government and no State Government can interfere in matters which are considered to be the residuary powers as propounded by the Constitution of India. If you transgress the limits of the Constitution, then you lose all authority, all privileges, all rights to govern and you become an ordinary citizen; not even an ordinary citizen, since the transgressor is an aggressor in the field which is not yours. I know that Hon. Prime Minister Mr. Atal Behari Vajpayee—Mr. Atal Behari Vajpayee is my personal friend. People might be knowing him today. இன்றைக்கு அவர்களுக்குத் தெரிந்திருக்கலாம். I know him for more than 25 years. We have spoken on a common platform and the language that he speaks is known to



me and the language that I speak is known to him. We know each other's thought and therefore, I know Mr.Vajpayee well. Mr. Vajpayee — will not succumb to the undue political pressures and he will withstand whatever it may be. அவர் பேசுவார், பார்க்கலாம் என்று சொல்லுவார். அவரும் ஒரு காமராஜர் மாதிரிதான். பார்க்கலாம், பார்க்கலாம் என்று சொல்லுவார். தேக்கேங், தேக்கேங் என்று சொல்லுவார். அதனால் அடல் பிகாரி வாஜ்பாய் அவர்களுக்கு நான் சொல்லுகிறேன், 'த மானிய பிரதான் மந்திரி, ஆப்கோ பகுத் ஹோஷியார் ரகுநா சாகியே! What I say is that if there are people from North India, who can understand Hindi, please convey my thought to my friend Hon. Mr. Vajpayee.

'ஆப் ஏ பகுத் படி ஜெகத் மே பைடேஹை
ஆப்கா உத்தர் தாயத் கோ பவுத் படாஹை
அவுர் ஆப்கோ ஜாம்னா சாலியே இஸ்தேஸ்கே
பிரதான் மந்திரி ஹைய்கி யஸ்ஸே' (குறுக்கீடு)

Record செய்யாவிட்டாலும் பரவாயில்லை, அது அங்கே போனால் போதும் என்பதற்காகத்தான் சொன்னேன்.

'ஆப்கோ படி ஜிம்மேதாரிகி ஜரூரத்ஹை'

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** எங்களுக்குப் புரியவில்லை என்பதுதான் வருத்தம்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** நீங்கள் சொல்வதை நான் ஏற்றுக் கொள்கிறேன். அரசியல் தேர்தல் வரும், போகும். ஆனால் நம்முடைய பாரம்பரியங்கள் அழியக்கூடாது. அண்ணாவினுடைய பாரம்பரியம் ஒரு காலத்திலும் அழியக்கூடாது. அதை அழிக்கக்கூடியவர்கள் இப்பக்கமும் கூடாது; அப்பக்கமும் கூடாது என்பதை நான் உங்களுக்கு மிக அன்போடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். எனவே, போலீஸ் துறையிலே மத்திய அரசு தலையிடுவதா? அதை யாராவது ஏற்றுக்கொள்வார்கள் என்று நினைக்கிறீர்களா? நாங்கள் ஏற்றுக்கொள்ள மாட்டோம். I subtly challenge. நீங்கள் அதன்படி நடக்கிறீர்கள் என்று சொன்னால், அதுதான் உங்களுடைய முடிவு என்று சொன்னால், நான் தெளிவாகச் சொல்கிறேன். உங்களுடைய நண்பன், உங்களோடு வளர்ந்தவன் என்ற முறையிலே சொல்கிறேன்; உங்களில் பலரை நான் என்னுடைய அண்ணனாகவும். நண்பராகவும் ஏற்றுக் கொண்டிருக்கிறேன் என்ற முறையிலே; தயவுசெய்து அந்த பலப்பரிட்சை வேண்டாம். (குறுக்கீடு)

*பிற்பகல் 5-45*

***திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, Point of Order.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள். மூத்த உறுப்பினர் பேசிக் கொண்டிருக்கிறார். அனுபவம் வாய்ந்தவர் பேசுகிறார். உறுப்பினர் உட்காரவேண்டும்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே.....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உறுப்பினர் உட்காரவேண்டும். அவர் பேசி முடிக்கட்டும்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** Point of Order.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** என்ன தம்பி, அன்புத் தம்பி? ஆகையினால், I am a person who respects the sentiments of all others. If my younger brother wants to submit anything, I do not want to stand in the way. நான் பொதுவான கருத்தைச் சொல்கிறேன். தயவுசெய்து இந்த விஷயத்திலே நீங்கள் யாருக்கும் துணை போக வேண்டாம் என்று நான் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன். It is quite anti-constitutional என்பது என்னுடைய கருத்து. இதிலே, இந்த Budget...(குறுக்கீடு)

**திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே......

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. முருகவேல் ராஜன் அவர்கள் ஏதோ சொல்ல நினைக்கிறார்; அவர் பேசட்டும்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்துல் லத்தீப் அவர்கள் மிக மூத்த ஓர் உறுப்பினர். தமிழ்நாட்டின் அரசியல் அரங்கில் அவருக்கு மிகப் பெரிய மரியாதை இருக்கிறது. அந்த மரியாதையையும் கண்ணியத்தையும் நான் அறியாதவன் அல்ல. இருந்தாலும்கூட, இந்திய அரசமைப்புச் சட்டத்தை அவர் மட்டும்தான் படித்ததைப் போலவும், அது அவருக்கு மட்டும்தான் தெரிந்ததைப் போலவும் பேசிக் கொண்டிருக்கிறார். சட்டம் படித்த வழக்கறிஞர்கள் பலரும், இந்த அவையில் உறுப்பினர்களாக இருக்கிறோம்.



அவருக்கு முதலில் Division of Powers-க்கும் Separation of Powers-க்கும் அர்த்தம் தெரிய வேண்டும். நீண்ட நெடுங்காலமாக, separation of powers, legislation, judiciary, administration, இதிலே யாருடைய அதிகாரம் யாருக்கு என்பது விவாதத்திற்குரிய ஒரு பொருளாக இருக்கிறது. எனவே, அதைப்பற்றி தனித்து விவாதிக்க வேண்டுமே தவிர, மத்திய அரசாங்கத்திற்கு, மாநில அரசாங்கத்தினுடைய அதிகாரத்திலே தலையிடுவதற்கு அதிகாரம் இல்லை என்று சொன்னால் – தனித் தமிழ்நாடு கோரிக்கையை நாம் எப்போதோ கைவிட்டுவிட்டோம். அப்படிச் சொல்வதாக இருந்தால்–தமிழ்நாடு இந்தியாவில் இருக்கிறதா, இல்லையா என்று ஒரு சந்தேகத்தை எழுப்புவது போன்றதாகி விடும். எனவே, Separation of Powers-ல் Concurrent List-ல் உள்ள அதிகாரங்களில் மத்திய அரசு தலையிடுவதற்கு உரிமை இருக்கிறது என்பது மட்டுமல்ல, மாநிலத்தினுடைய அதிகாரமாக இருந்தாலும், அது நாட்டினுடைய இறையாண்மைக்கு எதிரானதாக இருந்தால், நிச்சயம் அதில் தலையிடுவதற்கு மத்திய அரசுக்கு அதிகாரம் இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. அப்துல் லத்தீப் அவர்கள் பதில் சொல்வார்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அவையில் அரசமைப்புச் சட்டத்தைப் படித்தவர்களும், அதனுடைய பொருளையும், அருளையும், ஆழமாகவும், அழுத்தமாகவும் அறிந்தவர்களும் இருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினரைப் போன்ற – என்னைவிட மூத்தவர், அறிவில் சிறந்தவர், (மேசையைத் தட்டும் ஒலி) அனுபவம் உள்ளவர் இருக்கிறார் என்பதை நான் ஒருகாலமும் மறக்கவில்லை. (சிரிப்பு) மறக்காமல்தான் நான் பேசுகிறேன். எனவே, அவர் எனக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கிறார். அதற்காக அவருக்கு நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். Concurrent List-ல் சொல்லப்பட்டிருக்கிற வரம்பு என்ன? State List-லே இருக்கிற வரம்பு என்ன? Central list-ல் இருக்கிற வரம்பு என்ன? Residuary Powers என்பது என்ன? Separation of Powers என்பது என்ன? Division of Powers என்பது என்ன? இதைப்பற்றியெல்லாம் நான் அவரிடத்தில் கேட்டறிந்து தெளிவுபடுத்திக் கொள்வதற்குத் தயாராக இருக்கிறேன். அவர் வேண்டுமானால் அவருடைய தலைவரிடத்திலே கேட்டுத் தெரிந்து கொள்ளலாம். அவரைப்பற்றி, அவர் கேட்பதைப்பற்றி நான் வருத்தப்படவில்லை. எனக்கு ஏதோ தமிழ்நாடு முழுவதும் மரியாதை இருப்பதாகவும், அதை இவர் கொடுக்கத் தவறுவதாகவும், அந்தப் பொருளில் அவர் பேசுகிறார். நான் யாரிடத்திலேயும் மரியாதையைக்

கேட்டுப் பெறுவதில்லை. இங்கே இருக்கக்கூடியவர்கள் –நீங்கள்– தெரிந்து கொள்ள வேண்டுமென்றால், உங்கள் தலைவரைக் கேட்டுத் தெரிந்துகொள்ளுங்கள். இதிலே வந்து தலையிடுவதற்கு ஒன்றுமேயில்லை என்பதற்காகத்தான் நான் பேசிக்கொண்டு இருக்கிறேன். இதிலே யாரும் தலையிடாமல் நான் பேசவேண்டும் என்பதற்காகத்தான் பேசிக்கொண்டு இருக்கிறேன். தயவுசெய்து......

*பிற்பகல் .5–.50*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. நம்முடைய மரியாதைக்குரிய பெரியவர், மாண்புமிகு அப்துல் லத்தீப் அவர்கள்மீது எங்கள் இயக்கத்திலே மிகுந்த மரியாதை இருக்கிறது. ஏதோ அவரை அறியாததைப்போல எங்களுடைய உறுப்பினர் பேசியதாக தயவுசெய்து தவறாக நினைத்துக் கொள்ள வேண்டாம். மரியாதை கொடுத்துத்தான் பேசினாரே தவிர, மரியாதைக் குறைவாகப் பேசவில்லை என்பதைத் தாங்கள் உணர்ந்து கொள்வதோடு, அரசமைப்புச் சட்டத்தைப்பற்றிய கருத்துகளைச் சொன்னதற்காக நீங்கள் தவறாக எடுத்துக் கொள்ள வேண்டாம் என்பதை இந்த நேரத்திலே அவைக்குச் சொல்லி அமர்கிறேன்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** நான், அவர் பேசியதைப் பற்றியோ, மற்றவர்கள் பேசுவதைப் பற்றியோ, ஒருகாலும் தவறாக எடுத்துக்கொள்ள மாட்டேன். நான் என்னுடைய அண்ணன்மார்களிடத்திலேதான் மோதுவது எப்பொழுதும் பழக்கமே தவிர, தம்பிமார்களிடத்திலே நான் மோதவே மாட்டேன். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் என்னை ஏசினாலும், பேசினாலும், தம்பிகளுக்கு எடுத்துச் சொல்வேனே தவிர, தவறு இருந்தால் ஏற்றுக்கொண்டு 'சபாஷ்' என்று சொல்வேனே தவிர, தம்பிகள் யாரிடத்திலும் மோதிப் பழக்கம் இல்லை. எனக்குத் தெரிந்து, இங்கே இருப்பவர்களெல்லாம் என்னுடைய தம்பிகள்; பலபேர் என்னுடைய தம்பிகள். ஆகையினாலே, நான் யாரிடத்திலும் மோதுவதற்குத் தயாராக இல்லை. அண்ணன்மார்களிடத்திலே மோதுவேன். யார் அண்ணன் இருக்கிறார் என்று பார்க்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) யாரும் இல்லை. ஆகையினாலே, அருமையானவர்களே, இப்பொழுது இதை மட்டும், நான் உரியவர்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன், அதுவும் நல்ல எண்ணத்தில் சொல்கிறேன். மத்திய அரசாங்கத்தில் இருப்பவர்களும்



எனக்கு நண்பர்கள்தான் என்று சொல்கிறேன். அவர்களிடத்தில் எனக்கு விரோத குரோதம் இல்லை. கொள்கை மாறுபாடுகள் உண்டு. அந்தக் கொள்கை மாறுபாட்டின் அடிப்படையிலேதான் பேசிக்கொண்டு இருக்கிறேன். எனவே, நான் எனக்காகச் சிந்தித்தால் இந்தக் கொள்கை மாறுபாடெல்லாம் இருக்காது. ஆகையினாலே, கொள்கைக்காகப் பேசுகிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னுடைய உரையில் ஓர் உண்மையைத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். மக்களுடைய வாழ்க்கைத் தரத்தால்தான் பொருளாதார ஆக்கத்தை நாம் தெரிந்துகொள்ள முடியும். வெறும் புள்ளி விவரங்களால் பொருளாதாரத்தினுடைய உண்மை நிலைமையை அறிய முடியாது. "The quality of life of the people is the sure indication of development or otherwise of the economy of our country." என்று the Hon'ble Minister has observed in his budget speech. I accept that. அந்த வாழ்க்கைத் தரம்; அந்தத் தரத்தைப் பார்த்துத்தான் நாம் முடிவுகளை எடுக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். இப்போது இந்த நிதிநிலை அறிக்கையைத் தயார் செய்யும்போது, மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை யார் கண்டிருந்தாலும், காணாவிட்டாலும், இந்த நிதிநிலை அறிக்கையைத் தயார் செய்யக்கூடிய பொறுப்பிலே இருக்கக்கூடியவர்கள், இருந்தவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், நம்முடைய மரியாதைக்குரிய மாண்புமிகு திரு. பொன்னையன் அவர்களும் அதைக் கருத்தில் கொண்டுதான் இதைத் தயார் செய்திருக்கிறார்கள். இப்போது இருக்கிற இந்தப் பிரச்சினை, கடந்த ஆட்சியைக் குற்றம் சொல்வது தேவைதானா என்ற ஒரு கேள்வி இங்கே எழுப்பப்பட்டது. அதை மற்றவர்களிடத்திலே சொன்னால் பாதகம் இல்லை. ஐந்தாண்டுகளாக இங்கே உட்கார்ந்து நான் அதைத்தானே கேட்டுக்கொண்டு இருந்தேன். நான் அடிக்கடி சொன்னேன். இந்த அவையிலே நாங்கள், உட்கார்ந்து இருக்கிற உறுப்பினர்கள், உங்களைத்தான் கண்காணிக்க வந்திருக்கிறோமே தவிர, உங்களுக்கு முன்பு யார் இருந்தார்கள் என்பதைக் கண்காணிக்க நாங்கள் வரவில்லை. நம்முடைய முழுமையான கடமை, The basic and primary responsibility of the Hon'ble Members of this House, the present Assembly is to ensure the accountability and answerability from the Members of the Treasury Benches of today, not yesterday. நீங்கள் பேசியதெல்லாம் கடந்த காலம், கடந்த காலம் என்றுதானே பேசினீர்கள். எனக்கு இருக்கிற பலஹீனமோ அல்லது நல்ல எண்ணமோ அதைப்பற்றி எனக்குத் தெரியாது. ஆனால், நான் சொன்னேன், வேண்டாம்; இப்படியெல்லாம் பேசாதீர்கள் என்று

சொன்னேன். நடவடிக்கை எடுத்தீர்கள்; நடவடிக்கை எடுக்கும்போது நான் சொன்னேன்; தயவுசெய்து ஒரு பாரம்பரியத்தை, புதிய பாரம்பரியத்தை, ஒரு பழக்கத்தை ஏற்படுத்திவிடாதீர்கள் என்றுதான் சொன்னேன்.

*பிற்பகல் .5–5.5*

இன்று இங்கே நடந்தது மாண்புமிகு என்னுடைய அருமை அண்ணன், நான் அதிகமாகப் போற்றுகின்ற என்னுடைய அண்ணன், கலைஞர் கைது செய்யப்பட்டார். அது எங்களுக்கெல்லாம் மகிழ்ச்சியாகவா இருந்தது? ஆனால், அந்தப் பாரம்பரியத்தை ஏன் உருவாக்கினீர்கள்? நான் அதைத்தானே சபையிலேயே பேசியிருக்கிறேன். வேண்டாம், வேண்டாம், ஒரு முறை இருக்கிறது; ஒரு வரை இருக்கிறது. அந்த முறையோடு, வரையோடு நடந்துகொள்ளுங்கள் என்று நான் மன்றாடினேன். வேண்டாம். அதிலேயும் மாண்புமிகு இந்நாள் முதலமைச்சர் சகோதரி ஜெயலலிதா, ஒரு பெண். அந்தப் பெண்ணைக் கைது செய்து, 29 நாட்கள் வைப்பது தேவைதானா அண்ணே, இந்தப் பாரம்பரியத்தை நீங்கள் ஏற்படுத்தலாமா என்றேன். ஏனென்றால், ‘காலம் என்பது கறங்கு போல் சுழன்று (மேசையைத் தட்டும் ஒலி) மேலது கீழும், கீழது மேலும் மாறிடும் தோற்றமுடையது என்பதை மறந்தனையோ’ என்று மனோன்மணீயம் ஆசிரியர் கேட்கிறாரே, என்னைவிட அது உங்களுக்குத்தானே தெரியும். எனக்கு என்ன தெரியும்? அதிலே ஆழமாகவும், அழுத்தமாகவும் இருக்கக்கூடிய தமிழ் அறிஞர் அல்லவா நீங்கள். எனவே, தயவுசெய்து அது வேண்டாம். இன்று இருப்பது நாளை தொடரக்கூடாது என்று நாங்கள் சொன்னோம். அதிலே ஏதாவது கள்ளம் இருந்ததா? உள்ளம் இருந்தது. கள்ளம் இல்லை. அந்த உள்ளம் இருந்ததற்குக் காரணம் இது தொடரக்கூடாது என்ற ஆசை.

இன்னும் சொல்கிறேன். எங்களைப் பொறுத்தவரையில் நாங்கள் அண்ணாவைக் கண்டவர்கள். காயிதே மில்லத் அவர்களுடைய நிழலிலே வளர்ந்து அண்ணாவையும், இராஜாஜியையும், பெருந்தலைவர் காமராஜரையும் பக்கத்திலே இருந்து பார்க்காவிட்டாலும், தூர இருந்து பார்த்து அவர்களை அறிந்தவர்கள். அவர்களைக் கண்டு ஆதர்ஷபுருஷர்களாகப் போற்றியவர்கள். ஆகையினாலே நீங்கள் எல்லாம் அந்தப் பாரம்பரியத்தைக் காப்பாற்ற வேண்டும் என்பதுதான் எங்களுடைய விருப்பமே தவிர, நான் மாண்புமிகு திரு. பொன்னையனைக் கேட்கிறேன், உங்களுக்கு மூத்தவன்தானே நான்; கல்லூரியிலே இரண்டு



ஆண்டு மூத்தவன்தானே நான்? இங்கே இருக்கிற அநேக தம்பிமார்களைக் கேட்கிறேன், நான் எப்போதாவது இந்த மந்திரி பதவிக்கு ஆசைப்பட்டேனா! இல்லை, அதற்குப் பின்னாலே போக வேண்டுமென்று சட்டையை மாற்றிக் கொண்டவனா நான்? அதே நிலையிலே இருக்கிறேன், அன்று தொட்டு இன்று வரையிலே. காரணம் என்ன? ஒரு கொள்கை. ஆனால் நா கூசாமல் என்மீதே பழி சொன்னீர்கள். யாருக்குத் தெரியாவிட்டாலும், என்னுடைய தம்பிகளுக்குத் தெரியும். என்னுடைய ஒரே அண்ணனான அவருக்குத் தெரியும். அவர்கள் என்மீது குற்றம் சொன்னார்கள். அது உண்மைதானா? அது உண்மை என்றால், நிரூபித்து எனக்குத் தண்டனை வழங்குங்கள் என்றுதான் நான் ஒரேயொரு விருப்பத்தை அவருக்குத் தெரிவித்தேன். அரசியலுக்காக என்னைக் களங்கப்படுத்தலாமா? என்னைக் களங்கப்படுத்தினால் என்ன, உங்களைக் களங்கப்படுத்தினால் என்ன என்ற முறையிலேதான் நான் சொன்னேன். தயவுசெய்து இந்தப் பாரம்பரியத்தை விட்டுவிடுங்கள்.

இங்கேகூட, நம்முடைய சந்தானம் அவர்கள் சொன்னார்கள். இந்த ஆட்சியை அகற்றுவதற்குக் குறுக்கு வழி வேண்டாம் என்று சொன்னார்கள். குறுக்குவழி போனால், அதுதான் சுருக்காக அமையும். உங்களுக்கு சுருக்கு அதிலேதான் ஏற்படும். யார் குறுக்கிலே போனாலும், அதுதான் சுருக்காக அமையும்; கழுத்திற்குப் போடுகிற சுருக்காக அமையும். இதை என்னுடைய வாயிலேயிருந்து சொல்கிறேன். அதை நன்றாக நினைவிலே வைத்துக் கொள்ளுங்கள். குறுக்குவழி வேண்டாம். நாளைக்கு நீங்கள் வந்தால் வாருங்கள். கடந்த காலத்தில் இருந்தவர்கள் தொடருகிறீர்கள். நீங்கள் வந்தீர்கள். அவர்கள் வந்தார்கள். எப்படியோ அண்ணாவினுடைய ஆட்சி இருக்கிறது என்று நாங்கள் எல்லாம் மகிழ்வோம். ஆனால், அதற்காக, let us have a fair game; ஒரு game இருக்கட்டும். இன்று காலையிலே இருந்து நடந்த இந்த விவாதங்களை மிக ஆரோக்கியமான விவாதங்களாக நான் கருதினேன். Let us have the difference of opinion. நீங்கள் அவர்களைத் தாக்குங்கள். அவர்கள் இவர்களைத் தாக்கட்டும்; But within limits. அதைச் செய்யுங்கள். அதை விட்டுவிட்டு – என்னுடைய ஆளுங்கட்சி நண்பர்களையும் உறுப்பினர்களையும் கேட்டுக்கொள்வேன். சபாநாயகர் இருக்கிறார்; கட்சித் தலைவர் இருக்கிறார்; உங்களிலே மூத்தவர் இருக்கிறார். எனவே – சில சமயங்களிலே உணர்ச்சி வேகப்படும்போது எல்லோரும் எழுந்து பேச வேண்டிய அவசியமில்லை. எல்லோரும் எழுந்து பேசுகின்ற இடம் வேறு. இது மற்போர் நடத்துகிற இடமல்ல. சொற்போர் நடத்துகிற இடம். எனவே, அந்தச் சொற்போரோடு நாம் நிற்க வேண்டும். உங்களுக்குக் கண்ணியத்தை மட்டுமல்ல; நீங்கள்

எண்ணுகிற எண்ணத்திற்கு ஏற்றத்தையும் அதுதான் தரும். நான் சொல்வதை நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன். எனவே இப்போது நான் தொகுதியைப்பற்றிப் பேசுகிறேன்.

*பிற்பகல் 6–00*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசியதை எல்லோரும் மெய்மறந்து கேட்டுக் கொண்டிருக்கிறோம். இருந்தாலும் நேரத்தின் அருமை கருதி நான் குறுக்கிட வேண்டி இருக்கிறது.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** நேரம் இருக்கிறது. என்ன செய்வது?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நிறைய பேர் பேச இருக்கிறார்கள்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** இப்போது நான் Budget-னுடைய அந்த விவரங்களுக்கெல்லாம் போக விரும்பவில்லை. நான் சொல்வது, இதிலே இருக்கிற ஊனங்கள்; கடந்த காலத்தில் நடந்த குறைகள், படிந்துவிட்ட கறைகள் இவற்றைப்பற்றி எல்லாம் நான் பேச விரும்பவில்லை. உங்களிடத்தில் நான் வேண்டிக்கொள்வது, தண்ணீர் பிரச்சினை என்பது பெரிய பிரச்சினை. நான் இருக்கிற, என்னுடைய இருப்பிடத்திலேயே 8 நாட்கள் தண்ணீர் வரவில்லை, சென்னையிலே. வெளியில் வாளி அனுப்பி ஒரு வாளி தண்ணீர் கொண்டு வந்து, பழைய கதையிலே சொல்லுகிற மாதிரி அதிலேதான் குளித்து, எல்லாம் முடித்துவிட்டு, நான் வெளியே வரக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. M.L.A. இருப்பிடத்தின் பக்கமே இந்த கதி. எனவே, நிலைமை என்ன? மழை பெய்யவில்லை.

எல்லாப் பக்கமும் மழை பெய்யவில்லை. மழை பெய்தால், மழைத் தண்ணீரைத் தேக்கி வைப்பதற்கு நம்முடைய முன்னோர்கள் மகத்தான ஏற்பாடுகளைச் செய்திருந்தார்கள். மகத்தான, அற்புதமான ஏரிகளைக் கட்டிவைத்து இருந்தார்கள். அந்த ஏரிகளுக்கு வரத்துக் கால்வாய்களை ஏற்படுத்தி இருந்தார்கள். அந்த வரத்துக் கால்வாய்களை உயிரோடு வைப்பதற்கு நம்முடைய மக்கள், கிராமங்களிலே, குடிமராமத்து என்ற ஓர் அற்புதமான திட்டத்தை வைத்துக்கொண்டு, குடிமராமத்துச் செய்துகொண்டு இருந்தார்கள்.



இப்போது நான் உங்களைக் கேட்கிறேன். எந்த ஏரியாவது உயிரோடு இருக்கிறதா? அதனுடைய தொடக்ககாலத் தன்மையோடு இருக்கிறதா? எனவே, நீங்கள் ஒகேனக்கல்லிலிருந்து தண்ணீரைக் கொண்டு வரவேண்டும். அது மிகத் தேவை. எங்கள் மாவட்டத்திற்கு, அது மிகவும் இன்றியமையாதது. அதனை நீங்கள் நடைமுறைப்படுத்த எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவேண்டும்.

அதோடு அற்புதமான ஆறு பாலாறு. காவிரியைவிட எல்லா வகையிலும் சிறந்த ஆறு பாலாறு. தமிழ்நாட்டிலே எந்த ஆற்றுக்கும் இல்லாத பெருமையும், சிறப்பும் பாலாறுக்கு உண்டு. ஆனால், பாலாறு இன்றைக்கு பாழாறாக, உண்மையிலேயே பாழாறாகப் போய்விட்டது. மன்னிக்க வேண்டும். யார் அதற்குப் பாதுகாப்பு என்றால், பொதுப் பணித் துறை என்று சொல்கிறார்கள்; அல்லது அந்த கிராமப் பஞ்சாயத்துக்கள் என்று சொல்கிறார்கள். பொதுப் பணித் துறையும் மற்றவர்களும் அதற்கான பொறுப்பு உள்ளவர்களும் தங்களுடைய பொறுப்பை முழுமையாக மறந்து, நாங்கள் தாயாகக் கருதுகிற அந்த பாலாறை இன்றைக்கு அலைக்கழித்து விட்டார்கள். பாலாறே பல இடங்களில் இல்லை. பாலாறை நீங்கள் பார்க்க முடியாது. ஒரு காலத்திலே சொல்லலாம், நம் காலத்திலே, நாங்கள் சிறியவர்களாக இருந்தபோது, பாலாறு என்று ஓர் ஆறு இருந்தது, அது இப்படி இருந்தது என்று சொல்லலாமே தவிர, பாலாறு இல்லை. அவ்வளவு ஏன் போகிறீர்கள். காஞ்சிபுரத்திற்கும் பாலாறு வருகிறது. காஞ்சிபுரத்திற்குப் பக்கத்தில் அண்ணா அவர்கள் மாலை நேரத்தில் உட்கார்ந்து, நண்பர் களோடு அளவளாவிய ஓர் ஆறு; அதில்தான் உட்கார்ந்துகொண்டு பேசுவார். அவரைப் பார்க்க மாலை நேரத்தில் போகவேண்டும் என்றால், நண்பர்கள் எல்லாம் அங்குதான் போவார்கள்.

வேகவதி ஆறு. இந்த வேகவதி ஆறு எங்கே? உங்களால் காட்டமுடியுமா? வேகவதி ஆறு இன்றைக்கு இல்லை. பல ஆறுகள் இன்றைக்கு இல்லாமல் போய்விட்டன. நீங்கள் உண்மையாக, தண்ணீருக்கு ஏதாவது வழி வகுக்க வேண்டுமானால், ஆறுகளைக் காப்பாற்றுங்கள். 100 வருடத்திற்கு முன்பு இருந்த ஏரிகளை அவற்றினுடைய விஸ்தீரணத்தைக் கணக்கெடுத்து, 100 வருடத்திற்கு முன்பு எந்த ஆக்கிரமிப்பு நடந்து இருந்தாலும், நிர்தாட்சண்யமாக அத்தனை ஆக்கிரமிப்புகளையும் அகற்றி, ஏரிகளைச் சுத்தப்படுத்தி, ஆழப்படுத்தி, கொள்ளளவை அதிகமாக்கி, அதேநேரத்தில், வரத்துக் கால்வாய்களை எல்லாம் ஆக்கிரமிப்பிலிருந்து அகற்றி, குடிமராமத்து போன்றவைகளை

எல்லாம் மீண்டும் கொண்டு வந்து 100 ஆண்டுகளுக்கு முன்பு நம்முடைய ஏரிகள் எப்படி இருந்தனவோ, அதே நிலைக்கு நீங்கள் கொண்டு வராவிட்டால் உங்களுடைய எந்தத் திட்டமும், நீண்டகாலத் திட்டமாக, பயனுள்ள திட்டமாக இருக்காது என்பதை நான் மிகத் தெளிவாக உங்களுக்குச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். எனவே, முழு வேகத்தையும் இதிலே செலுத்துங்கள்.

நாங்கள் ஓர் அணைக்கட்டை நீண்டகாலமாகச் சொல்லியிருக்கிறோம். புல்லூர் அணைக்கட்டு. அந்த புல்லூர் அணைக்கட்டு.....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நல்ல ஆலோசனைகளை வழங்கிக்கொண்டு இருக்கிறீர்கள். ஆனால், நேரம்தான் போதாது. உரையை முடித்துக் கொள்ளுங்கள்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** நான் முடித்து விடுகிறேன். சரி. நேரம் இருக்கிறது. நேரம் காலம் எல்லாம் நாம் பார்த்துத்தான் பேச வேண்டும். புல்லூர் அணைக்கட்டு....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் பேச்சில் குறுக்கிடுவதற்கு வருந்துகிறேன். ஏனென்றால் மற்ற உறுப்பினர்கள் தங்களுக்கும் இவ்வளவு நேரம் ஒதுக்க முடியுமா என்று கேட்பார்கள்.

*பிற்பகல் 6–05*

**திரு. ம. அப்துல் லத்தீப்:** யாராவது கேட்டால் நான் இப்போதே உட்கார்ந்து விடுகிறேன். யாராவது கேட்கிறார்களா சொல்லுங்கள், நான் இப்போதே உட்கார்ந்து விடுகிறேன். நான் பொதுவாகத்தான் பேசிக்கொண்டு இருக்கிறேன். நான் இப்பொழுதே உட்கார்ந்து விடுகிறேன். யாருக்காவது ஆட்சேபணை இருந்தால் உட்கார்ந்து விடுகிறேன். ஆகையினால் இதில் மற்றவர்களைச் சுட்டிக்காட்டுவது எனக்குப் பிடிக்காது. எனவே, தயவுசெய்து நான் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன், புல்லூர் அணைக்கட்டு, கட்டத்தான் வேண்டும். செண்பகத் தோப்பு அணைக்கட்டு, கட்டத்தான் வேண்டும். ஆண்டியப்பனூர், அடிக்கல் நாட்டி பல்லாண்டுகள் ஆகிவிட்டன. ஆண்டியப்பனூர், அணைக்கட்டு கட்டத்தான் வேண்டும். குப்பநத்தம், கட்டத்தான் வேண்டும். பத்திரபல்லி, கட்டவேண்டும். அதேநேரத்தில் ராஜாதோப்பும் கட்டப்படவேண்டும். மேலரசம்பட்டு என்கிற ஓர் அருமையான அணைக்கட்டுத் திட்டம். அந்தத் திட்டத்தையும் நிறைவேற்ற வேண்டும். கடைசியாக என்னுடைய தொகுதியில் இருக்கிற ஒரு சின்ன திட்டம், வெள்ளைக்கல் திட்டம்.



அந்தத் திட்டத்தையும் ஏற்று நீங்கள் நடைமுறைப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இதையெல்லாம் கட்டினாலும், தயவுசெய்து எல்லா ஏரிகளையும் retrieve செய்ய வேண்டும். Retrieval of tanks is very important என்று உங்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேநேரத்தில் உங்களை நான் கடைசியாகக் கேட்டுக்கொள்வது, எங்கள் பக்கம் தொழிலே கிடையாது; வேலைவாய்ப்பே கிடையாது. ஓரேயொரு வேலைவாய்ப்புள்ள தொழில், தோல் பதனிடும் தொழிற்சாலை. அந்தத் தோல் பதனிடும் தொழிற்சாலைகளுக்கு பல்வேறு இக்கட்டுகள், பல்வேறு சிக்கல்கள், பல்வேறு தடைகள், முட்டுக்கட்டைகள். எனவே, அவற்றையெல்லாம் மீட்கும் வகையில், நீங்கள் விரும்புகிற வகையில் ஏதாவது மாசுக் கட்டுப்பாடு வாரியப் பிரச்சினை இருந்தால் அவர்களை அழைத்துப் பேச வேண்டும். ஏற்கெனவே, இருந்த அரசு முத்தரப்பு மாநாடு ஒன்றை நடத்தியது. முதலிலே ஒரு நாள் மாநாடு நடந்தது. அதற்குப் பிறகு தொடர் நடவடிக்கைகள் இல்லை. அந்தத் தொடர் நடவடிக்கையின் விளைவாக தோல் தொழிற்சாலைகளைக் காப்பாற்றுவதற்கு, தொழிலாளர்களுடைய வாழ்வைக் காப்பாற்றுவதற்கு நீங்கள் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொன்று. மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களிடம் என்னுடைய தனிப்பட்ட வேண்டுகோள்; என் தொகுதிக்கான வேண்டுகோள். என் ஊர் வாணியம்பாடி. வாணியம்பாடிக்கு இடையிலே பாலாறு ஓடுகிறது. கிழக்குப் பகுதியையும், மேற்குப் பகுதியையும் இணைக்கும் ஒரு பாலம். அந்தப் பாலம் 1914–ல் கட்டப்பட்டது. அந்தப் பாலம் இடிந்து விட்டது; வருபவர்களெல்லாம் என்னைக் கேட்கிறார்கள். ஏன் அந்தப் பாலத்தைக் கட்டுவதற்கு உனக்கு யோக்கியதை இல்லையா? நீண்டகாலமாக M.L.A.-வாக இருக்கிறாயே என்று என்னுடைய மக்கள் கேட்கிறார்கள். கடந்த ஆட்சியின்போது கடன் கொடுப்பதாகச் சொன்னார்கள். கடன் கொடுப்பதைவிட தயவுசெய்து நீங்கள் பொதுப் பணித் துறை வாயிலாகவோ அல்லது நெடுஞ்சாலைத் துறை வாயிலாகவோ அதைக் கட்ட வேண்டும். ஏற்கெனவே அந்தச் சாலையை நெடுஞ்சாலைத் துறை எடுத்துக்கொள்ள வேண்டுமென்பது என்னுடைய கோரிக்கை. எடுத்துக் கொள்ளப்பட்டது என்று சொல்லப்பட்டது. ஆனால் இதுவரையில் அது நிறைவேறவில்லை. தயவுசெய்து அந்த வாணியம்பாடி பாலத்தை நீங்கள் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்தப் பாலத்தைக் கட்டாவிட்டால் வாணியம்பாடி இரண்டு பகுதிகளாகப் பிரிந்து விடும். வியாபாரம் செய்கிறவர்கள் மற்றும் கல்விச்சாலைகளுக்குப்

போகிற, வருகிற பிள்ளைகளுக்கெல்லாம் மிகுந்த கஷ்டம். அதுமட்டுமல்ல. இரயில்வே ஸ்டேஷன், பஸ் ஸ்டாண்டு இவை எல்லாம் இந்தப் பக்கம்தான் இருக்கின்றன. அந்தப் பக்கம் கிராமங்கள் எல்லாம் இருக்கின்றன. அந்தப் பாலம் மிக இன்றியமையாதது. தயவுசெய்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே எடுத்துச் சொல்லி, அதை நீங்கள் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு கடைசியாக நான் முடிப்பதற்கு முன்பு உங்களையெல்லாம் கேட்டுக்கொள்வது இட ஒதுக்கீடு; இட ஒதுக்கீடு என்பது எங்களைப் பொறுத்தவரையில் மிக அடிப்படையான கோரிக்கை என்பதை நான் வற்புறுத்திச் சொல்லுகிறேன். கடந்த ஆட்சியில்கூட அந்த இட ஒதுக்கீடு கொடுக்கப்படும் என்று வாக்குறுதிகள் தரப்பட்டன. பிறகு சட்டத் தடைகள் இருப்பதையும் எடுத்துக் கூறினார்கள். மனம் இருந்தால் மார்க்கமுண்டு. எல்லோருக்கும் எல்லாம் செய்கிற அரசுகள், இந்தப் பாவப்பட்ட சிறுபான்மை மக்களுக்கு, மிக நீண்ட காலமாகக் கோரிக்கை வைத்துக் கொண்டிருக்கின்ற இந்தச் சிறுபான்மை மக்களுக்கு, இட ஒதுக்கீட்டைத் தராவிட்டால் இந்தச் சமுதாயத்தை திருப்தி செய்ய முடியாது என்பதை நான் மிகத் தெளிவாகச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். சட்டப்படி என்னென்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமோ அவற்றையெல்லாம் எடுக்க வேண்டும். கேரளாவில் இருக்கிறது. நண்பர்கூட காலையிலே சுட்டிக்காட்டினார். மணி சொன்னார். அங்கு 12% reservation. In Andhra 6% reservation; In Karnataka 8% reservation . நான் சொன்னேன், கொள்கை அளவிலாவது ஏற்றுக் கொள்ளுங்கள் என்று. கொள்கை அளவிலாவது ஏற்றுக்கொள்ளுங்கள் என்றால் அதுகூட ஏற்க முடியவில்லை என்று சொன்னால் தயவுசெய்து எங்களுக்கு இந்தக் குறையை நீக்குங்கள். இந்தக் குறையை நீக்காவிட்டால் நாங்கள் குறை உடையவர்களாகவே இருப்போம். மனதிலே குறைகளை வைத்துக் கொண்டே இருப்போம். அதை வேறு எந்த நடவடிக்கையாலும் நீக்க முடியாது என்பதை உங்களிடத்தில் எடுத்துச் சொல்லி தயவுசெய்து அந்த இட ஒதுக்கீடு; separate reservation for the minority muslim community; இதுதான் எங்களுடைய demand. அதை நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு மற்ற விஷயங்களையெல்லாம் பேசுவதற்கு நேரம் இல்லை.

*பிற்பகல் 6–10*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் minority சமூகத்தைச் சேர்ந்தவர் என்பதால்தான் நிறைய நேரத்தைக் கொடுத்து இருக்கிறோம்.*



**திரு. ம. அப்துல் லத்தீப்:** *மணி 6–10. 10 மணித்துளிகள் அதிகமாகியிருக்கின்றன.*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *12 நிமிடம் இருக்கிறது ஒரு மணிக்கு. (குறுக்கீடு) 1 மணி நேரம் முடிவதற்கு 12 நிமிடம் இருக்கிறது.*

**திரு. ம. அப்துல் லத்தீப்:** 12 நிமிடம் இருக்கிறதா? ரொம்ப நன்றி, மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களுக்கு. நான் ஏற்கெனவே சொல்லிவிட்டேன் சபாநாயகரிடம். எனக்குக் கொஞ்சம் difficulties இருக்கிறது, என்னைக் கூப்பிடுவதாக இருந்தால் காலையிலே கூப்பிடுங்கள் என்று சொன்னேன். Take-off difficulty; some landing difficulty; இவையெல்லாம் இருக்கின்றன. (சிரிப்பு) ஆகையினால் இத்தோடு முடித்துவிடுகிறேன். உங்களுக்கு நன்றி கூறி என்னுடைய கோரிக்கைகளைப் பரிவோடு கவனிக்க வேண்டும் என்று வேண்டி மாண்புமிகு அமைச்சர் திரு. பொன்னையன் அவர்களுக்கு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு இந்த நல்ல நிதிநிலை அறிக்கையைச் சமர்ப்பித்த உங்களுடைய திறமையை உங்களுடைய இந்த முயற்சியைப் பாராட்டி அதை வரவேற்று அமர்கிறேன். நன்றி.

***திரு. துரைமுருகன்:** துணைத் தலைவர் அவர்களே, point of order. நாங்கள் பிரதான எதிர்க்கட்சி. காலையிலிருந்து நாங்கள் வாய்ப்புக் கேட்டுக்கொண்டு இருக்கிறோம். இப்பொழுதுகூட Speaker-இடம் கேட்கும்போது 6 மணிக்குத் தருகிறேன் என்று சொன்னார்கள். ஆனால் இதுவரையிலும் உங்கள் பாட்டுக்கு – நீங்கள் அவருக்கு 1 மணி நேரம் கொடுக்கிறீர்களோ, 2 மணி நேரம் கொடுக்கிறீர்களோ அதை நான் கேட்க வில்லை. அது தலைவருடைய விருப்பம். ஆனால் பிரதான எதிர்க்கட்சியில், ஒருவருக்கு நேரம் கொடுக்கிறேன் என்று சொன்னார்கள். இன்னொருவர் பேசுவதற்கு வாய்ப்பு; அது இல்லை. ஆகையினால் அருள் கூர்ந்து எங்களுடைய கட்சியின் சார்பிலே ஒருவர் பேசுவதற்கு இப்பொழுது வாய்ப்பு அளிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** துணைத் தலைவர் அவர்களே, எங்களுடைய கட்சி காலையிலிருந்து இதுவரையிலும் பேசவில்லை. எனக்கு உரிமை இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *திரு. ஞானசேகரன் அமருங்கள்.*

**திரு. ஜி.கே. மணி:** துணைத் தலைவர் அவர்களே, தொடர்ந்து நாங்கள்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கொறடா அவர்கள்.

**திரு. பி.எம். நரசிம்மன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்கள் கட்சியின் சார்பிலே, ஆளும் கட்சியின் சார்பிலே காலையிலே 12 பேர் பேச வேண்டும் என்று கொடுத்தோம். ஆனால் 3 பேர்தான் பேசியிருக்கிறார்கள். மீதம் உள்ளவர்கள் இருக்கிறார்கள். எனவே எங்களுக்கும் வாய்ப்பினை நல்க வேண்டுமென்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி டி. யசோதா. (குறுக்கீடுகள்) அமருங்கள். அவர்கள் பேசட்டும். (குறுக்கீடுகள்) தயவுசெய்து உட்காருங்கள்.

**திரு. துரைமுருகன்:** துணைத் தலைவர் அவர்களே, ஒரு பிரதான எதிர்க்கட்சிக்கு–அதுவும் நீங்களாகச் சொன்னதை நாங்கள் ஏற்றுக் கொண்டோம்–நிச்சயமாகத் தருவீர்கள் என்று Chair மீது நம்பிக்கையோடு நாங்கள் இருந்தோம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நிச்சயமாக மாண்புமிகு உறுப்பினர் யசோதா அவர்கள் பேசிய பிறகு வாய்ப்பு தருகிறேன். சீக்கிரம் பேசி முடித்துவிடுவார்கள்.

***திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருத்திய நிதிநிலை அறிக்கையின்மீது நான் சார்ந்திருக்கின்ற இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பில் எங்களுடைய கருத்துகளை நான் முன்வைக்க விரும்புகிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** முன் வரிசையில் உள்ளவர்களுக்குத்தான். தயவுசெய்து அமருங்கள்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு யசோதா அவர்கள் பேசுவதிலே நான் குறுக்கிட விரும்பவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** யசோதா அவர்கள் பேசியதற்குப் பின்னாலே உங்களுக்கு வாய்ப்புக் கொடுக்கப்படும். தயவுசெய்து இருக்கையில் அமரவும்.



**திரு. துரைமுருகன்:** மணி இப்பொழுது 6–15. அவை 6–30 மணிக்கு முடியப்போகிறது. அந்த அம்மா பேசியதற்குப் பிறகு கொடுக்கிறேன் என்று சொல்வது தேவையில்லை. எங்களைப் பொறுத்தவரையில் பிரதான எதிர்க்கட்சிக்குத் தரவேண்டிய அந்த வாய்ப்பைத் தராத காரணத்தால் நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)*

*பிற்பகல் 6–15*

**திருமதி டி. யசோதா:** முற்பகுதியில் ஒரு Budget-ஐ ஏற்கெனவே இருந்த அரசு சமர்ப்பித்துவிட்டது. பிற்பகுதி Budget இப்பொழுது மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களால் அளிக்கப்பட்டிருக்கிறது. இந்த நிதிநிலை அறிக்கையைப் பற்றிப் பேசுகின்றவர்கள் எல்லாம் ஒன்றுமே இல்லை, ஒன்றுமே இல்லை என்றார்கள். நான் இதிலே எதைப் பேசுவது, எதை விடுவது என்று தெரியாத காரணத்தினாலேதான் நான் இப்போது பேசவில்லை, நாளைக்குப் பேசுகிறேன் என்று சொன்னேன்.

*(மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு. பி.ஆர். சுந்தரம் தலைமை)*

'காமாலைக் கண்ணனுக்கு கண்டதெல்லாம் மஞ்சள்' என்று சொல்லுவார்கள். அதுபோல நிதிநிலை அறிக்கையிலே ஒன்றுமே இல்லை, ஒன்றுமே இல்லை என்று ஒரு முற்பகுதி நிதிநிலை அறிக்கையைச் சமர்ப்பித்தவர்கள்தான் நாட்டு மக்களிடத்திலே சொன்னார்கள். அருமை மாண்புமிகு உறுப்பினர் சந்தானம் அவர்கள் கூறினார் பாருங்கள், பொற்கால ஆட்சி மீண்டும் வர வாக்களிக்க வேண்டுமென்று சிலர் கேட்டது பற்றி. மக்கள் நினைத்தார்கள். இது பொற்கால ஆட்சி அல்ல. போதாதகால ஆட்சி என்று. ஆகவேதான் (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் அது தேவையில்லை என்று கணித்து விட்டார்கள். இருக்கின்ற 6 மாதத்திற்கு உரிய இந்தத் திருத்திய நிதிநிலை அறிக்கையிலே ஒதுக்கப்படும் தொகை ரொம்ப குறைந்த தொகை; ஆனால் அம்மையார் அவர்களுடைய பரந்த மனதும், மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுடைய கைவண்ணமும் சேர்ந்து ஒட்டுமொத்தமாக இந்த நிதிநிலை அறிக்கை வந்திருக்கிறது. ஆனால், ஆகாய கங்கையையும் பாரிஜாத மலரையும் எதிர்பார்த்து இருக்கின்றீர்கள் என்று சொன்னால் அது உங்களுக்குப் போதாத நிலைதான் என்பதை நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால் அன்னப் பறவையைப் போல பாலையும் நீரையும் கலந்து வைத்தால் அன்னப் பறவை எப்படிப்

பாலை மட்டும் எடுத்துக்கொண்டு தண்ணீரை விட்டுவிடுமோ அதுபோல முற்பகுதி Budget-லே நல்ல திட்டங்கள் என்று ஏதேனும் இருந்தால் அதனை எடுத்துக்கொண்டு ஒதுக்க வேண்டியவைகளை ஒதுக்கி இருக்கின்ற தமிழகத்தினுடைய முதல்வர் புரட்சித் தலைவி அவர்களை நான் பாராட்டுவதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதிலேயும் சொல்ல வேண்டுமென்ற சொன்னால், ரொம்ப சிக்கனமாகவும், ரொம்ப சிறப்பாகவும் எதையும் விடக்கூடாது என்ற நிலையிலே—பைபிளிலே சொல்லுவார்கள். ஐந்து அப்பத்தை ஐயாயிரம் பேருக்குப் பங்கிட்டுக் கொடுத்தாராம் ஜீசஸ் என்று. அதுபோல—மிகச் சொற்பத் தொகையிலே நல்ல பல திட்டங்களை அறிவித்து இருக்கின்ற தமிழகத்தினுடைய முதல்வர் அவர்களை இந்த நேரத்தில் நான் பாராட்டுவதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் அருமைத் தலைவர் திரு. லத்தீப் அவர்கள் பேசுகின்றபோது மத்திய மாநில அரசு உறவுகளைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். அதிலே இரண்டு பக்கமும் இருக்கின்ற அந்த நேயத்தை வளர்க்க வேண்டுமென்பதற்காக தனிக் கவனம் எடுத்துக்கொண்டார்கள். நான் என்ன கேட்கின்றேன்? உரிமைக்குக் குரல் கொடுப்போம், உறவுக்குக் கை கொடுப்போம் என்று சொல்லுகின்றீர்களே, மத்திய வரிகள் தமிழகத்திலே வசூல் செய்யப்படுகின்றது. அந்த வரிகளின் விகிதம் 20-லேயிருந்து 16 ஆகக் குறைத்து கிட்டத்தட்ட 2946 கோடி ரூபாய் தமிழகத்திற்கு ஏற்படுகின்ற இழப்பிற்கு நீங்கள் காரணமாக இருக்கின்றீர்கள் என்று சொன்னால், இதுதான் நீங்கள் உரிமைக்குக் குரல் கொடுக்கின்ற இலட்சணமா? எதிரிக்கு ஒரு கண் போனாலும் பரவாயில்லை என்று சொல்லுகின்ற சூழ்நிலையிலே உங்களுடைய அரசியல் செல்லுமேயானால், நிச்சயமாக எதிர்காலத்திலே தமிழகத்து மக்கள் உங்களை மன்னிக்க மாட்டார்கள் என்று நான் குறிப்பிட விரும்புகிறேன். நல்ல திட்டங்களையெல்லாம் நடைமுறைப்படுத்தி இருக்கின்றார்கள். குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால் ஆசிரியர்களுக்கான counselling; ஆசிரியர்களுடைய பணி மாற்றத்திற்கு counselling நடத்தி இருக்கின்றார்கள்; அப்படி நடத்தவில்லை என்று சொன்னால் இந்நேரம் ஆசிரியர் பெருமக்கள் அத்தனைபேரும் ஆயிரக் கணக்கான ரூபாய்களை இலஞ்சமாகக் கொடுத்து தாங்கள் விரும்புகின்ற இடத்திற்குப் பணி மாற்றத்தைப் பெறக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கும். இதனைத் தவிர்த்து counselling முறை மூலமாக ஆசிரியர்கள் அத்தனைபேரும் ஒரு நயாபைசா செலவுகூட இல்லாமல் இன்றைக்குப் பணி மாற்றத்தைப் பெற்று இருக்கிறார்கள் என்று சொன்னால் இது



புரட்சித் தலைவியினுடைய மனதிலே இருந்து (மேசையைத் தட்டும் ஒலி) தோன்றிய ஒரு நல்ல திட்டம்.

*பிற்பகல் 6-20*

அதேபோல, Doctors, Engineers—ஆகத் தேர்வு செய்யப்பட்டவர்கள் கூட, தங்களுடைய படிப்பிற்குரிய இடத்தைத் தேர்வு செய்வதிலேகூட அதே counselling முறையை ஏற்படுத்திய காரணத்தினாலே இன்றைக்கு பல ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த பிள்ளைகள் எல்லாம் Doctor-களாக Engineer-களாக படிக்கக்கூடிய வாய்ப்புக் கிடைத்திருக்கின்றது என்பதைப் பார்க்கின்றபோது உண்மையிலேயே அம்மா உங்களுடைய உருவிலே இந்தத் தமிழகத்திற்குக் கல்விக் கண் திறந்த காமராஜரைத்தான் என்னால் காண முடிகிறதே தவிர (மேசையைத் தட்டும் ஒலி) வேறு எதைப் பற்றியும் நான் நினைக்க முடியவில்லை.

கடமை, கண்ணியம் என்பது வெற்றி, தோல்வியைவிடப் பெரியது. அதிலும் சமீபத்தில் நடந்தது ஒரு ஊர்வலம்; பேரணி; கண்டனப் பேரணி. அதிலே பேசிய வார்த்தைகள்; பெண்கள் அத்தனை பேரும் முகம் சுளிக்கக்கூடிய ஒரு பேரணியாகத்தான் அது அமைந்தது. அதேபோல சட்டமன்றத்திலே மிகக் கடுமையான வார்த்தைகள், அருவருக்கத்தக்க வார்த்தைகளைப் பயன்படுத்துகின்றார்கள். அதைப் பேரவைத் தலைவர் அவர்கள் சட்டமன்றக் குறிப்பிலே இருந்து எடுக்கின்றார்கள். அதைப்பற்றி எதிர்க்கட்சித் தலைவராக இருக்கின்ற முன்னாள் முதலமைச்சர் அவர்களைப் பத்திரிகைக்காரர்கள் கேட்கின்றபோது அவர் சொல்கின்றார் 'அதைத்தான் நான் T.V.-யிலேயே பார்த்துவிட்டேனே' என்று. எதை, அந்த நீக்கப்பட்டதாகச் சொன்ன அந்த வாசகத்தை T.V.-யிலேயே பார்த்துவிட்டேன் என்று சொல்வது எந்தவிதமான ரசனை என்று என்னாலே புரிந்துகொள்ள முடியவில்லை. இங்கே பெண் உறுப்பினர்கள் நிறையப் பேர் இருக்கின்றோம். மிக அருவருப்பான வார்த்தைகளைப் பயன்படுத்துகின்றபோது உண்மையிலேயே நாங்கள் வெட்கப்பட வேண்டியவர்களாக, அவமானப்பட வேண்டியவர்களாக இருக்கின்றோம் என்பதை இந்த மாமன்றத்திலே இருக்கின்ற உறுப்பினர்களுக்கு நான் மீண்டும் வலியுறுத்திக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

'மூளைக்கும், இதயத்திற்கும் இடையே உள்ளுணர்வு தொடாத வாதம், அதுதான் பல தீய செயல்களுக்கு அடிப்படை. போர்கள் மனிதனின் மனதில்தான் முதலிலே பிறக்கின்றன' என்று போப் ஆண்டவரும் UNESCO சாசனமும் சொல்லுகின்றன. நான் இங்கே கேட்க விரும்புகிறேன்;

முன்னாள் அமைச்சர் ஒருவர் ஒரு தீ மிதித் திருவிழாவிலே போய்க் கலந்துகொண்டு அவர் தீ மிதித்துவிட்டு வந்தாராம். அதைப்பற்றி அன்றைய முதலமைச்சரிடத்திலே கேட்கின்றபோது, அது ஒரு காட்டுமிராண்டித்தனம் என்று கூறியிருக்கின்றார்கள். நான் என்ன கேட்கின்றேன்? ஓர் அமைச்சர் பக்தியோடு தீ மிதித்தது காட்டுமிராண்டித்தனம் என்று சொன்னால், இன்றைக்கு உலகமே வணங்கக்கூடிய ஏசுநாதரோடு ஒப்பிட்டு, தமிழக முன்னாள் முதல்வருடைய படத்தைப் போட்டு வைத்திருப்பது எந்த வகையிலே (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை மக்கள்தான் சொல்ல வேண்டும். நான்குமுறை முதல்வராக இருந்திருக்கின்றார்கள். 14 முறை M.L.A.-ஆகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றார்கள். மேம்பாலம் கட்டுவதில் காட்டிய அக்கறையைக் குடிநீர்ப் பிரச்சினையில் காட்டி இருந்தால், அது தீர்ந்திருந்தால், நாட்டு மக்கள் அவர் இருக்கின்ற திசை நோக்கி வணங்கியிருப்பார்கள். தடுப்பணைகள், நீர்த்தேக்கங்கள் ஏற்படுத்த வேண்டும், மாசு கலந்த ஏரி நீரை தொழிற்சாலைகளுக்கு திருப்பி விடுவதன் மூலம் குடிநீர்ப் பிரச்சினையை ஓரளவு சமாளிக்கலாம். தொழிற்சாலைகளுக்குச் செல்லும் குடிநீர் மக்களுக்குப் பயன்படும்.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

சென்ற ஆட்சி குடிநீர்ப் பிரச்சினை வருவது தெரிந்தும், திட்டம் ஏதும் இல்லாமல் மக்களைத் தவிக்கவிட்டுவிட்டார்கள். கூவத்தைச் சீரமைக்க முயன்றவர்கள், குடிநீருக்கு முன்னுரிமை தராதது வேதனையானது. தமிழகத்தின் முதல்வர் நல்ல குடும்பத் தலைவிதான். அதனால்தான் மக்களின் உயிர்ப் பிரச்சினையான குடிநீருக்குத் தங்கள் Budget-ல் முன்னுரிமை தந்திருக்கிறார்கள்; அது செயல்வடிவம் பெற வாழ்த்துகிறேன்.

*பிற்பகல் 6–25*

பல மானியங்கள் கொடுக்கப்படுகின்றன. அந்த மானியங்கள் பயனுள்ள வகையில் பயன்பட வேண்டும் என்றுதான் நான் நினைக்கிறேன். ஒரு பள்ளிக்கூடம் என்று சொன்னால், பள்ளிக்கூடம், படிப்பு என்பது திட்டம். சத்துணவு என்று சொல்வது, incentive. ஆக, குழந்தைகள் படிப்பதற்கு இந்தச் சத்துணவு என்கிற நிலைமையிலே அதை உருவாக்கி இருக்கிறோம்.

அதைப்போலத்தான் மின்சார இழப்பினை ஒழுங்குபடுத்தினால் பல கோடி ரூபாய் மிஞ்சும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.



மானியங்களின் மூலமாக நாம் அவர்களுக்கு மின்சாரம் கொடுக்கிறோம். அந்த மின்சாரம் வரையறை இல்லாமல் போய்விட்டால் அதை வரைமுறைப்படுத்த வேண்டும். 500 மூட்டை உற்பத்தி செய்கின்றவர் பயன்படுத்துகிற மின்சாரமும், 200 மூட்டை உற்பத்தி செய்கின்றவர் பயன்படுத்துகிற மின்சாரமும் ஒன்றாக இருந்தால் அதை ஒழுங்குபடுத்த வேண்டிய கடமை நமக்கு இருக்கிறது என்பதைத்தான் நான் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

அடுத்து மீன் வளம். இந்த அறிக்கையில் ஒன்றுமே இல்லை, ஒன்றுமே இல்லை என்று சொல்லிவிட்டார்கள். எடுக்க எடுக்க, தோண்டத் தோண்ட புதையலாக வந்து கொண்டிருக்கிற திட்டங்களைப் பார்க்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவர் அவர்கள் இருந்தால், நம்முடைய நிதி அமைச்சரையும், நம்முடைய புரட்சித் தலைவி அவர்களையும் இரண்டு தட்டு முதுகில் தட்டி, நான் என்னவெல்லாம் நடக்க வேண்டும் என்று நினைத்து, பாட்டோட்டி படத்தின் மூலம் தெரிவித்தேனோ அவற்றிற்கெல்லாம் இன்றைக்குச் செயல் வடிவம் கொடுத்து இருக்கிறீர்கள் என்று நிச்சயமாகப் பாராட்டியிருப்பார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

விவசாயக் கடன் தள்ளுபடிக்கு என்று 311 கோடி ரூபாய்; பாராட்டுக்குரியதுதான். நான் ஒரு சிறிய உதாரணத்தைச் சொல்கிறேன், மத்திய அரசாங்கம்கூட சில திட்டங்களையெல்லாம் கொடுத்திருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு இன்னும் 4 நிமிடங்கள்தான் தரப்படும்.

**திருமதி. டி. யசோதா:** மத்திய அரசாங்கம் ஜீவன்தாரா கிணற்றுக்கு என்று 60,000 ரூபாய்-ஒரு கிணறுக்குக்-கொடுக்கிறார்கள். ஒரு பஞ்சாயத்து யூனியனுக்கு 10 கிணறுகள், 8 கிணறுகள் என்று வரும். அதை ஒரு யூனியனில் கொடுத்து இருக்கிறார்கள். கொடுத்த பணத்திற்குக் கிணறும் தோண்டி ஆகிவிட்டது. 60,000 ரூபாய் பணமும் எடுத்தாகிவிட்டது. ஒன்றிரண்டு கிணறுகள் இல்லை; நிறையவே. மத்தியிலே இருக்கிற அரசாங்கத்திலிருந்து கிணற்றைப் பார்வையிடுவதற்காக வருகிறார்கள். வந்தவுடனே அவர்கள் ரொம்ப சிரமப்பட்டு கிணற்றுக்குப் பணம் வாங்கியவரைப் பிடித்துவிட்டார்கள். பிடித்துக்கொண்டு வந்து, உங்கள் கிணற்றை எங்கே தோண்டினீர்கள்? எங்கே காட்டுங்கள் என்று கேட்டார்கள். அவர் ஒரு திறந்த வெளியிலே வந்து, சுற்றிச் சுற்றி வந்தாராம். உடனே ஓர் அதிகாரி போய் அவருடைய கையைப் பிடித்து நிறுத்தி, ஏன் சுற்றிச் சுற்றி வருகிறீர்கள், எங்கே கிணறு என்றாராம். அதைத்தான்

தேடுகிறேன், (மேசையைத் தட்டும் ஒலி) கிணற்றைக் காணோம். நான் தோண்டினேன், இந்த அதிகாரியைக் கேளுங்கள். முதலிலே 20,000 ரூபாய் கொடுத்தார், அப்போது 20 மீட்டர் தோண்டினேன். பிறகு ரூ.20,000 கொடுத்தார், 40 மீட்டர் தோண்டினேன், அதற்குப் பிறகு ரூ.20,000 கொடுத்தார், முடித்து விட்டேன். அந்தக் கிணற்றைக் காணோம், தேடுகிறேன் என்று சொன்னார். இது எங்கே நடந்தது தெரியுமா? சென்ற ஆட்சியிலேதான், வாலாஜாபாத் யூனியனில் இது நடைபெற்று இருக்கிறது என்பதை நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். ஏனென்றால் திடீரென்று இதற்கு ஆதாரம் எங்கே என்று கேட்டால், அதற்காக ஆதாரத்தோடுதான் நான் சொல்ல வேண்டும் என்பதற்காக வந்திருக்கிறேன். சுண்டைக்காய் கால் பணம், சுமை கூலி முக்கால் பணம் என்ற கதை போன்றுதான் கடந்த கால ஆட்சியிலே நிர்வாகம் இருந்திருக்கிறது.

ஆவின் பால் வேண்டுமென்பதற்கு சிபாரிசு பெற்ற காலம் போய், இப்போது மக்கள்–உஜாலாவுக்கு மாறுவதுமாதிரி–டோட்லா, ஹெரிடேஜ், ஆரோக்கியா, திருப்பதி, கோமாதா என வேறு பால் வளங்களுக்கு மாறியதால் பால் வளத் துறையினுடைய சுவாசமே அடங்கிவிடும் போலத் தெரிகிறது.

"நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்."

என்ற குறளுக்கேற்ப, முதலில் பால் வளச் சங்கங்களுக்கு யார் உறுப்பினராக வரவேண்டும், யார் தலைவராக வர வேண்டும், அதற்கு என்னென்ன நிபந்தனைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும் என்று இந்த அரசு கொண்டு வந்த நியாயமான கட்டுப்பாடுகள் பால் வளத் தொழிலில் ஈடுபடும் தொழிலாளர்களுக்கு புதிய நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது. நல்ல தொடக்கம்; இது தொடரப்பட்டு ஆவின் நிர்வாகம் சீர்பட வேண்டுகிறேன்.

அடுத்து நம்முடைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைத் துறைப் பிரிவில் ஆயுட்கால உறுப்பினராக உள்ளார். கலைத் துறையில் நடிப்பிற்கெனத் தனி இலக்கணம் வகுத்து, ஆழ்வார்களையும் நாயன்மார்களையும், சுதந்திர வேள்வியில் தியாகங்கள் புரிந்த வ.உ.சி., பாரதியார், கட்டபொம்மன் போன்ற செம்மல்களையும், இனிவரும் தலைமுறையினரும்கூட அண்ணன் சிவாஜி உருவில் பார்த்துப் பரவசப்படக்கூடிய அளவுக்கு நடிப்பில் இமயமென உயர்ந்த அவருக்கு சிறந்ததோர் மணி மண்டபம் அமைத்துத் தர வேண்டுமென்று முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.



*பிற்பகல் 6–30*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியோடு பேரவையின் அலுவல் நேரம் ஐந்து நிமிடங்கள் நீட்டிக்கப்படுகிறது.

**திருமதி டி. யசோதா:** அதேபோல தமிழில் ஐம்பெருங்காப்பியங்களில் சிலப்பதிகாரமும் ஒன்று. சிலம்பு என்று சொன்னாலே சிலம்புச் செல்வர் ம.பொ.சி. என்ற தொடர்தானே அடுத்து வரும். அதனை அனைத்துத் தமிழரும் அறிவர். திருமுருகன் தமிழ்க் கடவுள். ஆகவே, திருத்தணி தமிழகத்துடன் இணைய வேண்டும் எனவும், அதுபோல, கடல்கள் சங்கமிக்கும் கன்னியாகுமரியும் தமிழகத்திற்கே சேர வேண்டும் என வாதிட்டு, அதனைப் பெற்றுத் தந்த செம்மல் ம.பொ.சி. அவர்களுக்கும் நல்லதோர் மணி மண்டபம் அம்மா அவர்களுடைய தலைமையிலே உருவாக்கித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பத்திரிகையிலே இன்றைக்குக் காலையிலே பார்த்தேன். மனித உரிமை, மனித உரிமை, மனித உரிமை; எங்கு பார்த்தாலும் மனித உரிமை. தமிழகத்திலே மனித உரிமையே இல்லாது போய்விட்ட மாதிரியான ஒரு சூழ்நிலையை இன்றைக்கு உருவாக்கி வருகின்றார்கள். நான் என்ன கேட்கின்றேன் என்றால், இந்த மனித உரிமை என்பது இப்போது கடந்த ஒரு மாத காலமாகத்தான் வருகிறது. திருநெல்வேலி மாவட்டத்திலே 17 பேரை அடித்துச் சாகடித்து தாமிரபரணி ஆற்றிலே போட்டார்களே, அப்போது எங்கே போயிற்று இந்த மனித உரிமை என்றுதான் நான் கேட்கின்றேன்.

கோவை குண்டு வெடிப்பின்போதுகூட இந்த மனித உரிமைப் பிரச்சினை வரவில்லை. மனித உரிமைப் பாதுகாப்பு என்பது, முன்னாள் முதல்வர், மத்திய அமைச்சர்களுக்கு மட்டும்தானா? சாதாரண மக்களுடைய உரிமை காக்கப்படாதா? அப்படியானால், தாக்குதலுக்கு ஆளான, மத்திய அமைச்சருடைய தாக்குதலுக்கு ஆளான காவலர்களுக்கு மனித உரிமைப் பாதுகாப்பு என்பது கிடையாதா என்றுதான் நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இன்னும் சொல்லவேண்டுமென்று சொன்னால், உங்களுக்குத் தெரியும் என்று நான் நினைக்கிறேன். மறந்துவிட்டீர்கள், மறந்திருப்பீர்கள் என்றால் நினைவுபடுத்துகிறேன். முந்தைய ஆட்சியிலே ஓர் அமைச்சர், ஓர் அதிகாரியை அடித்துவிட்டார். பத்திரிகையிலே செய்தி வந்தது.

அந்த அமைச்சரை முதல்வர் அவர்கள் உடனடியாக மந்திரி பதவியிலிருந்து நீக்கினார். அவரும் கோவாவுக்குப் போய்விட்டார். யார் அந்த அமைச்சர்? முல்லைவேந்தன் என்கின்ற ஓர் அமைச்சர், ஓர் அதிகாரியை அடித்தார், தாக்கினார் என்ற காரணத்தினாலே அவரைப் பதவி நீக்கம் செய்தார் முன்னாள் முதல்வர், கலைஞர் கருணாநிதி அவர்கள். இன்றைக்கு அவருடைய மருமகன் மத்திய அமைச்சராக இருந்து, காவல் துறையைச் சேர்ந்த காவலர்களை அடித்து நொறுக்குகின்றபோது, அன்றைக்கு முல்லைவேந்தனுக்கு ஒரு நியாயம், இன்றைக்கு மருமகனுக்கு ஒரு நியாயமா (மேசையைத் தட்டும் ஒலி) என்பதைப் பற்றி தமிழகத்து மக்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

எனக்கு முன்னாலே பேசியவர் சொன்னார். மத்தியிலேயிருந்து ஒருவர், மந்திரி பதவியிலே இல்லாமல், இங்கு வந்தார். டெகல்கா புகழ் அவர் வந்து ஜெயிலுக்குப்போய் பார்க்கிறாராம்; ஜெயிலிலே A.C. இல்லையாம். யார், யாருக்கு A.C. கொடுப்பது என்று சொன்னால் நன்றாக இருக்கும். முன்னாள் முதல்வர்களுக்கு, இந்நாள் முதல்வருக்கு, மந்திரி பட்டாளத்திற்கு, M.L.A.-க்களுக்கு, M.P.-க்களுக்கு, Panchayat Union Chairmen-களுக்கு, District Council Member-களுக்கு, Union Council Member-களுக்கு, Panchayat தலைவர்களுக்கு என்று இப்படி A.C.-யாகக் கொடுத்துவிட்டால், எல்லோரும் ஜெயிலுக்குத்தான் போவார்களே தவிர, வெளியே இருப்பதற்கு யாருமே விரும்பமாட்டார்கள். எதை, எங்கே, எப்போது பேச வேண்டும் என்று, அங்கே இருந்து வருகின்ற சில ** தெரியாத காரணத்தினாலேதான் (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்திலே இன்றைக்கு அதிகாரிகளிடத்திலே எந்தக் காரியத்தைக் கொடுத்தாலும், அவர்கள் முன், பின் யோசிக்கிறார்கள். இந்த நிலைமை, அரசாங்கம் ஸ்தம்பித்துப் போக வேண்டும் என்பதற்காக...

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் தவறான நோக்கத்தோடு சொல்லவில்லை. ** என்கின்ற சொல் அவைக்குறிப்பில் இருப்பது சரியல்ல. அதை நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ** என்கின்ற சொல் அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

---

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.



**திருமதி டி. யசோதா:** அன்பிற்கும், மரியாதைக்கும் உரிய மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மத்தியிலே இருக்கிறவர்கள் ஒரு பொறுப்பான ஆட்சியிலே இருந்து வருகிறார்கள். எதைப் பேச வேண்டும், எதைப் பேசக்கூடாது என்று வரையறுத்துப் பேச வேண்டும் என்பதற்காகத்தான் சொல்கிறேன்.

மது விற்பனையிலேகூட, ரொம்பவும் நல்ல முறையிலே, ஏல விற்பனையில், தவறுகளுக்கும், வெட்டு குத்துகளுக்கும், தாதாக்களுக்கும் இடம் தராமல், குலுக்கல் முறையில் அமைதியாக முடிவுகளை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மூலமாக அறிவித்த தங்களது திட்டத்தினைப் பாராட்டுகின்றேன். இதனால் பெரும் இலாபம் பெற்ற கட்சிக்காரர்கள் இதனைப் பாராட்டவில்லை என்றாலும் சம்பந்தம் இல்லாத நாங்கள் அந்த நடைமுறையைப் பாராட்டுகிறோம்.

*பிற்பகல் 6-35*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியோடு பேரவையின் அலுவல் நேரம் மேலும் ஐந்து நிமிடம் நீட்டிக்கப்பெறுகிறது.

**திருமதி டி. யசோதா:** ஐந்து நிமிடந்தானா? நான் நிறையப் பேச வேண்டும் என்றாலும், கடைசியாகச் சொல்கிறேன் – தொகுதி பற்றியே பேச முடியாது – மகளிர், ஐந்து இலட்சம் தொழில் முனைவோருக்கான திட்டம், அதைப் பாராட்டுவதா? பெண் குழந்தைகளுக்கு இருபதாயிரம் ரூபாய் கொடுக்கிறார்கள், மாதம் 150 ரூபாய், அந்த வட்டியிலே அவர்களுக்கு செலவுக்குக் கொடுக்கிறார்கள். இரண்டு பெண் குழந்தைகள் இருந்தால், பதினான்காயிரம் ரூபாய் கொடுக்கிறார்கள் ஒரு குழந்தைக்கு, இதைப் பாராட்டுவதா? 1217 காவல் நிலையங்களிலே பெண் துணை ஆய்வாளர், ஒரு பெண் காவலர் என்று ஒவ்வொரு காவல் நிலையத்திற்கும் போடுகிறார்களே, அதைப் பாராட்டுவதா? எல்லாவற்றையும் சொல்ல முடியாத சூழ்நிலையிலேயிருந்தாலும்கூட, ஒன்றை மட்டும் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

கடைசியாக ஒன்று சொல்லிவிடுகிறேன் – சிமெண்ட் சாலை. இப்போதெல்லாம் சிமெண்ட் சாலை எல்லா Panchayat Union-களிலும் இருக்கிறது. அதற்கு என்ன காரணம் என்று எனக்குத் தெரியவில்லை. ஆனால் கண்ணுக்குக் குளிர்ச்சியாக பளபளவென்று புத்தம் புதிய சாலைகள் இருக்கின்றன. அந்தச் சாலைகள் யாரோ ஒருவருக்கு,

அரசாங்கத்துக்கு வேண்டியவருக்கு, தொடர்பிருக்கிற சிமெண்ட் கம்பெனியினுடைய தொடர்பு இருந்த காரணத்தினாலே (மேசையைத் தட்டும் ஒலி) சென்ற முறை பஞ்சாயத்துச் சாலைகள் எல்லாம் சிமெண்ட் சாலைகளாக போடப்பட்டு இருக்கின்றன, நான் பாராட்டுகின்றேன். ஆனால் அந்தச் சாலை எப்படியிருக்கிறது என்று சொன்னால், இரண்டு அடி உயரத்துக்கு மேலே ஏற்றியாகிவிட்டது. பக்கத்திலேயிருக்கிற வீடுகள் எல்லாம் குடிசை வீடுகள். மழை பெய்தவுடனே இந்த சிமெண்ட் ரோட்டிலே இருக்கிற அத்தனை தண்ணீரும் வீடுகளுக்குள்ளே புகுந்து விடுகிறது. என் தொகுதியிலே அப்படியிருக்கிறது, மற்றத் தொகுதியிலே தெரியவில்லை. அதனாலே, வருங்காலத்தில் சிமெண்ட் சாலை போடுவதாக இருந்தால் தயவுசெய்து வீடுகளுக்குக் கீழே – என்னமோ சுமோ காரிலே போனால் வீட்டுக்குள்ளே நேராகப் போக வேண்டுமென்று பஞ்சாயத்துத் தலைவர் நினைத்தால் நடக்காது. அதனால் – மக்களுக்கு ஏற்றாற்போல பயனுள்ள வகையிலே அந்த சிமெண்ட் சாலைகளைக் கீழே இறக்கி, வீடுகள் உயரமாக இருக்கிற வகையிலே அமைப்பதற்கு நீங்கள் நிச்சயமாக வருங்காலத்திலே உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதை எதற்குச் சொல்கிறேன் என்றால் உங்களுக்கு எல்லாம் கொஞ்ச நாளைக்கு முன்னாலே நடந்தது மறந்திருக்கும். கமல் தயாள் பெயிண்ட் கம்பெனி என்று ஒரு கம்பெனி வந்தது. கமல் என்பது பொள்ளாச்சி மகாலிங்கத்துக்கு பெண் என்று நினைக்கிறேன். தயாள் என்பது நம் பழைய முதல்வர் அவர்களுடைய மனைவி. அந்த கமல் தயாள் பெயிண்ட் கம்பெனி வந்ததற்கு அப்புறம்தான் ஆட்டோ ரிக்ஷாவிலே மஞ்சள் பெயிண்ட் அடிக்கவில்லை என்றால் ஆட்டோவைப் பிடிப்போம். Fine பண்ணுவோம் என்றார்கள். அந்தக் கம்பெனியிலிருந்து தயாரிக்கப்பட்டதே மஞ்சள் பெயிண்ட்தான். அதனாலே ஆட்டோவிலே மஞ்சள் பெயிண்ட். டாக்ஸி தலையிலே மஞ்சள் பெயிண்ட். போகிற வருகிற ஊர்களில் எல்லாம் இருக்கிற ஊர்ப் பெயருக்கான Board; அந்த Board-களில் எல்லாம் மஞ்சள் பெயிண்ட். மைல் கல் எல்லாம் மஞ்சள் பெயிண்ட். முடிந்தால் நமக்கு மஞ்சள் பெயிண்ட் அடிக்காத குறைதான். எல்லாவற்றையும் அடித்துவிட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அதைப்போல, ஒரு குடும்பம் வாழ்வதற்காக பல திட்டங்கள் இந்த நாட்டிலே இருந்திருக்கின்றன. இன்றைக்கும் ஒரு குடும்பத்துக்காகத்தான் இந்தத் தமிழக அரசாங்கம் நடக்க வேண்டுமா, கூடாதா என்கிற நிலையிலே நடந்து கொண்டிருக்கிறது. ஆகவே உங்களுக்கு இறுதியாக நான் சொல்லிக்கொள்கிறேன். கழிப்பறைகள் பெண்களுக்கு அவசியம்; அவசரம்தான். விளையாட்டுத் துறை அதுபோலத்தான். விளையாட்டுத் துறைக்கு அந்த



அம்மா எவ்வளவோ செய்திருக்கிறார்கள். நேரு ஸ்டேடியத்திலிருந்து எத்தனையோ ஸ்டேடியங்களை உருவாக்கியிருக்கிறார்கள்.

கடைசியாக, நீங்கள் கொடுத்த நேரம் முடிகிற காரணத்தினாலே ஒன்றை மட்டும் சொல்கிறேன். சாமிகளுக்குமகூட நேரம் வந்தால்தான் சரியாக இருக்கும் என்று நான் நினைக்கிறேன். அதுபோலத் தமிழகத்தின் முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள்–எந்தெந்தக் கோயில்கள் அடைபட்டுக் கிடக்கின்றனவோ, எந்தெந்தக் கோயில்களின் சாமிக்கு பூஜை நடத்த முடியவில்லையோ, அப்படி ஒடுக்கப்பட்ட சாமிகளுக்கு எல்லாம் ஒரு கால பூஜை நடத்துவதற்குரிய அந்த வழிவகைகளை இப்போது உருவாக்கியிருக்கிறார்கள் என்று சொன்னால், சாமிகளுக்கும் நல்ல காலம் வந்திருக்கிறது. ஆகவே, இதுபோன்ற நல்ல திட்டங்களைக் கொடுத்திருக்கிறது இந்த அரசாங்கம்.

அதேநேரத்திலே என்னுடைய தொகுதிப் பிரச்சினைகளைச் சொல்லவில்லை என்றாலும்கூட, கடைசி ஒரு நிமிடத்திலே நான் சொல்லிவிடுகிறேன். நிறைய Primary Health Centres திறக்க முடியாமல் இருக்கின்றன. அதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அதேபோலச் சாலைகள்; ஒன்றியத்தின் மூலமாக L.A. Minister மூலமாக – எங்களுக்கு சாலைகள் சரியாக இல்லை – சாலைகளைச் செப்பனிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பட்டாக்கள் கொடுக்கப்படவில்லை. ஓய்வூதியம் கொடுக்கப்படவில்லை. இவை அத்தனையும் ஏழை ஜனங்களுக்குக் கொடுக்கப்பட வேண்டும்.

*பிற்பகல் 6–40*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உரையைச் சீக்கிரம் முடியுங்கள்.

**திருமதி டி. யசோதா:** நம்முடைய அறநிலையத் துறை அமைச்சருக்கு சொல்லிக்கொள்கிறேன். எங்கள் ஊரிலே குன்றத்தூரிலே, ஊரே வெளிச்சமாக இருக்கிறது. குன்றத்தூரிலே அறநிலையத் துறைக்குச் சொந்தமான இடத்திலேதான் இருட்டாக இருக்கிறது. அதற்குரிய மின் விளக்குப் போட வேண்டுமென்றால், நீங்கள் மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் No Objection Certificate கொடுக்க வேண்டும். பக்கத்திலே இருப்பவருக்கு– மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சரும், அவருக்குப் பக்கத்திலேதான் அமர்ந்திருக்கிறீர்கள். எனவே, நீங்கள் அவருக்கு – No

Objection Certificate கொடுத்தால் எங்கள் ஊருக்கு விளக்குப் போட்டுவிடுவார். ஆகவே, அதைச் சரிசெய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டு, இந்த வாய்ப்பினைத் தந்த தலைவருக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை *(25-8-2001)* காலை *10-00* மணிக்குக் கூடும். வணக்கம்.

*பின்னர், பேரவை மாலை 6-41 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.*

## 5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

*26. 1999-2000 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மேக்னசைட் லிமிடெட்டின் ஆண்டறிக்கை. [1955 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)*

*27. 1999-2000 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் இருபத்தி இரண்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)*

*28. 1999-2000 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கிராபைட் நிறுவனத்தின் மூன்றாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619 ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)*

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

-ஏதுமில்லை-

223438
சென்னை-600 009

**Copies can be had from the**
**Assistant Director,**
**Government Publication Depot,**
**816, Anna Salai,**
**Chennai-600 002.**

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.